# அகத்தியர் மருத்துவம்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)



இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை
சென்னை - 600 106

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 15

Specimen

# அகத்தியர் மருத்துவம்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு :

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2009

## பதிப்புத் தகவல்


நூல் பெயர் : அகத்தியர் மருத்துவம்
(தமிழ் மருத்துவ நூல் வரிசை - 15)
ஓலைச்சுவடித் தொகுப்பு நூல்

பொருள் : சித்த மருத்துவம் - அகத்தியர் மருத்துவம்

பதிப்பு : சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 106



பதிப்புரிமை © : தமிழ் நாட்டரசு



பதிப்பாண்டு : முதற்பதிப்பு 2009

பக்கங்கள் : xxii + 274 = 296

படிகள் : 1000

தாள் அளவு : 1 × 8 டெம்மி

அச்சுப் புள்ளி : 12 புள்ளி

கட்டமைப்பு : சாதாரண அட்டைக்கட்டு

விலை : ரூ. **75.00**

---

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : (044)-24661807, 24987562

**இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை,**
**சென்னை - 600 106.**

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

## நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்

**முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன்,** பிஎச்.டி.
சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (பொறுப்பு)

**மரு. எஸ். இராமலட்சுமி அம்மாள்,** பி.ஐ.எம். (சி)

உதவிப் பதிப்பாசியர்கள்

**திரு. த. அழகப்பராசு,** M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.
**திருமதி. செ.இரா. பிரசன்னா,** M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்

**திரு. தி. சுபாஷ் சந்திரபோஸ்**
**திரு. வெ. சாரங்கபாணி**
**திருமதி. த. லெட்சுமி**
**திருமதி. நா. பாக்கியசுந்தரி,** B.A.

முதற் பதிப்பு : ஏப்ரல் 2014

© பதிப்புரிமை

ISBN 978-93-5135-106-0

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு, தி.நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 24342810, 24310769
இணையதளம் : www.vanathipathippagam.com
மின்னஞ்சல் : vanathi_pathippagam@yahoo.co.in

அச்சுக்கோப்பு : ஸ்ரீ சரஸ்வதி கம்ப்யூட்டர்ஸ்
அச்சாக்கம் : ஸ்ரீ சரஸ்வதி ஆஃப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 014.

**ஜி.ஏ. ராஜ்குமார்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர்
மற்றும் இயக்குநர்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்குநரகம், சென்னை - 600 106.

# வாழ்த்துரை

இந்திய மருத்துவத் துறையின் கீழ் வெளியிடப்படும் சித்த மருத்துவ நூல்களில் பெரும்பான்மை ஓலைச்சுவடி களை அடியொற்றியே வெளியிடப்படுகின்றன.

அந்த வகையில் தமிழ் மருத்துவ நூல் வரிசையில் பதினைந்தாவது நூலாக வெளியிடப்பெறும் இந்நூல் **'அசுத்தியர் மருத்துவம்'** எனும் நூலாகும். ஓலைச் சுவடியிலிருந்து வெளிவரும் நூல்களில் நோய்களின் குணங்களைக் கூறும் நூல்கள் குறைவுதான். ஒவ்வொரு நோய்க்கும் அதன் குணத்தைச் சொல்லி அதற்கான மருந்தையும் சொல்வது இந்நூலின் சிறப்பு.

அறிவுக் கருவூலமாம் ஓலைச்சுவடிகள் நூலாக்கம் பெறுவது, அந்நூல்கள் சிதைந்து விடாமல் காப்பதற்கான முதல்படி. இவ்வாறு நூல்களைப் பாதுகாத்து வெளியிடும் பணி மேற்கொள்ளும் தனியலுவலர் (மொழிபெயர்ப்பு), ஆய்வு மருத்துவ அலுவலர், தமிழ்ப்புலவர்கள், சுவடி நகலெடுப்போர் யாவரையும் பாராட்டி மகிழ்கிறேன்.

உரிய நேரத்தில் நன்முறையில் அச்சுப்பணி முடித்தளித்த அச்சகத்தார் திருவாளர்கள் யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ், சென்னை - 4 அவர்களுக்கும் எனது பாராட்டுதல்கள்.

இவ்வகையான நூலாக்கப்பணி மென்மேலும் சிறப்புற்று அதிக எண்ணிக்கையில் நூல்கள் வெளிவர எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

**(ஜி.ஏ. ராஜ்குமார்)**

நாள் : 28-4-2009

# பதிப்புரை

**அகத்தியர் மருத்துவம்** எனும் இந்நூல் ஓலைச் சுவடியினின்றும் முதன் முதலாகப் பதிப்பிக்கப்படும் நூலாகும். ஓலைச்சுவடியில் அகத்தியர் வாகடம் எனக் குறிப்பிடப் பட்டிருந்தாலும் இந்நூலுக்கு அகத்தியர் மருத்துவம் என பெயர் சூட்டியுள்ளோம்.

விருத்தப் பாடல்களால் இந்நூல் அமைந்துள்ளது. இதில் 607 பாடல்கள் அடங்கியுள்ளன. ஓலைச்சுவடியில் பாடல்கள் மட்டுமே இருந்தன. அதற்கான உரையும் சேர்த்து எழுதப்பட்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான சித்த மருத்துவ நூல்கள் நோய்க்கான மருந்துகளைச் சொல்வனவாக அமையும். மருந்துமுறைகளை, மருந்துசெய் முறைகளைச் சொல்லி, அம்மருந்தை உட்கொள்ளுவதால் என்னென்ன நோய்கள் அகலும் என்பதையும் விளக்குகின்றன. வெகுசில நூல்கள் நோய்க்கான குணங் களைச் சொல்வதாக அமையும். அவை குணவாகடம் என்று பெயரிட்டு அழைக்கப்பெறும்.

குறிப்பிட்ட நோய்க்கான குணங்களைச் விரிவாகச் சொல்லி, அதனைத் தொடர்ந்து அடுத்து வரும் பாடல்களில் அதற்கான மருந்தையும் சொல்லும் நூல்கள் மிகக் குறைவு. அவ்வகையில் இவ்வியக்குநகரத்தால் வெளியிடப்பட்டிருக்கும் நூல்களில் இந்நூலானது, தான் விளக்க எடுத்துக்கொண்ட நோயின் குணம் சொல்லி அடுத்து அதற்கான மருந்தைச் சொல்கிறது.

ஓலைச்சுவடியில் முதலிலிருந்த ஓலைகள் சில விடுபட்டுப்போனதால் முதலில் இருந்த 25 பாடல்கள் இப்பதிப்பில் இடம்பெற இயலவில்லை. அதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேறு சுவடியும் கிடைக்கவில்லை. குணமும் மருந்தும் சொல்லும் பாடல்கள் மட்டுமல்லாது இடையிடையேயும், நூலின் பிற்பகுதியிலேயும் வேறு சில மருத்துவப் பாடல்களும் உரைநடைப் பகுதியும் இடம் பெற்றிருந்தன.

புரியாத பகுதிகள், பாடல்களை விட்டுவிடாது பதிப்பித்துள்ளோம். விடுபட்டுப்போனால் திரும்பவும் சேர்க்க வியலாது என்பதாலும், சான்றோர் அதனைக் கண்டுணர்ந்து உரிய வடிவத்தை அறிவிக்க இயலும் என்பதாலும் அவ்வாறான பகுதிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் சேர்ப்பன சேர்த்து நீக்குவன நீக்கி முறைப்படுத்தி முடிந்தவரை முழுமையாக்கி இந்நூலுக்கு முழுவடிவம் கொடுத்துள்ளோம். பலகாலம் அச்சேறாது பனை ஓலையில் முடங்கிக் கிடந்த சித்த மருத்துவமுறை முதலில் அச்சேறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அத்தோடு மட்டுமல்லாது ஓலைச்சுவடியிலே இருந்தது தாளிலே அச்சேறும்போது பாதுகாப்பதில் இருக்கும் சிரமம் குறைந்து இன்னும் பல்லாண்டுகள் இந்நூல் வாழும் என்பது திண்ணம்.

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நீர்க்குறி | 1 |
| 2. | சுர உற்பத்தி | 1 |
| 3. | வாத சுரத்தின் குணம் | 5 |
| 4. | பித்த சுரத்தின் குணம் | 6 |
| 5. | சிலேட்டும சுரத்தின் குணம் | 6 |
| 6. | நாடிக்குறி | 7 |
| 7. | வாதபித்த சிலேட்டும பிறவிநிலை | 13 |
| 8. | வாதத்தின் குணம் | 15 |
| 9. | மருந்து | 16 |
| 10. | பித்தத்தின் குணம் | 16 |
| 11. | மருந்து | 17 |
| 12. | சிலேட்டுமத்தின் குணம் | 17 |
| 13. | மருந்து | 18 |
| 14. | வாதத்தின் குணம் | 18 |
| 15. | மருந்து | 19 |
| 16. | பித்த குணம் | 19 |
| 17. | மருந்து | 19 |
| 18. | சிலேட்டும குணம் | 20 |
| 19. | மருந்து | 20 |
| 20. | வாதக் கதிப்பின் குணம் | 21 |
| 21. | மருந்து | 21 |
| 22. | பித்தக் கதிப்புக் குணம் | 22 |

| | | |
|---|---|---|
| 23. | குடிநீர் | 22 |
| 24. | சிலேட்டும கதிப்புக் குணம் | 23 |
| 25. | சூரணம் | 23 |
| 26. | வாதபித்த தொந்திப்பின் குணம் | 23 |
| 27. | சூரணம் | 24 |
| 28. | வாதபித்த தொந்திப்பு | 24 |
| 29. | மருந்து | 25 |
| 30. | வாத சிலேட்டும குணம் | 25 |
| 31. | மருந்து | 26 |
| 32. | சேற்றும வாத தொந்திப்பின் குணம் | 26 |
| 33. | சூரணம் | 27 |
| 34. | பித்த சிலேட்டும தொந்திப்புக் குணம் | 27 |
| 35. | சூரணம் | 28 |
| 36. | சிலேட்டும பித்த தொந்திப்பின் குணம் | 28 |
| 37. | சூரணம் | 29 |
| 38. | வாதபித்த சிலேட்டும தொந்திப்புக் குணம் | 29 |
| 39. | மருந்து | 30 |
| 40. | ஓடிய வாதத்தின் குணம் | 30 |
| 41. | தைலம் | 31 |
| 42. | துடிவாத குணம் | 31 |
| 43. | இரணவாத குணம் | 33 |
| 44. | திமிர்வாத குணம் | 34 |
| 45. | அரப்பு வாதத்தின் குணம் | 36 |
| 46. | நரித்தலை வாத குணம் | 38 |
| 47. | கைகால் முடங்கின வாதம் | 39 |

| | | |
|---|---|---|
| 48. | எண்ணெய் | 40 |
| 49. | சுருக்கு வாத குணம் | 41 |
| 50. | எண்ணெய் | 41 |
| 51. | சுரோணித வாத குணம் | 42 |
| 52. | சூரிய வாத குணம் | 43 |
| 53. | வறட்சி வாத பித்த குணம் | 44 |
| 54. | நெய் | 44 |
| 55. | எண்ணெய் | 45 |
| 56. | வறட்சி பித்தவாத குணம் | 45 |
| 57. | மருந்து | 46 |
| 58. | எண்ணெய் | 46 |
| 59. | சன்னிவாதத்தின் குணம் | 47 |
| 60. | தைலம் | 48 |
| 61. | மரணவாத சன்னியின் குணம் | 48 |
| 62. | தைலம் | 49 |
| 63. | குதிரை வலியின் குணம் | 49 |
| 64. | அஞ்சனம் | 50 |
| 65. | எண்ணெய் | 50 |
| 66. | புறவீச்சுக் குணம் | 51 |
| 67. | உள்வீச்சுக் குணம் | 51 |
| 68. | கசசூலையின் குணம் | 52 |
| 69. | உள்வீச்சு, புறவீச்சுக்கு எண்ணெய் | 52 |
| 70. | ஒற்றடம் | 53 |
| 71. | பிள்ளை பெற்றவள் சுவாச காசத்தின் குணம் | 53 |
| 72. | சூரணம் | 54 |

| | | |
|---|---|---|
| 73. | தைலம் | 54 |
| 74. | சன்னியின் குணம் | 54 |
| 75. | சன்னி, வலியஞ்சிற்கும் புகை | 55 |
| 76. | முகவாத சன்னியின் குணம் | 56 |
| 77. | தைலம் | 57 |
| 78. | பித்த குணம் | 58 |
| 79. | மருந்து | 58 |
| 80. | தலை மண்டை கொண்ட பித்தத்தின் குணம் | 59 |
| 81. | மருந்து | 59 |
| 82. | பித்தகுணமும் மருந்தும் | 59 |
| 83. | பேதி மருந்து | 60 |
| 84. | வறட்சி பித்த குணம் | 61 |
| 85. | காமாலையின் குணம் | 62 |
| 86. | கற்கம் | 62 |
| 87. | மருந்து | 63 |
| 88. | காமாலை, பாண்டுக்குத் தைலம் | 63 |
| 89. | பித்த பாண்டுவின் குணம் | 64 |
| 90. | நெல்லிநெய் | 65 |
| 91. | தைலம் | 65 |
| 92. | உட்காய்ச்சல் குணம், மருந்து | 66 |
| 93. | பித்த குணம் | 67 |
| 94. | மருந்து | 68 |
| 95. | சிலேட்டும குணம் | 69 |
| 96. | வாதசுரத்தின் குணம் | 72 |
| 97. | விஷசுர குணம் | 74 |

| | | |
|---|---|---|
| 98. | குடிநீர் | 76 |
| 99. | பித்த சுரத்தின் குணம் | 76 |
| 100. | தாகபித்த சுர குணம் | 78 |
| 101. | குடிநீர் | 78 |
| 102. | வாதபித்த சுரத்தின் குணம் | 79 |
| 103. | குடிநீர் | 79 |
| 104. | சிலேட்டும சுரத்தின் குணம் | 80 |
| 105. | குடிநீர் | 81 |
| 106. | அத்தி சுரத்தின் குணம் | 81 |
| 107. | குடிநீர் | 82, 83 |
| 108. | சன்னிவாத சுரத்தின் குணம் | 83 |
| 109. | பித்த சிலேற்பன சுரத்தின் குணம் | 84 |
| 110. | மருந்து | 85 |
| 111. | சகலசுர மாத்திரை | 85 |
| 112. | சுரத்திற்கு மோரெண்ணெய் | 87 |
| 113. | வெருகெண்ணெய் | 87 |
| 114. | சுரத்திற்கு சூரணம் | 89 |
| 115. | பித்த குணம் | 89 |
| 116. | மஞ்சள் பித்தகுணம் | 90 |
| 117. | செங்கமாறி பித்த குணம் | 91 |
| 118. | மருந்து | 92 |
| 119. | சக்தி குன்மத்தின் குணம் | 93 |
| 120. | மருந்து | 94 |
| 121. | வலிகுன்ம வாயுவின் குணம் | 94 |
| 122. | மருந்து | 95, 96 |

123. பித்தகுன்ம குணம் 96
124. எரிகுன்ம வாயுவின் குணம் 97
125. மருந்து 97
126. மகாவலி குன்மத்தின் குணம் 98
127. நெய் 99
128. வாத குன்மத்தின் குணம் 100
129. மருந்து 101
130. கபால குன்மத்தின் குணம் 102
131. மருந்து 103
132. இரத்த குன்மத்தின் குணம் 104
133. மருந்து 104
134. எரிமுக சூலையின் குணம் 106
135. மருந்து 107
136. கெர்ப்பசூலையின் குணம் 107
137. மருந்து 107
138. ஆம சூலையின் குணம் 108
139. மருந்து 108
140. கோவிப்பேய்ச்சூலையின் குணம் 109
141. மருந்து 109
142. குடல்கரி வாயுவின் குணம் 110
143. எண்ணெய் 110
144. குண்டலவாயுவின் குணம் 111
145. சூரணம் 111
146. ஆற்றாமை வாயுவின் குணம் 111
147. மருந்து 112

148. பீலிகை வாயுவின் குணம் 113
149. மருந்து 113
150. இருத்திர வாயுவின் குணம் 114
151. சூலைக்குன்மத்திற்கு மருந்து 115
152. பக்கசூலையின் குணம் 116
153. அண்டவாதத்தின் குணம் 117
154. மருந்து 118
155. குடிநீர் 118,119
156. சூரணம் 119
157. உள்குத்தின் குணம் 120
158. குடல் வாதகுணம் 120
159. உருண்டை 121
160. மருந்து 121, 122
161. நீர்ப்பாட்டின் குணம் (சன்னி) 122
162. மருந்து 123
163. இரத்த சூலையின் குணம் 123
164. கெர்ப்பரோகத்தின் குணம் 124
165. மருந்து 124
166. கெர்ப்ப வாயுவின் குணம் 125
167. எண்ணெய் 125
168. வாய்விற்கு மருந்து 126
169. கெர்ப்ப விப்புருதியின் குணம் 126
170. மருந்து 127
171. கெர்ப்ப சூலையின் குணம் 127
172. மருந்து 128

| | | |
|---|---|---|
| 173. | மலட்டுப்புழுவின் குணம் | 128 |
| 174. | சாறு | 129 |
| 175. | கருவினக் காலன் பேயின் குணம் | 129 |
| 176. | மருந்து | 129 |
| 177. | கீழ்க்கவிசையின் குணம் | 130 |
| 178. | மேற்கவிசையின் குணம் | 130 |
| 179. | மருந்து | 131 |
| 180. | தலைச்சொறி நீராம்பலின் குணம் | 133 |
| 181. | மருந்து | 133 |
| 182. | நீராம்பல் குணம் | 134 |
| 183. | பேராம்பல் குணம் | 134 |
| 184. | மருந்து | 135 |
| 185. | உதரத்தோட குணம் | 136 |
| 186. | மருந்து | 136 |
| 187. | வெப்பு வீக்கத்துக்கு மருந்து | 137 |
| 188. | மகோதரத்தின் குணம் | 137 |
| 189. | சுயமாக்னிகுமாரன் | 138 |
| 190. | பிரமேக குணம் | 140 |
| 191. | வாதபித்த சிலேற்பனம் | 142 |
| 192. | வாதநோயின் குறிகுணம் | 142 |
| 193. | பித்தநோயின் குறிகுணம் | 143 |
| 194. | சிலேற்பன நோயின் குறிகுணம் | 144 |
| 195. | சலப் பிரமேகத்தின் குணம் | 145 |
| 196. | பிரமேக வகைகளுக்கு நெய் | 146 |
| 197. | மருந்து | 148 |

198. குடிநீர் 148
199. எண்ணெய் 148
200. சூரணம் 150
201. குடிநீர் 150
202. பத்தியம் 151
203. விஷபாககுணம் 152
204. மருந்து 153
205. காசரோகத்தின் குணம் 153
206. மசரோகத்தின் குணம் 154
207. நெய் 154
208. சூரணம் 155
209. அவிகாசத்தின் குணம் 156
210. காசசிலேற்றுமத்தின் குணம் 156
211. மருந்து 157
212. சூரணம் 157
213. உளைமாந்தைக் குணம் 158
214. குடிநீர் 159
215. நெய் 160, 161
216. கற்கம் 160
217. எண்ணெய் 161
218. பிட்டு 162
219. கற்கம் 162
220. எண்ணெய் 163
221. குவளை விப்புருதியின் குணம் 163
222. மருந்து 164

223. இரத்தகாசத்தின் குணம் 164
224. மருந்து 165
225. மந்தார காசத்தின் குணம் 165
226. எண்ணெய் 166
227. சூரணம் 167
228. மீனசத்தின் குணம் 167
229. எண்ணெய் 168
230. திரி 169
231. மூக்குநீர்ப்பாய்ச்சலின் குணம் 170
232. நசியம் 170
233. குடிநீர் 171, 172
234. மண்டை வறட்சிக் குணம் 174
235. நசியம் 174
236. குடிநீர் 175
237. சிரசு குத்துக்கு மருந்து 176
238. மூலவகை ஆறுக்கும் குணம் 176
239. மருந்து 179, 181
240. மூலமுளைக்கு மருந்து 182, 183
241. மருந்துசீலை 184
242. பிட்டு 184
243. கட்டு 185
244. சூரணம் 186
245. பீர்க்கம் பூச்சு 186
246. பூச்சு 187
247. அடை 187
248. மூலத்துக்குத் தேன்குழம்பு 188

249. பீர்க்க உருண்டை 188
250. மூலம் ஆறுக்கும் காரம் 189
251. பித்த கிராணியின் குணம் 190
252. குடிநீர் 190
253. சிலேட்டுமக் கிராணிக் குணம் 190
254. குடிநீர் 191
255. வாயுக் கிராணி குணம் 191
256. சூரணம் 192
257. பிறமூலக் கிராணி குணம் 193
258. சூரணம் 193
259. உள்மூலக் கிராணி குணம் 195
260. சூரணம் 195
261. மூலக்கடுப்பின் குணம் 196
262. மருந்து 197
263. எண்ணெய் 198
264. வயிற்றுக்கடுப்பின் குணம் 199
265. நெய் 199
266. சூரணம் 200
267. மாத்திரை 200
268. அக்கினி மந்தத்தின் குணம் 201
269. குடிநீர் 202
270. மருந்து 203
271. வாதகரப்பான் குணம் 203
272. எண்ணெய் 205
273. சூரணம் 206
274. எண்ணெய் 207

275. திமிர்வாத கரப்பான் குணம் 208
276. எண்ணெய் 209
277. சூரணம் 209
278. தைலம் 210
279. கண்டகரப்பான் குணம் 210
280. எண்ணெய் 211
281. வறட்சிக் கரப்பான் குணம் 211
282. தைலம் 212
283. வறட்சிக் கரப்பான் குணம் 213
284. எண்ணெய் 213
285. கபாலக்கரப்பான் குணம் 214
286. குடிநீர் 214
287. தைலம் 215, 216
288. கண்ட மாலையின் குணம் 215
289. அரையாப்பு தோன்றக் காரணம் 217
290. கட்டு 217
291. பூச்சு 217
292. அரையாப்பிற்கு புகை மருந்து 218
293. கிரந்திப்புண் குணம் 219
294. மருந்து 219
295. மருந்துச்சீலை 220
296. மருந்து 221
297. கிரந்திக்கு வேது, பூச்சு 222
298. பூச்சு 222
299. வெள்ளைக் குழம்பு (சீலை) 223
300. மருந்துச்சீலை 223

| | | |
|---|---|---|
| 301. | புற்றின் குணம் | 223 |
| 302. | மருந்து | 224 |
| 303. | எண்ணெய், பற்று | 224 |
| 304. | சிலந்திப்புண்ணின் குணம் | 225 |
| 305. | ஆறாது அழுகின சிலந்திக்கு, ஒட்டியபுண்ணுக்கு மருந்து, | 225 |
| 306. | சிலந்தி புண்ணிற்கு மருந்து | 226 |
| 307. | சூலைப் புண்ணுக்குப் புகை | 227 |
| 308. | புகை | 228 |
| 309. | புரை, கழலைக்குக் கட்டு | 229 |
| 310. | பூச்சு வகைகள் | 229 |
| 311. | சொறி குட்டத்தின் குணம் | 231 |
| 312. | மருந்து | 231 |
| 313. | பூச்சு | 232 |
| 314. | எண்ணெய் | 232 |
| 315. | பிளவை நிதானம் - குணம் | 233 |
| 316. | மருந்து | 233 |
| 317. | பிளவை - குணம் | 234 |
| 318. | மருந்துசீலை | 235 |
| 319. | மருந்து | 236 |
| 320. | எண்ணெய் (சீலை) | 236 |
| 321. | பத்தியக் காய்கறி | 237 |
| 322. | பிளவை - அசாத்தியம் | 237 |
| 323. | பூச்சு | 238, 239 |
| 324. | குடிநீர் | 239 |
| 325. | மருந்து | 239 |

326. அனைத்துப் பிளவைக்கும் மருந்து 240
327. பிளவைக்கு எண்ணெய் 242
328. சன்னிக்கான காரணங்கள் 243
329. வாத சன்னியின் வகைகள் 243
330. பித்த சன்னி வகைகள் 244
331. சிலேட்டும சன்னி வகைகள் 244
332. மந்த சன்னியின் குணம் 245
333. குடிநீர் 245
334. மயக்க சன்னியின் குணம் 246
335. குடிநீர் 246
336. சீதாங்க சன்னியின் குணம் 247
337. குடிநீர் 247
338. தாபசன்னியின் குணம் 247
339. குடிநீர் 248
340. விரை சன்னியின் குணம் 248
341. குடிநீர் 249
342. தாகசன்னியின் குணம் 249
343. குடிநீர் 249, 250
344. விலங்கு சன்னியின் குணம் 250
345. மகாசன்னியின் குணம் 251
346. வங்க சூத்திரம் 251
347. நேமவித்தை 253
348. பேதியாக லிங்கக் குளிகை 260

**பின்னிணைப்பு**

பாடல் முதல் குறிப்பகராதி 262
விற்பனை நூல் விலைப்பட்டியல் 271

# அகத்தியர் மருத்துவம்

## நீர்க்குறி

*ஒங்கிய வாதத் தோர்க்கு*
*நீர்விழும் குணமு ரைக்கில்*
*பூங்கொடி கறுத்து நொந்து*
*செறுத்துடன் பொருமி வீழும்*
*பாங்குறும் பித்தத் தோர்க்கு*
*பசியநீர் விழுந்து காட்டும்*
*ஏங்கவே சுருக்க தாக*
*எரித்துமஞ் சளித்து விழும்!* 1

வாத, பித்த உடம்பினோர்க்கு உண்டாகும் நீர்க்குறி இங்கு விளக்கப்படுகிறது. சிறுநீர் கறுத்து, நொந்து, சிறுத்து, பொருமி விழும். பித்த உடம்பினோர்க்கு நீர் சற்று பசுமை கலந்ததாய் குறைவாக விழும். எரிச்சலுடன் விழும் இந்நீர் மஞ்சள் நிறமாகக் காணும்.

*விழுமே சிலேற்றுமத் தோர்க்கு*
*நீர்விழுங் குணமு ரைக்கில்*
*நாளுமே வெளுத்து ழைந்து*
*நயம்பெற வீங்குங் கண்டாய்*
*வாள்விழி மானே தேர்ந்த*
*மானிடத் தமக்குத் தானே*
*கோள்பல வாகி வீழு*
*மென்றுதான் குறித்துக் கொள்ளே!* 2

சிலேட்டும உடம்பினோர்க்கு நீர் வெளுத்து, உழைந்து வீழும். நீர்க்குறியில் வீக்கங்காணும். இவ்வாறு சிறுநீர் இறங்குவது உடம்பிற்குத்தக மாறுபட்டு வீழும் என்று அறியலாம்.

## சுர உற்பத்தி

*சுரந்தானும் வியாதிக் கெல்லாம்*
*துரையென வீற்றி ருக்கும்*

*கரந்தானும் பிலத்து மேவுங்*
*காலற்குச் சமனாய்ப் பேசும்*
*அரந்தானும் தக்கன் யாகம்*
*அழித்திடும் போது வந்த*
*வரந்தானும் நெத்திக் கண்ணில்*
*பிறந்தது சுரம்நல் மானே!* 3

வியாதிக்கெல்லாம் துரையாக விளங்கும் சுரம் வந்து விட்டால் அது உயிர்க்கு இறுதி ஆகிவிடும். இச்சுரமானது தக்கன் யாகத்தைச் சிவன் அழிக்கும்போது நெற்றிக்கண்ணைத் திறந்ததாலே அந்தக் கண்ணில் இருந்து தோன்றியதுதான் என்பர்.

*ஆய்ந்ததோர் தரமு மேழு*
*வகையுண்டு அணங்கே கேளாய்*
*மாயமாம் வாத பித்த*
*சிலேற்றுமம் வன்மை யாகத்*
*தாயமாம் தேர்ந்த பூதம்*
*சீரணம் சன்னி தோஷம்*
*பாயகயல் விழியி னாளே*
*பலவிஷ சுரமு மாமே!* 4

சுரங்களில் ஏழுவகையுண்டு. வாத பித்த சிலேட்டும சுரங்கள், சீரணம், சன்னி, தோஷம், விஷசுரம் என அவை ஏழாகும்.

*உண்டியில் குளிக்கும் நீரில்*
*ஒங்கிய மலத்தில் காயம்*
*மிண்டிய வேலை செய்யும்*
*வேதனை யதனில் தானே*
*மண்டிய கபாலந் தானும்*
*வறண்டதில் மாத ராலும்*
*தொண்டையின் கனிவா யாளே*
*சுரமது தோன்றுந் தானே!* 5

மிகுத்துண்ணல், குளிக்கும் நீர் மாறுபடல், மலம் குடலில் தங்குதல், மலக்குடல் காயம் ஏற்பட்டிருத்தல், மிகுதியான வேலைப்பளு, கபால வறட்சி, மிகுந்த பெண்போகம் இவற்றால் சுரம் ஏற்படும்.

*சுரமது தோன்று மன்று*
*பட்டினி கிடந்த தாயதாய்ப்*
*பரிவுடன் இரண்டாம் நாளில்*
*பல்லது விளக்கி நாக்கு*
*வரிசையாய் விளிவென் னீரை*
*வாங்கியே முகங்கை பூசி*
*சிரசினில் வேட்டி கட்டி*
*இடக்கைகிழ்ப் படுக்கச் செய்யே!* 6

சுரம் தோன்றிய அன்று பட்டினி கிடந்து இரண்டாம் நாளில் பல் விளக்கி நாக்கு வழித்து, வெந்நீர் கொண்டு முகம், கைகால் கழுவி, தலையினில் வெள்ளைத் துணியை இறுகக் கட்டி இடக்கையை கீழே வைத்துப் படுக்கச் செய்யவும்.

*செய்யதோர் மூன்றாம் நாளில்*
*சிறப்புடன் எழுந்தி ருந்து*
*துய்யவே தேற்றான் கொட்டை*
*பாங்குட னொன்று தின்று*
*உய்யவே நாலொன்றாய்க் காய்ந்த*
*தண்ணி ருள்ளுக்குக் கொண்டு*
*துய்யநூ லங்க னங்கள்*
*துடங்கிடத் தோஷம் போமே!* 7

இதனைத் தொடர்ந்து மூன்றாம் நாளில் சிறப்புடன் எழுந்து விடவும். பின் தேற்றான் கொட்டை ஒன்றைத் தின்று, நான்கிலொன்றாய்க் கொதித்து வடிகட்டிய தண்ணீரைப் பருகக் கொடுக்க தோஷங்கள் போகும்.

*தோஷமே போகு மாகில்*
*சுக்குக் கஞ்சி ஏழுநாள்*

தோடு மூன்றுநா ளவுசதங்
கொண்டால் காலச் சுரங்கள்
விளவே மருந்து கொண்டு
கறிவகை விரும்பிக் கொள்ளே! 8

சுரதோஷம், முறைசுரம், அருசி இவை நீங்க சுக்குக் கஞ்சி காய்ச்சி ஏழுநாள் பருகக் கொடுக்க வேண்டும். அதற்குரிய மருந்து மூன்று நாட்கள் கொள்ள சுரங்கள் நீங்கும். மருந்து முடிந்தால் காய்கறிகளை உண்ணலாம்.

கருத்தில்லான் கிழவன் பாலன்
கண்ணோந் தோன்றி சார்ந்தோன்
றுரைத்திடுங் கசரோ கத்தோன்
நினைத்தவன் வழிந டந்தோன்
உரைத்த வெற்ப பிணிவேந்தர்க்கு
முதுசுரம் வந்து தோன்றிப்
பருத்தெழுங் கொங்கை மாதே
பட்டினி இடலா காதே! 9

கிழவர், பாலர், காசரோகத்தோர், வழிபோக்கர் போன்ற எவர்க்கும் சுர நோய் தோன்றலாம். சுரம் வந்துள்ள போது தாய்மார்கள் உணவை நிறுத்தாமல் உட்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

வாசமிகு பூப்பருகு சந்தனம் சாத்து
மருவு பாக்கிலை சிவப்புக் கொடிச்சிலை
பாசமிகும் நெய்பாலோ டென்ன டெண்ணை
பருகுநல்ல வெல்லமொடு பனையின் வெல்லம்
ஆசைமிகும் பெண்மோகம் பட்டுச் சிலை
அகற்றிடவர் இத்தனையும் அறிவுள் ளோர்கள்
தூசணியும் முலைமாதே செப்பக் கேளாய்
சுத்தினமேல் தோஷம்வரும் சொல்லி னோமே! 10

சந்தனம், சாந்து, வெற்றிலைப்பாக்கு, சிவப்புக் கொடி, சீலை, நெய், பால், எண்ணெய், நல்லவெல்லம், பனைவெல்லம்,

பெண்மோகம், பட்டுச்சேலை இவற்றை அறிவுமிக்கோர் சுரம் வரும் காலங்களில் நீக்கி விடுவர்.

*சிவந்த சீலை புதுப்புடவை*
*செருக்கும் பாக்கு நெய்வெல்லம்*
*சுகந்தங் காற்று கோபித்தல்*
*துய்ய தயிர்நெய் பால்பஞ்சுமெத்தை*
*உகந்த மின்னாருகி பாலூற்று*
*நாக்கு யடித்த முதல்*
*விழ்ந்த சிரசில் முழுகுவதுங்*
*கடின சுரத்துக் காகாதே!* 11

சிவப்பு வண்ணச் சேலை, புதுச்சேலை, பாக்கு, நெய், வெல்லம், வாடைக்காற்று, கோபங்கொள்ளல், தயிர், நெய், பால், பஞ்சு, மெத்தை இவற்றைத் தவிர்ப்பதும், தலை முழுக்கு இல்லாமல் இருப்பதும் சுரத்திற்கு நல்லது.

*சுரம்விழில் மூன்று னாளுஞ்*
*சாறெழில் தோஷம் வந்தால்*
*பரிந்ததொரு மருந்து செய்து*
*பார்க்கவும் வேண்டாஞ் சொன்னேன்*
*அரந்தரு மேழு நாளைக்*
*கப்புறம் தோஷம் வந்தால்*
*நிரந்தர மாகத் தீரும்*
*நிச்சய மென்று காணே!* 12

சுரம் வந்தால், மூன்று நாளில் குணமாகும். சுரத்தோடு 5, 6, 7-ஆம் நாட்களில் தோஷம் வந்தால் அதற்குரிய மருந்தைச் செய்து பார்க்கவும் வேண்டாம். அவ்வாறன்றி ஏழு தினங்கட்குப் பிறகு தோஷம் வந்தால் நிரந்தரமாகக் குணமடையும் என நம்பலாம்.

## வாத சுரத்தின் குணம்

*வாத சுரத்தின் குணங்கேளீர்*
*வயிறு சிறுக்கல் குளிரிருமல்*

போத நடுக்கல் கீழ்முதுகு
பொருத்தும் கைகா லதுகுடைதல்
காதத் தண்ணீர் மிகத்தேடல்
கருதுத் தலைனோக் காட்டுடனே
மீது கோப மலசலங்கள்
மிகவும் கடுக்கும் மெல்லியரே! 13

வயிறு சிறுக்கும், குளிர், இருமல், நடுக்கல், கீழ்முதுகு, பொருத்து, கைகால் குத்தல், அதிதாகம், தலைநோக்காடு, மலசலங் கழியும்போது கடுத்தல் இவை வாத சுரத்தின் குணம்.

## பித்தசுரத்தின் குணம்

பித்த சுரத்தின் குணங்கேளீர்
பித்தது வெகுவாய் நித்திரைபோம்
யுத்த மலமும் மிகச்சிவந்து
யுரைக்கும் சிறுநீர் சிவந்துவிழும்
சத்தி யெடுக்கு மூர்ச்சைவரும்
தாக மெடுக்குந் தளர்ந்துவரும்
மெத்த நடுக்கும் வாயுலரும்
விக்க லெடுக்கும் மெல்லியரே! 14

பித்த சுரம் உடையோர் மிகுதியாகத் தூங்குவார்கள். சிறுநீரும், மலமும் சிவந்து கழியும். வாந்தி, மூர்ச்சை, தாக மெடுத்தல், உடல் தளர்ச்சி, நடுக்கம், வாயுலர்தல், விக்கல் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பர்.

## சிலேட்டும சுரத்தின் குணம்

வானீர் சேர்ந்து உடம்புபல
வர்ணமாகுஞ் வலஞ்சல மடைக்கும்
தானே குளிர்ந்து மிகவெதுப்பும்
தரியா திருமல் தானுண்டாம்
.....
சிறந்த மூக்கில் நீர்பாயும்
வானோ ரிழியார் சிலேட்டுமமாய்
வந்த சுரத்தின் வகையாமே! 15

உடம்பு நிறம் மாறும். மல சலம் அடைத்துக்கொள்ளும். உடல் தானே குளிர்ச்சி அடையும். பின் வெதுப்பை உண்டாக்கும் இருமலுண்டாகும். மூக்கில் நீர் பாயும். இவை சிலேட்டும சுரத்தின் குணங்களாகும்.

துய்யுடல் சிக்கென்றல் மலஞ்சிக் கென்றல்
தோகையரை யண்டாமல் துரத்தி யோட்டல்
பெய்யநாடி மிகவுரைத்தல் புதல்வர் போற்றல்
....டிடைவெள்ளம் புனலே காணல்
மையமருவுந் தலையுமயிர் நீண்டி ருத்தல்
வருந்தாதே யுண்டியுடன் வாழ்வ தாகி
செய்யமலர் திருமாதே யிக்கு ணங்கள்
சிலேற்றுமத்தின் குணமிதென்று செப்ப லாமே! 16

உடல் மெலிந்திருத்தல், மலம் சிக்கிக் கொள்ளுதல், பெண்போகத்தில் விருப்பம் இல்லாமை, நாடிகள் வேகமாகத் துடித்தல், தலைமயிர் நீண்டிருத்தல் போன்றவை சிலேற்றும உடம்பினோர் குணங்களாகும்.

## நாடிக்குறி

ஓடிடும் நாடி பார்க்கும்
உண்மையே உரைக்கக் கேளாய்
ஆடவர் வலக்கை நாடி
அரிவையர் யிடக்கை நாடி
பாடமாய்த் தேடு நாடி
பரிவுடன் பார்க்க வேணும்
ஊடறித் துறைக்கும் நல்ல
உத்தம வயித்திய னாமே! 17

மனிதனுள் ஓடும் நாடியின் நிலையை இப்பாடல் விளக்குகிறது. அவ்வாறு நாடி பார்க்கும் போது ஆடவர்க்கு வலக்கை நாடியும், மகளிர்க்கு இடக்கை நாடியும் பார்த்து நாடியின் குறி உணர்ந்து அறிவது மருத்துவர் கடன்.

*சொல்லிய வுந்தி கீழே*
*சுழித்ததோ ரெழுத்தைப் பற்றி*
*யெல்லையிற் சிறந்த நாடி*
*எழுபத்தீ ராயி ரத்தில்*
*வல்லதோ ரீசர் பாதம்*
*வணங்கியே யோடி நிற்கும்*
*நல்லதா மூன்று நாடி*
*நயந்துநீ ருணர்ந்து கொள்ளே!* 18

உந்திப் பகுதியின் கீழ் மனிதனுக்குள் ஓடும் நாடிகள் எழுபத்து இரண்டாயிரமாகும். அந்த எழுபத்திரண்டாயிரத்துள் ஈசன் பாதம் வணங்கி ஓடிநிற்கும் சிறப்பு நாடிகள் மூன்று என உணர்ந்து கொள்க.

*அருமறை நூலை யாய்ந்து*
*அங்கையில் நாடி பார்க்கில்*
*பெருவிர லங்கு லத்தில்*
*பிடித்துடன் நடுவே தொட்டால்*
*ஒருவிர லோடில் வாதம்*
*இருவிர லோடில் பித்தம்*
*திருவிரல் மூன்று மோடில்*
*சிலேற்றும நாடி தானே!* 19

அரிய நாடி நூல்களிலே சொல்லப்பட்ட நிலை அறிந்து ஆய்ந்து மணிக்கட்டில் நாடி பார்த்தல் சிறப்பு. பெருவிரல் அங்குலத்தில் பிடித்து நடுவில் தொட்டு நாடியின் தன்மையை உணரவும். மூன்று விரல்களினால் நாடியை அறியும் போது ஒரு விரலில் மட்டும் ஓடினால் வாதம், இருவிரலில் ஓடினால் பித்தம், மூன்று விரலிலும் ஓடினால் சிலேட்டுமம் என அறியவும்.

*அன்னமே கோழி ஒணான்*
*மயிலென நடக்கும் வாதம்*
*பின்னையூ ராமை அட்டை*
*பெருத்திடில் பித்த மாகும்*

சொன்னதேன் மொழியி னாளே
சுற்றிய தவளை பாம்பு
அன்னமே அய்ய மென்று
யியம்பினார் வேதந் தானே! 20

அவ்வகை நாடி அன்னம், கோழி, ஓணான், மயில் போல நடந்தால் வாதம் என்றும் ஆமை, அட்டைபோல் நடந்தால் பித்தம் என்றும் தவளை, பாம்பு போல் நடந்தால் ஐயம் என்றும் வேதம் இயம்பும்.

அங்கை முறுக்கி நெட்டி
யடவுடன் மையை வாங்கி
செங்கையைப் பிடித்தி ழுத்துத்
திறமுடன் பார்க்கும் போது
பங்குறு பருத்த நாடி
மைய்யவே ஒடு மாகில்
மங்கைதனை நோகச் செய்து
வாதமாம் நாடி தானே! 21

உள்ளங்கையை மடக்கி நெட்டி வாங்கியபின் மணிக் கட்டில் நாடியைச் செம்மையாகப் பார்க்கும்போது பருத்த அந்த நாடி மெதுவாகச் செல்லுமாகில் வாதம் என்று அறியலாம்.

உற்றதோர் நாடி தானும்
நொந்துயர்ந்து பற்றி யோசல
பித்தமாம் நாடி யென்று
விசக்கற வறிந்து கொள்க
மெத்தவே இரண்டு தாங்க
விரைவுடன் தெரிக்கு மாகில்
சித்தமே யறிவீ ரய்யா
சிலேற்பன நாடி தானே! 22

நாடியானது நலிந்த நிலையில் உயர்ந்து ஓடுமாகில் பித்தம் என்று சந்தேகமின்றி அறியவும். அந்நாடியானது விரைந்து ஓடுமாகில் அதைச்சிலேற்பனநாடி என்று அறியலாம்.

*ஆனதோர் வாத நாடி*
*அறிந்துற வலுவாய் நிற்கில்*
*ஊனமா முடலில் நோய்கள்*
*உலாவியே நிற்கு மாகில்*
*தானமாம் பித்த நாடி*
*தான்வலு வாகி நிற்கில்*
.....
*காய்ச்சலும் கடின மாமே!* 23

வாத நாடி உடம்பில் வலுவுற்றிருக்குமானால் நோய் களைத் தந்து உடலை ஊனமாக்கிவிடும். பித்தநாடி மிகுந்து வலுவுடன் நிற்குமாகில் கடினமான காய்ச்சலை அது ஏற்படுத்தும்.

*வாதமும் அய்யந் தானும்*
*வலுவுற நிற்கு மாகில்*
*மோதிய வியாதி தீர*
*மூன்றுனாள் செல்லு மென்க*
*ஆதனால் பித்த நாடி*
*யணிலது போலே ஒடி*
*வேதனை யான காய்ச்சல்*
*மீளுமென் றறிந்து கொள்ளே!* 24

வாத நாடியும், ஐயநாடியும் வலுவாக நிற்குமானால் அவ்வுடலில் வந்துற்ற பிணிகள் தீர மூன்று நாட்களாகும் என்று அறியவும். பித்த நாடியானது அணில் போல் ஓடினால் வேதனையான காய்ச்சலை உண்டாக்கும் என்று அறிக.

*பித்தமும் அய்யந் தானும்*
*பிரண்டெழுந் தோடு மாகில்*
*சித்தத்தில் வெற்பும் நீரும்*
*சிறுகுளிருந் திரும லுண்டாம்*
*பத்தியே சுரந்து வேர்த்து*
*பசிகெடும் மலஞ்ச லமும்*
*சற்றிலும் வழுவ ழுப்புச்*
*சரீரமும் வெளிறுந் தானே!* 25

பித்த நாடியும் ஐய நாடியும் ஒன்றோடொன்று புரண்டு ஓடுமாகில் வெப்புண்டாகும். பின் உடல் குளிர்ந்து இருமல் உண்டாகும். உடல் சுரந்து வியர்த்து விடும். பசியெடுக்காது மலம், சலம் எளிதில் போகாது. உடல் வழவழப்புப் பெற்று வெளிறிப் போகும்.

*வாதமும் பித்த மய்யம்*
*வன்புத்தெழுந் தோடு மாகில்*
*ஏதுக்குள் பலது சீதம்*
*ரேஷி ரெக்கவ தானும்*
*தீதுத்தி வனப்ப டுத்தும்*
*திரிதோ ஷத்தில் பலபிணியாம்*
*தாதுக்கள் கைகால் மெய்யுஞ்*
*சத்திகெட் டுலையுந் தானே!* 26

வாதபித்த ஐய நாடிகள் மூன்றும் மயங்கி எழுந்து ஓடுமாகில் உடம்பில் சீதத்தை ஏற்படுத்தும். முத்தோடத்தில் பல பிணிகள் உண்டாகும். கைகால் உளைச்சல் ஏற்பட்டு உடல் வலுவிழந்து காணப்படும்.

*வாகிய அன்னங் கோழி*
*மயிலென நடக்கும் வாதம்*
*ஏகிய ஆமை அட்டை*
*யிவையென நடக்கும் பித்தம்*
*போகிய தவளை பாம்பு*
*போல்வது சிலேற்றும மென்க*
*ஆகிய நாடி மூன்றும்*
*அமர்ந்திடில் சன்னி யாமே!* 27

வாத நாடியானது அன்னம், கோழி, மயில் ஆகியன போன்று நடக்கும். ஆமை, அட்டை போன்று ஊர்ந்து நடப்பது பித்த நாடியாகும். தவளை, பாம்பு போன்று நடக்குமாகில் அது சிலேட்டும நாடி என உணரலாம். இம்மூன்று நாடியும் ஓடாமல் அமர்ந்தால் சன்னியாகும்.

அந்தித்த நாடி தானும்
அரணைவால் துடியே போல
சந்தித்து மாத ரோடே
தான்புக்கில் மீண்டா ரென்ன
வெந்தித்து விதறி யோடி
வேதனை மிகவுண் டாகும்
வந்தித்து மதங்க ளாலே
மதியுள்ளோ ரறிந்து கொள்ளே! 28

மேற்கண்ட நாடிகள் அரணையின் துண்டிக்கப்பட்ட வால் தனியே துடிப்பதுபோல் துடிக்குமாயின் அது சிரமங் களைக் கொடுக்கும் என்பதை மதியுள்ளோர் அறிவோராக. பெண்மேல் ஆர்வங்கொண்டு வீழ்ந்தவன் மீள்வதில்லை. அதுபோல இவ்வாறு துடிக்கும் நாடியையுடையவனும் மீள்வது கடினம் என்பதாம்.

பித்தமும் வாத நாடி
பேசிய அய்ய நாடி
உற்றதோர் சரியாய் தன்னில்
உலாவியே நிற்கு மாகில்
சுத்தமா முடலந் தன்னில்
சொல்லவே வியாதி யில்லை
முத்தணி முலைநல் மாதே
மொழிந்தனர் முனிவர் தாமே! 29

பித்தநாடி, வாதநாடி, ஐயநாடி இவை சரியாய் ஓடிக் கொண்டிருக்குமானால் அந்த உடலில் சொல்லிக் கொள்வதற்குக் கூட ஒரு வியாதி இருக்காது என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

கையைநீ பிடித்துப் பார்த்து
கடுகவே நிமித்துப் பின்னும்
உய்யவே வேணு மென்று
உகந்துநீ நாடி சொல்லும்
பய்யவே தொங்கித் தொங்கி
பற்றியே நிற்கு மாகில்

அய்யவே நாடி யென்று
அறிந்துநீ விட்டுப் போமே! 30

கையைப் பிடித்துப் பார்த்து நாடியை அறிந்து கொள்வது நல்லது. இந்நாடிகள் விட்டு விட்டு தொங்கித் தொங்கி ஓடுமாகில் அது ஐய நாடி என்று அறிந்து கொள்ளலாம்.

நாடியிற் றெளிவி னாலும்
நற்குறி குணத்தி னாலும்
நீடியா விழியி னாலும்
நிலைபெறு தேகத் தாலும்
கூடிய வியாதி தன்னைத்
தொகுத்துநீ ரறிய வேண்டில்
தேடிய குருடன் கையில்
சிக்கிய கோல தாமே! 31

கண்களில்லாத குருடனுக்குக் கிடைத்த தடியைப் போன்று நாடியின் தெளிவு, நல்ல குறிகுணங்கள், களங்கமற்ற விழி, நிலை பெற்ற தேகம் இவற்றைத் தொகுத்து மருத்துவன் அறிந்து அதன் வழி நோயைக் கண்டறிந்து கொள்ளலாம்.

## வாதபித்த சிலேட்டும பிறவிநிலை

வாதமோ டய்யம் பித்தம்
மற்றுள வியாதி தானும்
நீதமா யறிந்து கொள்ள
நிகழ்த்தவே கேளாய் மானே
பாதமுஞ் சிரசு கைமேல்
பரந்திடு மூன்று தானும்
மிதினி லுள்ள வாறும்
விபரமாய் முனிவன் சொன்னான்! 32

வாதமோடு ஐயம், பித்தம் மற்ற வியாதிகளை, அறிந்து கொள்ள பாதம், தலை, கையில் அறியப்படும் மூன்று நாடிகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

*உந்தியி லொதுங்கி நிற்கும்*
*உறுப்பயி னெட்டு வாதம்*
*நந்துநாற் குலையில் நிற்கும்*
*நாற்பது பித்தந் தானும்*
*பிந்துசே ரிடது மார்பில்*
*அய்யமும் இருப தாகும்*
*சிந்தையிற் கரப்பான் தானும்*
*சேர்ந்திடு மொருபத் தொன்றே!* 33

உந்தியில் வாதத்தின் நாடிகள் எட்டு அமர்ந்திருக்கும். நெஞ்சுப் பகுதியில் நாற்பது பித்த நாடிகள் இடம் பெற்றுள்ளன. இடது பக்க மார்பில் இருபது ஐய நாடிகள் உள்ளன. கரப்பான் தொடர்பான நாடிகள் பதினொன்று அமர்ந்துள்ளன.

*எண்பது வாதத் துக்கு*
*மியலதா மஞ்சு வாதம்*
*குண்டல வாதங் குடல் வாதம்*
*குடல்கறி வர்ண வாதம்*
*நண்பென நடுக்கு வாதம்*
*நடுமதி யஞ்சு பேரும்*
*தன்பென வறிந்து சொல்லுந்*
*தலைவர்க ளாகு மாமே!* 34

வாதம் எண்பதாகும். அவற்றுள் இயல்பான வாதங்கள் ஐந்து, அவை குண்டலவாதம், குடல்வாதம், குடற்கறி வர்ண வாதம், நடுக்குவாதம், நடுமதிவாதம் என்ற ஐந்துமாம்.

*சுகமது சுருட்டு வாதம்*
*சுரோணிதக் கட்டு வாதம்*
*தகமெனும் கரளை வாதம்*
*தனிச்சிலை வாத தாகன்*
*அகமது முருட்டு வாதம்*
*அகம்புரி முறுக்கு வாதம்*

மகமுடன் சொல்வ தெல்லாம்
மந்திரீ தலைவ ராளே! 35

சுருட்டு வாதம், சுரோணிதக்கட்டு வாதம், கரளை வாதம், தனிச்சீலை வாதம், உருட்டுவாதம், முறுக்கு வாதம் ஆகியனவும் சில வாதங்கள்.

வாதமே காலில் சேரும்
வயிற்றில் பித்தம் சேரும்
சேதமே செய்யும் அய்யம்
சிரத்துக் கண்டத்து மேலே
நாதனா ருளிச் செய்யே
நான்முகத் தரசு பாரில்
வேதநூல் விதியி தென்று
விரும்பியே விளம்பி னாரே! 36

வாதம் காலில் சேரும். வயிற்றில் பித்தம் சேரும். ஐயம், தலை, கண்டங்களில் தங்கி துன்பத்தை உண்டாக்கும்.

எண்பது வாதந் தன்னை
யிருவகை பகுத்துக் காணில்
நண்பென அரைக்கு மேகால்
நாற்பது வாத மாகும்
பண்புசே ரரைக்குங் கீழே
பத்துநான் காகும் வாதம்
வன்புசேர் குழலி னாளே
வாதத்து யியல்பு தானே! 37

வாதம் எண்பது வகைப்படும். இவற்றை இரண்டு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம். இடுப்புக்கு மேல் நாற்பது வாதங்களும், இடுப்புக்குக் கீழே நாற்பது வாதங்களும் அமைந்திருக்கின்றது.

## வாதத்தின் குணம்

வாதத்தின் குணமே தென்னில்
வயிறது பொருமிக் கொள்ளும்

தாதுக்க ளுளைந்து கைகால்
சந்துகள் கடுத்துக் காணும்
தீதுத்த சிறுநீர் தானும்
சிறுத்துடன் எரிந்து வீழும்
போதற்ற வாத மென்று
புகன்றனர் புலவர் தாமே! 38

வாதத்தால் வயிறு பொருமிக் கொள்ளும். தாதுக்கள் உளைந்து கைகால் சந்துகள் கடுத்துக் காணும். சிறுநீரானது சிறுத்து எரிந்து வீழும்.

## மருந்து

வேளைநீ ருழக்க தென்றும்
வேர்க்கொம்பு வெள்ளை யுள்ளி
ஆனநீ கழஞ்சொவ் வொன்றா
யன்னீரில் அரைத்துச் சேர்த்து
ஏழையே யெள்ளி லெண்ணை
யிருகழஞ் சதனில் சேர்த்து
தானமாந் திருநாள் கொள்ள
சமனாகும் வாதந் தானே! 39

வேளை எனும் நல்வேளைச் சாற்றை 325 மி.லி. எடுத்து சுக்கு, வெள்ளைப்பூண்டு இவற்றை முறையே 5 கி. அளவு எடுத்து அதில் அரைத்து, நல்லெண்ணெய் 10 கி. அளவு சேர்த்து உட்கொண்டால் வாதம் சமமாகும்.

## பித்தத்தின் குணம்

மயங்கிடு மெய்த ழன்று
மஞ்சளித் திருக்குங் கண்கள்
தியங்கிடும் கிறுகி றுத்து
செருக்குநெஞ் செரித்தி டித்துக்
கயந்திடும் நாவும் பல்லும்
கருகுமெய் கண்ம யங்கு

தயங்கிடும் பித்த ரோகம்
தன்குணம் தான்காண் மாதே! 40

பித்தம் மிகக் கொண்டவரின் உடல் தளர்ச்சியுறும். கண்கள் மஞ்சளித்துக் காணப்படும். தலை கிறுகிறுக்கும். நெஞ்சில் எரிச்சல் ஏற்படும். நாக்கும், பல்லும் கசப்பு கொடுக்கும். உடம்பு கருத்துக் காணும். கண் மயங்கும்.

## மருந்து

சுத்தநேர் வாள மொன்று
சுகமு ளதனி லுண்ண
பித்தநோய் குணமா மென்று
பேசினார் முனிவர் தாமும்
முத்தக்கா சுழக்கு சுக்கு
முந்திரி பழம்பால் காய்ச்சி
பத்துனாள் சீனி கூட்டிப்
பருகவே பித்தம் போமே! 41

சுத்தி செய்த நேர்வாளத்தை மருந்தாக்கி உண்டால் பித்த நோய்கள் குணமாகும் என்று முனிவர் கூறினார். 325 கி. முத்தக்காசு, சுக்கு, முந்திரி, பால் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி, சீனி கூட்டி பத்து நாள் பருக பித்தம் நீங்கும்.

## சிலேட்டுமத்தின் குணம்

இனிப்புடன் வெளுக்கு நாவும்
எடுக்கொணா நடக்கொ ணாது
பனித்தணீர் சிறுநீர் பாயும்
பஞ்சுபோல் வெளுக்கும் மேனி
சனிப்புடன் குறைந்து வாட்டி
செயல்பல மில்லா தாகும்
முனிந்திடுஞ் சிலேட்டு மத்தின்
குணமென முனிவன் சொன்னான்! 42

நாவில் இனிப்புச்சுவை தோன்றும். நா வெளுக்கும். வேகமாக நடக்க இயலாது. சிறுநீர் பனி நீர்போல் கழியும்.

மேனி பஞ்சுபோல் வெளுக்கும். செயல்படமுடியாதபடி உடல் வன்மையிழக்கும். இவை யாவும் சிலேட்டுமத்தின் குணங்களாகும்.

### மருந்து

*சுக்குடன் கடுக்காய் தன்னை*
*சுடுசாம்ப லீட்டெ டுத்து*
*தக்குடன் சமனே கொண்டு*
*தகத்திடித் தேவ டித்துச்*
*சிக்கென வைத்துக் கொண்டு*
*தேனதிற் குழைத்த ருந்த*
*துக்கஞ்சேர் சிலேட்டு மந்தான்*
*துணிவுடன் துலையுந் தானே!* 43

சுடுசாம்பலில் இட்டு சுத்தி செய்து கொண்ட சுக்கு, கடுக்காய் இவற்றைச் சம அளவு சேர்த்து இடித்து சலித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதனைத் தேனில் குழைத்து உண்டால் துன்பம் தீரும்; சிலேட்டுமம் அகன்றுவிடும்.

### வாதத்தின் குணம்

*ஆனதோ ராதி வாதம்*
*அரண்டுவந் துற்ற காய்ச்சல்*
*தானமில் லாதி ருக்கும்*
*கனத்துடல் விரையல் சேரும்*
*கானமாங் கால்க ரங்கள்*
*கரித்துடன் கடுப்பாய் வந்தால்*
*வானதை முன்னே சொன்னேன்*
*வாதத்தின் குணமி தாமே!* 44

வாதத்தால் காய்ச்சல் வரும். ஓரிடமென்று இல்லாமல் எல்லாவிடங்களிலும் வாதம் பரவி விடும். உடல் கனத்து குளிரை ஏற்படுத்தும். கால், கைகள் கருத்து கடுப்பு ஏற்படுத்தும். இவை வாதத்தின் குணங்களாகும்.

**மருந்து**

சீரக மீரண்டு குப்பைத்
திரிகடுகு சமனாய் நோக்கி
வேரின்தோல் சமனாய்க் கொண்டு
வீளங்கவே பொடித்துத் தேனில்
வீரமாய் விடிவே ரந்தி
மின்னனாய்த் தின்று வந்த
பாரதுங் குணங்க டன்னை
பகர்ந்துபோம் வாதந் தானே! 45

நற்சீரகம், கருஞ்சீரகம் ஆகிய இரண்டு, சதகுப்பை, திரிகடுகு இவற்றைச் சமமாய் எடுத்துக் கொண்டு அதே அளவு கொடிவேலி வேரின் தோலையும் எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இப்பொடியைத் தேனில் குழப்பி காலை, மாலை உண்டுவர வாதம் நீங்கிவிடும்.

**பித்த குணம்**

எண்ணிய பித்த மாகி
லீப்படி சிரசு நொந்து
கண்ணுடல் சிகப்புக் கூடி
கருணையு மய்யல் கூடும்
திண்ணம தாகந் தோன்றுஞ்
சிறுசுர விஷமு முண்டாய்
உண்ணுநா வுலர்ந்து பிச்சு
உற்றதோர் நிறமு மாமே! 46

பித்தம் அதிகமாகிவிட்டால் தலைவலி ஏற்பட்டு கண்ணும் சிகப்பேறி மயக்கம் ஏற்படும். அதிதாகம் ஏற்படும். சுரம் சிறிது ஏற்பட்டு நச்சுத் தன்மையும் கூடி நாவானது உலர்ந்து வெளிர்நிறமாக மாறும்.

**மருந்து**

இஞ்சியைக் குத்தி நன்றா
யிருகண்ணில் பிழிய வேணும்

மிஞ்சிய மிளகிந் துப்பு
ஏலமும் கடுக்காய் சுக்கு
வஞ்சிசேர் சீனி முந்திரி
வகையும் பொடித்து வெல்லம்
தஞ்சமாய்த் தின்னும் போதே
தகர்ந்திடும் பித்தந் தானே! 47

இஞ்சியை நன்றாக இடித்து அச்சாற்றை இரண்டு கண்களிலும் பிழிய வேண்டும். மிளகு, இந்துப்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, சீனி, முந்திரி இவற்றைப் பொடித்து வெல்லமும் சேர்த்து உண்ண பித்தம் பறந்தோடும்.

## சிலேட்டும குணம்

தலைகனத் துடல்வெ தும்பி
தன்செவி மூக்க டைக்கு
மிலகிய முதர முற்றி
விரைந்துமெய் சுளுக்கக் குத்து
விலகிய அசனம் வேண்டாம்
வெதும்பிய சிலேற்று மத்தின்
நிலவிய சுரங்கள் கண்டு
நிச்சய மருந்து செய்யே! 48

தலை கனத்து உடல் வெதும்பும். மூக்கு, செவி இவை அடைத்துக்கொள்ளும். வயிறு உப்பி உடலில் குத்தல் ஏற்படும். உணவில் விருப்பம் இருக்காது. சுரம் உண்டாகும். இவை சிலேட்டுமத்தின் குணங்களாகும்.

## மருந்து

திரிபலை யுடனே யேலம்
திரிகடு கதிவி டையம்
அறிகடு ரோகணி ஓமம்
அக்கிரா கொத்து மல்லி
திரிபடா பத்திரி சீரகஞ்
சரியாகப் பொடித்து வெல்லம்

மறிபடு ரோகி தின்ன
வளம்படு முடலந் தானே! 49

திரிபலை, ஏலம், திரிகடுகு, அதிவிடையம், கடுகுரோகணி ஓமம், அக்கிராகாரம், கொத்தமல்லி, தாளிசபத்திரி, சீரகம், இவற்றைப் பொடித்து வெல்லம் சேர்த்து சிலேட்டும நோயினர் உட்கொண்டால் நலமாகும்.

## வாதக் கதிப்பின் குணம்

வாதமே கதித்த போது
வாயுமே லெழும்பி மீளும்
வாதமே இரும லாகித்
துடர்ந்திடுஞ் சன்னி வாதம்
பேதமை செய்கி ராணி
பெருவயி றுதிர தோஷம்
போதவே வருவி தென்று
பொருந்தவே முனிவன் சொன்னான்! 50

வாதம் கதித்தால் வாயுவானது மேல் எழும்பி மீளும். வாதத்தால் இருமல் ஏற்பட்டு, அதனைத் தொடர்ந்து சன்னி வாதம், கிராணி, பெருவயிறு, உதிரத்தோஷம் இவை உண்டாகும்.

## மருந்து

நொச்சிச் சாறு அரைநாழி
நோய்தா னென்ன அயவு ருக்கும்
பச்சைதகரங் காயங் கோஷ்டம்
பரவுஞ் சதகுப்பை யெருக்கம்வேர்
நற்சீரகம் மோதகம் நற்கடு குள்ளி
நவிலுஞ் சுக்கினை காய்ச்சிக் குடிக்க
கொச்சைப் படுத்தும் வாத மெல்லாம்
குணமா மென்று கூறி னாரே! 51

நொச்சிச் சாற்றை 50 மி.லி. எடுத்துக்கொண்டு இரும்பைக் காய்ச்சிச் சுருக்குக் கொடுத்துப் பருக வாதம் நீங்கும். மேலும்

பச்சை, தகரை, பெருங்காயம், கோஷ்டம், சதகுப்பை, எருக்கம்வேர், நற்சீரகம், ஓமம், கடுகு, பூண்டு, சுக்கு இவற்றை இடித்துக் குடிநீராக்கிப் பருகினால் வாதக் கதிப்பு நிற்கும்.

## பித்தக் கதிப்புக் குணம்

*பித்தமே கதித்த போது*
*பெருத்திடுஞ் சத்தி குன்மம்*
*சித்தமே நெஞ்சி லெரித்து*
*சிறிதுனாள் கழிச்சல் தோன்றும்*
*மெத்தவே வாய்வு கொண்டு*
*மிகவழன் றுழலை செய்து*
*கயத்திடும் மானே காணா*
*கணங்குழ லுரிய மாதே!* 52

பித்தம் உடலில் மிகுந்தபோது சத்தி, குன்மம், நெஞ்செரிவு, சிலநாட் கழிச்சல் இவை உண்டாகும். வாயு ஏற்பட்டு உடலுக்கு உளைச்சலை உண்டாக்கும்.

## குடிநீர்

*நெற்பொரியுஞ் சிறுபயிறும் வில்லை வேரும்*
*நெரியசி ரேலமுடன் சுக்கு நெல்லி*
*முற்படவே காய்ந்திரண் டொன்ற தாக்கி*
*முற்றியபின் னெடுத்தூத வடித்தூற்றிக் கொள்ள*
*சொற்பெரிய சத்திகுன்ம சுரத்தின் சத்தி*
*துயரமுள்ள கிறுகிறுப்பு உழலை முச்சுப்*
*பத்தருமைன் றிமையவரும் ரிஷிகள் தானும்*
*பகர்ந்தனர்முன் னருந்தமிழின் படிய தாமே!* 53

நெற்பொரி, சிறுபயிறு, வில்வவேர், ஏலம், சுக்கு, நெல்லி இவற்றைக் காய வைத்து ஒன்றிரண்டாக இடித்து நீர் விட்டுக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும். இதனைப் பருக சத்தி குன்மம், சுரம் அதையடுத்து வரும் வாந்தி, தலை கிறுகிறுப்பு, உழலை போன்றவை நீங்குமென்று நம் முன்னோர் கூறினர்.

## சிலேட்டும கதிப்புக் குணம்

*அய்யமே கதித்த போது*
*அசதியுற் றிருமல் காய்ச்சல்*
*நய்யுழல் மாந்தை ஈளை*
*நளிர்குளிர் விக்கல் சத்தி*
*செய்யுமா மூச்ச டைப்பன்*
*தீதுறு காசங் கிராணி*
*தொய்யுமாம் வினைக ளெல்லாம்*
*தோன்றுமென் றரனார் சொன்னார்!* 54

ஐயம் கதித்தால் உடல் அசதியாகும். இருமல், காய்ச்சல், உழல், மாந்தை, ஈளை, நடுக்கம், குளிர், விக்கல், வாந்தி, மூச்சடைப்பு, சுவாசகாசம், கிராணி இவை உண்டாகும் என்று கூறுவர்.

## சூரணம்

*காட்டுக் கரணை கொடிவேலி*
*கிராம்பு திரிபலை திரிகடுகு*
*நாட்டு நெற்பொரி லவங்கம்யேலம்*
*நற்சீரக மமுக்கிரா நாகப்பூ*
*கூட்டுஞ் சர்க்கரை நெய்தேனிற்*
*குணமாய்க் கூட்டிக் கொள்வீரால்*
*ஒட்டித் துரத்துஞ் சிலேட்டு மத்தை*
*உள்ள வியாதியும் ஒளிந்திடுமே!* 55

காட்டுக்கரணை, கொடிவேலி, கிராம்பு, திரிபலை, திரிகடுகு, நெற்பொரி, இலவங்கம், ஏலம், நற்சீரகம், அமுக்கரா, சிறுநாகப்பூ இவற்றை உலர்த்திப் பொடிசெய்து, நெய் அல்லது தேனில் கொள்ள ஐயம் நீங்கும்.

## வாத, பித்த தொந்திப்பின் குணம்

*கொள்ளுகை வாதம் ரெண்டுங்*
*கொடும்பித்தம் ஒரு காலோடி*

*கள்ளமாய் வயிறு விம்மி*
*கனக்கவே வாய்வு தோன்றுந்*
*தெள்ளிய கோதை யார்மேல்*
*சிந்தனை மிகவுஞ் செய்யுந்*
*துள்ளிய வாத பித்த*
*தொந்திப்பென் றுரைக்க லாமே!* 56

இருவகை வாதங்களும், பித்தங்களும் ஓரிடத்தில் ஓடிற்றானால், வயிறு விம்மிக் கனக்கும். வாயு உண்டாகிக் கோதையர் மேல் மிகுந்த மோகங் கொள்வர். இக்குறிகுணங்களைக் கண்டு இவற்றை வாதபித்த தொந்திப்பு என்று அறியலாம்.

## சூரணம்

*சந்தங் கோஷ்ட மதிமதுரம்*
*சமுத்திரா விடையஞ் சதகுப்பை*
*கெந்தங் காந்தமஞ்ச ளிலவங்கந்திரி*
*கடுகு சாதிக்காய் கிராம்பேலம்*
*வெந்தயம் பத்திரி கொத்தமல்லி*
*விளாலுட னிரண்டு சீரகமும்*
*அந்தப் பொடிதேன் வெருகடிகொள்*
*அகலும் வாத பித்தமுமே!* 57

சந்தனம், கோட்டம், அதிமதுரம், சமுத்திரப்பாலை, அதிவிடையம், சதகுப்பை, கெந்தகம், காந்தம், மஞ்சள், இலவங்கப்பத்திரி, கடுகு, சாதிக்காய், கிராம்பு, ஏலம், வெந்தயம், சாதிபத்திரி, கொத்தமல்லி, விழலரிசி, நற்சீரகம், பெருஞ்சீரகம் இவற்றைப் பொடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். மூவிரலளவு பொடியைத் தேனில் கொள்ள வாதமும், பித்தமும் நீங்கும்.

## வாதபித்த தொந்திப்பு

*இசைந்திடும் பித்தம் ரண்டும்*
*ஈரரை வாத மோடில்*

பசித்திடும் வயிறும் நெஞ்சு
பறந்தெறித் தழன்று மெய்தான்
வசங்கெடுந் தலைகி றுக்கும்
மயங்கிடு முடல்வெ தும்பும்
முசிந்திடும் பித்த வாத
முறைமையை அறிந்து கொள்ளே! 58

இயல்பான இரண்டுவகை பித்தங்களும், வாதத்தோடு இணைந்து நடக்குமானால் வயிறுபசிக்கும். நெஞ்சு அழன்று மெய்நொந்து தலை கிறுகிறுக்கும். மயக்கம் ஏற்படும். உடல் வெதும்பும். இக்குறிகுணங்களைக் கொண்டு இது பித்த வாதம் என்று அறியலாம்.

## மருந்து

சுக்குடன் கடுக்கா யேலஞ்
சுகமுடன் மிளகு நெல்லி
திக்குள மதுரஞ் சந்தஞ்
சீரகம் கொத்த மல்லி
தக்குடன் சமுத்திராக் காயஞ்
சமன்முந்திரி சீனி நெய்யில்
பக்குவப் பொடிதின் றாக்கால்
பயித்திய வாதம் போமே! 59

சுக்கு, கடுக்காய், ஏலம், மிளகு, நெல்லி, அதிமதுரம், சந்தனம், சீரகம், கொத்துமல்லி, சமுத்திரப்பச்சை, காயம் இவற்றைப் பொடித்து முந்திரி, சீனி, நெய் சம அளவு கூட்டிக் கலந்து உண்டு வந்தால் பித்த வாதம் நீங்கி விடும்.

## வாத சிலேட்டும குணம்

உயர்ந்திடும் வாதம் ரெண்டும்
ஒருசி லேட்டும தாகில்
அயர்ந்திடும் கைகால் நொந்து
அடிவய றதைத்துக் காட்டும்

தியங்கிடுந் தாது கெட்டு
வுதிரங்களுங் குறைந்து வாடும்
மயங்கிடு வாதத் தோடு
மருவிய அய்யந் தானே! 60

இருவகை வாதங்களும் சிலேட்டுமத்துடன் ஒன்றாகினால் கைகால் நொந்து அயர்ச்சி ஏற்படும். அடிவயிறு அதைத்து தாது கெட்டு, உதிரங் குறைந்து வாட்டும். வாதத்தோடு ஐய நாடிகள் மருவும்போது இக்குணங்கள் தோன்றுமாம்.

## மருந்து

வசம்பு டன்திரி கடுகு
வடமோ தகமும் கொடுவேலி
திசம்பெரும் கடுக்காய் ரண்டு
சீரகம் கொத்த மல்லி
கசம்படு கடுகு ஓமம்
காயமும் உள்ளி யிந்து
வசம்பட யிடித்துத் தின்ன
வாதமு மய்யம் போமே! 61

வசம்பு, திரிகடுகு, ஓமம், கொடிவேலி, கடுக்காய், நற்சீரகம், பெருஞ்சீரகம், கொத்தமல்லி, கடுகு, காயம், பூண்டு, இந்துப்பு இவற்றை இடித்துத் தூளாக்கி உண்ண வாதமும் ஐயமும் நீங்கும்.

## சேற்றும வாத தொந்திப்பு குணம்

பாரித்த அய்யம் ரெண்டும்
பரிந்தொரு வாத மோடில்
கறித்துக் குளுந்து கூசிக்
கும்பியில் குணக்கே டாகும்
நேரொத்த காயம் வற்றி
நெறிதலை திரேகம் நோகுஞ்
சிறுற்ற அய்ய வாதந்
தொந்திப்பாந் திரிநல் மாதே! 62

இருவகை ஐயமும் வாதத்தோடு இணைந்தால் உடல் குளிர்ந்து கூசி குணக்கேடு உண்டாகும். உடல் வற்றும். தலையும் உடம்பும் நோகும். இவை ஐய வாத குணங்களாகும்.

### சூரணம்

*ஏலமோ டிலவங்கப் பச்சிலை நாகப்பூ*
*இருவேலி லாமிச்சம் சந்தனமாம்*
*வால்மிளகு கொத்தமல்லி கடுகுடன் திரிகடுகு*
*வசுவாசி திரிபலை யுமாம்*
*நிலமொடு சீரகங் கருஞ்சீரகங் கிராம்பு*
*நெல்பொரியுங் கோஷ்ட மதுவாம்*
*வாளுலுவை தாரமதி மதுரமக் கிராவசம்பு*
*வரத்தை அதிவிடைய யமுக்கி ராவாம்*
*சிலமாம் மஞ்சள் சதகுப்பை தேனில்கொள்ள*
*சிலேட்டும வாதம்போய் தெளிவாகும் உடலதுவாம்! 63*

ஏலம், இலவங்கம், திருநீற்றுப்பச்சை, நாகப்பூ, இருவேலி, விலாமிச்சம், சந்தனம், வால்மிளகு, கொத்துமல்லி, கடுகு, திரிகடுகு, சாதிபத்திரி, திரிபலை இவற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும். மேலும் அவுரி, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, நெல்பொரி, கோஷ்டம், வாலுளுவை, தேவதாரம், அதிமதுரம், அக்கிராகாரம், வசம்பு, அரத்தை, அதிவிடையம், அமுக்கிரா, மஞ்சள், சதகுப்பை, இவற்றைப் பொடித்துத் தூளாக்கித் தேனில் கொள்ள வாதம் நீங்கி உடல் தெளிவு பெறும்.

### பித்த சிலேட்டும தொந்திப்புக் குணம்

*மாதறாப் பித்தம் ரெண்டு*
*மருத்தொரு சிலேட்டுமம் ஒடில்*
*சேதமாய்த் தலைவ றண்டு*
*திமிர்ந்திடும் பிடரி நோகும்*
*போதவே வயறெ ரைக்கும்*
*புந்தியில் குணக்கே டாகும்*

*தீதுரு பித்த சிலேட்டுமம்*
*தொந்திப்பான் திரிநல் மாதே!* 64

இரண்டு வகை பித்தமும் சிலேற்றுமமும் தொந்தித்தால் பின்வரும் குறிகுணங்களைக் காட்டும். தலை வறட்சி ஏற்படும். பிடரி நோகும். வயிற்றிரைச்சல் ஏற்படும். குணக் கேடுண்டாகும்.

## சூரணம்

*சந்தனம் பச்சிலை கச்சோலம்*
*சாதிக்காய் பத்திரிப் பூவுடனே*
*வந்த திரிபலை திரிகடுகு*
*வசம்பு கோட்ட மிலவங்கம்*
*இந்து ஒமம் சதகுப்பை*
*இருசீரகத் தோடு கொத்தமல்லி*
*அந்தத் தேனே சீனிஇஞ்சிக்*
*ககலும் பித்த சிலேட்டுமமே!* 65

சந்தனம், திருநீற்றுப்பச்சிலை, கச்சோலம், சாதிக்காய், சாதிபத்திரிப்பூ, திரிபலை, திரிகடுகு, வசம்பு, கோட்டம், இலவங்கம், இந்துப்பு, ஓமம், சதகுப்பை, இருசீரகம், கொத்துமல்லி, இவற்றைப் பொடித்துத் தூளாக்கி சீனி, தேன், இஞ்சிச்சாறு ஆகிய இவ்வனுபானம் ஏதேனும் ஒன்றில் கொள்ள பித்த சிலேட்டும தொந்திப்பு நீங்கும்.

## சிலேட்டும பித்த தொந்திப்பின் குணம்

*ஒங்கிடும் சிலேட்டுமம் ரெண்டும்*
*ஒருபித்தம் ஒருகா லோடில்*
*ஏங்கிடும் இரும லீளை*
*இடர்செய்யும் வாய்வுஞ் சிறும்*
*மூங்கிடு மும்முதற் மெய்யும்*
*முறுதியுங் கெட்ட லைந்து*
*மாங்கிடும் அய்யத் தோடு*
*மருவிய பித்தந் தானே!* 66

இரண்டுவகை சிலேட்டுமமும், பித்தமும் தொந்தித்தால் அது இருமல், ஈளை, வாயு இவற்றைத் தந்து இடர் செய்யும். உடல் வன்மை கெடும்.

### சூரணம்

*அக்கிரா மிளகு நெல்லி*
*அமுக்கிரா திப்பிலி அரத்தை*
*சுக்கொடு கடுக்காய் தாணி*
*சொல்லதி விடைய மதிமதுரம்*
*தக்கதாய் ஏலஞ் சீரகம்*
*சமனிது பொடித்து நெய்யிற்*
*சிக்கென வருந்தும் போது*
*சிலேற்றும பித்தம் போமே!* 67

அக்கிரா, மிளகு, நெல்லி, அமுக்கிரா, திப்பிலி, அரத்தை, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், அதிவிடையம், அதிமதுரம், ஏலம், சீரகம் இவற்றைச் சம அளவெடுத்து நெய்யில் கலந்து உண்ண சிலேட்டும பித்த தொந்திப்பு நீங்கும்.

### வாதபித்த சிலேட்டும தொந்திப்புக் குணம்

*இழுத்திடும் வாத பித்தம்*
*சிலேட்டும மிடறு மானால்*
*பழுத்திடு மேனி தானும்*
*பதங்கெடும் பசியு மில்லை*
*கழுத்துட னிடுப்பு கைகால்*
*சந்துகள் கடுத்துக் காணும்*
*முழுத்திடு மூல ரோகம்*
*மூவருட தொந்தத் தாலே!* 68

வாத பித்த சிலேட்டுமங்கள் தொந்திக்குமானால் உடல் பழுத்துக் காணும். வார்த்தைகள் குழறும். பசி இருக்காது. கழுத்து, இடுப்பு, கை, கால் சந்துகளில் வலி உண்டாகும். மூல நோய் உண்டாகும்.

## மருந்து

*திரிபலை அக்கிரா ஒமம்*
*சிவதை மதுரம் அதிவிடையம்*
*திரிகடு கொத்த மல்லி*
*சீரகத் துடனே குப்பை*
*அறிவசம் பத்திரிகா யேல*
*மமுக்கிரா அரத்தை*
*அறிவுசேர் பத்திரி யோடு*
*யதுசமன் சேர்த்து தேனிற்*
*குறியுடன்.....*
*குணமதாம் தொந்த மூன்றே!* 69

திரிபலை, அக்கிராகாரம், ஓமம், சிவதை, அதிமதுரம், அதிவிடையம், திரிகடுகு, கொத்துமல்லி, சீரகம், சதகுப்பை, வசம்பு, ஏலம், அமுக்கரா, அரத்தை, தாளிசபத்திரி இவற்றை உலர்த்திப் பொடித்துச் சூரணமாக்கி தேனில் குழைத்து உண்டால் வாத, பித்த, சிலேட்டும தொந்திப்பு நீங்கும்.

## ஓடிய வாதத்தின் குணம்

*ஒடிய வாத மாகில்*
*உடல்தலை நெஞ்சு சந்து*
*தேடிய கால்க ரங்கள்*
*திறமதாய்ப் பிலக்கொட் டாது*
*வாடிய மேனி தானும்*
*வறண்டு நாவும் பல்லும்*
*ஒடிடும் உடல்கள் தோறு*
*முளையுடன் குத்து மென்றே!* 70

ஓடிய வாதம், உடல், தலை, நெஞ்சு, சந்துகள், கை, கால்கள் ஆகியவற்றின் பலத்தைக் குறைத்து, மேனியை வாடச்செய்து நாவறட்சி, பல் வறட்சியையும் உண்டாக்கி உடல்முழுதும் ஓடி குத்தலை ஏற்படுத்தும்.

**தைலம்**

*மலையிஞ்சி கூகை மஞ்சள்*
*வன்னொச்சி யாம ணக்கு*
*சலங்கள்தான் னாழி னாழி*
*தெங்கின் எண்ணெய் னாழி*
*விலமதாம் கோட்டம் தாரம்*
*வெந்தயம் சன்னி னாயகம்*
*பிலமதாய்க் காய்ச்சிப் பூசி*
*உள்கொள்ளத் தீரும் வாதம்!* 71

மலையிஞ்சி, கூகை மஞ்சள் (கோஷ்டம்), நொச்சி, ஆமணக்கு இவற்றின் சாறுகளை முறையே 1.3 லி. தேங்காய் எண்ணெய் 1.3 லி. எடுத்துக் கொள்ளவும். கோட்டம், தேவதாரம், வெந்தயம், சன்னிநாயகம் இவற்றையும் சேர்த்துக் காய்ச்சி தைலம் இறக்கிக் கொள்ளவும். இதனை மேலுக்கும் பூசி, உள்ளுக்கும் கொள்ள ஓடியவாதம் தீரும்.

**துடிவாத குணம்**

*ஒடுந் துடிக்கு முடலெப்பம் பார்க்கும்*
*நீடுமிகச் சித்துடலில் நின்றே யடங்கிடும்*
*தேடுந் துடிப்புடைய வாதமென்று தெரிவையீர்*
*நாடோறும் முடிக்குமென வோது!* 72

ஓடித்துடிக்கும் துடிவாதம் உடலின் எல்லாவிடங்களையும் பார்த்து நீண்ட இவ்வுடலிலே நின்றே அடங்கிவிடும். இவ் வாதம் தினமும் துடித்த வண்ணமிருக்கும் என்று அறியலாம்.

**தைலம்**

*வாத மடக்கி நொச்சி*
*வளர்கொற்றான் மாவி லிங்கு*
*பிதமப்பா தோடையா மணக்கு*
*பாதுள்ள கள்ளிச் சாறு*
*வேதியா வேப்பெண் ணையும்*
*வெள்ளுள்ளி னாழி னாழி*

*ஒதவே கலக்கத் தானும்*
*உரைத்திடக் கேளாய் மானே!* 73

வாதமடக்கி, நொச்சி, முடக்கொற்றான், மாவிலங்கு, ஆடாதோடை, ஆமணக்கு, கள்ளிச்சாறு இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்ளவும். வேப்பெண்ணெய், வெள்ளைப் பூண்டின் சாறு முறையே 1300 மி.லி. சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

*சாதிக்காய் கிராம்பு சீரஞ்*
*சதகுப்பை கடுகு ஓமம்*
*நீதியாய்த் திரிகடுகு நெறித்*
*.....திரிபலை யிந்துப்பு*
*வாதுற்ற உலைவாம் மஞ்சள்*
*மரமஞ்சள் வசம்பு ரோணி*
*மாதுற்ற பெருஞ்சீரகம்*
*வருகருஞ் சீரங் காயம்!* 74

சாதிக்காய், கிராம்பு, சீரகம், சதகுப்பை, கடுகு, ஓமம், திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, கடுகுரோகிணி. பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துக் கொள்க.

*கேளின்னஞ் ச(ன்)னி நாயகங்*
*கிரிசக் கிறாவ ரத்தை*
*பாழது தீர்க்குந் தாரம்*
*பதியதி மதுரஞ் சந்தம்*
*வாளகில் பீதி நாறி*
*வகையிரு கழஞ்ச தாக*
*கோழியின் ரத்தங் கூட்டி*
*காய்ச்சியே கொள்ளே பூசே!* 75

சன்னிநாயகம், அக்கிராகாரம், அரத்தை, தேவதாரம், அதிமதுரம், சந்தனம், அகில், பீநாறி இவற்றையும் 10 கி. எடுத்துக் கொள்ளவும். அதனுடன் தேவையான அளவு

கோழியின் இரத்தம் சேர்த்துக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இறக்கிய இந்தத் தைலத்தை உடம்பில் பூசி வர துடிவாதம் குணமாகும்.

## இரணவாத குணம்

*உதரமுஞ் சுரந்து மங்கி*
*வாந்தியும் மூர்ச்சை யுண்டாம்*
*அதரமுங் கருகி மேலும்*
*அறவே கடுத்து நோகில்*
*திதமுறு மரண வாதந்*
*திருமுனி யருளிச் செய்த*
*பதமுறு வேத நூலின்*
*படியிது பகரு வீரே!* 76

வயிறு சுரந்து, கண்மயங்கி, வாந்தியும், மூர்ச்சையும் உண்டாகி, உதடு கறுத்து, உடல் முழுதும் கடுப்புண்டாகும் குணங்களைக் கொண்டது, மரணவாதமாகும். இது திருமுனிவனாம் அகத்தியர் சொன்ன ஆயுர்வேத நூலின் படியிலானது என்று சொல்வர்.

*உளையு முடலந் தனிலெங்கும்*
*உளையா திருகி லுறுப்புளையும்*
*களையும் மிகுந்து வயறளத்தி*
*கனக்க வாந்தி வாய்நீருறும்*
*விளையும் வெப்புத் தானுண்டாம்*
*விடாதே மிகுந்து தலைகனத்தும்*
*வளையும் புருவ நுதலாளே*
*விரண வாத குணமிதுவே!* 77

உடல் முழுதும் உளைச்சல் உண்டாகும். தன்மை மாறி உடல் இறுகும். உறுப்புகளில் உளைச்சல் உண்டாகும். உடலில் களைப்பு தோன்றும். வயிற்றில் உளைச்சல் இருக்கும். வாந்தி உண்டாகும். வாய்நீர் ஊறும். வெப்புத் தோன்றும். விடாது தொடர்ந்து தலை கனக்கும். ஆகியன விரண வாத குணங்களாகும்.

*வெண்கா யுள்ளி யதுபலமும்*
*மிகுந்த திரிகடு கொருபலமும்*
*நண்பா யிந்துப்பு பொருபலமும்*
*நலஞ்சேர் கொடுவேலி நாற்கழஞ்சு*
*மன்சேர் குமரிச் சார்சரியாய்*
*வகையா யதுவுந் தானெடுத்து*
*பன்சேர் நறுநெய் அதனிற்கூட்டி*
*பதத்து நாளு மெரித்து நக்கே!* 78

வெங்காயம், திரிகடுகு, இந்துப்பு, வகைக்கு 35 கி., கொடிவேலிச்சமூலம் 20 கி., இவற்றுடன் அதே அளவு கற்றாழைச் சாறு சேர்த்து கலந்து கொள்ளவும். தேவையான அளவு நெய் சேர்த்து ஒரு நாள் எரித்துப் பதத்தில் இறக்கி நக்க விரணவாதம் குணமடையும்.

## திமிர்வாத குணம்

*இரத்தமுங் காய்ந்து வாடி*
*எலும்புக்குத் தசையுங் கெட்டு*
*நரம்பது வலுவாய் விம்மி*
*நடப்பது குன்றி வாய்வு*
*உரமிகுஞ் சீரந் தானும்*
*உறுதிகெட் டுளையும் வெற்பு*
*சீர்சரத் துடல்கள்மேல் தவறு*
*திமிர்வாத மென்றார் முன்னோர்!* 79

இரத்தம் சுண்டி, வாட்டமுறச் செய்து, எலும்பு, தசை, இவைகளும் கெட்டு நரம்பு விம்மிப்புடைத்து நடப்பது குன்றிவாயு. உரமுள்ள இவ்வுடம்பு உறுதிகெட்டு உளைச்சல் பெறும். வெப்புத் தோன்றும். இக்குணங்கள் உடலில் கண்டால் இதனைத் திமிர்வாதம் என்பர் முன்னோர்.

*எண்ணெய் கிஷாய மிதுதானும்*
*யிதமாய்ச் சொல்வோ மினிக்கேளாய்*
*திண்ணம் நொச்சி முடக்கொத்தான்*
*திரும்வேலிப் பருத்தி கொன்றை*

*இன்னே வீழி பாவட்டை*
*இயன்ற ஆடாங் கொடியுடனே*
*வன்ன முதிரான் திரிபுரத்தான்*
*மருவுங் கள்ளி சதிரக்கள்ளி!* 80

நொச்சி, முடக்கொற்றான், வேலிப்பருத்தி, கொன்றை நீர்முள்ளி, பாவட்டை, ஆடாங்கொடி, கள்ளி, சதுரக்கள்ளி குப்பைமேனி இவற்றை வகைக்கு 35 கி. எடுக்க.

*எருக்கு முருக்கு மாவிலங்கு*
*இயன்ற ஆடா தொடைதிராய்*
*நறுக்கும் வெள்ளுமத்தங் கழல்கொடி*
*நன்றாய் சிறுசெருப் படியிரண்டு*
*பருக்கும் பலங்க ளாயெடுத்து*
*படிநீர் முப்பத்தி ரண்டதில்விட்*
*டெரிக்குமங் கசாயம் யெட்டொன்றாய்*
*யெடுக்கும் மருந்து யினிச்சொல்வோம்!* 81

எருக்கு, முருங்கை, மாவிலங்கு, ஆடாதோடை, திராய், வெள்ளுமத்தை, கழற்கொடி, இவை முறையே ஒவ் வொன்றிலும் 35 கி. எடுத்து, சிறுசெருப்படை 70 கி சேர்த்து 416 லி. நீர் ஊற்றி எட்டில் ஒன்றாகக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

*சதகுப்பை யரத்தை மரமஞ்சள்*
*தகர குங்கிலியம் திரிகடுகு*
*இதுக்குக் கம்பிப் பிசினுடனே*
*இருசி ரகம்வெப் பாலை*
*மோதுறு முள்ளி சவுக்காரம்*
*முசுறு முட்டை கொத்தமல்லி*
*அதிவிடைய முடனிந் துப்பு*
*அரிதா ரத்துடன் சாதிலிங்கம்!* 82

சதகுப்பை, அரத்தை, மரமஞ்சள், குங்கிலியம், திரிகடுகு, கம்பிப்பிசின், நற்சீரகம், பெருஞ்சீரகம், வெட்பாலை, உள்ளி,

சவுக்காரம், முசுறுமுட்டை, கொத்துமல்லி, அதிவிடையம், இந்துப்பு, அரிதாரம், சாதிலிங்கம் இவை வகைக்கு 10 கி. எடுக்கவும்.

*கோட்டம் விழாலரிசி கலங்கொம்பு*
*குலவும் மஞ்சள் அதிமதுரம்*
*மீட்டும் வசம்பு பெருங்காய*
*மீதி லொன்று இருகழஞ்சு*
*கட்டி யொன்றித் தேகாச்சிக்*
*கொண்டே வடித்து மிகப்பூச*
*வாட்டு பெரிய திமிர்வாதம்*
*மற்றும் வாத மாறியதே!* 83

கோட்டம், விழாலரிசி, மான்கொம்பு, மஞ்சள், அதிமதுரம், வசம்பு, பெருங்காயம், இவை வகைக்கு 10 கிராம் எடுத்து எண்ணெய் சேர்த்து, தைலம் காய்ச்சிக் கொள்ளவும். அத்தைலத்தை உடலில் பூச திமிர்வாதம் முதலிய வாதங்கள் நீங்கும்.

## அரப்பு வாதத்தின் குணம்

*நாக்கு விழுந்து ஒரு பக்கம்*
*நன்றாய் கைகால் வீழ்வதன்றி*
*வேர்க்குஞ் சரீரம் மஞ்சளிக்கும்*
*விடம்போல் மேனி தொடவொட்டா*
*ஆக்கை சரியும் நாளதுதான்*
*ஆகும் பத்து பதினஞ்சு*
*ஊக்க முடனே தப்பினக்கால்*
*உண்மை பிழைப்ப தென்றுணரே!* 84

நாக்கு சுவையறியும் தன்மை இழந்து கைகால் வீழ்ச்சி யடைந்து, உடல் வியர்க்கும். மஞ்சளிக்கும். உடம்பைத் தொடமுடியா வண்ணம் குத்தல் எடுக்கும். உடம்பின் பலம் குறையும். பத்து அல்லது பதினைந்து நாட்கள் தப்பினால் பின் பிழைத்து விடுவான் எனலாம்.

வெருகங் கிழங்கோர் பலமதனில்
மேவுந் தூணி நீர்விட்டு
உருக்கக் காய்ச்சிக் குறுணியதாய்
உகந்த காடி அந்தமட்டும்
பெருக்கங் கட்டிக் கஷாயத்தைப்
பேணிக் கட்டும் பித்தாகேள்
உருக்கும் நல்லெண்ணை நாழிக்கு
உகந்த அரக்கு நாற்பலமே! 85

35 கி. மெருகங் கிழங்கை 21.5 லி. நீர்விட்டு 5.3 லி. சுருங்கும் அளவு காய்ச்சிக் கொள்ளவும். அதே அளவு காடியையும் அதனுடன் சேர்த்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 1.3 லி., அரக்கு 140 கி. இவற்றையும் எடுத்துக் கொதிக்க வைத்துக் கொள்ளவும்.

கூட்டிக் கஷாயம் கொதிக்க வைத்து
கூறு மருந்து சதகுப்பை
நீட்டு மரத்தை இலவங்கம்
நீடு மேலந் திப்பிலியும்
மாட்டுங் கிராம்பு மதுரமுடன்
மஞ்சளுடன் கஸ்தூரி மஞ்சள்
கூட்டும் விளாலுங் கோட்டமுடன்
கொண்ட சீரகம் பெருங்காயம்! 86

சதகுப்பை, அரத்தை, இலவங்கம், ஏலம், திப்பிலி, கிராம்பு, அதிமதுரம், மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், விழாலரிசி, கோட்டம், சீரகம், பெருங்காயம். வகைக்கு 10 கி. எடுக்கவும்.

கற்பூரங் கடுகு ரோகணியுங்
கணக்குங் கோலொன் டிருகழஞ்சு
நற்பத மான யெண்ணையது
நாழி கள்ளிப்பா லாழாக்கு
மெய்யப்பா யுள்ளி வசம்புடனே
மிகுந்த தொட்டிப் பாக்களவு
பதமான எண்ணையது
கழஞ்சி கொள்ளப் பூசே! 87

கற்பூரம், கடுகுரோகணி, இவற்றை முறையே 10 கி. எடுத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 1.3 லி., கள்ளிப்பால் 160 கி., பூண்டு, வசம்பு, 2.5 கி. இவை வகைக்கு 5 கி. தொட்டிப்பாடாணம் சேர்த்துக் காய்ச்சித் தைலம் இறக்கிக் கொள்ளவும். இந்தத் தைலத்தை 5 கி. உள்ளே கொள்ளவும். மேலுக்குத் தடவவும். அரப்பு வாத குணம் தீரும்.

## நரித்தலை வாத குணம்

தரித்திடும் வாதம் வாய்வு
சவேநீர் கோவித் தொன்றாய்
அரித்திடும் தலைமேல் கைகால்
யகமோ டுளைந்து வெம்மி
முரித்திடு விறங்கி வந்து
முழங்காலில் வளைந்து கூடும்
நரித்தலை வாத மென்றே
நவின்றனர் முனிவர் தாமே! 88

தலையில் நீர் சேர்ந்து தலை, உடம்பு, கைகால் இவற்றில் உளைச்சல் ஏற்பட்டு பருத்து, பின் இறங்கிவந்து முழங்காலில் வாதம் கூடும். இத்தகைய வாதத்தை நரித்தலை வாதமென்பர் முனிவர்.

விடத்தலை பிரண்டை யிவை யிரண்டும்
மிகாமல் தேசிக் காயளவு
திடத்தோ டரைத்து பனைவெல்லம்
சேரக் கலந்து கலத்திட்டு
அடுத்த மருந்து கூடயிட்டு
அதனில் பிசைந்து நெருப்பில் வைத்து
மடுத்தநல் லெண்ணெய் தான்வார்த்து
மகிழ்ந்து சேர வருமருந்தே! 89

விடத்தலை, பிரண்டை இவ்விரண்டையும் எலுமிச்சங் காயளவு நேக அரைத்து பனைவெல்லம் சேர்த்துக் கலந்து

பிசைந்து கலத்திட்டு நல்லெண்ணெய் வார்த்து காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இதனை நரித்தலை வாத நோயாளிகள் 5 கி. அளவு உண்டு வெந்நீர் பருக அவ்வாதம் குறையும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

### கைகால் முடங்கின வாதம்

மங்கையை வருடி மெத்த
வாத பித்தங்க ளய்யந்
தங்களிற் சிதறி வாதந்
தளர்ந்திடும் கால்கள் கைகள்
அங்களுந் தாளுந்தாள் பித்த
அரைக்குமே லதுவுங் கோபந்
திங்கள்போல் முகத்தா யய்யம்
சிரசிலே சினப்ப தாமே! 90

வாத, பித்த ஐயங்கள், தம்மளவில் மாற்றங்கொண்டு, கால், கைகள், தாள் இவை தளர்வுறும், நிலையை வாதமும் இடுப்புக்கு மேல் வலிக்கும் நிலையைப் பித்தமும், தலையில் துன்பத்தை ஐயமும் கொடுக்கும் என்பதாம்.

உடலது வெதும்பிக் கைகா
லுளவுடன் கடுத்து நொந்து
கடலதாய்க் கால்க ரங்கள்
கனத்தபோ லயர்ந்து காணும்
சடமது யிருத்த தாகுஞ்
சலங்கெடத் தோஷ முண்டாம்
முடமதாங் கைதான் கால்தான்
முடங்கின வாதந் தானே! 91

உடல் வெதும்பி கைகால் உளச்சல் ஏற்பட்டு கடுத்து, நொந்து காணும். கால், கைகள் கனக்கும், அயர்ச்சி ஏற்படும். தோஷமுண்டாகும். இவை கைகால் முடங்கல் வாத குணங் களாகும்.

## எண்ணெய்

*நொச்சிச்சாறு தழுதாழை*
*நூகா தெருக்குப் பாலுடனே*
*இச்சை சேரும் பொடுதலையும்*
*இயன்ற குப்பை மேனியுடன்*
*வச்ச ஆயிலப் புங்குநிம்ப*
*மருவு மிலுப்பை சிறுகுறிஞ்சா*
*அச்ச மில்லா வேலிப்பருத்தி*
*யாகும் மஞ்சள் தேங்காய்ப்பால்!* 92

நொச்சிச்சாறு, தழுதாழைச்சாறு, எருக்கம்பால், பொடுதலைச் சாறு, குப்பைமேனிச்சாறு, நாவல், புங்கன், வேம்பு, இலுப்பை, சிறுகுறிஞ்சான், வேலிப்பருத்தி இவற்றின் சாறும், மஞ்சளும், தேங்காய்ப் பால் இவற்றை ஒவ்வொன்றிலும் 1.3 லி. எடுத்துக் கொள்ளவும்.

*ஒரொன் றொருபடி யாகக் கொண்டு*
*உகந்த கடுகெண்ணை யிருபடியும்*
*நேரே கலக்கி வசம்புள்ளி*
*நீடு மாடா தோடைசீந்தில்*
*பாரே பேராமுட்டி நீலி*
*யருக்குமா பெருமரப்பட்டை யிளவேர்*
*சீரா யரைத்து கலக்கிவெந்து*
*சிறந்த பதத்தில் வடியே!* 93

2.6 லி. கடுகெண்ணெய் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். வசம்பு, பூண்டு, ஆடாதோடை, சீந்தில் பேராமுட்டி, நீலி, பெருமரப்பட்டை, இளவேர் இவற்றை அரைத்து மேற்படி சாறு, எண்ணெய் சேர்த்துக் கலக்கிக் காய்ச்சிப் பதமாகத் தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

*பதத்தில் வடித்து நாளொன்று*
*பருகி ரண்டு காசிடைதான்*
*விதத்தில் காய மேல்பூச*
*மிகுத்த மருந்து தடவிடவே*

*உதித்த கைகால் முடங்கினது*
*உண்ணும் விஷங்கள் பலதிரும்*
*கதித்த வாத மிவையெல்லாங்*
*காணா தோடிப் போய்விடுமே!* 94

1 கி. எண்ணெயை நாளொன்றுக்கு ஒருவேளை உள்ளே கொள்ளவும். அவ்வெண்ணெயையே உடம்பின்மேல் பூசிக் கொள்ள வாதத்தினால் உண்டான கைகால் முடக்கம் நீங்கி, கால், கை தன்நிலைபெறும். மேலும் இத்தைலம் உண்ட விடங்களைத் தீர்க்கும் தன்மை கொண்டது. தவிரவும் வாதத்தால் ஏற்படும் எல்லா நோய்களும் நீங்கிவிடும்.

## சுருக்கு வாத குணம்

*கைகால் விரல்சு ருண்டுவிழும்*
*கதித்த நாவு குன்றிவிடும்*
*மெய்யே வடிவி னழகுகெடும்*
*வெதும்பு மேனி வெளுப்புண்டாம்*
*அய்யா விதுதான் குணஞ்சொன்னோம்*
*அறிவி னீரபுத்தி யதுவல்லால்*
*செய்தே ரய்யச் சொற்குளறுஞ்*
*சுருக்கு வாதக் குணந்தானே!* 95

கை, கால், விரல் இவை சுருண்டுவிழும். நாக்கு குன்றும். உடம்பின் அழகு கெடும். உடல் வெதும்பி, வெளுப்படையும், இவற்றோடு பேசும்போது சொற்கள் குளறும். இவை சுருக்குவாத குணங்களாகும்.

## எண்ணெய்

*நத்தப் பலாவின் பாலுழக்கு*
*நல்ல நொச்சிச் சாறுழக்கு*
*மெத்துப் புளியிலைச் சாறுழக்கு*
*வெள்ளாட் டுடைய பாலுழக்கு*
*அத்தா மணக்கெண் ணையுமுழக்கு*
*அஞ்சுங் காய்ந்து வடித்தெண்ணை*

நித்தம் பூசி யுள்ளருந்த
நில்லா தெண்பது வாதமுமே! 96

எருக்கின் பால், நல்ல நொச்சிச்சாறு, புளியிலைச் சாறு, வெள்ளாட்டுப் பால், ஆமணக்கெண்ணெய் ஐந்தையும் முறையே வகைக்கு 325 மி.லி. எடுத்துச் சேர்த்துக் காய்ச்சி எண்ணெய் வடித்துக் கொள்ளவும். இதனைத் தினமும் உடம்பில் பூசி உள்ளேயும் பருகிவர எண்பது வகை வாதமும் நீங்கும்.

## சுரோணித வாத குணம்

கைகால் நெற்றித் தலைபிடரி
கனத்து நொந்துளை வுண்டாம்
மெய்யாய் ரூபந் தான்கெட்டு
வெதும்பி விதன மிகவுண்டாம்
தொய்யச் சுருட்டி முடக்கிவிடுஞ்
சுரோணித வாத குணமிதுவே
அய்யா முனிவர் தமிழ்தனா
லறியச் சொன்னா ரறிவாயே! 97

கைகால், நெற்றி, தலை, பிடரி இவை கனத்து நொந்து காணும். உடலின் தன்மை கெட்டு வெதும்பி துன்பத்தை உண்டாக்கும். உடம்பையே ஒரு சுருட்டு சுருட்டிவிடும். இத்தன்மை சுரோணித வாத குணமாகும் என்பதைத் தமிழ்ச் சித்தர்கள் சொல்லிச் சென்றுள்ளனராம்.

பாவு கழஞ்சி பதினாறும்
பதிவாய் மதிரம் பதின்க ளஞ்சு
ஏவுந் திரிபலை அறுக ளஞ்சு
இசைந்த கச்சோலக் கிழங்கு லவங்கம்
மேவுந் தோல்தேவ தாரமுடன்
மிகவே விடையந் திரிகடுகு
தூவி மருசி றாருங்
சுகமாய்ப் பொடித்துத் தேனி லுண்ணே! 98

பாவு 80 கி., அதிமதுரம் 50 கி., திரிபலை 30 கி., சீமைக்கிச்சிலிக்கிழங்கு, இலவங்கம், தேவதாரம், அதிவிடையம், திரிகடுகு, ஏலம் இவை தேவையான அளவு எடுத்துப் பொடித்துத் தேனில் குழைத்து உண்ணவும்.

*உண்ணிடில் வாத மெண்பதும்*
*உருசி லேற்பன வாதசுரம்*
*திண்ணிப் பித்தங் காமாலை*
*சீதக் கடுப்பு சுடுவாதம்*
*எண்ணிய சுரோணித மொட்டிய*
*யுண்ணிவைமெப் பொறுக்கா திருந்திடில்*
*வண்ணக் குழலாய் நான்சொன்ன*
*மருந்து பொய்யா துருகியதே!* 99

அவ்வாறு உண்பதால் வாதம் எண்பதும் சிலேற்பன வாதசுரம், பித்தம், காமாலை, சீதக்கடுப்பு, சுடுவாதம், சுரோணிதம் ஆகிய நோய்கள் நீங்கிவிடும்.

## சூரிய வாத குணம்

*சூரிய வாதந் தோன்றித்*
*தும்மலும் சளியும் வெப்பும்*
*பாரிசா உடல்க னத்து*
*பரந்துடல் சிரசு நொந்து*
*மூரிகொட் டாவி விட்டு*
*முனிந்துமெய் தளர்ந்து சோர்ந்து*
*சீரித்து மயங்கிக் கண்ணுந்*
*தியங்கிடு மென்று சொல்லே!* 100

சூரிய வாதம் உண்டானால் தும்மலும், சளியும் உண்டாகும். உடல் வெப்பம் பெற்றுக் கனத்துக் காணப்படும். உடல், தலை இவை வலிக்கும். அடிக்கடி கொட்டாவி ஏற்பட்டு மெய் தளர்ந்து சோர்ந்து மயங்கி கண்தியக்கம் ஏற்படும்.

*நிம்பழமும் கழற்சி நொச்சி*
*நீரது நாழி நாழி*

*யம்பிசின் சுக்க ரத்தை*
*மதுர மிவைகள் கழஞ்சு*
*தம்பமா மெண்ணை நாழி*
*சற்றியே காய்ச்சித் தேய்க்கில்*
*பம்பிய சூலை வாதம்*
*பறந்துபோ மென்றார் முன்னோர்!* 101

நிம்பப்பழம், கழற்சி, நொச்சி இவற்றின் சாறு ஒவ்வொன்றிலும் முறையே 1.3 லி., சுக்கு, அரத்தை, வேப்பம் பிசின், அதிமதுரம் இவை முறையே 5 கி. இவற்றுடன் 1.3 லி. நல்லெண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி தைலம் இறக்கிக் கொள்ளவும். அதனை உடலில் தேய்த்துக் குளித்து வர சூரிய வாதம் நீங்கிடும்.

## வறட்சி வாத பித்த குணம்

*தலையுங் கனத்து வலித்துமிகச்*
*சற்றே காது மந்தித்து*
*துலையு மங்க முளைந்துளைந்து*
*துலங்கக் குத்தி கிறுகிறுத்து*
*வலையுஞ் சரீரம் நோய்மிகுந்து*
*வறள யுலத்தி வாலைமிகும்*
*உலயும் வறட்சி வாதபித்தம்*
*உறுதி யிதுகண் டுறையீரே!* 102

தலை கனக்கும், வலிக்கும். காது மந்தம் ஏற்பட்டு உடல் முழுதும் உளைச்சல் ஏற்படும். குத்தல் ஏற்பட்டு கிறுகிறுத்து உடம்பில் நோய் அதிகரித்துக் காணும் தன்மை வறட்சி வாத பித்தத்தின் குணங்களாகும்.

## நெய்

*நன்னாரி யுடன்குருந் தொட்டி*
*நல்ல ரோகணி சந்தனமும்*
*மின்னார் கூடு மிலாமிச் சம்வேர்*
*மிக்க திப்பிலி கோரைக்கிழங்கும்*

*அன்ன நடையாய் சரிசரியாய்*
*பாவி நெய்யில் வெந்துகொள்ள*
*மன்னார் வறட்சி வாதபித்தம்*
*பாரு முடலம் பருக்குமதே!* 103

நன்னாரி, குருந்தொட்டி, கடுகுரோகிணி, சந்தனம், விலாமிச்சம் வேர், திப்பிலி, கோரைக்கிழங்கு இவற்றைச் சம அளவு எடுத்திடித்து நெய்யில் வேக வைத்து முறைப்படி உண்டால் வறட்சி வாத பித்தம் நீங்கி உடல் பருமனடையும்.

## எண்ணெய்

*கற்றாழை கரிப்பான் பிரமிபுடல்*
*கணக்கா யிடித்து நீரெ டுத்து*
*மற்றாம் திரிபலை அரக்கி வையும்*
*வகையாய்ப் பொடித்துச் சாற்றி லிட்டு*
*பத்திரி கோட்டம் சந்தன மதுரம்*
*பச்சிலை கச்சோலந் தாமி லவங்கம்*
*கொத்தான் சாறு நல்லெண்ணையில்*
*வெந்து குளியின் மாதே!* 104

கற்றாழை, கரிசலாங்கண்ணி, பிரமி, புடல் இவற்றை இடித்துச் சாறெடுத்து, திரிபலை, அரக்கு இவற்றைப் பொடித்துச் சாற்றில் சேர்க்கவும், பத்திரி, கோட்டம், சந்தனம், அதிமதுரம், திருநீற்றுப்பச்சிலை, கச்சோலம், இலவங்கம், முடக்கொத்தான் இவற்றையும், மேற்கண்ட சாறுகளோடு கலக்கவும். நல்லெண்ணெயும் சேர்த்துக் காய்ச்சித் தைலம் வடித்துக் கொள்ளவும்.

## வறட்சி பித்தவாத குணம்

*அக்கினி உழலை சூலை*
*யாவுலர்ந் திருக்குங் காய்ச்சல்*
*மிக்ககா திரைச்சல் மந்தம்*
*மிகுந்திடும் குளிர்மூக்கி னீர்கள்*

தக்கதோர் மயக்கத் தோடு
தலைவலி சந்து நோவு
கைக்குநா வறச்சி பித்த
வாதமாங் கண்டு கொள்ளே! 105

அக்கினி, உழலை, சூலையாய் உலர்ந்துள்ள காய்ச்சல், காதிரைச்சல், மந்தம் இவை உண்டாகும். உடல் குளிர்ச்சியடைந்து மூக்கில் நீர்வடியும். மயக்கத்தோடு தலைவலியும், சந்து வலிகளும், நாவறட்சியும், பித்த வாத குறிகுணங்களாகும்.

## மருந்து

காந்தங் கிட்டந் திரிகடுகு
கய்யாந் தகரைச் சாற்ற ரைத்து
வாய்ந்த மாகத் தின்பீர் பத்து
னாளைக்குத் தின்பி ராகிற்
சேர்ந்திடும் வாத பித்த
வறச்சியன் செப்ப கைமாறி
சாந்தமாய்த் திரு மென்று
தமிழ்முனி சாற்றி னாரே! 106

காந்தம், அயக்கிட்டம், திரிகடுகு இவற்றைக் கையாந்தகரைச் சாற்றால் அரைத்து பத்து நாட்களுக்கு உண்ண வேண்டும். இவ்வாறு தொடர்ந்து உண்டுவர சேர்ந்துவிட்ட வாத பித்தம் குணமடையும்.

## எண்ணெய்

பூலாவேர் வெற்றிலை கரிப்பா னாமணக்குப்
புளியிலை கொற்றா னொச்சி
பொன்னாங் காணி முருங்கிலையும்
ஏலங் கடுகு திரிபலையும் இருவேலி
லாமிச்சிருச் சந்தம் அரத்தை இருசீரகம்
கண்டில் வெண்ணை யோடு

நாலாங் கோட்டம் கிராம்பேலம் மதுர
மிலவங்கம் நன்னாரி கச்சோலம்
பச்சிலை சாதிக்காய்
எல்லா மொன்றித் தெண்ணை காய்ச்சிக்
குளிக்க ஒழியும் வறட்சி பித்த
வாத தலைவலியுங் கண்ணோவும்! 107

பூலாவேர், வெற்றிலை, கரிசாலை, ஆமணக்கு, புளியிலை, முடக்கொற்றான், நொச்சி, பொன்னாங்காணி, முருங்கை யிலை, ஏலம், கடுகு, வெட்டிவேர், திரிபலை, விலாமிச்சம், சந்தனம், அரத்தை, நற்சீரகம், பெருஞ்சீரகம், கண்டில் வெண்ணெய், கோட்டம், கிராம்பு, ஏலம், அதிமதுரம், இலவங்கம், நன்னாரி, கச்சோலம், திருநீற்றுப்பச்சை, சாதிக்காய் இவற்றைச் சம அளவு சேர்த்து நல்லெண்ணெய் கலந்து காய்ச்சித் தைலம் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெய் தேய்த்துக் குளிக்க வறட்சி பித்தம் நீங்கும். வாத தலைவலியும், கண் நோயும் நீங்கும்.

## சன்னி வாதத்தின் குணம்

கையுங் காலுமொரு பக்கம்
கனத்துத் திமிர்ந்து கண்தூங்கும்
மெய்யு மறவே மெலிந்துவரும்
வெகுண்டே நாவுந் தடுமாறும்
செய்யுங் குணத்தை நாடியக்கால்
செப்புஞ் சன்னி வாதமென்று
உய்யு மடிக்கு வகைகாணோ
உலகோ ரறிய உரைத்தோமே! 108

கைகால்கள் கனத்துத் திமிர்ந்து காணும். கண்ணில் அயர்ச்சி காணும். உடல் மெலியும். கோபம் ஏற்பட்டு நாத்தடுமாறும். இக்குறிகுணங்களைக் கண்டால் அது சன்னி வாதம் என்று அறிந்து கொள்ளலாம்.

### தைலம்

*முருங்கைவேர் பிரண்டைத் தண்டு முத்தண்டு*
*முதிர்ந்த எருமை மூத்திரத்தில்*
*விறுதா யிடித்துத் தான்பிழிந்து*
*வேம்பி னெண்ணை தனிற்சேர்த்து*
*அரிதாரமுடன் சாதி லிங்கம்*
*எருக்கம் பால்விட்டு காய்ச்சிவடித்*
*திருவே சற்றே உட்கொள்ள*
*தீருஞ் சன்னி வாதமதே!* 109

முருங்கைவேர். முப்பிரண்டைத்தண்டு இவற்றை முதிர்ந்த எருமையின் மூத்திரத்தில் கலந்து இடித்துப் பிழிந்து கொள்ளவும். வேப்பெண்ணெய், அரிதாரம், சாதிலிங்கம், எருக்கம்பால் இவற்றையும் சாற்றுடன் சேர்த்துக் காய்ச்சி எண்ணெய் இறக்கிக் கொள்ளவும். தினம் சிறிதளவு எண்ணெய் உட்கொண்டால் சன்னிவாதம் தீரும்.

### மரணவாத சன்னியின் குணம்

*கண்ணும் வாயுஞ் சோபிக்கும்*
*கையுங் காலும் அயர்வாகும்*
*நண்ணும் நாவுஞ் சொற்றளர்ந்து*
*நடுக்கி இருக்கும் நாவுலரும்*
*எண்ணுஞ் செவியுஞ் சில்லென்று*
*இருகால் தன்னை நோவிக்கும்*
*வண்ண மிதுவே கண்டாக்கால்*
*மரண வாதஞ் சன்னியிதே!* 110

கண், வாய் இவை சோபிக்கும். கை, கால் அயர்ச்சி காணும். நாதளர்ந்து உலர்ந்து சொற்கள் குழறும். செவியில் சில்லிட்ட உணர்ச்சி தோன்றும். கால்கள் வலி எடுக்கும். இவை மரணவாத சன்னியின் குணமாகும்.

## தைலம்

*வேலிப் பருத்தி கழல்கொடியும்*
*வெருகுஞ் செருப்படி எருக்கிலையும்*
*ஆலின் பழுப்பு மாவிலிங்கு*
*ஆடா தோடை திருகுகள்ளி*
*நீலி வேளை சமனிடித்து*
*நீரை வாங்கி அதிற்கள்ளிப்*
*பாலி னுடனே வேப்பெண்ணெய்*
*பகர்ந்து காய்ச்ச மருந்தைக்கேள்!* 111

வேலிப்பருத்தி, கழற்கொடி, செருப்படை, எருக்கிலை, ஆலம் பழுப்பு, மாவிலிங்கு, ஆடாதோடை, திருகுகள்ளி, நீலி, வேளை இவற்றைச் சமமாக எடுத்து இடித்துச் சாறு எடுத்து அதனுடன், கள்ளிப்பால், வேப்பெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

*சுக்கு வசம்பு வெள்ளுள்ளி*
*சோமன மோதகம் ரோகணியும்*
*தக்க கோட்டம் அதிமதுரம்*
*தாரம் விடையம் சனினாயகம்*
*மிக்க வரத்தை வலம்புரிக்காய்*
*வியன்பூ நாகம்வெந்துபூசி யுள்கொள்ள*
*நிக்கு மரண வாதசன்னி*
*நிகழ்ந்தே யோடிப் போய்விடுமே!* 112

சுக்கு, வசம்பு, வெள்ளுள்ளி, பச்சைக் கற்பூரம், ஓமம், கடுகுரோகணி, கோட்டம், அதிமதுரம், அரிதாரம், அதிவிடையம், சன்னிநாயகம், அரத்தை, வலம்புரிக்காய், பூநாகம் இவற்றை மேற்சொன்ன எண்ணெய்க் கலத்திலிட்டு வேகவைத்து மேற்பூசி, உட்கொள்ள மரணவாத சன்னி குணமாகும்.

## குதிரை வலியின் குணம்

*எண்ணிய சன்னி வாத*
*துள்ளிதுங் குதிரை வலியெண்ணில்*

*கண்ணிற் புருவங் கருப்பதாங்*
*கையுங் காலு மொருபக்கம்*
*மெண்ணுரையும் மிகுந்து துள்ளு*
*மிதுவே திருக வலியுண்டாம்*
*விண்ணப் பார்த்து விழிநீக்கில்*
*மீளா திதுவுந் திண்ணமிதே!* 113

குதிரைவலி எனும் சன்னி வாதத்தின் குறிகுணங்கள் பின்வருமாறு. கண் புருவம் கருப்பாகும். வாயில் நுரைதள்ளி கைகால்கள் ஒரு பக்கமாக இழுத்துக் கொண்டு திருகிக் காணும். விண்ணை நோக்கி விழிகள் பார்க்கும். இந்நோய் கண்டால் மீள்வது கடினமாம்.

## அஞ்சனம்

*சுக்கு மிளகு திப்பிலியும்*
*சோம னுப்பு வெள்ளுள்ளி*
*தக்கம் கொந்தளம் பருப்புத்*
*தறுகா வசம்பு இவைகூட்டி*
*ஒக்கத் தேசிப் பழச்சாற்றி*
*லொன்றா யரைத்துஞ் சனவுண்டை*
*மிக்க குதிரை வலியதுதான்*
*மீளத் தேசிப் பழத்திலிடே!* 114

சுக்கு, மிளகு, திப்பிலி, பச்சைக்கற்பூரம், வெள்ளுள்ளி, கொந்தளம் பருப்பு, வசம்பு இவை சம அளவு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துச் சிறு சிறு உருண்டை களாகச் செய்து கொள்ளவும். எலுமிச்சம் பழச் சாற்றில் இவ்வுருண்டையை உரைத்துக் கண்ணிலிட குதிரை வலியினின்று மீளலாம்.

## எண்ணெய்

*கொள்ளுங் குதிரை வாலரிசி*
*கூரிய நொச்சி ஆடாதொடை*
*முள்ளே யுள்ள குறுவட்டு*
*மூக்குங் கைமூலி தூ துவளை*

வெள்வேல் மிக்கச் சாரணவேர்
மீறுதே சற்றுக் கொடுவேலி
உள்ளே எரித்த வேப்பெண்ணை
உதவக் குதிரை வலிநோயே! 115

கொள்ளு, குதிரைவாலரிசி, நொச்சி, ஆடாதோடை, தூதுவளை, வெள்வேல், சாரணைவேர், கொடிவேலி இவற்றைத் தேவையான அளவு வேப்பெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடித்துப் பருக குதிரை வலி நோய் நீங்கும்.

## புறவீச்சுக் குணம்

அடுத்தடுத் தெடுத்துக் குற்றி
அதிகமாய் விரைத்து வேர்த்துப்
படுத்தனா டிக்கும் பேசில்
பல்லது கிட்டி நெஞ்சு
அடுக்கவே கட்டிச் சீறி
அங்கமும் பிறகே விழில்
திடுக்கெனப் பிறவீச் சென்று
செப்பலாஞ் செப்ப லாமே! 116

உடலில் ஆங்காங்கே அடுத்தடுத்து குத்தல் எடுத்து, உடல் விரைத்து அதிகம் வேர்த்து, நாக்குழறி, பல்கிட்டி, நெஞ்சடைத்து உடம்பையும், கழுத்தையும் பின்னுக்கு வளைத்து துன்பந் தரும். இந்நோய் புறவீச்சு நோய் என்று அறியலாம்.

## உள்வீச்சுக் குணம்

குத்துமே அடுத்த டுத்துக்
குன்றி ஏங்கியே நிமிர்ந்து
மெத்த விரைத்துள் ளடங்கி
வேர்க்கும் விகற்ப மிகவுண்டாம்
பற்றி இன்றி எதிர்தள்ளும்
பசப்புடன் பல்லும் பூட்டு
மற்றிய உள்விச் சென்ற
யென்பலாம் எண்ண லாமே! 117

அடுத்தடுத்து குத்தலை உண்டாக்கி குன்றச் செய்து, பின் நிமிர்ந்து, விரைத்து வேர்த்து, வாய்வார்த்தைகளில் விகற்பம் உண்டாகும். உண்ட உணவை எதிர்த்துத் தள்ளி பல்லுங்கிட்டி உடம்பின் உள் பகுதிகளில் வலி ஏற்படுத்தும் தன்மை உடையது உள் வீச்சாகும்.

### கசசூலையின் குணம்

*மாலையி லுதரந் தன்னில்*
*மதிப்புடன் திடனெ ழுந்து*
*ஆலையில் நாவி தன்னி*
*லப்படிக் கிடந்து நொந்து*
*நூலை முதுகு தன்னில்*
*நுகுந்தே பத்தி னோவுண்டால்*
*காலைப் பற்றியே யிழுக்கும்*
*கசசூலை வலியென் றறிவீரே!* 118

மாலை நேரத்தில் வயிறு எழுந்து, நொந்து வலி எடுக்கும். முதுகு வலிக்கும். கொப்பூழும் வலித்து நொந்திருக்குமானால் அது கசசூலை யாகும்.

### உள்வீச்சு, புறவீச்சுக்கு எண்ணெய்

*தடித்த மஞ்சள் கடுகுள்ளி*
*தேங்கா யிந்துப்பு வேப்பெண்ணை யிற்காச்சி*
*முடித்த கூந்தல் கிளிமொழியே*
*முழுது மிரண்டு கிழிகட்டி*
*கடித்த பல்லு தலைபிடரி*
*கால்கை சந்து சடங்குத்துப்*
*பிடிக்க சூலைவலி வாத சன்னி*
*புறவீச்சு உள்வீச்சு போய்விடுமே!* 119

மஞ்சள், கடுகு, உள்ளி, தேங்காய், இந்துப்பு, இவற்றை வேப்பெண்ணெயில் கிழிகட்டி காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். கிட்டிப்பல், தலை, பிடரி, கால், கை, சந்துகள் இவ்விடங்களில்

இந்த எண்ணெயைத் தடவி பிடித்துவிட புறவீச்சு, உள்வீச்சு இவை நீங்கும்.

### ஒற்றடம்

*மாட்டோடு தன்னை நன்றாய்*
*வடியவே பொடித்துப் பின்னை*
*ஒடது தணலி லீட்டு*
*உழைப்புடன் வறுத்துக் கொண்டு*
*சூடுடன் கிழிகள் கட்டி*
*சுளுதளக் குற்று வீராய்*
*ஒடுமே வலிக ளஞ்சு*
*மோடுமென் றுரைத்தார் முன்னோர்!* 120

மாட்டின் மண்டையோட்டை நன்றாகப் பொடிசெய்து, ஓட்டினைத் தணலிலிட்டு நன்றாக வறுத்து கிழிகட்டி சுடச்சுட ஒற்றடம் தர உள்வீச்சு, புறவீச்சால் ஏற்படும் ஐவகை வலிகள் உடலிலிருந்து களைந்து ஓடும் என்று முன்னோர் உரைத்தனர்.

### பிள்ளை பெற்றவள் சுவாச காசத்தின் குணம்

*பிள்ளை பெற்ற தாயார்க்குப்*
*பெருத்த சுரமாந் தலைவலியும்*
*முள்ளு முழலை தவனமுண்டாம்*
*உதர இரைப்புடன் கழிச்சலுமா*
*மெள்ளத் தொடுத்த களைமூச்சும்*
*விழியில் தெளிவுங் கெட்டிருக்குந்*
*துள்ளித் துடித்த சுவாச காசந்*
*துளச்சி உயிரை வனத்திடுமே!* 121

பிள்ளை பெற்ற தாய்க்குச் சுரம், தலைவலி, உழலை, வறட்சியால் ஏற்படும் வெப்பம், வயிற்றிரைச்சல், கழிச்சல், மூச்சிரைப்பு, விழிபஞ்சடைதல், சுவாசகாசம் இவை உண்டாகும் என்பர்.

### சூரணம்

*அசமோ தகமு மாறிரண்டு*
*ஆன சீரக மதிற்பாதி*
*நயமாஞ் சுக்கு முக்கழஞ்சு*
*நல்ல கிராம்பு மதிற்பாதி*
*செயமாம் பத்திரி அதிற்பாதி*
*சேர்த்துப் பொடித்துத் தேனிலுண்ண*
*பயமா காச சுவாச நிற்கும்*
*பாரில் முனிவர் பகர்ந்தனரே!* 122

அசமோதகம் 60 கி., சீரகம் 30 கி., சுக்கு 15 கி., கிராம்பு 7.5 கி., பத்திரி 3.5 கி. இவற்றைச் சேர்த்துப் பொடித்துத் தேனிலுண்டால் வருத்தப்படுத்தும் காசசுவாச நோய் நீங்கும்.

### தைலம்

*நத்தைச் சூரி குதிரைவாலி*
*நாகப் பாம்பு நாயுருவி*
*பத்துக் கோழி முட்டைதனிற்*
*பரிந்து தயிலந் தானெடுத்து*
*மத்த சன்னி மோகித்து*
*வாக்கு மறந்து கிடந்தவர்கள்*
*சத்தப் படாம லெழுந்திரிப்பார்*
*தப்பா தென்றுஞ் சத்தியமே?* 123

நத்தைச் சூரி, குதிரை வாலி, பூநாகம், நாயுருவி இவற்றைத் தூளாக்கி பத்து கோழிமுட்டை உடைத்து ஊற்றிக் கொள்ளவும். தனியே தைலமிறக்கிக் கொள்ளவும். இதனைக் கொடுத்தால் சன்னி ஏற்பட்டு பேச்சற்றுக் கிடந்தவர்கள் தெளிவு பெற்று எழுந்திருப்பர் என்பர்.

### சன்னியின் குணம்

*கருத்துறு சன்னி தன்னைக்*
*கசடற அறிய வேண்டி*

உருத்திரக் கிசத்தை நன்றா
யுரைத்து நாவதனி லூட்டத்
திருத்தமாய்க் கருத்துக் கண்டால்
திதமுறு சன்னி யாகும்
பெருத்தது வெளுத்துக் கண்டால்
பின்னைய தல்ல வாமே? 124

சன்னியின் தன்மையை அறிய ஒரு வழி கூறப்பட்டுள்ளது. உருத்திராட்சத்தை நன்றாக உரைத்து நாவினில் ஊட்டும்போது நாக்கு கறுத்திருக்குமானால் அது சன்னி என்று அறியலாம். வெளுத்துக் கண்டால் அது இல்லை என்று அறியலாம்.

குணங்குறி மிகுந்து தோன்றில்
குற்றமே குறைந்து நின்றால்
இணங்கு மந்திர மருந்தால்
இவைகளால் மீள்வ தின்ன
குணங்கேளாக் குற்ற மேறிக்
குறிகுணங் குறைந்து நின்றால்
பிணங்கிடா தகன்று சீலான்
பிரிந்ததாய்ப் பேச லாமே! 125

குறிகுணங்கள் மிகுதியாகத் தோன்றி, குற்றம் குறைந்து கண்டால், நோயானது மருந்திற்கு இணங்கும். இவற்றினின்று மீள்வதற்கு குற்றமேறி, குறி குணம் குறைந்து காணப்படின் சன்னி தீருமென்று கூறலாம்.

## சன்னி, வலியஞ்சிற்கும் புகை

குழியானை மயிலிறகு
குணமான வலம்பு ரிக்காய்
சளுவான பூனைக் காட்டஞ்
சாதிலிங்கம் சிலந்தி மஞ்சள்
வலுவதிர் வசம்பு உள்ளி
சுக்கு எருமைக் கொம்புபொடி
பழுதற இடித்துக் கம்பளியில்
பரப்பி திரிபுகை யேற்க

முழுதும் வலிசன் னிக்கு
முறிந்தோ டுமென் றனரே! 126

குழியானை, மயிலிறகு, வலம்புரிக்காய், பூனைக்காட்டம், சாதிலிங்கம், சிலந்தி நாயகம், மஞ்சள், வசம்பு, உள்ளி, சுக்கு, எருமைக் கொம்பின் பொடி இவற்றை இடித்துக் கம்பளியில் பரப்பி திரியாகத் திரித்து அதனைப் புகைத்து உள்ளே இழுக்க சன்னியும் ஐவகை வலிப்பும் நீங்கும்.

சமுத்திரப் பழமி லுப்பை
தரும்புண்ணாக் கதுவுஞ் சுக்கு
அமுக்கியே பொடித்து நன்றாய்
அதுகுழல் வைத்தே ஊத
திமுக்கென் றெழுந்த சன்னி
தீருமே வலீக ளஞ்சு
நமுக்கென வந்த பேயுஞ்
சாடி யோடிப் போமே! 127

சமுத்திராப்பழம், இலுப்பைப் புண்ணாக்கு, சுக்கு, இவற்றைப் பொடித்து அப்பொடியைக் குழலில் வைத்து மூக்கினுள் ஊத சன்னியும் ஐவகை வலிப்பு நோய்களும் தீரும்.

## முகவாத சன்னியின் குணம்

கண்ணித் தலையில் புருவத்தில்
காதில் செகிட்டில் குத்துண்டாய்
பண்ணிப் பறிக்கும் முகமதனைப்
பக்கம் பற்றி யேதிருகி
லெண்ணிச் சொல்லும் முகவாத
மிடறுஞ் சன்னி யிதென்று
நண்ணிச் சொன்னோஞ் சிரோவாதம்
நாடுங் குணமு மிதுவாமே! 128

தலையில், புருவத்தில், காதில், காதுத்தண்டில் குத்தல் ஏற்பட்டு முகத்தில் பாதிப்புண்டாகும். முகம் ஒரு பக்கமாகத் திருகிக் கொள்ளும். இதனை முகவாத சன்னி எனலாம்.

**தைலம்**

நத்தைச் சூரி நரிமிரட்டி
நலமாந் துத்தி வேப்பந்தோல்
தோத்து முசறு துடையகறு
துலங்கு நிலவேர் பகுத்தியுட
தனத்து நல்ல பாம்புக் கண்டந்
தாக்குங் கோழிக் குடலுடனே
வித்து முதிய வேப்பெண்ணெய்
வேறே யுரைக்க மருந்தைக்கேள்! 129

நத்தைச்சூரி, நரிமிரட்டி, துத்தி, வேப்பந்தோல், முசுறு முட்டை, நிலவேர், நல்லபாம்புக் கண்டம், கோழிக் குடல், இவற்றை முறையே 10கி, வேப்பெண்ணெயும் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும்.

கேளீ ரின்னம் வசம்புள்ளி
கிளறுங் காயம் வாலுளுவை
கோழியி ரத்த மிரைப்பொட்டியும்
கொள்ளுஞ் சன்னி நாயகமுங்
காளிய கம்பிப் பிசினுடனே
கறுத்த சீரக மதுகூட்டித்
தெளிவா யோரொன் றிருகழஞ்சு
திறமாய்க் காய்ச்சி வடிகொள்ளே! 130

மேலும் வசம்பு, பூண்டு, பெருங்காயம், வாலுளுவை, கோழியின் இரத்தம், இரைப்பொட்டி எனும் இரைப்பை, சன்னி நாயகம், கம்பிப் பிசின், கருஞ்சீரகம் இவை முறையே 10 கி. எடுத்துக் கொள்ளவும். இவற்றை முன் சொன்ன வேப்பெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி தைலம் இறக்கிக் கொள்ளவும்.

தொட்டுப் பூச உள்நக்கத்
துலங்கு தழலிற் றூபமிட
இட்ட அடையுங் காதுதனிற்
விசையுங் குமிலத் துள்ளிவிட

மட்டும் படர்தமர் வலியு
மருவுஞ் செவிகள் வாய்கோணல்
முட்டுப் படவே முறிந்தோடும்
முண்ட கபால சன்னியுமே! 131

இதனை மேலுக்குப் பூசி, உள்ளேயும், சாப்பிட்டு வரவும். நல்ல தணலில் தூபமிடவும். காதில் ஓரிரு துளிகள் விடவும். தமர் வலி, செவி, கண்புருவம் இவற்றில் வலித்து, வாய்க் கோணலை உண்டாக்கும் கபால சன்னி முறிந்து விடும்.

## பித்த குணம்

கால்தலை வயிறு னெஞ்சு
கமர விழிமு கங்கள்
சாலவே சிரசில் நின்று
தள்ளென வறிந்து காட்டி
மேலேல்லாம் குத்தி நொந்து
மின்வளி யேறி யுங்கள்
வேலனே அரினல் லாரே
அறிந்துகொள் பித்தந் தானே! 132

கால், தலை, வயிறு, மார்பு, கண், முகம், தலை இவற்றிலும் உடல் முழுதும் குத்தல் எடுக்கும் தன்மை கொண்டது இப்பித்தமாகும்.

## மருந்து

கிட்டக் கல்லு காந்தமுடன்
கேளுஞ் சுக்கு மிளகுடனே
நாட்டும் நல்ல அமுக்கிராவேர்
நன்றாய்ப் பொடித்துச் சர்க்கரையில்
கூட்டித் தின்னப் பித்தமது
குடிபோ மென்றார் குறுமுனிவர்
தேட்டார மாக நல்லதென்று
திடமாய்க் கொள்ளும் மானிடரே! 133

இரும்புத்தூள், காந்தத்தூள், சுக்கு, மிளகு, அமுக்கிரா வேர் இவற்றை நன்றாகப் பொடித்துச் சர்க்கரையுடன் சேர்த்து உட்கொள்ள பித்தம் நீங்கிவிடும் என்பர்.

### தலை மண்டை கொண்ட பித்தத்தின் குணம்

*பித்தமே சிரசி லுற்றால்*
*பின்வருங் குணங்கள் கேளாய்*
*உற்றதோர் நயனந் தானும்*
*விழியது மாறி நிற்கும்*
*கயத்திடு நாக்குத் தானுங்*
*கனக்குமே சிரசில் நின்று*
*நித்திரை தானும் வாரா*
*நெடியகொட் டாவி யாமே!* 134

பித்தம் தலையில் ஏற்பட்டால் அது பின்வரும் குணங் களைக் கொண்டிருக்கும். கண் விழியில் மாற்றம் ஏற்படும். நாக்குத் தடித்துக் கனமாகக் காணப்படும். தூக்கம் வராமல் துன்பப்பட்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பர் என்பதாம்.

### மருந்து

*நெல்லிக்காய் மிளகு தானும்*
*நெரிய மஞ்சான் கோட்டம்*
*நல்ல சந்தன மதிமதுரம்*
*நற்புடல் கய்யான் பாலிளநீர்*
*நல்லெண்ண தன்னை யதில்விட்டு*
*நன்றாய்க் காய்ச்சி முழுகிவரச்*
*சொல்லிய பித்தம் போமென்று*
*சுகமாய் முனிவர் சொன்னாரே!* 135

நெல்லிக்காய், மிளகு, மஞ்சாடி, கோட்டம், சந்தனம், அதிமதுரம், நற்புடல், கையாந்தகரை, பால், இளநீர் இவற்றைச் சம அளவெடுத்து நல்லெண்ணெய் சேர்த்து எண்ணெய் காய்ச்சி முழுகிவர தலையில் உண்டான பித்தம் நீங்குமென்பர்.

## பித்தகுணமும் மருந்தும்

பித்தஞ் சுத்திக் கிறுகிறுத்துப்
பெருக்க நடக்கத் துயராகி
ஒத்த உருண்டை உடனிட்டு
உதிர்ந்த பாக்கில் கனியிட்டுச்
சித்தத்துள் நீருஞ் சிறுபயறுஞ்
சீரக முடனே சீனியுமாய்
மற்ற பசுப்பால் நெற்பொரியும்
அளவே கழஞ்சி கொள்ளுவதே! 136

தலைசுற்றல், கிறுகிறுப்பு, அதிக தூரம் நடக்க இயலாமை இவை பித்தத்தின் குணங்களாகும். சீரகம், சிறுபயிறு, சீனி சேர்த்து உருண்டை செய்து உண்ணலாம். அவ்வுருண்டை யுடன் எலுமிச்சம்பழச்சாறு விட்டு உண்ணலாம்.

மிக்க மிளகு நேர்வாளம்
மிகுராம லேழு முத்து
குண்டை உருட்டிச் சூரிக்கா
யளவுந்த தேசிப் பழச்சாற்றில்
நன்றாய்ச் சுழற்றும் பித்தமதே! 137

நெற்பொறி, பசும்பால், மிளகு, நேர்வாளம் இவை 10 கி. அளவும் ஏழு ஆமணக்கு முத்தும் சேர்த்துப் பொடித்து உருண்டை செய்து எலுமிச்சம்பழச்சாற்றில் உண்ண சுழற்றும் பித்தம் நீங்கும்.

## பேதி மருந்து

பித்தமுத லய்யம் சுரவிக்கம்
பெருத்த வாய்வு சலமறிப்பு
சுத்த முறவே விரோசனமாய்ச்
சுகமா முட்டுக் களைதீர்க்கும்
மெத்த சுடவே வென்னீர்கொள்ள
விரோசிப் பாகுஞ் சத்திசெய்யும்
மெக்கப் புரையெனு மிடத்தில்
மிகுந்த பசும்பால் கழஞ்சிகொடே! 138

பித்தம், வாதம், ஐயம், சுரம், வாயு, சலக்கட்டு இவை தீர பேதிக்கு மருந்து கொடுத்து அதன்வழி சுத்தப்படுத்தலாம். பின் வெந்நீர் கொண்டால் மேலும் பேதி கழிந்து, வாந்தி ஏற்படும். பேதி மிகுதியானால் பசும்பால் 5 கி. கொள்ள பேதி நிற்கும்.*

## வறட்சி பித்தகுணம்

*தலையும் வலித்து உடலுந்*
*தாதுங் கெட்டுத் துயருண்டா*
*மலையுந் திரிய வொட்டாது*
*அடுத்து மிகவே கிறுகிறுத்து*
*உலையும் மிகவே மணமடிக்கு*
*மோடி அடங்கும் வறட்சிபித்த*
*கலையு மிகவே கற்றுணர்ந்து*
*கண்டே முனிவர் கழறினரே!* 139

தலை வலி எடுத்தல், உடலும் தாதும் கெடுதல், நடக்க முடியாமல் போதல், தலை கிறுகிறுத்தல் ஆகியவை வறட்சி பித்தத்தின் குணங்கள் என முனிவர்கள் கண்டறிந்து கூறினர்.

*சீதேவி யார குறுணி*
*செரும்பால் நாழி நெய்நாழி*
*மாது சதகுப்பை கொத்தமல்லி*
*வன்கோட்டஞ் செண்ப கப்பூத்*
*தாதுகு சந்தனம் நற்சீரகஞ்*
*சாதி கற்கடக மோரோர்*
*..... களஞ்சுதான் சேர்த்து*
*தீதின்றி காய்ச்சிக் குடித்திடுகில்*
*திரும் வறட்சி பித்தமதே!* 140

*குறிப்பு: பேதி மருந்து கொடுக்கும் போது பசும்பால் வழங்குவது வழக்கில் இல்லை. இந்த ஓலைச்சுவடியில் கூறியிருப்பது மாறாக உள்ளது.

பொன்னாங்காணி 5.2 லி., பால், நெய், வகைக்கு 1.3 லி., சதகுப்பை, கொத்துமல்லி, கோட்டம், செண்பகப்பூ, சந்தனம், நற்சீரகம், சாதிக்காய், கற்கடகசிங்கி இவை வகைக்கு 10 கி. சேர்த்து காய்ச்சிக் குடிக்க வறட்சி பித்தம் தீரும்.

### காமாலையின் குணம்

முகமும் வீங்கிக் கண்வெ ளுத்து
மூச்சு நடக்கில் முட்டுவாய்
முகமுந் துடித்து நாவ றண்டு
அணுகுந் தாது கெட்டி ருக்கும்
மிகவு மசனஞ் செல்லாது
மேனி வறண்டு வெளுப்பேறுஞ்
செகமே சொன்னோங் காமாலை
செய்யுங் குணங்க ளிதுகண்டாய்! 141

முகம் வீங்குதல், துடித்தல், கண் வெளுத்துக் காணல், நடக்கும் போது மூச்சு முட்டுவது போன்ற உணர்வு ஏற்படல், நாவறட்சி ஏற்படல், தாதுகெடல், பசி எடுக்காமை, உடல் வறண்டு வெளிறிப்போதல் போன்றவை காமாலை நோயின் குறிகுணங்களாகும்.

### கற்கம்

காந்த மொருபலங் கொண்டு வந்து
கையாந் தகரைச் சாற்ற ரைத்து
ஏந்து கற்றாழஞ் சாறதனி
லியல்பாய் மூன்று நாள ரைத்து
வாய்ந்த திரிகடுகுப் பொடியுடனே
வாய்ப்பாய்த் தின்ன வல்லீராய்
சேர்ந்த காமாலை பாண்டு ரோகஞ்
செரியாக் குணமுந் தீருமன்றே! 142

35 கி. காந்தத் தூளைக் கையாந்தகரைச் சாற்றால் ஒருநாள் அரைத்து, கற்றாழைச் சாற்றால் மூன்று நாள் அரைத்து

வைத்துக் கொள்ளவும். திரிகடுகுப் பொடி சேர்த்து உண்ண காமாலை, பாண்டு, செரியாமை இவை நீங்கும்.

### மருந்து

*கைகால் வெதுப்பு மேல்வெளிறுங்*
*காமந் தாது கெட்டதுவும்*
*மய்யார் குழலாய் மாதவிடாய்*
*மாறல் பொருமல் வயிறுவலி*
*பய்ய மறந்தே யேகிவிடும்*
*பரிவாய் முனிவர் பகர்ந்தபடி*
*செய்யுங் காந்த பற்பமெனத்*
*தெளிந்து செய்வீர் செகத்தோரே!* 143

கைகால் வெதுப்படைதல், கண்வெளுத்தல், தாது கெடல், வீட்டுத்தூரத்தின் நாளில் மாற்றம் ஏற்படுதல், பொருமல், வயிற்றுவலி இவை எல்லாம் சித்தர்கள் சொன்ன முறைப்படி செய்த காந்த பற்பத்தை உண்டால் தீரும் என்பர்.

### காமலை, பாண்டுக்குத் தைலம்

*கய்யாந் தகரை யாம ணக்குக்*
*கற்றாழை கொடுப்பைப் புடலேலமுடன்*
*வெய்ய நீர்முள்ளி சீந்தில்*
*வில்லங் குருந்தொட்டி வெட்பூலாத்*
*தய்யல் வளையம் புளியிலை நெல்லிக்காய்*
*தாழை ஆல விழுசமன்*
*பய்ய யெண்ணை பாலிளநீர்*
*பரிவாய்க் கூட்டு மருந்துகேள்!* 144

கையாந்தகரை, ஆமணக்கு, கற்றாழை, கொடுப்பை, புடலேலம், நீர்முள்ளி, சீந்தில், குருந்தொட்டி, வெட்பூலா, புளியிலை, தாமரை வளையம், நெல்லிக்காய், தழுதாழை, ஆலம்விழுது இவற்றைச் சமஅளவெடுத்து அதே அளவு நல்லெண்ணெய், பால், இளநீர் இவற்றைச் சேர்க்கவும்.

நெல்லி கடுக்காய் தான்றிக்காய்
நேரிற் சீரகந் திரிகடுகு
..... நிம்பத்தோ லதிமதுரஞ்
சொல்லுங் கோஷ்ட்ட முந்திரிகை
துய்ய சந்த மிருவேலி
லாமிச்சுடன் மோதம்
வல்லுற செஞ்சந்தன லவங்கம்
வகையிரண்டு கழஞ்சு அதிற்சேர்த்து
கல்லீத பதங்கண் டேகாய்ச்சித்
தேய்த்தே முழுகக் காமாலை
பாண்டுபோ மென்றே! 145

நெல்லி, கடுக்காய், தான்றிக்காய், சீரகம், திரிகடுகு, எலுமிச்சம்பழத்தோல், அதிமதுரம், கோட்டம், முந்திரிகை, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சு, ஓமம், செஞ்சந்தனம், இலவங்கம், இவை முறையே 10 கி. எடுத்து முன்சொன்ன பொருட்களோடு சேர்த்து நல்ல பதத்தில் எண்ணெய் காய்ச்சி முழுக காமாலை, பாண்டு நோய் தீரும் என்பதாம்.

## பித்த பாண்டுவின் குணம்

இருமலு மிளைப்பு நெஞ்சி
லிடிப்பது மிகவு முண்டாய்ப்
பெருகவே நடக்கும் போது
மூச்சுமுட் டுவே யாகும்
வெருகவே கிறுகி றுத்து
மேனியும் வெளுத்த தைக்கில்
பெருகிடும் பித்த பாண்டு
வெனப்பல பேச லாமே! 146

இருமல், இளைப்பு, நெஞ்சுவலி இவை மிகுந்து காணும். வேகமாக நடக்கும்போது மூச்சு முட்டுதல், கிறுகிறுப்புத் தோன்றல், மேனியில் வெளுப்பு தோன்றல் இவை பித்த பாண்டு நோயின் குறிகுணங்களாகும்.

## நெல்லி நெய்

நெல்லி பூசணி சதாவேரி
நெய்பா லிளநீர் சரிச ரியாய்
சொல்லுங் கோஷ்ட மதிமதுரந்
துய்ய சீரகங் கச்சோலம்
மல்லி ஏலம் திரிபல திரிகடுகு
வாய்ப்பா யோரொன் றிருக ழஞ்சு
மெலிதாய்க் காய்ச்சி பதமானால்
மேற்பொடி விட்டு வடிப்பதுகேள்! 147

நெல்லி, பூசணி, சதாவேரி இவற்றின் சாறு, நெய், பால், இளநீர் இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்ளவும். கோட்டம், அதிமதுரம், சீரகம், கச்சோலம், கொத்துமல்லி, ஏலம், திரிபலை, திரிகடுகு இவை முறையே 10 கி. எடுத்து முன்சொன்ன பொருட்களுடன் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

கேளீர் சர்க்கரை முந்திரிகை
கிளரும் பலமே ஒரொன்று
தாளப் பாத்திரந் தனிலிட்டுத்
தருக வடித்துக் குடிப்பீராய்
விழும் விக்கம் பெரும்பாடு
விக்க லிரத்தபித்தப் பாண்டுடனே
வாழா தோடி மாய்ந்துவிடும்
வல்லி நெல்லி நெய்யிதுவே! 148

சர்க்கரை, முந்திரி இவை முறையே 35 கி. அளவு பொடித்து மேற்படி நெய்யில் போட்டு வடித்துக் குடிக்க வீக்கம், பெரும்பாடு, விக்கல், இரத்தபித்தம், பாண்டு இவை நீங்கும்.

## தைலம்

பிரமி கரிப்பான் கற்றாழை
பின்னி லீச்சம் பாலிளனீர்

*உரமே யெண்ணெ யிருநாழி*
*உகந்த சந்த மிருவகையும்*
*அரத்தை கோஷ்டம் நன்னாரி மதுரம்*
*அமுக்கிரா லாமிச் சிருவேலி*
*இதமாய்க் காய்ச்சித் தேய்ப்பீராய்த்*
*தலைநோய் பாண்டு தங்காதே!* 149

பிரமி, கரிப்பான், கற்றாழை, இவற்றின் சாறுகள், ஈச்சம்பால், இளநீர் முறையே 2.6 லி., சந்தனம், செஞ்சந்தனம், அரத்தை, கோட்டம், நன்னாரி, அதிமதுரம், அமுக்கிரா, விலாமிச்சம், வெட்டிவேர் இவற்றுடன் 2.6 லி. நல்லெண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து முழுக தலைநோய், பாண்டு இவை நீங்கும்.

## உட்காய்ச்சல் குணம் மருந்து

*வற்றிமேல் வெளுக்கும் பித்தம்*
*மயங்கிடுஞ் சோப தாபம்*
*பற்றியே அனலுந் தோன்றிப்*
*பகலீர விசலுங் காயு*
*முற்றதோர் குளிர்வெ டுக்கு*
*முடலெனும் விறகிற் சுற்றும்*
*முற்றியே அனலே ஈது*
*முழுதும்உள்க் காய்ச்ச லாமே!* 150

மேனி வெளுத்தல், பித்தம், பித்தத்தால் மயக்கம் ஏற்படல், சோபம், தாபத்துடன் உடலில் அனல் ஏறுதல், பகலிலும், இரவிலும் சுரம் காய்தல், குளிர் எடுத்தல் போன்ற குறிகுணங்களைக் காட்டும் இதனை உட்காய்ச்சல் என்பர்.

*ஆவின் பாலுட னன்புறு சீனியும்*
*மேவு சமுத்திர வேதியு மாகவே*
*தாவு நாற்பது நாளது தான்குடிப்*
*பாவும் உள்சுரம் ஓடிப் பறக்குமே!* 151

பசும்பால், சீனி, சமுத்திரவேதி இவற்றைச் சேர்த்து 40 நாட்கள் பருகி வர உட்காய்ச்சல் நீங்கும்.

பாலுட னிளநீ ரோடு
பழம்பாசி நீர்நெய் னாழி
ஆலுடன் சதா வேலிநீ
ரதினொப்பங் கூட்டிக் கொண்டு
வாலுளுவை சந்தம் வேலி
மீச்சமுங் கோட்டம் பச்சை
சாலவே மதுரம் ரோணி
சமனதுங் கூட்டி நக்கே! 152

எண்ணை பாலு மிளநீரு
மித்தொடு கூட்டி நன்றாய்
வண்ணமாஞ் சந்தங் கோட்ட
மதுரமு மரைத்துச் சேர்த்து
திண்ணமாய் முழுகி வந்தால்
தியங்கிடும் உள்சு ரங்கள்
உண்மையாய் விட்டுப் போமென்
றுரைத்தனர் முனிவர் தாமே!* 153

பால், இளநீர், பழம்பாசிச்சாறு, நெய் இவை முறையே 1.3 லி., ஆலங்கொழுந்து, சதாவேரி இவை வகைக்கு 1.3 லி. வாலுளுவை, சந்தனம், வெட்டிவேர், கோட்டம், திருநீற்றுப் பச்சை, அதிமதுரம், கடுகுரோகணி, இவை சம அளவு எடுத்து அரைத்துக் கொள்ளவும். அனைத்தையும் சேர்த்துக் காய்ச்சி தலை முழுகி வந்தால் உட்சுரங்கள் விடும் என்று முனிவர் இயம்பினர்.

## பித்த குணம்

பரபரத் துடல்க னத்து
பரந்துடல் தடித்தி ரைந்துக்
கரகரத் துளைந்து நெஞ்சு
கனப்புட னிளைப்பு மூச்சுச்
சரசரக் கொறிந்தி மிந்து
தயங்குநீர் செரியும் வெற்றப்பும்

*குறிப்பு : இரண்டு பாடல்களிலும் கடைச்சரக்குகள் ஒன்றாகச் சொல்லப் பட்டுள்ளதால் உரை ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ளது.

*வரவர இருமல் கோபம்*
*வந்துதாம் பித்த மென்னே!* 154

பரபரப்புத் தோன்றும். உடல் கனக்கும். உடல் தடிக்கும். இரைந்து, கரகரத்து, உளைந்து, நெஞ்சு கனத்து, இளைப்பு, மூச்சுச் சிக்கல் ஏற்பட்டு நீர் அடிக்கடி கழியும், இருமல் அடிக்கடி ஏற்பட்டு கோபமும் உண்டாகுமானால் அது பித்தம் எனலாம்.

## மருந்து

*வெற்றிலை கொத்தான் கையான்*
*வேளைபுடல் நெல்லி தேசி*
*கற்றாழை யவுரிக்கொடி யென்ன*
*கனக்கொரு படியிற் கரைத்திடு மருந்துகேள்நீ*
*முத்தமுங் கடுக்காய் சுக்கு*
*மோதஞ் சாரணைவேர் முந்திரி மிளகரத்தை*
*சித்திரப் பாலாடை அதிமதுர யிருசீரகத்தோடு*
*சேரிரு களஞ்சி ரணமே!* 155

வெற்றிலை, முடக்கொத்தான், கையாந்தகரை, தைவேளை, புடல், நெல்லி, எலுமிச்சம் பழம், கற்றாழை, அவுரிக்கொடி இவற்றை முறையே வகைக்கு 1.3 லி. எடுத்து அரைத்துக் கரைத்துக் கொள்ளவும். முத்தக்காசு, கடுக்காய், சுக்கு, ஓமம், சாரணை வேர், முந்திரி, மிளகு, அரத்தை, சித்திரப்பாலாடை, அதிமதுரம், நற்சீரகம், பெருஞ்சீரகம் இவற்றில் முறையே 10 கி. எடுத்துச் சேர்க்கவும்.

*முப்பட மருந்து தன்னை*
*முழுப்பட எடுத்தி டித்து*
*தப்பறா வல்லா ரைச்சார்*
*தனிலரைத் ததிலே சேர்த்துச்*
*செப்பமாய்க் காய்ச்சித் தேத்தால்*
*சிரசில்நோய் ரத்த பித்தம்*
*முப்படும் வியாதி யெல்லாம்*
*முறிந்துதோ மென்று ரைத்தார்!* 156

மேற்கூறப்பட்ட மருந்துகளை நன்கு இடித்து வல்லாரைச் சாறுகொண்டு அரைத்துச் சேர்த்துக் காய்ச்சித் தலையில் தேய்த்து வர தலைநோய், இரத்தபித்தம் போன்ற நோய்கள் நீங்கும்.

*இந்த எண்ணெய் யுரியளந்து*
*எலுமிச்சு நெல்லி மொசுமொ சுக்கை*
*இருநா யுரிநீ ரதிற்சேர்த்து*
*வெந்தயஞ் சுக்கு கடுக்காய்*
*வெண்கார மிந்து மிளகேல மோரோர் கழஞ்சு*
*செந்தெங் கிளநீ ரதில ரைத்துச்*
*சேர்த்துக் காய்ச்சிக் குடிப்பீராய்*
*வந்த ரத்தபித்த வாய்வு மூலம்*
*மற்ற வியாதியும் மாறுமென்றார்!* 157

மேற்கூறிய எண்ணெயில் 650 மி.லி. எடுத்துக் கொள்ளவும். எலுமிச்சம்பழம், நெல்லிமுள்ளி, முசுமுசுக்கை, நாயுருவி, இவற்றின் சாறுகளைச் சேர்க்கவும். வெந்தயம், சுக்கு, கடுக்காய், வெண்காரம், இந்துப்பு, மிளகு, ஏலம் இவற்றில் முறையே 5 கி. எடுத்து செவ்விளநீரில் அரைத்து எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும். இதனால் இரத்த பித்தம், வாய்வு, மூலம் இவை தீரும்.

## சிலேட்டும குணம்

*ஈதலா யுடலந் தண்ணீ*
*ராமென விசைந்து காட்ட*
*மாதுற முகம்பெ ருக்கும்*
*மலஞ்சலங் கழிந்தென் னாளும்*
*போதமும் விரும்பி டாது*
*புந்தியில் வலியுந் தோன்றுந்*
*தூதனா ருளிச் சொன்ன*
*துலக்கிய சிலேற்பனந் தானே!* 158

சிலேட்டும உடலில் அடிக்கடி வேர்வை அரும்பும். முகம் வீங்கும். அடிக்கடி மலசலம் கழியும். உணவை விரும்பிடார்கள்.

வயிற்றிலும் வலி தோன்றும். இவை சிலேட்டும உடலின் குணங்களாகும்.

*இவ்வகைக் கிணங்கி நிற்கு*
*மிருமிய சிலேட்டும மோடு*
*தவ்விய காசத் தோடு*
*தயங்கிய சிலேட்டும மெட்டு*
*ஒவ்விய பித்தத் தோடு*
*உண்ணிய சிலேட்டுமம் ரண்டு*
*கவ்விய வாதத் தோடு*
*கலந்திடு மிரண்ட தாமே!* 159

இருமலோடு சிலேட்டுமமும், காசத்தோடு சிலேட்டுமமும் சேர்வன எட்டாகும். பித்தத்தோடு சேரும் சிலேட்டுமம் இரண்டு, வாதத்தோடு கலந்திடும் சிலேட்டுமம் இரண்டாகும்.

*இப்படி சேற்று மங்க*
*ளிருப்பது நிலையி லானாற்*
*றப்பிடு முடலு மிறக்குந்*
*தவறிடா மருந்து சொல்வோம்*
*அப்பிரு காரங் கிட்டம்*
*மரைப்பொடி காந்த மொன்றாய்*
*செப்பிடும் தேசி நீரால்*
*சேர்த்தரைத் தொருபுடம் போடே!* 160

இப்படி சிலேட்டுமங்கள் சேர்ந்திருப்பது நிலையானால் பின்வரும் மருந்து உட்கொண்டு குணப்படுத்தலாம். அப்பிரகம், கிட்டம், அரைப்பொடி, காந்தம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்து ஒருபுடம் போடவும்.

*திப்புட மிட்டெ டுத்து*
*திரிபலை திரிகடு குடனே*
*வாய்ப்புடன் சமனாய்ச் சேர்த்து*
*வண்மையா யறிந்தெ டுத்து*

*ஆப்புடன் கய்யான் நீரில்*
*அஞ்சுசாம மரைத்த ருந்த*
*சிப்படுஞ் சிலேட்டும ரோகம்*
*திரிதோஷந் தீரு மென்றே!* 161

புடமிட்ட அம்மருந்தை எடுத்து திரிபலை, திரிகடுகு, இவற்றைச் சம அளவு எடுத்து கையாந்தகரைச் சாற்றில் 15 மணி நேரம் அரைத்துச் சாப்பிட்டு வந்தால் சிலேட்டும நோய்கள், திரிதோடம் இவை நீங்கும்.

*ஆனதி லதிக மானா*
*லஞ்சது சுரங்க ளுண்டாம்*
*தானது இறுதி கண்டுந்*
*தன்னுயிர் பயங்க ளாலும்*
*மேனியில் முறிவி னாலும்*
*மின்னமேல மயிலி னாலும்*
*கானலே பீடை யாலும்*
*கற்பித்தம் புழக்கை யாலும்!* 162

திரிதோடம் அதிகமானால் ஐந்து வகையான சுரங்கள் உண்டாகும். இதுதான் இறுதிநிலை என்று எண்ணி, அதனால் ஏற்படும் பயத்தினாலும் உடலின் அதீத மெலிவினாலும், மின்னல் தாக்குமென்ற பயத்தினாலும் பீடை போன்றவற்றாலும் இவ்வகைத் துன்பங்கள் உண்டாகும்.

*இதுக்குடன் மருந்து மாற*
*இவையில்முச் சுரங்கள் வந்தால்*
*சதிர மானின் நாவு*
*சங்கையாய்க் கரிந்து காட்டும்*
*பதித்தபார் வையுங் கலங்கிப்*
*படைகள்போல் குத்தி நோகும்*
*முதித்த மூச்சு வாங்கமுண்டாம்*
*முற்ற சரீரமும் விரையலுண்டே!* 163

இவ்வகையில் திரிதோட சுரங்கள் ஏற்பட்டால் நாவில் வலி ஏற்பட்டு, கருப்பாகக் காணும், கண்ணில் கலக்கம்

ஏற்பட்டு, உடம்பெல்லாம் குத்தி நோகும். மூச்சு வாங்கும், உடம்பிலும் விரைப்பு உண்டாகும்.

### வாத சுரத்தின் குணம்

*வாத சுரத்தின் குணங்கேளீர்*
*மயிருஞ் சிலிர்த்து தலைனொந்து*
*போத நடுக்கல் கீழ்முதுகு*
*பொருந்துங் கைகாலு முளையுங்*
*காதல் பெருத்த தண்ணீர்*
*கருதுந் தலைனோய்க் கட்டுடனே*
*வீதி பெருத்த மலஞ்சலமு*
*மிகவும் கடுக்கும் மெல்லியரே!* 164

உடல் மயிர் சிலிர்த்து, தலைநொந்து, நடுக்கல் ஏற்பட்டு, கீழ்முதுகு, பொருத்துகள், கால், கை இவற்றில் உளைச்சல் ஏற்பட்டு, தலையில் நீரேற்றம் கொண்டு, தலை நோக்காட்டுடன், வயிறுகடுத்து மலசலம் கழியும்.

*வாத சுரத்தின் குணங்கேளீர்*
*வகுத்த வண்ண முரைத்திடவே*
*சீத சுரமாய் வந்திட்டுச்*
*சிந்தை கலங்கும் மெய்யிறங்கும்*
*பாதந் தன்னில் வருஞ்சுரமும்*
*பயந்து அசந்து விழுமாப்போல்*
*பேதம் பெறவே களையுமுறும்*
*பெருக்கப் பசியுந் தோன்றாதே!* 165

வாதத்தினால் ஏற்பட்ட சுரம், சீதசுரமாய்க் காணப்படும். சிந்தை தடுமாற்றம் அடைந்து, உடல் மெலிந்து, சுரமானது பாதம் வரை மிகுந்து பரவும். பயம் ஏற்பட்டு அதிகமாகப் பசியும் எடுக்காது.

*நடுக்கித் தியக்கி மயிர்ச்கூச்சிட்டு*
*நழுவுந் தலையு மிகநொந்து*
*கடுக்குங் கைகால் முறிநிமிர்ந்து*
*கண்ணுந் தோளும் மிகனோவாம்*

திடுக்கிட்டு தடும்வாய் நீர்வற்றி
செற்ப வரிய-மேற் சுவாசந்தான்
துடுக்கென வந்த போதே
வாதசுர மென்று சொல்லலாமே! 166

உடலில் நடுக்கம் ஏற்பட்டு மயிர் கூச்சிடும். தலையில் வலி ஏற்படும். கை, கால்கள், கடுக்கும். கண்ணும்,தோளும் மிகுந்து நோகும். அடிக்கடி திடுக்கிட்டு மீளும். வாயில் ஊறும் உமிழ்நீர் வற்றி, வறிய மேற்சுவாசம் ஏற்பட்டால் அது வாதசுரம் என்று அறிந்து கொள்ளலாம்.

வாத சுரத்தின் குணங்கேளீர்
வந்து குளிர்த்தல் பயப்படுத்தல்
சீத மிகுந்து துரைக்கரிதல்
சேர்ந்த ரோமஞ் சிலுப்பெறிதல்
சேதங் கண்டு தலைனோவுந்
திருந்துந் தொப்புள் சலங்கடுத்தல்
பாத முனைந்து நீர்குடிப்பார்
பலகால் வெதுப்பும் விடாதிதுவே! 167

வாத சுரத்தில் பின்கண்ட குறிகுணங்களைப் பெற்றிருப்பர். உடல் குளிரும், உடல் உரோமங்கள் சில்லிட்டு சிலிர்க்கும். தலையும், கொப்பூழும் நொந்து, நீர்க்கடுத்து இறங்கும். அடிக்கடி தாகம் ஏற்பட்டு தண்ணீர் குடிப்பர்.

விடாதே கைகால் கீழ்முதுகு
மிக்கவிரண்டு விரல்புறமுந்
தொடாதே தீரங் குடலதுவுந்
தொடுகிற் புரைபோல் னோவுண்டாங்
குடாதே கஞ்சி ஏழுதினங்
கொடுத்தா லதிக சுரமுமுண்டாம்
அடாதே மிகவும்கண்டுடலில்
அடுக்கும் வாத சுரமாமே! 168

கைகால், கீழ்முதுகு, இரண்டு பக்கத்தின் விலாப்புறங்கள் நோகும். வயிற்றில் தொட்டாலே புண்ணைத் தொட்டது

போன்ற வலி ஏற்படும். இவர்கட்குக் கஞ்சி தரலாகாது. ஏழுநாள் கொடுத்தால் அதிகமான சுரம் உண்டாகும். இது வாதசுரம் என அறியலாம்.

*ஆமே யேழு நாளளவு*
*மசனந் தொடாதே பட்டினியாய்*
*தோமே யிந்த கஞ்சித் தண்ணீர்*
*சொன்ன படியே தானதுவும்*
*ஆமே யேழு நாள்கழிந்தால்*
*அடாதே வந்த சுரந்தானும்*
*போமே யேழு நாள்கழித்தால்*
*பொருந்து மசனங் கொடுப்பதுவாம்!* 169

ஏழுநாளும் உணவைத் தொடாதிருந்தால் வாதத்தால் வந்த சுரம் நீங்கி சுகம் உண்டாகும். எனவே ஏழு நாட்கள் அரிசி சாதம் தவிர்த்து விடுதல் நலம்.

*ஆமே வாத சுரந்தனக்கு*
*அமுது சிறுகாஞ் சொறிமுத்தம்*
*மீமே சுக்கோ டொன்வொன்று*
*மீரு தேமூன் றிதுகழஞ்சு*
*தாமே நாலு நாழிதண்ணீர்*
*தனைக்குறுக்கி வழக்காக்கி யருந்தப்*
*போமே வாத சுரமென்று*
*பொன்னே முனிவர் புகன்றனரே!* 170

வாத சுரத்திற்கு மருந்து கூறுகிறது இப்பாடல். சீந்தில், சிறுகாஞ்சொறி, முத்தக்காசு, சுக்கு இவை நான்கையும் வகைக்கு 15 கி. எடுத்து 5.2 லி. தண்ணீர் விட்டுக் காய்ச்சி 320 மி.லி.யாய்ச் சுருக்கிய குடிநீரைப் பருகிவர வாதசுரம் நீங்கும்.

## விஷசுரக்குணம்

*ஒருவிடங் குளிருங் காயும்*
*ஒருவிட முடம்பு தன்னி*

*லருகுறத் தொடுத்துப் பார்க்கி*
*லதிகமாய்க் காய்ந்தி ருக்கும்*
*பெருகிடுந் தண்ணீர்த் தாகம்*
*பின்னையு மன்னஞ் செல்லாது*
*வெருவுறப் பத்தி யேறும்*
*விஷசுர மென்ன லாமே!* 171

விஷசுரத்தின் குணங்கள் பின்வருமாறு. உடலில் ஓரிடத்தில் குளிரும். ஓரிடத்தில் சுரம் காயும். வேறு ஒரு இடத்தில் மிக அதிகமான சுரம் காணப்படும். தண்ணீர் தாகம் மிகுந்திருக்கும். உணவில் விருப்பம் கொள்ளாது.

*மெய்யில் விஷசுரம் வந்தாக்கால்*
*விட்டு விட்டு வெதும்புங்கால்*
*கையும் வெதும்பு முடலெல்லாம்*
*கருத்தே இருக்கு முழலையுமாம்*
*பய்ய வந்தே பார்ப்பவரை*
*பயந்தே கட்டிக் கொள்ளென்னும்*
*அய்யோ பிழையே யெனுஞ்சொல்லும்*
*அதிக மாகுஞ் சுரந்தானே!* 172

விஷசுரம் வந்தால் உடல் விட்டு விட்டு வெதும்பும். கால், கையும் வெதும்பும். உடல் கருத்திடும். உழலை ஏற்படும். தன்னை வந்து நலம் விசாரிக்க வந்தவரைக் கட்டிக் கொள்ளும். பிழைசெய்துவிட்ட உணர்வு தோன்றும். இது விஷசுர குணமாகும்.

*ஒன்று ரண்டினில் மூன்றுநா லாறினில்*
*என்று ஏழினில் எட்டினில் பத்தினில்*
*நின்று நின்று நில்பர மாய்வரும்*
*என்று செய்யும் விஷசுர மென்பதே!* 173

விஷசுரமானது ஒன்றில், இரண்டில், மூன்றில், நான்கில், ஆறில், ஏழில், எட்டில், பத்தில் (நாட்களில்) நின்று நின்று வரும் தன்மை கொண்டதாகும்.

## குடிநீர்

*சடங்க மிருவேலி பற்படாகம் நிலவேம்பு*
*சந்தன மிலாமிச்ச முத்தம்*
*இடங்க டுக்காய் வேர்க்கொம்பு*
*இருனாழி வெள்ள முழக்காய்க் காய்ச்சி அருந்திட*
*அடங்குஞ் சுரமும் முழலை தண்ணீர்த்தாகம்*
*சினம்போம் யம்மை யுமையனைத்*
*தடங்கண் மாதே தயங்காதே*
*தானே சுரம்போ மென்றாரே!* 174

வெட்டிவேர், பற்பாடகம், நிலவேம்பு, சந்தனம், விலாமிச்சம், முத்தக்காசு, கடுக்காய், சுக்கு இவற்றை இடித்து 2.6 லி. தண்ணீர் விட்டு 320 மி.லியாய்க் குறுக்கிக் காய்ச்சி அக்குடிநீரை அருந்தவும். சுரம் நீங்கி உழலை குணம் பெற்ற தண்ணீர்த் தாகம் மட்டுப்படும். நோயால் வந்த சினமும் போமென்று அறிந்துகொள்ளவும்.

## பித்த சுரத்தின் குணம்

*பித்த சுரத்தின் குணங்கேளீர்*
*பிதற்றும் வெதும்பும் உடலழற்றும்*
*மெத்த தண்ணீர் தாகிக்கும்*
*மிகவாய் கைக்கும் நாவுலரும்*
*ஒத்த சிறுநீர் மலந்தானும்*
*ஒளிசேர் நன்றாய்ச் சிவந்திருக்கும்*
*சுத்தி யடங்கும் முகங்கறுக்கும்*
*சொல்வா யிடறுப் புண்ணாமே!* 175

வாய்பிதற்றல், வெதுப்படைதல், உடல் அழற்சி ஏற்படுதல், தண்ணீர்த்தாகம் மிகுதல், வாய் கைப்பேற்படல், நாவுலர்தல், நீரும் மலமும் சிவந்து காணப்படல், முகம் கறுத்தல், வாய், ஈறு புண் ஏற்படல் ஆகியன பித்த சுரத்தின் குறிகுணங்களாகும்.

*பித்த சுரங்கள் பிலஞ்செய்யும்*
*பருக்கவயி றிளகிக் கழியும்*

மெத்த நாறும் மலந்தானும்
மேனிக் குளிரும் படவேண்டும்
சுத்த அன்னந் தான்வேண்டாம்
உகந்த தண்ணீர் மிகப்பருகும்
சுத்த மாக விதுதானுஞ்
சொல்லும் பித்த சுரமென்றே! 176

பித்த சுரங்கள் ஏற்படும். வயிறு இழிந்து கழியும். மலம் மிகுதியாக நாற்றமெடுக்கும். குளிர் உண்டாகும். உணவில் விருப்பமிராது. ஆனால் தண்ணீரை மிகுதியாக விரும்பிப் பருகும். இவை பித்த சுரங்களின் குணமாகும்.

பித்த சுரத்தின் குணங்கேளீர்
பெருகத் தண்ணீ ரது வாங்கும்
முத்தக் காசு அரசந்தோல்
உழக்காய்க் காய்ச்சி யதுவாத்தி
மெத்தப் பருகு மதுதானும்
வேண்டும் போது கொள்வீரால்
பித்த சுரமும் வயிற்றிழிவும்
பின்னிட் டோடுங் கண்டீரே! 177

அதிதாகம் ஏற்பட்டு மிகுதியாகத் தண்ணீர் பருகல் பித்த சுரத்தின் ஒரு முக்கிய குணமாகும். முத்தக்காசு, அரசம்பட்டை இவற்றை நீரிட்டு எட்டிலொன்றாகக் குறுக்கி 325 மி.லி.ஆகக் காய்ச்சிக் குடிநீராக்கிப் பருகிவர பித்த சுரமும் வயிற்றுப் போக்கும் நீங்கி விடும்.

அறியோ மென்னா சிந்தில்சுக்கு
ஆன சேகன னிருவேலி
உறுதி யான லாமிச்சு
யோரொன் றதுவு முக்கழஞ்சு
அறியோ நாமென் றெண்ணாதே
அறிவா யரத்தைக் காய்ச்சி யெட்டொன்றாய்
பொரியாய்த் தூவி திப்பிலியை
போட்டுக் குடிக்கப் போஞ்சுரமே! 178

சீந்தில், சுக்கு, விலாமிச்சு, சிற்றாமுட்டி, வெட்டிவேர் இவை வகைக்கு 15 கி. எடுத்துக் கொள்க. நீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி அதில் திப்பிலியைப் பொடித்துத் தூளைப்போட்டுக் குடிக்கச் சுரம் போகும்.

### தாக பித்த சுரத்தின் குணம்

*வஞ்சமிகக் கண்ணும் பல்லும்*
*மலமுடன் சலமும் மெய்யும்*
*மஞ்சனித் திருக்கும் வாயு*
*மிகுக்கும்நீர் வாங்கும் போத*
*அஞ்சே எரித்தே மிகக்குறுகும்*
*மேவும் பித்த சுரந்தானே!* 179

கண், பல், மலம், சிறுநீர் இவை மஞ்சள் நிறத்துடன் காணப்படும். வாயு மிகுந்து நீர்வாங்கும். உடல் எரிச்சலை உண்டாக்கும். இவை தாக பித்த சுரத்தினதாகும்.

### குடிநீர்

*போமே தான்றி கடுக்காய்நெல்லி*
*போற்றும் தாமரை இலவங்கம்*
*மாமே கொண்டைத்தோ லறுகழஞ்சு*
*மற்ற திருக்க ழஞ்சு*
*நாமே தகத்திரு நாழிநீர்*
*நய்ய வெந்திட் டுழக்காக்கி*
*தாமே திப்பிலி தூ விக்கொள்ள*
*தக்க சுரமுந் தங்காதே!* 180

தான்றி, கடுக்காய், நெல்லிக்காய், தாமரை, இலவங்கம் இவை வகைக்கு 10 கி., கொண்டைத்தோல் 30 கி. இவற்றை 2.6 லி. நீர்விட்டுக் குடிநீராக்கிக் கொள்ளவும். அதில் திப்பிலிப் பொடியைத் தூவிப் பருக தாக பித்த சுரங்கள் நீங்கும்.

## வாதபித்த சுரத்தின் குணம்

*கையைக் கொட்டிப் பாடுவதும்*
*கண்ணை இமையா லொளிப்பதுவும்*
*மெய்யே முழுவதும் வலிப்பதுவும்*
*. . . . . ண்டதெல்லாம் முறைப்பதுவும்*
*பய்யச் சீறி னொடிப்பதுவும்*
*பகர்ந்தே வாக்குப் பகருவதும்*
*மையைப் பொருந்தி கண்மடவார்*
*வாதபித்த சுரந்தானே!* 181

வாதபித்த சுரங் கண்டோர் கைகொட்டிப் பாடுதல், கண்ணைச் சிமிட்டி இமையை மூடி மூடி திறத்தல், உடல் முழுதும் வலி தோன்றல், கண்டதெல்லாம் முறைத்துப் பார்த்தல், சீற்றம், பின்தவிப்பு, சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் போன்றவை வாத பித்த சுரத்தின் குணமாகும்.

## குடிநீர்

*திரிகடுகு திரிபலை ஏலஞ்*
*செண்ப கப்பூ லவங்கம்*
*மறுபடி னாகப் பூவும்*
*மதுரங் கோட்டம் வில்வம்*
*நறிய நன்னாரி சீந்தில்*
*நாலீரண் டொன்றாய்க் காய்ச்சி*
*அறியவே எட்டுப்போ தருந்த*
*வாத பித்த சுரமாமே!* 182

திரிகடுகு, திரிபலை, ஏலம், செண்பகப்பூ, இலவங்கம், நாகப்பூ, மதுரம், கோட்டம், வில்வம், நன்னாரி, சீந்தில் இவற்றைப் போட்டு நீரிட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி எட்டுவேளை அருந்த வாத பித்த சுரம் நீங்கும்.

மேற்படி பொடி, சுக்கு, சீரகம், ஏலம், நெல்லிப்பருப்பு இவற்றை வறுத்துப் பொடித்து சீனியும் மேற்பொடியாகப் போட்டு குடிநீரைக் கொடுக்கவும்.

## சிலேட்டும சுரத்தின் குணம்

ஆகாத வுண்டி யெல்லாம்
ஆசரித் தடைத்து விம்மி
போகாத வெதுப்புத் தோன்றும்
புத்தியை மயக்கும் போதப்
பாகரு மொழியி னாளே
பகர்ந்திடப் பரிந்து கொள்ளாய்
சோகமே மீறுஞ் சிலேற்றும
சுரமென வளம்ப லாமே! 183

தமது உடம்பிற்கு ஆகாத உணவை உண்டு வயிறு புடைத்து, உடலில் வெதுப்பு தோன்றி, புத்தி மயங்கி, சோகம் மட்டுமே மீறும். இவை சிலேட்டும சுரத்தின் குணமாகும்.

மூக்குநீர் வெள்ளோக் காளம்
பொடுகு ரைமூச் சுண்டாம்
தேக்கிடும் வாய்நீ ருண்டாம்
தித்திப்புக் குளிருஞ் செய்யும்
பார்க்கிற போதுங் கண்ணும்
பருத்துடல் மாச்சல் உண்டாம்
தீக்குணம் போலெ ரிக்கும்
சிலேட்டும சுரமே தன்னே! 184

மூக்குநீர் வழிதல், வெள்ளைவெள்ளையாக வாந்தி ஏற்படல், தலையில் பொடுகு உண்டாதல், மூர்ச்சை ஏற்படல், வாய்நீர் மிகுதியாக ஊறல், வாய் இனித்துக்காணுதல், உடல் குளிர்தல், கண்ணில் வீக்கம் தோன்றி தீக்குணம் போல எரிக்கும் குணமுடையது சிலேட்டும சுரம் என்பர்.

அன்னமே சிலேற்ப னத்துக்
கடையாளம் உடம்பு வேர்க்கும்
முன்னிய சிறுநீர் தானும்
உண்மையா யுடைந்து வீழும்
மன்னிய தேகந் தானும்
மயக்கமாய் விடுக்கு மென்க

பண்ணிய சிலேற்ப னத்தின்
பயனிது வறிந்து கொள்ளே! 185

உடம்பு வேர்த்தல், சிறுநீர் மிகுதியாகக் கழிதல், அடிக்கடி மயக்கம் தோன்றல் போன்றவை சிலேட்டுனத்தின் குணங்களாகும்.

## குடிநீர்

மங்கைகேள் தாமரை அல்லி
வளருங் கழுநீர் மஞ்சிட்டி மதுரம்
நங்காய் சொல்லும் நன்னாரி
நாலும் இலுப்பைப் பூவுடனே
சிங்கா தோரொன் றிருகழஞ்சு
சேரக் காய்ச்சி யெட்டொன்றாய்
பங்கமிலாத் திப்பிலி தூவி
பருகச் சுரமும் பாழாமே! 186

தாமரை, அல்லி, செங்கழுநீர், மஞ்சிட்டி, அதிமதுரம், நன்னாரி, இலுப்பைப்பூ இவற்றை ஒவ்வொன்றும் முறையே 10 கி. எடுத்துக் கொண்டு இடித்து நீர்விட்டு எட்டொன் றாய்க் காய்ச்சி திப்பிலிப் பொடி தூவிப் பருக சுரம் நீங்கும்.

## அத்தி சுரத்தின் குணம்

ஆமே சுரத்தின் குணங்கேளீர்
அதிக மாக வெதும்பாமல்
சாமந் தோறும் வெதும்பிவிக்கும்
தனியே யுறக்கந் தானுண்டாம்
சேம மாக வுடம்புழன்று
சீரி யிருக்கும் பசியில்லை
நாமந் தளரும் உடல்நோயும்
நடுங்கி இருக்கு மிதுவாமே! 187

அத்திசுரம் கண்டால் உடம்பு ஒரே நேரத்தில் அதிகமாக வெதும்பாமல் இரவு முழுவதும் வெதும்பிக் கொண்டே

யிருக்கும். தனியே படுத்து உறங்கிக் கொண்டே இருக்கத் தோன்றும். உடம்பு உழன்றுகாணப்படும். பசி எடுக்காது. உடலில் நடுக்கம் ஏற்படும். ஆகிய இவை அத்தி சுரத்தின் குணங்களாகும்.

*அத்தி சுரத்தின் குணங்கேளீர்*
*அழலும் வெதும்புங் கண்சிவக்கும்*
*சத்தி யெடுக்குந் தலைகனக்குஞ்*
*சந்து தோறும் நொந்துடல்தான்*
*வற்றி யிருக்கும் வயிறெறிக்கும்*
*மாதே வேதப் படியிதென்று*
*யுத்த மாகப் பொதியமலை*
*முனிவ ருரைத்தா ருண்மையிதே!* 188

அத்திசுரம் கண்டோர்க்கு உடல் அழற்சி ஏற்படும். உடலில் வெப்பமுண்டாகும். கண் சிவக்கும். வாந்தி ஏற்படும். தலை கனக்கும். சந்துகளில் எல்லாம் வலி ஏற்படும். உடல் வறண்டிருக்கும். வயிற்றில் எரிச்சல் ஏற்படும் என இதன் குறிகுணங்களை அகத்தியர் உரைத்துள்ளார்.

## குடிநீர்

*ஆமே நல்ல கடுக்காய்நெல்லி*
*யருளும் வீழி இருவேலி*
*தாமே சொல்லும் லாமிச்சம்*
*சாறுந் தாமரைக் கிழங்குடனே*
*ஒமே யோரொன் றிருகழஞ்சு*
*ஒளிரு நீரும் யெட்டொன்றாய்*
*வேமே வெந்தால் குடிப்பிரே*
*வினைக ளொன்றும் வாராதே!* 189

கடுக்காய், நெல்லிக்காய், வீழி, வெட்டிவேர், விலாமிச்சம், தாமரைக்கிழங்கு இவற்றை முறையே 10 கி. எடுத்து இடித்து வேண்டிய அளவு நீர்விட்டு எட்டிலொன்றாய்ச் சுருங்கும்படி குடிநீர் இறக்கிக் குடிக்க அத்திசுரம் தீரும்.

### குடிநீர்

இந்த அத்திச் சுரந்தனக்கு
யிதமாய்க் குடிநீர் தனைக்கேளாய்
அந்த அத்தி வெந்தோலான்
ஆன சந்த மிருவேலி
வந்த பயிறு கடுக்காயும்
மதுரங் கொத்த மல்லிசுக்கு
முந்தக் காய்ச்சிக் கொள்வீரால்
முதிர்ந்த அத்தி சுரம்போமே! 190

இந்த அத்திச் சுரத்திற்குச் சரியான குடிநீரைச் சொல்லுகிறேன். அத்திமரத்தோல், சந்தனம், இருவேலி, பயிறு, கடுக்காய், அதிமதுரம், கொத்துமல்லி, சுக்கு இவற்றை இடித்துத் தேவையான தண்ணீரிலிட்டு கொதிப்பித்து எட்டில் ஒன்றாய்க் குறுக்கிக் காய்ச்சிப் பருக அத்திச்சுரம் நீங்கும்.

இந்தச் சுரங்கள் மலமடைத்தால்
யிதமா மலம்போம் வகைகேளீர்
அந்தப் பயிறு கடுக்காயும்
மாராங் கொத்த மல்லிசுக்கு
முந்தக் காய்ச்சி யெட்டொன்றாய்
முடுக்காய்க் குடிக்க வல்லீராய்
வந்த சுரம்போ மலமடைப்பும்
மறுக்கா தென்றார் மாமுனியே! 191

இவ்வகையான சுரங்களில் மலம் இறுகி மலச்சிக்கல் உண்டாகும். பயிறு, கடுக்காய், கொத்தமல்லி, சுக்கு இவற்றை முன் சொன்ன வகையில் குடிநீரிட்டுக் குடிக்க சுரமும் நீங்கி, அடைத்த மலசலமும் எளிதில் வெளியேறும்.

### சன்னிவாத சுரத்தின் குணம்

பெருகிய சிலேற்பனத் தோடு
பிணங்கியே வாதம் வந்தால்
கருதிய சன்னி வாதச்
சுரமெனக் காண லாகும்

நெறுதியே கையுங் காலும்
நெஞ்சுற நோகு மென்க
மருவிய வயிறு தானும்
வகைபடக் கழியு மென்றே! 192

அதிகமான சிலேற்பனத்துடன் வாதமும் சேர்ந்தால் அது சன்னி வாத சுரம் என அறியலாம். இச்சுரத்தால், கை, கால், நெஞ்சு இவற்றில் வலி உண்டாகும். வயிறு தொடர்ந்து கழிந்து கொண்டிருக்கும்.

பங்கம் பாளை வேர்சுக்கு
பரந்த முத்தக் காசுடனே
யங்குன் செரியு மகில்வெட்டி
யளவாய்க் காய்ச்சி யதுபருகி
பொங்கிக் கழியுஞ் சுரமெல்லாம்
பொல்லா நாற்ற மதுவிட்டு
சங்கைப் படாம லிதுமீளுந்
தப்பா திதுவுஞ் சத்தியமே! 193

பங்கம்பாளையின் வேர், சுக்கு, முத்தக்காசு, அகில் இவற்றை இடித்து நீர்விட்டு முறைப்படி குடிநீர் செய்து பருக கழிச்சலை ஏற்படுத்திய சன்னி வாத சுரம் நீங்கி, கழிச்சல் சீராகி, நாற்றமும் குறைந்து நலம் பெறலாம்.

## பித்த சிலேற்பன சுரத்தின் குணம்

பித்தமுஞ் சிலேட்டு மந்தான்
பிணங்கியே சுரங்கள் தோன்றி
சத்தியாய்க் குளிர்ச்சி குத்தல்
தாகித்த லிரும லீளை
மெத்தென வெதுப்புக் காட்டி
வெந்திடு மகவாய்க் கண்ணும்
நித்திரை யத்து மேனி
வெளுக்குநீர் பெருக்குந் தானே! 194

பித்தமும், சிலேற்பனமும் சேர்ந்து சுரங்கள் தோன்றும். இதனால் உடம்பு குளிர்ச்சி அடையும். உடம்பு குத்தி குத்தி வலிக்கும். இருமல், ஈளை இவற்றுடன் உடம்பில் வெப்பம் ஏற்பட்டு சுரம் காயும். வாய் வேக்காடு உண்டாகும். கண் நித்திரையின்றித் தவிக்கும். மேனி வெளுத்து உடம்பில் நீர் பெருத்துக் காணப்படும்.

### மருந்து

*அத்திப் பட்டை தானெட்டு*
*..... வாழைப் பழங்கூட்டி*
*பொத்திப் பிடித்து பிழிந்துகொண்டு*
*புகலுஞ் சாறு அதுகொண்டு*
*பித்த சிலேற்பன வயிற்றிழிவு*
*சுரமும் பேணித் திரங்காண*
*அத்த னாணை யுண்மையிது*
*அன்பாய்ப் பாருங் கண்டீரே!* 195

அத்திப்பட்டையுடன் எட்டு வாழைப்பழம் சேர்த்துப் பிழிந்து சாறு எடுத்துக்கொள்ள வேண்டும். அதனைப் பருகிவர பித்த சிலேட்டுமை சுரங்கள், வயிற்றிழிவு இவை தீரும் என்பது திண்ணம்.

### சகலசுர மாத்திரை

*காந்தக் கல்லு மரிதாரம்*
*கருங்கூர் வெள்ளைப் பாடாணம்*
*நாந்த நாரி கெந்தகமும்*
*நவச்சாரத் துடனே பொரிகாரம்*
*ஆய்ந்த சுத்தி யதுசெய்து*
*யவ்வள வேகொள் நேர்வாளம்*
*மூந்த நொச்சிச் சாறரைத்து*
*உண்டை மிளகு பிரமாணம்*
*ஏந்த சுரங்க ளிவைதீரு*
*என்று முனிவ ரியம்பினரே!* 196

காந்தக்கல், அரிதாரம், வெள்ளைப்பாடாணம் நாபி, கெந்தகம், நவச்சாரம், பொரிகாரம் இவற்றை முறைப்படி சுத்திசெய்து சமஅளவு எடுத்து அந்த அளவுக்குச் சமமாக நேர்வாளம் எடுத்து நொச்சிச் சாற்றால் அரைத்து மிளகளவு உருண்டை செய்து கொள்ளவும். வேளைக்கு ஒரு உருண்டை உட்கொள்ள அனைத்து வகையான சுரங்களும் நீங்கும்.

*மஞ்ச கெவுரி எலிமருந்து*
*மனோசிலை துத்தம் அரிதாரம்*
*பஞ்ச நீலிச் சாற்றரைத்து*
*பயறள வுண்டை தனைக்கூட்டி*
*இஞ்சி மிளகு தனில்கொள்ள*
*எல்லாச் சுரமும் பாழாகும்*
*மிஞ்சி யேறுங் குடல்கரியும்*
*மீண்டிடுஞ் சூலை மாய்ந்திடுமே!* 197

மஞ்சட் கெவுரி, எலிப்பாடாணம், மனோசிலை, துத்தம், அரிதாரம் இவற்றை நீலிச் சாற்றால் அரைத்துப் பயிறளவு உருண்டை செய்து கொள்ளவும். இதனை இஞ்சிச்சாறு அல்லது மிளகுச் சாற்றில் உட்கொண்டால் எல்லா வகையான சுரங்களும் ஒழிந்துவிடும்.

*துத்தங் கெவுரி யோரொன்று*
*துய்ய சந்த மிரண்டதுவாம்*
*வெத்திலைச் சாற்றில் மிகவரைத்து*
*மிகுந்த குன்றிப் பிரமாணம்*
*பத்தி யேறுஞ் சுரந்தனக்கு*
*பருகீர் வென்னீர் தனிலதுவும்*
*சத்தி கெட்டுச் சுரங்களெல்லாம்*
*தணியு மென்றார் தவமுனியே!* 198

துத்தம், கெவுரி இவை ஓர்பங்கு, தூய்மையான சந்தனம் இரண்டு பங்கு இவற்றை வெற்றிலைச் சாற்றால் நைய அரைத்துக் கொண்டு, 130 மி.கி. அளவில் உருண்டை செய்து

உட்கொள்ளவும். உட்கொண்டவுடன் வெந்நீர் அருந்தவும் வாந்தி நின்று, சுரம் தணியும்.

## சுரத்திற்கு மோரெண்ணெய்

மோரெண்ணைக்கு நன்னாரி முத்தக் காசு
மதுவுழு டனேறுங் குருந்தொட்டி யிராமிச்சம்
வாருமரத் தைசுக்கு சந்த மதிமதுரங்
கோமுரத்த கோரோசனை யிந்துப்பு பெருங்குரும்பை
பொன்மெழுகு பேராங் கடுதருங் கடல்நுரை
தேவதாரமும் நெருங்குத்தக மலைமஞ்சள்
திப்பிலியும்
வாள்முசி சிறுமுசுட்டை தோளவே நல்லெண்ணெய்
நாளிக்கிக் களஞ்சி தான் சேர்மூன் றாகச்
சேர்த்தரைத்து ஆவினுட மோரறுநாளில்
யதுமுன்கூட்டி
நேராய் பதத்தில் வடித்திறக்கிப் பாங்குடனே பூச
விதத்திலெழுந்த சுரம்விட்டு கதித்தெழுந்த
சீதசுர முழலை தியவிச் சுரமு
மோதிய உள்வெக்கை யுடலுஷ்ணமும் ஒடிவிடும்
அத்தி பாழாஞ் சுரத்தோ டத்தனையும்
விட்டேகு முற்றதிவை சொன்னோ முரை! 199

நன்னாரி, முத்தக்காசு, குருந்தொட்டி, விலாமிச்சம், அரத்தை, சுக்கு, சந்தனம், அதிமதுரம், பசுமூத்திரம், கோரோசனை, இந்துப்பு, பெருங்குரும்பை, பொன்மெழுகு, கடல்நுரை, தேவதாரம், மலைமஞ்சள், திப்பிலி, சிறுமுசுட்டை, இவை முறையே 5 கி. எடுத்து நல்லெண்ணெய் 1.3 லி. சேர்த்தரைத்து 7.8 லி. பசுமோர் இதில் கலந்து பதத்தில் வடித்து இறக்கி அருந்த சுரம், சுரத்தால் உண்டான அழற்சி, சீதசுரம், உழலை, உடல்வெப்பம் போன்றவை நீங்கி உடல் வன்மை வெறும்.

## வெருகெண்ணெய்

வெருகு சமூலம் விஷ்ணு கிரந்தி
மருவிய சித்தாமுட்டி பேராமுட்டி-தருவது

கூவிளஞ் சாரணை கூறிதொவ் வொன்று
தாய திருபது தண்ணீர் பதக்கு-யேயவே
யெட்டொன்றாய்க் காய்ச்சி யிருனாழி யெண்ணை
விட்டுஅதிற் கற்கம் உய்ந்து ரைக்கில் மாறா! 200

வெருகு சமூலம், விஷ்ணுகிரந்தி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, கூவிளம், சாரணை இவை சமமாக எடுத்து 10.7 லி. தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி 2.6லி. எண்ணெய்விட்டுக் கலந்து கொள்ளவும்.

நன்னாரி லாமிச்சம் நாவி யிருவேலி
முன்னை யமுக்கிரா முத்தக்காசு-பின்னையு
முன்காயத் திலொடு யரத்தை பேரரத்தை
வன்காரம் யேல மிலவங்கம்-நாகப்பூ
நெல்லி தான்றிக்காய் கச்சோல மதிவிடை
யங்கச் சோலம் பச்சிலை-ஓமம்
வசுவாசி குக்கில் வசம்பு மரமஞ்சள்
எற்ற கோஷ்டம் திரிகடுகு-யிசைய்யா
சாதிக்காய் தேவதாரம் அதிமதுரம்
வாதிசுக்குங் கல்மத மஞ்சிட்டியிதொக்கச்
சந்தன மகலுங் கூட்டித் தரித்திவை யோரொன்று
முந்தக் கழஞ்சு முதன்மையாய்ச்-சிந்தையுறக்
கூட்டிய தஞ்சுனாள்.....
நாட்ட முறவே வடித்து நன்றாக
யிட்டமுடன் பூச.....
பூசவே மற்றும் புதைந்தசுரஞ் சீதசுரம்
விசியே விட்டு வால் விஷசுரம்:பேசியதோர்
ஒன்றை விட்ட நாலானாள் மற்றறு
பையமென கண்டி லதியசுரஞ்-சுண்டியதோர்
எல்லாச் சுரமும் போமிதைக் குறுந்தேறும்
நல்லார்க் கிதுசொன்னோம் நாம்! 201

நன்னாரி, விலாமிச்சம், நாவி, வெட்டிவேர், முன்னை, அமுக்கிரா, முத்தக்காசு, சிற்றரத்தை, பேரராத்தை, வெண்காரம்,

ஏலம், இலவங்கம், நாகப்பூ, நெல்லி, தான்றிக்காய், கச்சோலம், அதிவிடையம், திருநீற்றுப் பச்சிலை, ஓமம், வசுவாசி, குக்கில், வசம்பு, மரமஞ்சள், கோஷ்டம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், தேவாரம், அதிமதுரம், சுக்கு, கல்மதம், மஞ்சிட்டி, சந்தனம் இவை முறையே 5 கி. எடுத்துக் கொள்ளவும். இவற்றைச் சேர்த்து அரைத்து எண்ணெய்க் கலவையிலிட்டுக் காய்ச்சி வடித்து நெற்றியில் பற்றிட சுரம், சீதசுரம், விஷசுரம், ஒருநாள் விட்டு ஒருநாள் வரும் முறைசுரம், போன்ற எல்லாவகைச் சுரங்களும் நீங்கும்.

### சுரத்திற்குச் சூரணம்

*திரிபலை கொத்த மல்லி*
*தேத்தான் விற்றேலம் வங்கமிந்து*
*திரிகடுகு சிவதை நாகப்பூ*
*விருசீரகம் ஒமக்கிரியாந் தேறும்*
*திரிகடுகு ரோகணி தாரமதி*
*மதுரத்தோ டமுக்கிரா அதிவிடையங்*
*குறிப்புடன் வெல்லங் கொண்டிடச்*
*சுரங்கள்போய்க் குணங்க ளாமே!* 202

கடுக்காய், நெல்லி, தான்றிக்காய், கொத்துமல்லி, தேற்றான், ஏலம்,வங்கம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சிவதை, ஓமம், நாகப்பூ, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுகு ரோகணி, அரிதாரம், அதிமதுரம், அமுக்கிரா, அதிவிடையம் இவற்றைச் சூரணமாக்கி இவற்றுடன் தேவையான அளவு வெல்லம் சேர்த்துக் கொடுக்க அனைத்துச் சுரங்களும் நீங்கும்.

### பித்த குணம்

*மெய்யே நடுக்குந் தலைவ லிக்கும்*
*மேனி தளரும் கண்வெ ளுக்கும்*
*பொய்யே யுரைக்குங் கிறுகி றுக்கும்*
*புள்ளி கதிற்போற் பொடிப றக்கும்*

கைகா லசந்து தள்ளிவிடும்
கண்ணு மூக்குஞ் சன்னி கட்டும்
அய்யா மிகவும் வாய்வெருவி
அறிவிர் பித்த ரோகமிதே! 203

உடல் நடுக்கும்; தலைவலிக்கும். உடல் தளர்வுறும். கண்வெளுக்கும், வாய்பிதற்றும், தலைச் சுற்றும், கை, கால் அழற்சி ஏற்பட்டு சன்னி சேர்ந்து மூக்கடைக்கும். வாய் நாற்றங் கொண்டிருக்கும். இவை பித்தத்தின் குணம் எனலாம்.

கண்ணும் பல்முக மலநீரும்
கைகால் முகமும் கறுத்திருக்கும்
எண்ணுந் துடிபோல் நெஞ்சிடிக்கு
மீரக் குலைமேற் படபடக்கும்
மண்ணில் நடக்கில் கிறுகிறுக்கும்
வலைபோல் விழியுந் தெரிவரிதாய்
எண்ணிச் சொல்லு மிக்குணங்க
ளிதுவும் பித்தமென் றறியீரே! 204

கண்ணும் முகமும், மலமும், சிறுநீரும் கருத்திருக்கும், நெஞ்சில் கடிய வலி தோன்றும். ஈரல் குலையில் பரபரப்பு ஏற்படும். நடக்கும்போது தலைச்சுற்றல் ஏற்படும். வலையில் பார்ப்பது போன்று பார்வைமங்கும் ஆகியவை பித்தத்தின் குணங்களாகும்.

## மஞ்சள் பித்த குணம்

விழுந்திடும் பித்த தோஷம்
வெதும்பிநா வறண்டு கொள்ளும்
தளர்ந்துகண் சுழண்டி ருண்டு
தலையது கிறுகி றென்னும்
சுழன்றிடும் நீர்ச்சி வந்து
சுருக்கெனக் கடுத்து விழும்
வளர்ந்திடு முடல்ந டுங்கி
மஞ்சணித் திருக்கு மென்றே! 205

மஞ்சள் பித்த தோஷத்திற்கு, உடல் வெதும்பி, நாவறண்டு, தளர்ச்சி ஏற்பட்டு கண்சுழன்று தலை கிறுகிறுத்து, சிறுநீர் சிவந்து கடுத்து வீழும் உடலில் நடுக்கம் கண்டு மஞ்சளித்து காணும்.

*வாய்நீர் சுழத்தும் வெயில்கண்டால்*
*வளரு முடலி லெரிப்பெடுக்கும்*
*தானே சிலகால் தலைசுழற்றும்*
*தரையில் நடந்தால் கிறுகிறுக்கும்*
*தேனே மஞ்சள் குளித்தவர்போல்*
*தேக முழுது மண்ணிறமாம்*
*மானே செங்க மாறியிது*
*மஞ்சள் பித்த திறமாமே!* 206

வாய்நீர் சுழற்றும், வெயில் பட்டால் உடலில் எரிப் பெடுக்கும். சில நேரங்களில் தலைசுழற்றும். நடக்கும் போது கிறுகிறுப்பு ஏற்படும். உடலுக்கு மஞ்சள் பூசி குளித்தது போல் உடம்பு முழுமையும் மஞ்சள் நிறமாகும். இவை மஞ்சள் பித்தத்தின் குணமாகும்.

## செங்கமாறி பித்த குணம்

*கையொடு காலும் நீரும்*
*கடுத்துடன் சிவந்து வீழும்*
*மெய்யெலாம் பசுமை யன்றி*
*வெதும்பிடுங் கிறுகி றென்னும்*
*துய்யசோ றதுவுங் கொள்ளாத்*
*துயருடஞ் சடமும் வேர்க்கு*
*மெய்யறி விழியாய் செங்க*
*மாறிநோ யென்று கூறே!* 207

கை, கால்கள் கடுக்கும். சிறுநீர் கடுத்து சிவந்து வீழும். உடம்பின் பசுமை வற்றி வெதும்பிக்காணும். கிறுகிறுக்கும், உணவில் வெறுப்புத் தோன்றும். உடல் வியர்க்கும். இவை செங்கமாறி பித்தத்தின் குணங்களாகும்.

சோறுஞ் செரித்துச் செல்லாது
தூக்க முடனே தலைக னக்கும்
நீரும் வெதும்பும் கண்க ளெல்லாம்
நீட்டில் மேல்கால் கடுக டுக்கும்
சீறும் கொடிய விழிமடவீர்
செங்க மாறி நோயிதெனக்
கூறும் பெரியோர் தானு ரைத்தார்
கொடிய ரோக மிதென்றே! 208

உண்ட உணவு சீரணமாகாமல், தூங்கத் தோன்றும். தலை கனக்கும், சிறு நீர் கடுத்து இழியும். கண்வெதும்பும், கால், கை உடம்பெல்லாம் கடுக்கும். இக்குணங்களைக் கொண்ட செங்கமாறி நோய் மிகக் கொடியது எனக்கூறுவர்.

## மருந்து

உரைத்த யிரும்பின் கிட்டமதை
யுண்ணிப் பொடித்துக் கோச லத்தில்
சாத்தக் காந்த மரப்பொடியும்
தாக்கிப் பாதி வெண்காரம்
அரைத்து மூன்று புடமூட்டு
அடவா யெடுத்து யதினோடே
பிரத்த பிரண்டை பொடிச்சமனாய்
பேணிக் கொள்ளப் போம்பிணியே! 209

சுத்தி செய்த இரும்புக் கிட்டத்தைப் பொடித்துத் தூள் செய்து கோசலத்தில் போட்டு ஊறவிடவேண்டும். அதில் பாதி அளவு வெண்காரத்தையும் சேர்த்து அரைத்து மூன்று முறை புடமிட வேண்டும். புடமிட்ட தூளை எடுத்துப் பிரண்டைப் பொடியைச் சம அளவு சேர்த்துக் கொள்க.

கையாந் தகரை மொசுமொ சுக்கை
கற்றாழம் புடலும் பாலுடனே
மெய்யாய் நாழி நாழியது
விளங்க நல்லெண்ணை நாவு ழக்கு

அய்யா சந்தனம் கோஷ்ட மதுரம்
அமுக்கிரா நெல்லி ஐங்கழஞ்சு
நெய்ய யரைத்து யதிற்க லக்கி
நெருப்பில் காய்ச்சி வடித்துப்
பைய்யத் தேய்ச்சு முழுகிவர
பாரும் பித்த ரோகமதே! 210

கையாந்தகரை, முசுமுசுக்கை, கற்றாழைச்சாறு புடல் சாறு இவை 1.3 லி. எடுத்து நல்லெண்ணெய் 325 மி.லி., சந்தனம், கோட்டம், அதிமதுரம், அமுக்கிரா, நெல்லி இவை முறையே 25 கி. எடுத்து சேர்த்தரைத்து காய்ச்சி வடித்து தலைக்குத் தேய்த்து முழுகி வர இவ்வகை பித்த ரோகம் நீங்கும்.

## சத்தி குன்மத்தின் குணம்

மயக்கிடும் வெளுக்கும் மேனி
வாயுவும் மிகுந்தூண் வற்றும்
செயங்கெட சத்தி பண்ணி
செரித்திடா தெரிக்கும் நெஞ்சு
பயங்கெட வுண்ண வொட்டா
பயித்தியம் மிகுந்து கொண்டு
தயங்கிடுஞ் சத்தி குன்மந்
தானெனுந் தடங்கண் மாதே! 211

மேனி வெளுக்கும். வாயுமிகுந்திடும். உண்ட உணவு செரிக்காததால் வாந்தி ஏற்பட்டு நெஞ்சு எரிச்சல் உண்டாகும். உணவு உண்ண முடியாது பித்தம் மிகுந்து காணும். இவை சத்தி குன்மத்தின் குணமாகும்.

நெஞ்சு கரித்துப் பிழிந்தேக்காய்
நின்றே யுதரம் பொரும லுமாய்த்
தஞ்ச மறவே சத்தி யுமாய்த்
தறுகா தளவாய் மலந்தியும்
மஞ்சப் பிதற்றும் வாதமிது
யதிகப் படவே கசப்பானால்

தஞ்ச மேது மில்லாதே
சத்தி குன்ம முந்தானே! 212

நெஞ்சு கரித்துக்காணும், வயிற்றுப் பொருமலுண்டாகும். வாந்தியுண்டாகும். மலம் தீய்ந்து காணும், வயிற்றைப் பிதற்றும், வாதம் அதிகமாகும். இவை சத்திகுன்மத்தின் குணங்களாகும்.

## மருந்து

தேங்காய்ப் பாலு மிந்துப்பு
சிறக்கப் பலமே யொன்று கொள்ள
வாங்கி வெங்கா யுள்ளியது
வாமே யிரண்டு பலங்கொண்டு
தாங்கச் சார மிருகளஞ்சு
தானே யளவாய் கள்ளிப்பால்
ஏங்கா தெரித்த யெண்ணை கொள்ள
யிங்கே குன்ம மில்லை யென்றே! 213

தேங்காய்ப் பால், இந்துப்பு, இவை முறையே 35 கி., வெங்காயம், பூண்டு வகைக்கு 70 கி., நவச்சாரம் 10 கி., இவற்றோடு தேவையான அளவு கள்ளிப்பால் விட்டு எரித்து எண்ணெய் வடித்து முறையாக உட்கொண்டு வர சக்தி குன்மம் நீங்கும்.

## வலிகுன்ம வாயுவின் குணம்

பண்டுமுன் வயிற்றைப் பற்றி
பலபட வலிக்கு மாகில்
மண்டியே காயம் வற்றி
மலங்கெட வுலர்த்த லாலும்
கொண்டுநின் றாகா ரத்தை
குமட்டியே யெடுக்கை யாலும்
வண்டுசேர் குழலி னாளே
வலிகுன்ம வாயுவி தாமே! 214

முன் வயிற்றில் வலி உண்டாகும். நீர்வற்றி மலம் இறுகும். உண்ட உணவு சீரணமாகாமல் குமட்டிக் கொண்டு வரும். இவை வலி குன்ம வாயுவின் குணமாகும்.

*வந்திடு மன்னந் தன்னை*
*வயற்றினில் வலியுந் தோன்றி*
*சிறந்திடுங் கஞ்சித் தண்ணீர்*
*தேடிடுங் கொள்ள வொட்டா*
*இறந்திடத் துயரந் தோன்றும்*
*மிருகளல் கழலும் நாவும்*
*வறண்டுடன் மிகுத்துத் தோன்றும்*
*வலிகுன்மம் வாய்வி தாமே!* 215

உண்ட உணவை வாந்தி பண்ணி வயிற்றினில் வலியினை உண்டாக்கி, நீர்வேட்கையை மிகுதியாக்கி, இறந்து விடலாம் எனத் தோன்றுமளவு துன்பத்தை உண்டாக்கி, கால் கடுத்து நா உழன்று தோன்றும். இவை வலி குன்ம வாயுவின் குணங்களாகும்.

**மருந்து**

*உள்ளியும் சோம னுப்பு*
*உதிர்ந்தசோ றிணங்கஞ் சூதம்*
*வெள்ளிவெண் காரஞ் சுக்கு*
*மிளகுதிப் பிலியுங் காந்தம்*
*கள்ளியம் பாலில் நொச்சி*
*கலக்கியே யிலைச்சா றுண்ண*
*கொள்ளவே குன்ம வாயு*
*கொண்டிடத் தக்கப் போமே!* 216

உள்ளி, சோமனுப்பு, சோற்றுப்பு, வெடியுப்பு, சூதம், வெள்ளி, வெண்காரம், சுக்கு. மிளகு, திப்பிலி, காந்தம் இவற்றை அரைத்துக் கள்ளிப்பாலில் கலக்கி நொச்சி இலைச் சாற்றில் உண்ண குன்ம வாயு தீரும்.

## பித்த குன்மக் குணம்

தலையுங் கனத்து ஒக்காளந்
தருகா மயக்கம் வாயூறல்
நிலையுங் கெட்டு கிறுகிறுத்து
நின்றே வேர்த்து நெஞ்செரிக்குங்
குலையுஞ் செய்யும் பித்தகுன்மங்
கொள்ளுங் குறிக ளிதுவென்று
கலையும் வல்ல தமிழ்வாணர்
கண்டே பெருகப் பேசுவரே! 217

தலைகனத்து, ஒக்காளித்து, மயக்கம், வாய்நீரூறல், இவை ஏற்பட்டு நிலை தடுமாறி கிறுகிறுத்து உடல் வியர்த்து, நெஞ்செரிவு கண்டு, துன்பத்தைக் கொடுக்கும் இக்குணம் பித்த குன்மத்தினைனுடையதாகும்.

உண்டியை மறக்க யாலும்
உற்றுநெஞ் செரிக்கை யாலும்
பண்டுமுன் பழம லத்தில்
பயித்தியஞ் சேர்த லாலும்
விண்டுதான் பித்த குன்மம்
இதுவென வீளம்பி னாரே! 218

உணவின் மீது வெறுப்பு, நெஞ்செரிதல், பழைய மலம் குடலில் தங்கி அதனால் பித்தமும் உண்டாதல் ஆகியன பித்த குன்ம குறிகளாகும்.

## மருந்து

சீனக் காரம் பொரிகாரம்
சிறந்த வெடியுப் பிந்துப்பு
யான காந்த மகில்காந்தம்
அன்பா யுள்ளி பெருங்காயம்
தானந் திரிகடுகு மோதமுடன்
தக்க சீரகம் கருஞ்சீரகம்

கோனே கடுக்காய் சிவதையுடன்
கூட்ட குன்மங் குடிபோமே! 219

சீனக்காரம், பொரிகாரம், வெடியுப்பு, இந்துப்பு, காந்தம், அகில் காந்தம், உள்ளி, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், சீரகம், கருஞ்சீரகம், ஓமம், சிவதை இவற்றைச் சேர்த்து இடித்துத் தூளாக்கி முறையான அனுபானத்துடன் உண்ண பித்த குன்மம் குணமாகும்.

## எரிகுன்ம வாயுவின் குணம்

வயற்றை யெரித்து குடல்குமட்டி
வாய்னீர் சுழற்றி தலைகனத்து
உயிர்ப்பை யளைய கிறுகிறுத்து
ஒங்காரித்து மிகவெப்ப முண்டாம்
மயிர்க்கால் வழியே வேயாறும்
வயிறும் பொருமி அகண்டிருக்கும்
எகிற்றை எரிக்கும் குன்மமென
இமையோன் சொன்ன குறியாமே! 220

வயிற்று எரிவு ஏற்படும். குடல்குமட்டி உமிழ்நீர் சுழற்றி தலைகனக்கும். தலை கிறுகிறுக்கும். உடலில் மிகுந்த வெப்பம் உண்டாகும். மயிர்க்கால்கள் வழி வேர்வை வந்து வந்து அடைபட்டுப் போகும். வயிறு பொருமி பெருத்திருக்கும். வயிற்றில் எரிச்சலை யுண்டாக்கும் இதனை எரிகுன்மம் எனச் சொல்லலாம்.

## மருந்து

உள்ளி வசம்பு யிந்துப்பு
ஓமஞ் சிவதை சீரகந் திப்பிலியுங்
கொள்ளுங் காயங் கிறுமிசற்று துருக்கி
கோட்டந் திரிகடுகு வெண்காரந்
தள்ளாக் கருஞ்சீரகங் கழல்பருப்பு
சதகுப்பை குக்கில் கொடுவேலி
வெள்ளைக் காரஞ் சாதிலிங்கம்
வேண்டுமுக் கழஞ்சோ நொன்றே! 221

உள்ளி, வசம்பு, இந்துப்பு, ஓமம், சிவதை, சீரகம், திப்பிலி, பெருங்காயம், கோட்டம், சுக்கு, மிளகு, திப்பிலி வெண்காரம், கருஞ்சீரகம், கழற்சிப்பருப்பு, சதகுப்பை, குக்கில், கொடிவேலி, சாதிலிங்கம் இவை முறையே 15 கி. எடுத்துக் கொள்ளவும்.

*காட்டு னொச்சி பிரண்டைநிம்பல்*
*கடிய கொன்றை தேசிப்பழம்*
*மொட்டு முருங்கை வேராமணக்கு*
*உயர்ந்த வீழி யிஞ்சியுடன்*
*ஒட்ட யிடித்து நீரெடுத்து*
*ஆமணக் கெண்ணை யுடன்சேர்த்து*
*கூட்டிக் காய்ச்சி வடித்துக்கொள்ளக்*
*குடிபோ மெரிகுன்மந் தானே!* 222

காட்டுநொச்சி, பிரண்டை, வேம்பு, கொன்றை, எலுமிச்சம் பழம், முருங்கை வேர், ஆமணக்கு, வீழி, இஞ்சி இவற்றை யெல்லாம் சேர்த்து இடித்து நீரெடுத்து தேவையான அளவு ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்து எரித்துக்கொள்ள வேண்டும். இதனைப்பருகிவர எரிகுன்மம் தீரும்.

## மகா வலிகுன்மத்தின் குணம்

*வந்தே யுதரந் தனில்வலிக்கும்*
*வயிறு கழியு முப்பற்தவிக்கும்*
*நொந்தே மேனி வறண்டுலர்ந்து*
*நோயு மிகுந்து வலுமை செய்யும்*
*தந்தால் மருந்து தனைமீறுந்*
*தறுகா துயரம் மிகவுண்டாம்*
*வெந்தே விழுந்து போமளவும்*
*விடாதே மகாவலி குன்மமீதே!* 223

மகாவலி குன்மத்தினால் வயிறு வலி ஏற்படும். வயிறு கழியும். வயிறுப்பும் உடல் வறண்டு, நொந்து நோய்மிகும். மருந்துண்டாலும் அதனையும் மீறி நோய்மிகும்.

## நெய்

வெள்ளுள்ளி யிஞ்சி நெல்லி
வீரவியே சாத்திர வேதி
தெள்ளிய யிளநீர் பாலுஞ்
சேரவே நாழி நாழி
கொள்ளுவை கிஷாயம் வெந்து
குறைந்தொரு நாழி யானால்
மெள்ளவே நறுநெய் நாழி
விடவது மிகவும் நன்றே! 224

வெங்காயம், இஞ்சி, நெல்லி, சாத்திரபேதி, இளநீர், பால் இவற்றை முறையே 1.3 லி. எடுத்துக் கொள்ளவும். இவை 1.3 லி. அளவாகச் சுருங்கும் வரை காய்ச்சி குடிநீராக்கிக் கொள்ளவும். அதே அளவு நெய்யையும் குடிநீருடன் கலந்து கொள்ளவும்.

நன்றதே கோட்ட மேலம்
நல்குவேன் கார மிந்து
சென்றுமணத் தக்காளி சீரகந்
திப்பிலி கொத்த மல்லி
மென்றிடுங் கிராம்பு சுக்கு
மிக்கசேங் கொட்டை கூட்டி
ஒன்றிட வெந்த நெய்தான்
உடன்கொள்ளக் குன்மம் போமே! 225

கோட்டம், ஏலம், வெண்காரம், இந்துப்பு, மணத் தக்காளி, சீரகம், திப்பிலி, கொத்துமல்லி, கிராம்பு, சுக்கு, சேங்கொட்டை இவற்றைப் பொடித்து நெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும்.

போமதே வெய்ய மாந்தம்
பொருமிய பித்தங் குன்மம்
தாமிக யெரிக்குங் குன்மம்
தறுகிடா சத்தி குன்மம்

வாமமாம் வர்ண வாத
மறுகிட வலிக்குங் குன்மம்
தாமிதப் படாதே மீளுந்
தகுதியாம் நெய்யி தாமே! 226

இதனை அளவறிந்து உள்ளுக்குத் தர மாந்தம், பித்த குன்மம், எரி குன்மம், சத்தி குன்மம், வர்ணவாதம், வலிகுன்மம் இவை நீங்கும்.

## வாத குன்மத்தின் குணம்

மேல்வயிறு வலித்தளைத்தி யிளைப்பு முண்டாம்
மிக்கான பாதங்க ளுளைந்து பின்னுஞ்
சாலவே கீழ்வயிறு தனில டங்கிச்
சத்தியே தோன்றிடுதல் தானு முண்டாம்
ஆள்விட்டுக் குத்தும்போல் கண்கள்மிக வெளுத்து
அரியதுய ருன்டாகு மதனைத் தானே
சிலமுடன் மனந்தெளிந்து கொண்டு நீயும்
தெரிவாத குன்மமெனச் செப்பு வாயே! 227

மேல் வயிற்றில் வலியெடுக்கும். இளைப்புண்டாகும். பாதங்களில் வலியெடுக்கும். அடிவயிறு பிரட்டிக்கொண்டு வாந்தியுண்டாகும். உடலில் மிகுந்த அளவில் குத்தல் ஏற்படும். கண்கள் வெளுத்துக் காணும். இதனை வாதகுன்மம் எனக் கூறுவர்.

காலுடன் நெஞ்சு வற்றிக்
கண்ணெரிந் துளையும் பக்கச்
சாலவே செரிக பாலஞ்
சற்றுடல் பிரட்டிக் குத்தும்
நேல்பட கிறுகி றுத்து
நிரைபடக் குடல்வ லிக்கும்
வாலகோ கிலமே மானே
வாத குன்மங்க ளாமே! 228

கால், நெஞ்சு இவை வற்றிக் காணும். கண்ணெரிச்சல் கண்டு உளைச்சல் ஏற்படும். குடல் பிரட்டிக் குத்தல் ஏற்படும், உடலில் கிறுகிறுப்பு உண்டாகும். குடல் வலிக்கும். இவை வாத குன்மத்தின் குறிகுணங்கள்.

*சந்துகா லுளைந்து பற்றித்*
*தழலெழும் வயிற்றில் மாறும்*
*மந்தகா ரங்கள் தன்னி*
*லதிகமாய்ச் சரீரம் வாதை*
*வந்துதான் தோன்றும் நாளில்*
*வகைபடா வாத குன்மம்*
*அந்தமா முனிவன் சொன்ன*
*ஆயுறு வேத மாமே!* 229

சந்து, கால், கை மூட்டுகளில் வலி உண்டாக்கும். வயிற்றுள் சூடு உண்டாகும் உண்ட உணவில் மந்தம் கொள்ளும். உடல் அதிகம் நோகும். இக்குறிகுணங்கள் வாத குன்மத்தினுடையவை என்று அகத்திய மாமுனிவன் சொல்லியுள்ளார்.

## மருந்து

*காட்டு முள்ளி யறுபலமும்*
*கொடிவேலி மஞ்சள் நிலவாகை*
*ஒட்டும் வீழிச் சாரணையும்*
*ஒரொன் றாறு பலமாக*
*தேட்ட மிகுந்த திரிகடுகு*
*தெளிவுஞ் சோம னுப்பதுவும்*
*காட்டுக் கள்ளிப் பாலுடனே*
*கலந்தொன் றாக எண்ணைகொள்ளே!* 230

காட்டு முள்ளி 210 கி., கொடிவேலி, மஞ்சள், நிலவாகை, வீழி, சாரணை இவை முறையே 210 கி., திரிகடுகு, சோமனுப்பு, காட்டுக்கள்ளிப் பாலுடன் நல்லெண்ணெயும் கலந்து கொள்க.

*திரிபுர மெரித்தான் சாறுந்*
*திருட்டுவின் சாறு சாற்றே*
*கிரியுரை கள்ளிச் சாறு*
*கேடிலா முருங்கைச் சாறும்*
*சரிசரி சாற்றை வாரித்*
*தன்னுடன் கூட்டிக் காய்ச்சி*
*உரியொடு நாழி யாக*
*உற்றாமணைக் கெண்ணை கொள்ளே!* 231

குப்பைமேனிச் சாறு, கொடிக்கள்ளிச் சாறு, திருகுகள்ளிச் சாறு, முருங்கைச்சாறு இவற்றை வகைக்கு 675 மி.லி. சேர்த்துக் கலந்து 1.3 லி. ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும். அளவறிந்து உட்கொள்ள வாதகுன்மம் தீரும்.

## கபாலக் குன்மத்தின் குணம்

*வயத்தை யளறாதி மேல்நோக்கி*
*வாய்நீர் பெருத்துத் தலைகனத்து*
*உயிர்ப்பை யுழிய தலைக்குத்தாய்*
*ஒடி யடங்கும் உடல்தன்னி*
*லயர்க்கு மயர்க்கு முடல்வெளுக்கும்*
*அதிகப் படவே வாதைசெய்யும்*
*குயிர்சொற் பயிலுங் கொடியிடையாய்க்*
*கொதிக்குங் கபாலக் குன்மமதே!* 232

வயிற்றில் அழற்சி ஏற்பட்டு, அடி வயிறு மேல் நோக்கி வலித்து, வாய்நீர் அதிகரித்து தலை கனத்து, தலைக்குத்தல் ஏற்பட்டு, உடலெங்கும் வலியை உண்டாக்கி உடல் அயர்ச்சி, மயக்கம், உடல் வெளுப்பு இவை உண்டாகி அதிகத் துன்பத்தைத் தரும்; இக்குறி குணங்களைக் கொண்டால் அதுகபாலக் குன்மம் எனச் சொல்வோம்.

*தலையுங் கனத்து வலித்துயரும்*
*தருகா தளத்துஅழுத்தமுடன்*

அலையும் நடுக்குங் கிறுகிறுக்கும்
அயர்த்தி யாகக் கண்துயிலும்
முலையும் பிதறித் தனில்நரம்பும்
உலையும் மனமு மிகப்பதறும்
கலையும் பத்தி உடல்நடுங்கிக்
கதிக்குங் கபாலக் குன்மமிதே! 233

தலைகனத்து, வலித்து, உடல் அழற்சியைக் கொடுத்து, அலைச்சல், நடுக்கம், கிறுகிறுப்பு, அயர்ச்சி, கண் துயிலல், மார்புவலி, உலைகின்ற மனம், உடல் பதற்றம், உடல் நடுக்கம் இவை உண்டானால் அதனைக் கபாலக்குன்மம் எனக் கூறலாம்.

## மருந்து

சாரணை கொடிவேலி வீழி
சம்பீரந் தானுஞ் சாற்றே
விருள கொன்றைக் காயில்
விரவும் முருங்கைப் பட்டை
பேருடன் ஒக்கக் கூட்டி
பேராக ஒன்றாக வைத்து
ஊறிய நாழித் தண்ணீர்
உடனது திடமாய்க் காய்ச்சே! 234

சாரணை, கொடிவேலி, வீழி, எலுமிச்சம் பழச்சாறு, கொன்றைக்காய், முருங்கைப்பட்டை இவற்றை ஒன்றாகக் கூட்டி நீர்விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

காய்ச்சியே கொதித்த தள்ளிக்
கலந்திடும் நறுநெய் நாழி
மூச்சுள்ள உள்ளி சுக்கு
முதிர்ந்த திப்பிலி வெண்காரம்
வாச்சிடும் மிளகிந் துப்பு
வன்சேர் சிவதைக் காயம்

காய்ச்சியே தன்னி லொக்க
கள்ளிப் பாலில் கலந்துகொள்ளே! 235

இதனை வடிகட்டிக் கொண்டு நல்ல நெய் 1.3 லி. சேர்க்கவும். பூண்டு, சுக்கு, முற்றிய திப்பிலி, வெண்காரம், மிளகு, இந்துப்பு, சிவதை, பெருங்காயம் இவற்றையும் சேர்த்துக் காய்ச்சி கள்ளிப்பாலில் கலந்து உட்கொள்ள கபாலக் குன்மம் நீங்கும்.

## இரத்த குன்மத்தின் குணம்

உரத்திடுங் குமிறங்கங்காந்தும்
உதரமும் விம்மி நொந்து
சுரத்திடும் வயிறு நெஞ்சு
சொரிவுடன் தினவு முண்டாம்
சிரத்திலுங் காலு மேலுந்
திமிருடன் குத்தி நோவாம்
இரைத்துகண் சுழற்றி வாயால்
ரத்தமாங் குன்ம மாமே! 236

உடல் உரத்து குமுறி, அங்கம் காந்தல் எடுக்கும். வயிறு விம்மும், நொந்து வீங்கும், நெஞ்சுத் தினவு ஏற்படும், தலை, கால், உடல் இவற்றில் குத்தலும் தினவும் உண்டாகும். உடலில் இரைப்பு ஏற்பட்டு, கண் சுழன்று வாயில் ரத்தம் கண்டால் அது இரத்த குன்மம் என அறியலாம்.

## மருந்து

கற்றாழை மொசுமொ சுக்கை
கற்பூர வள்ளி கரிப்பானொச்சி
வெற்றிலை கடுக்காய் நெல்லி
வெள்ளுள்ளிப் பாலிள னீர்நெய்
இற்றனை நாழி நாழி
இலவங்கம் கோட்டம் தார மிருசீரகம்
பத்திரி யேலங் கடுகுமஞ்சள்
பச்சிலை கச்சோலம் கிராம்பு! 237

கற்றாழை, முசு முசுக்கை, கற்பூரவள்ளி, கரிப்பான் நொச்சி, வெற்றிலை, கடுக்காய், நெல்லி, பூண்டு, பால், இளநீர், நெய் இவை முறையே 1.3 லி. எடுத்துக் கொண்டு, இலவங்கம், கோட்டம், தேவதாரம், நற்சீரகம், கருஞ்சீரகம், பத்திரி, ஏலம், கடுகு, மஞ்சள், பச்சிலை, கச்சோலம், கிராம்பு, வகைக்கு 5கி எடுக்கவும்.

*கஞ்சா வுடனே கொத்தமல்லி*
*கார்கோ லரிசி திரிகடுகு*
*பஞ்சலவணப் பளுக்காய் வாலுளுவை*
*பத்தியம் மதுரம் வசம்புடனே*
*தஞ்ச முறுகற் பூரமுடன்*
*சாதிக் காய்பெருஞ் சீரகமுங்*
*கொஞ்சம் வெப்பாலரிசி சிவதையுடன்*
*கொடிவேலி கள்ளிப்பால் வெடியுப்பே!* 238

இவற்றுடன் கஞ்சா, கொத்துமல்லி, கார்கோல் அரிசி, பஞ்சலவணம், வாலுளுவை, அதிமதுரம், வசம்பு, கற்பூரம், சாதிக்காய், பெருஞ்சீரகம், வெட்பாலரிசி, சிவதை, கொடிவேலி, கள்ளிப்பால், வெடியுப்பு ஒவ்வொன்றிலும் முறையே 5 கி. சேர்த்துக் கொள்ளவும்.

*இந்துப் புடனே வெண்காரம்*
*இலவங்கமுடன் சாதி லிங்கம்*
*கோதகமோ ரோர்க ளஞ்சு*
*இவையற யிடித்தரைத் ததிற்சேர்த்து*
*சந்தமாய்க் காய்ச்சி வடித்திதனைந்*
*தறுகா துள்ளே கொள்வீரால்*
*யுந்தி யெழுந்த ரத்தபித்த*
*குன்ம மோடிப் போமதே!* 239

மேலும் இந்துப்பு, வெண்காரம், இலவங்கம், சாதிலிங்கம், இவற்றையும் முறையே 5 கி. சேர்த்துக் கொள்ளவும். இவற்றை இடித்து அரைத்து முன்சொன்ன பொருட்களோடு சேர்த்து மிதமான தீ எரித்துக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

இதனை முறையுடன் உட்கொண்டால் இரத்த பித்தகுன்மம் இவை ஓடிப்போகும்.

## எரிமுக சூலையின் குணம்

நாவிக் கீழே கடிதாயிந்து
நடுவிரல் ஊடே யோடி
தாவிக்கைக் குழியில் குத்தி
தயங்குகை சிப்பில் குத்தி
கோவித்தே உயிரை வாங்கும்
கொடுங்குலைச் சூலை யென்று
தாவிய முனிவன் தானும்
தமிழினால் அருளி னாரே! 240

கொப்பூழுக்குக் கீழே அடிவயிறு கனமாயிருக்கும். கை நடுவிரலின் இடையே நரம்புகள் புரண்டு கைக்குழியில் (விரற்கிடையில்) குத்தல் எடுக்கும். மணிக்கட்டிலும் கடினமான தாங்கமுடியாத குத்தல் ஏற்படும். இக்குறிகுணங்கள் கண்டால் எரிமுக சூலை என்று கூறலாம்.

ஆன அடியைப் பற்றி
அளந்துகீழ் முதுகைப் பற்றி
பான்கடைக் குடலைச் சுற்றிப்
பாயவே வலிக்கு மாகில்
நான் படு நாவி தன்னை
நடுவிற் சுழித்து வாங்கு
ஏன்படு யதனை நீயும்
எரிமுகச் சூலை யென்னே! 241

பாதத்தில் வலி ஏற்பட்டு முதுகின் கீழ்ப் பகுதியிலும் வலியுண்டாகி குடலைச் சுற்றியும் வலித்து கொப்பூழிலும் குத்தல் உண்டாகுமானால் அதுவும் எரிமுகச்சூலை என உணரலாம்.

**மருந்து**

கோழி முட்டை உப்பில்
குளித்திடு ராத்திரி வாழி
யாவே வைத்தெ டுத்து
கொளவே வழியாய் வடியும்
போதெட்டு நாள்வழி யாயிக்
கொள்ள மாறுங் குலைசூலை
.....
.....! 242

கோழி முட்டையை இரவில் வேக வைத்து உரித்து உப்பிலே போட்டு வைக்கவும். மறுநாள் காலையில் எடுத்து உண்ணவும். இவ்வாறு எட்டு நாட்கள் உண்டுவர குலையில் ஏற்படும் எரிமுகச் சூலை குணமாகும்.

**கொர்ப்ப சூலையின் குணம்**

நாபிக் கீழிரு பற்றாம்
நாற்பதாம் தனையும் பற்றிச்
சோபமே மிகவு முற்று
சொல்லொணா வலியுண் டாயி
தாவியிப் படிய தாகில்
தானே கொர்ப்ப சூலையென்று
தேவர்க்குத் தேவ னான
தென்மலை முனிவன் சொன்னான்! 243

கொப்பூழின் கீழே இருவிரற்கடை அளவில் அடிவயிற்றில் சொல்லமுடியாத அளவு வலியேற்பட்டுத் துன்பந்தரும் சூலை கொர்ப்பசூலை என்று தேவர்க்குத் தேவனான அகத்திய முனிவர் சொன்னார்.

**மருந்து**

வேப்பங் கொழுந்தும் பிரண்டைக்
கிழங்கும் வெள்ளாட்டுப் பால்தனிலே

கோப்பாய் அரைத்து எட்டுனாள்
குடிக்க சூலை குன்மம்போம்
தே.....வாத கரப்பானுந்
தெரிபட் டோடு மென்றுதான்
ஆயி.....முனிவ னிதுதன்னை
அன்புடன் உலகில் அருளினரே! 244

வேப்பங் கொழுந்து, பிரண்டைக் கிழங்கு இரண்டையும் வெள்ளாட்டுப் பாலில் அரைத்து, எட்டு நாள் குடித்து வர சூலை குன்மம், வாதகரப்பான் இவை நீங்கும்.

## ஆம சூலையின் குணம்

வேனுத்தே உதர மெல்லாம்
விங்கியே வலிக்கு மாகில்
ஆனதோ ராம சூலை
யாகுமென் றறிந்து கொள்க
மூணாகு முதிரி யோடும்
முளைத்தெழும் நாவி தன்மேல்
வானுற வலிக்கு மென்னி
லந்தகே சரியு மாமே! 245

வயிறு வீக்கம் கண்டு வலிக்குமானால் அது ஆமசூலையின் குறிகுணமாகும். நரம்பு உதறியோடி முளைத்தெழுந்து கொப்பூழின் மேல் வலியும் உண்டாகும்.

## மருந்து

பெருங்காயம் வசம்பு கொடுவேலி
பேசுந் திரிகடுகு மோதகமும்
அரிய கடுக்காய் கருஞ்சீரகம்
ஆன சிவந்த களப்பருப்பு
அரிய இந்துப் பிவைசமனா
யெடுத்தே பொடித்து வெள்ளுள்ளி
பரிவாய்ச் சேர்த்துப் பன்னிருநாள்
பருகீ ராமைக் கெவுசியுமே! 246

பெருங்காயம், வசம்பு, கொடிவேலி, திரிகடுகு, மோதகம், எனும் ஓமம், கடுக்காய், கருஞ்சீரகம், சிவந்த கழற்சிப்பருப்பு, இந்துப்பு இவை சமனாய்க் கூட்டி எடுத்துப் பொடித்து, பூண்டும் சேர்த்துப் பன்னிரண்டு நாள் அருந்த ஆமசூலை குணமடையும்.

## கோவிப்பேய்ச் சூலையின் குணம்

*நாவியை யுழலைத் தாரி*
*நடுப்புற வலிக்கு மாகில்*
*கோவிபேய்ச் சூலை யென்று*
*கும்பமா முனிவன் கண்டு*
*லோவடு வயிற்றுப் பின்னை*
*யூடது புரள வோங்கில்*
*தங்கமே மிகுந்து நோகிற்*
*றானது கிரியு மின்னே!* 247

நாவியில் அழல் ஏற்பட்டு, நடு வயிற்றில் வலி எடுக்கு மானால் கோவிபேய்ச் சூலையென்று கண்டு கொள்ளலாம். வயிற்றில் புரட்டல் ஏற்பட்டு வலிமிகுமானால் இதனைக் கோவிப்பேய்ச் சூலை என்று கருதலாம் என அகத்திய மாமுனி உரைத்துள்ளார்.

## மருந்து

*தண்டைவேர் வேப்ப னாக்குச்*
*சுக்கு கிருமி சற்றுருவும்*
*பண்டே பகரும் பெருங்காயம்*
*பரிவான முள்ளி மோதகமும்*
*கண்ட நொச்சிச் சாற்றரைத்துக்*
*கவன மாக வேயருந்தில்*
*முண்டப் படுத்தும் கோவிகிருமி*
*முடுகப் பறக்குங் கண்டீரே!* 248

தண்டைவேர், வேப்பங்குச்சிகள், சுக்கு, பெருங்காயம், முள்ளி, ஓமம் இவற்றுடன் நொச்சிச் சாற்றைச் சேர்த்தரைத்துக்

கலந்து முறைப்படி உண்டோமானால் துன்பப்படுத்தும் கோவிப் பேய்ச்சூலை குணமாகும்.

## குடல்கரி வாயுவின் குணம்

*கடைக்குடல் முதுகன் தண்டு*
*கய்யடி விரலைப் பற்றி*
*மிடைப்படப் பற்றிப் பின்னை*
*மிகவுள நரம்ப தெல்லாம்*
*புடைத்தெரித் தளன்று நொந்து*
*புரண்டுடல் மருண்டு காணும்*
*மிடைப்புற முண்டி நோகில்*
*இதுகுடல் கரியு மாமே!* 249

கடைக்குடல், முதுகுத்தண்டு, கை விரல்களின் அடி, விரல்களின் இடைவெளி இவற்றில் வலி ஏற்படும். நரம்புகள் புடைத்து நோகும். மொத்தத்தில் உடம்பில் ஒரு மிரட்சி தோன்றும். இடப்பக்க வயிறு வலி எடுக்கும். இவை குடல்கரி வாயுவின் குறிகுணங்களாகும்.

## எண்ணெய்

*ஆமணக் கெண்ணை நெய்தா*
*னழகிய காணத் தன்னனீர்*
*தாமது னொச்சிச் சாறுந்*
*தக்கதோர் முடக்கொத் தானும்*
*காமிது இந்துலிங்க முள்ளி*
*கடுகொடு வேலி சுக்கு*
*நீமது வெந்து கொள்ள*
*நிற்குங்குட கரியுந் தானே!* 250

நொச்சிச் சாறு, முடக்கொற்றான், இந்துப்பு, சாதிலிங்கம், உள்ளி, கடுகு, கொடிவேலி, சுக்கு இவற்றுடன் ஆமணக் கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி எண்ணெய் வடித்துக் கொள்ளவும் இதை முறைப்படி உண்டுவர குடல்கரி வாயு நீங்கும்.

## குண்டல வாயுவின் குணம்

*கண்டிக்கு முதரந் தன்னிற்*
*கதித்திடுங் கூப்பிட் டோடும்*
*விண்டிச்சை விரைப்பந் தன்னில்*
*மேவிடு முருண்டு கால்போல்*
*சிண்டித்துச் சிதறி யோடிச்*
*சினத்துடல் பாயந் தாங்கி*
*கொண்டிபோய்க் குடலில் குத்தும்*
*குண்டல வாய்வு தானே!* 251

வயிற்றில் வலி உண்டாகும். கதித்து இரைச்சலை உண்டாக்கும். குடல் பிரட்டி இங்குமங்கும் உருண்டோடும். பாய்ந்து உருண்டு சிதறி குடலிலே ஆங்காங்கே குத்தல் ஏற்படுத்தும்.இது குண்டல வாயுவின் குணங்களாகும்.

## சூரணம்

*திரிபலை மோதங் காந்தம்*
*திரிகடு லிங்கந் தாரம்*
*மறியிந்து காரம் பத்திரி*
*யடுத்த.....*
*கிராம்பு சிவதை-யுடன் பொடித்துதேனிற்*
*கொள்ளவே யுதர நோய்கள்*
*வேரிடுங் குண்டல வாய்வு*
*விட்டேகு முண்மை தானே!* 252

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், காந்தம், சாதிலிங்கம், அரிதாரம், இந்துப்பு, பொரிகாரம், சாதிபத்திரி, கிராம்பு, சிவதை இவற்றைப் பொடித்துத் தேனில் உட்கொண்டால் வயிற்றுநோய்களும், குண்டல வாயுவும் பறந்தோடும்.

## ஆற்றாமை வாயுவின் குணம்

*நித்திய மழுது கொண்டால்*
*நின்றிடும் னடுவ தாகப்*

பத்திய மின்றித் தானே
பலப்பட மலருந் தள்ளி
சத்தியுந் தழன்று காட்டித்
தறுகிடா தபான மாகி
லத்தனை குணங்கள் கண்டால்
ஆற்றாமை வாய்வு தானே! 253

தினமும் உண்ணும் உணவு செரிக்காது. செரியாத உணவு வாந்தியாகும். தீய காற்றாக வெளியேறும் இத்தகு குணங்கள் ஆற்றாமை வாயுவினுடையவை.

மிண்டியே யுதரந் தன்னில்
விரைத்தி டுமு லாக்கினி
கொண்டதோர் ஆங்கா ரத்தைக்
குமட்டி யாகற் றாமையாகும்
முண்டிடில் புளித்தெ ரித்து
முடனுடன் மலமுந் தள்ளி
வின்றிடி லாற்றாமை வாயு
யிதுவென விளம்பி னாரே! 254

வயிற்றிலுள்ள வாயுவானது மூலாக்கினியை மறைத்து, உண்ட உணவைச் செரிப்பிக்காது புளித்தேப்பத்தை யுண்டாக்கும். உடனுக்குடன் மலத்தை அதிகமாக வெளியேற்றும் குணம் கொண்டது ஆற்றாமை வாயு.

## மருந்து

காந்த மிரதம் அரப்பொடியுங்
காரீயத் துடனே கெந்தகமும்
ஏந்து கஞ்சா யறுகளஞ்சு
இந்த மருந்து ஒரொன்று
சாந்து போலே பொடிசெய்து
தானே கேளீர் கொள்வீரால்
வாந்தி செய்யும் குணமுமது
வாங்கிப் போகுங் கண்டீரே! 255

காந்தம், அரப்பொடி, காரீயம், கெந்தகம், கஞ்சா இவற்றை வகைக்கு 30 கி. எடுத்து முறைப்படி சுத்தி செய்து நன்கு பொடித்துத் தக்க அனுபானத்துடன் உட்கொள்ள வாந்தி நிற்கும்.

## பீலிகை வாயுவின் குணம்

*வலத்தை யிறுக்கி மந்திக்கும்*
*வலுவா யுதரந் தனைப்புரளும்*
*பிலத்தைக் குறைக்கும் யீரலொடும்*
*பெருக்கக் கனத்துத் திரண்டேறும்*
*முலத்து விசனங் குறைந்துவரு*
*மோக்காளித் தேப்பந் தான்புளிக்கும்*
*குலத்திற் பெரிய பீலிகையின்*
*குணத்தைப் பேசுங் குறியாமே!* 256

மலத்தை இறுகச் செய்யும்; வயிற்றைப் புரட்டும்; உடல் பலத்தைக் குறைக்கும்; ஈரல் வீங்கிப் பெருக்கக் கனக்கும். விசனங் குறையும். வாந்தியெடுக்கும்; புளித்தேப்பம் உண்டாகும். இவை பீலிகை வாயுவின் குணங்களாகும்.

## மருந்து

*ஆடா தோடை வேர்க்கடுக்காய்*
*யக்கிரா சிவதை யிருசீரகங்*
*கோடரிசி யாறு திரிகடுகு*
*குராசாணி மோத மிந்துமஞ்சள்*
*வாடா காந்தங் காரம் வங்காள*
*விடையங் கிராம்பு பத்திரிசாதிக்காய்*
*தேடிப் பொடித்துத் தேனிலுண்ணத்*
*திரும் வாய்வு பீலிகையே!* 257

ஆடாதோடைவேர், கடுக்காய், அக்கிராகாரம், சிவதை, நற்சீரகம், கருஞ்சீரகம், குரோசாணி, ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, மஞ்சள், காந்தம், வெண்காரம், கார்போகரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி, வெட்பாலையரிசி,

மூங்கிலரிசி, ஏலரிசி, வங்காளப் பச்சை, அதிவிடையம், கிராம்பு, சாதிபத்திரி, சாதிக்காய் இவற்றைப் பொடித்துத் தேனில் குழைத்து உண்டால் பீலிகை வாயு குணமாகும்.

## இருத்திர வாயுவின் குணம்

*இன்புறு யுந்தி யின்கீழ்*
*எழுகின்ற யெருத்த னுக்குத்*
*துன்பமே மிகவி ளைக்குஞ்*
*சோரவே யுயிரை வாங்கும்*
*அன்பிலா யெருத்தைப் போலே*
*யாமிகக் கொடிய தில்லை*
*இன்பமாய் முனியெல் லார்க்கு*
*மிப்படி யியம்பி னாரே!* 258

அடிவயிற்றினின்றும் கிழிறங்கும் இருத்திர வாயு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கும்; உயிரை வாங்கும். தீர்க்க முடியாத அளவுக்குக் கொடியதானது இது என்று முனிவரெல்லாம் சொல்லிசைத்தார்.

*உற்றருள் மார்பின் கீழ்*
*உண்ணினா லங்குலம் விட்டு*
*மற்றுமோர் பளுவு டோடி*
*மருண்டுற கனத்து விம்மிப்*
*பற்றுற வலித்துப் பின்னைப்*
*பய்யவான் கொடுத்துச் சேரு*
*முற்றுமே யிதனை னியும்*
*மூன்றேகுத் தென்று கூறே!* 259

மார்பினின்றும் 4 அங்குலம் கீழே சிறு பளுபோல் ஊடே ஓடி, மருண்டு, கனத்து, விம்மி, வலி ஏற்படுத்திடும் பண்பு இருத்திர வாயுவிற்கு உண்டு. இதனை மூன்று குத்தென்று கூறுவர்.

*இப்படி மூன்றே குத்து*
*இருமலுஞ் செருமு மாகில்*

மெய்யடு முயிருங் குன்றி
மேனியும் மெலிந்து சொல்லும்
மைப்படு மின்னை வந்து
மரணமே யாகு மென்று
முப்பட முனிவன் தானும்
முறைமுறை வகுத்துச் சொன்னார்! 260

இருமல் ஏற்பட்டு செருமி, உடல் நொந்து மெலிந்து மரணத்தையே ஏற்படுத்தும் அளவு கொடுங்குணமுடையது இருத்திரவாயு.

## சூலைக் குன்மத்திற்கு மருந்து

கொடிக்கழல் பருப்புமோ டுள்ளி
கொடிய காய முடனிந்து
கொடிக்கள்ளி குப்பை மேனி
கொற்றா னீலிச் சாறு
இடிச்சிலை சாறு னொச்சி
இயல்பெறக் காய்ச்சிக் கொண்டு
குடித்திடிற் சூலைக் குன்மங்
குடகரி யொருத்துங் கெட்டு
நடுக்கி விட்டோம் நாயனாணை
நாமிது கண் டோமே! 261

கொடிக்கழற்சிப்பருப்பு, உள்ளி, பெருங்காயம், கொடிக் கள்ளி, குப்பைமேனி, முடக்கொற்றான், நீலிச்சாறு இவற்றைச் சேர்த்து இடித்துச் சாற்றைப் பருக சூலைக்குன்மம் குணமாகும் என்பர்.

உள்ளிச்சா றதுவும் நாழி
யுறவண்டித் தைலம் நாழி
கள்ளிப்பா லதுவு முக்குக்
கடுதிரி பொடியு முக்கு
தெள்ளிய யிந்து பத்து
ஆகிய மயங்க ளஞ்சு
கொள்(ளுங்) குமரிச் சாற்றோடு
கூடியே விரவிக் கொள்ளே! 262

வெங்காயச்சாறு 1.3 லி., உறவண்டித் தைலம் 1.3 லி., கள்ளிப்பால் 325 மி.லி., திரிகடுகுப் பொடி 325 கி., இந்துப்பு 50 கி. இவற்றைக் கற்றாழைச் சாற்றுடன் கலந்து கொள்க.

ஒத்தவிப் பதத்தி லிங்கு
உறமிக வடித்துப் பின்னை
சுத்தமா முனியை நோக்கி
சுகம்பெற துகந்த போது
குத்துவன் சூலை குன்மம்
குடல்கரி வாய்வு தானும்
சத்தி கெட்டே குத்து மாறும்
சாந்தமா யிதனைப் பாரே! 263

சாற்றை ஒன்றாக்கி பதமானபின் வடித்துக்கொண்டு முறைப்படி உண்டுவர சூலை, குன்மம், குடல்கரி வாயு இவை குணமடையும்.

உற்றருள் செய்து விந்த
யுறுபல கிரிகை யெல்லாஞ்
சற்றுமே சாகா வண்ணந்
தமிழினார் சாற்று கைக்கு
நற்றுணை யாகு மிந்த
நாயக னருளி னாலே
குற்றமொன் றின்றித் தெய்வ
குருமுனி யருளி னாரே! 264

நோய்களுக்கேற்ற சிகிச்சைகள் பலவற்றை முறைப்படி செய்யும் விதமாக இறைவனின் சித்தப்படி அகத்திய முனிவர் நமக்கு வழங்கியுள்ளார்.

## பக்க சூலையின் குணம்

வந்து பொருமு மண்டத்தில்
வலித்து மிகவே சுரந்தோன்றி
நொந்து யுடலும் புண்போலாம்
நோவி னுடனே தலைவலியும்

இந்தப் படியே யிதுதோன்றி
இதுவே பக்க சூலையென்று
அந்தப் படியே முன்னோரும்
அன்பா யுலகி லருளினரே! 265

பொருமல் உண்டாதல், அண்டத்தில் வலித்தல், சுரம் உண்டாதல், உடல் புண்போல் நொந்து வலித்தல், தலைவலி உண்டாதல் ஆகியன பக்க சூலையின் குறிகுணங்களாகும்.

## அண்ட வாதத்தின் குணம்

அண்டரா புறத்தில் விங்கி
யரையுடன் கடுத்து நொந்து
மண்டியே வயிறு நொந்து
வாளமே நோக்கித் தாக்கி
அண்டமுந் துடையு மித்து
வத்தது போலே தோன்றும்
மண்டிய அண்ட வாத
மாமென வகுத்த வாறே! 266

தலையின் புறத்தில் வீக்கம் கண்டு இடுப்பும் கடுத்து நொந்து, வயிறு வலி ஏற்பட்டு, மேற்கால்களில் வலி ஏற்படும். அண்டமும் துடையும் வற்றிப்போகும் இக்குறி குணங்கள் கண்டால் அதனை அண்டவாதம் என்று அறிந்து கொள்ளலாம்.

கொண்டிடுங் குடலில் தங்குங்
குறைந்தொரு விரையிற் தோன்றும்
மண்டியே விதையிற் தோன்றி
வலித்துடன் வாதை செய்யும்
பண்டுதா னண்ட வாதம்
பற்றிய களவே றென்று
அண்டரும் முனிவர் தானும்
அவனியி லுரைசெய் தாரே! 267

இவ்வாதம் குடலில் தங்கும். விதையில் தோன்றி, வலியை ஏற்படுத்தி வேதனை செய்யும் இவை அண்டவாதத்தின் குறிகுணங்களாகும்.

### மருந்து

*பேய்க்குமட்டி மாவி லிங்கு*
*பெரும்புங்கு னொச்சி யுள்ளி*
*வாய்த்தயிரு களச்சி தும்பை*
*வன்னியெருக்கு முருக்கங் கள்ளி*
*சாய்த்ததோ ரொன்றது நாழி*
*தாரம்லிங்கம் காந்த மிந்து*
*காயஞ் சுக்கோமம் கடுக்காய்வசம்புக்*
*கள்ளி யெருக்கம் பாலிவையே.* 268

பேய்க்கும்மட்டி, மாவிலிங்கு, பெரும்புங்கு, நொச்சி, உள்ளி இவை முறையே 10 கி. எடுத்துக் கொள்ளவும். தும்பை, வன்னி, எருக்கு, முருக்குகள்ளி இவற்றின் சாறு வகைக்கு 1.3 லி., அரிதாரம், லிங்கம், காந்தம், இந்துப்பு, பெருங்காயம், சுக்கு, ஓமம், கடுக்காய், வசம்பு, கள்ளி எருக்கம்பால் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துக் கொள்ள வேண்டும்.

### குடிநீர்

*இவைக ளிரண்டாங் களஞ்சு*
*யித்தரைத் ததிலே சேர்த்து*
*அவையெல் லாமணக் கெண்ணை*
*யாடின கோமியம் னாழினாழி*
*தவையெனக் கூட்டிக் காய்ச்சி*
*தருகி டாத வடித்தருந்தில்*
*கவைபக்க சூலை யண்டங்*
*களேது வாதம் போமே* 269

மேற்சொன்ன சரக்குகளை இடித்து அரைத்துச் சேர்த்து, அத்துடன் ஆமணக்கெண்ணெய், ஆட்டின் கோமியம் இவை வகைக்கு 1.3 லி. கலந்து காய்ச்சி வடித்துப் பருகினால் அண்டவாதம், பக்கசூலை குணமாகும்.

### குடிநீர்

கழல்மணி வெள்ளை யுள்ளிக்
கடியதோர் முருங்கைக் கொட்டை
அழலுடன் சுக்கு காரம்
அஞ்சிரண் டாக்கிக் கொள்ளக்
குழலுட னாதம் போல
குழறியே குடல்வா தங்கள்
பழியெனப் பக்க சூலை
பகான குன்மம் வாதம் போமே! 270

கழற்சிக்காய், வெள்ளை யுள்ளி, முருங்கை விதை, சுக்கு, அக்கிராகாரம் இவற்றை இடித்துப் பொடித்துக் கசாயமாக்கி ஐந்தில் இரண்டாகச் சுருக்கிக் காய்ச்சி உட்கொள்ள குடல் வாதங்கள் நீங்கும்.

### குடிநீர்

பெருத்த காயம் வெள்ளுள்ளி
பேணு மிருசு வேர்க்கொம்பு
விருத்த முந்துஞ் சாரணைவேர்
வெட்டி நறுக்கிக் காய்ச்சிகிலோ
திருத்த மாக யஞ்சொன்றாய்
சேர்த்திறக் காய்ந்து கொண்டிடுகி
லொருத்தர் தமக்கும் வாராமல்
ஒடும் பக்க சூலையதே! 271

பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, சுக்கு, சாரணை வேர் இவற்றை வெட்டி நறுக்கித் தண்ணீரூற்றி ஐந்தில் ஒன்றாகச் சுருக்கிக் கசாயமாக்கி உட்கொள்ள பக்க சூலை நீங்கும்.

### சூரணம்

சீனிப் பாகுஞ் சாதிலிங்கம் திரிபலை
திரிகடுகு சாதிக்காய் திப்பிலிமூலம் பத்திரி
மானே கிராம்பேலம் குங்கிலியம்
மஞ்சள் வெப்பாலை சித்தரத்தை மஞ்சள்

சினக்காரம் பொரிகாரம் தேவதாரம் மதுரம்
சிறுதேக்கு கொடுவேலி மானிந்துப்பு வெடியுப்பு
வால்மிளகு மஞ்சான கருஞ்சீரகம் வாய்விளங்க
மானவிடையம் கழல்பருப்பு அசமோதகம் சமனாய்
பொடித்துப் பொடிதின்ன யடியறுமண்ட வியாதியாமே! 272

சீனிப்பாகு, சாதிலிங்கம், திரிபலை, திரிகடுகு, திப்பிலி மூலம், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், குங்கிலியம், மஞ்சள், வெப்பாலை, சித்தரத்தை, சீனக்காரம், பொரிகாரம் தேவதாரம், அதிமதுரம், சிறுதேக்கு கொடிவேலி, இந்துப்பு, வெடியுப்பு, வால்மிளகு, கருஞ்சீரகம், வாய்விளங்கம், அதிவிடையம், கழற்சிப்பருப்பு இவற்றைச் சமமெடுத்துப் பொடித்துத் தின்ன அண்டவியாதிகள் தீரும்.

## உள்குத்தின் குணம்

வேர்த்து வெதும்பி பல்கிட்டி
விறைத்துக் குத்தித் தாக்கிக்குஞ்
சித்த மிகுந்து கஞ்சிதண்ணீர்
தேடுங் கொள்ள வொட்டாது
பாத்து மனித ரிருக்கினுமே
பரியும் வாய்வு கீழ்நோக்கிப்
பேத்துப் பகரா துள்குத்தும்
பேணிச் சொல்லாவர் பெரியோரே! 273

உடல் வியர்க்கும், வெதும்பும், பல்கிட்டிக் கொள்ளும், உடல் விறைத்துக் குத்தித்தாக்கும். சீதம் மிகுந்து காணும். உணவை மிகுந்து விரும்பும் ஆனால் உண்ணமுடியாது. வாயு பரியும். வாயு கீழ்நோக்கி வந்து உள்குத்தும்.

## குடல்வாத குணம்

உடலிடை யோடி மீண்டு
யுளைந்துகால் சந்து கைகள்
குடலிடை கூப்பிட் டோடிக்
குமிரிடும் குடலில் தங்கும்

கடலிடை தரங்க மென்ன
கலங்கிடும் நலங்கி நிற்கும்
நடலிடை குடல்வா தத்தின்
குணமென நவின்ற தாமே! 274

வாதமானது உடலெங்கும் பரவி மீண்டும் உளைந்து கால் சந்து, கைகள், இவற்றில் ஓடி குடலில் தங்கும். கடலிடை ஓடும் ஓடம்போல நம் உடலைக் கலக்கி நடுங்க வைக்கும் பண்புடையது குடல் வாதம்.

## உருண்டை

வெண்பா சாண மொருகழஞ்சு
மீளு துத்த மிருகழஞ்சு
நண்பாந் துரிசு யரைக்கழஞ்சு
நன்றா யூமத் திலைச்சாற்றில்
பண்சேர் மொழியா யரைத்திதனைப்
பருத்திக் கொட்டைப் பிரமாணம்
வணஞ்சேர் யிஞ்சி மிளகிற்கொள்ள
மாய்ந்தே போகும் குடல்வாதம்! 275

வெள்ளைப் பாஷாணம் 5 கி., துத்தம் 10 கி., துரிசு 2.5 கி. இவற்றை ஊமத்தன் இலைச்சாற்றில் அரைத்துப் பருத்திக் கொட்டை அளவு உருண்டை செய்து கொள்ளவும், இம்மாத்திரையை இஞ்சி அல்லது மிளகில் கொள்ள குடல்வாதம் நீங்கும்.

## மருந்து

கழல்கொடி பருப்போ டுள்ளி
கழஞ்சுக ளாகத் தானே
வழுக்காத சுக்கோர் கழஞ்சு
வடியவே பொடித்துப் பின்னை
முழுக்கோழி முட்டை மஞ்சள்
முதுக்கரு வதுவுங் கூட்டி
யெழுந்தியில் வறுத்துத் தின்ன
யேகுமா னந்த வாதம்! 276

கழற்சிப் பருப்பு, உள்ளி இவை வகைக்கு 5 கி., சுக்கு 5 கி., இவற்றைப் பொடித்து வைத்துக்கொள்ளவும். இதனுடன் கோழிமுட்டையின் மஞ்சள் கருவையும் கூட்டி வறுத்து உண்டால் குடல் வாதம் குணமாகும்.

## மருந்து

*வாத மடக்கி னொச்சிகொற்றான்*
*வன்னி கழல்கொடி வெள்ளுள்ளி*
*கோது நீக்கி யோரொன்று*
*குறையா தோர்பலங் கொண்டு*
*சீதா தேவி பழச்சாறு*
*செலுத்து மொருபடி மருந்துகொள்*
*சாதிலிங்க மோமம் பெருங்காயஞ்*
*சதகுப்பை யிந்துப்பு தாரமுமே!* 277

வாதமடக்கி இலை, நொச்சியிலை, முடக்கொற்றான், வன்னி, கழற்கொடி, வெள்ளுள்ளி இவற்றைச் சுத்தம்செய்து வகைக்கு 35 கி. எடுத்துக்கொண்டு சீதாதேவி பழச்சாறு 1.3 லி. சேர்த்து, சாதிலிங்கம், ஓமம், பெருங்காயம், சதகுப்பை, இந்துப்பு, அரிதாரம் இவற்றையும் அளவுடன் சேர்த்து உண்ணவும்.

## நீர்ப்பாட்டின் குணம் (சன்னி)

*இப்புரு நீர்ப்பாடு விம்மி*
*யிரைச்சலோ டெரித்து நொந்து*
*தப்புறு கழிச்சல் சற்றி*
*சந்துகால் மெய்யு முன்று*
*பப்புறு நாவு லர்ந்து*
*அடிக்கடி தண்ணீர்த் தாகம்*
*வெப்புறு சன்னி யானால்*
*மீளுவ தில்லை யென்றே!* 278

வயிறு விம்மும்; வயிறு இரைந்து எரித்து நொந்து, கழிச்சல் ஏற்படும். மூட்டுகள், கால், கை, உடம்பு இவை

நோக்காடடையும். நாவுலர்ந்து அடிக்கடி தண்ணீர்த் தாகம் ஏற்படும். இதனோடு சன்னியும் சேருமானால் இந்நோயினின்றும் மீள்வது கடினம்.

### மருந்து

*கறியுப்பு கழஞ்ச ரைத்து*
*கலந்துநல் லெண்ணை கொஞ்ச*
*மறியவே யுழக்காய்க் கொள்ள*
*யமந்திடும் நீர்ப்பா டென்னே*
*கரிமஞ்ச ளரைத்துச் சுண்ணங்*
*கலக்கியே குடிக்க நிற்கும்*
*மரிகலைங் கொம்பு திறச்ச*
*மருந்தநீர்ப் பாடு தீரும்!* 279

கறியுப்பு 5 கி. அளவு எடுத்துக்கொண்டு 325 மி.லி. நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சிக் குடிக்க நீர்ப்பாடு நீங்கும். கறிமஞ்சளை அரைத்துக் கலக்கிக் குடிக்க நீர்ப்பாடு நீங்கும். மான்கொம்பினை அரைத்து நீரில் கலக்கிக் குடிக்க நீர்ப்பாடு நீங்கும்.

### இரத்த சூலையின் குணம்

*திரண்டு புரண்டு கீழ்வயிற்றே*
*திறமாய் மாத விடைப்போது*
*அருண்டு குருதி மிகுந்துவிழுந்*
*தரையுந் துடையு முளைந்துவரும்*
*உருண்டு சிலநாள் சிக்குவிக்கும்*
*உருவாங் கருவை யழிப்பிக்கும்*
*மருண்ட யிரத்த சூலையென*
*வகுத்துப் பேசீர் மாமயிலே!* 280

பெண்கட்கு வயிறு திரண்டு, புரண்டு கீழ்வயிற்றில் மாதவிடாயின்போது வலி எடுக்கும். அழற்சி ஏற்பட்டு குருதி மிகுதியும் விழும். இடுப்பும் தொடையும் வலிக்கும்.

சிக்கலை ஏற்படுத்தி கருவை அழிக்கும் பண்பு கொண்ட இச்சூலை இரத்த சூலை என அறியலாம்.

## கெர்ப்ப ரோகத்தின் குணம்

*பொருமித் திரண்டு கீழ்வயிற்றில்*
*புண்போல் வலித்து இடுப்புளையுஞ்*
*சருவிச் சருவி மாதவிடை*
*தனையும் கடுக்கும் தலைகனக்கும்*
*முருவிப் பிழிந்த பழம்போலே*
*உடலே யுலர்ந்து முறக்கமிலை*
*கருவை யழிக்குங் கனங்குழலே*
*கருதுங் கெர்ப்ப ரோகமிதே!* 281

அடிவயிறு பொருமும், கீழ்வயிற்றில் புண்போல் வலித்து இடுப்பு உளையும், மாதவிடாயைப் பெருக்கி இரத்தத்தைக் கடுக்கும். தலை கனக்கும். பிழிந்த பழம்போல உடம்பை உலரச் செய்து உறக்கத்தைக் கெடுக்கும். உருவான கருவை அழிக்கும் இது கெர்ப்பநோய் எனப்படும்.

## மருந்து

*ஞாயத் துடன்வா டவரை*
*நன்றா யிலையரைத் தினநீரில்குடி*
*மாயாத புளிநறளை தினைமாவுடன்*
*மோர்வு ளாய்க்கலந் துண்ணிலோர்*
*ஒயாத புரையுங் கெற்பரோக மாதசூலை*
*உதிரமிக்க கிருமிசெய லுள்ள தெல்லாம்*
*தூயதாக் கழிந்துருகிப் போமே யென்று*
*சொல்முனிவர் தாமுரைத்த சூட்சந் தானே!* 282

அவரை இலையை அரைத்து இளநீரில் குடிக்கலாம். புளிநறளையைத் தினைமாவுடன் கலந்து மோர் சேர்த்துக் கலந்துண்ண புரை, உதிரம் மிகுந்து வெளியாதல், கிருமிகள் சேர்தல் இவை நீங்கி, கெர்ப்ப சூலை குணமாகும்.

## கெர்ப்ப வாயுவின் குணம்

பொருமி யிரத்தந் தனைமறித்துப்
போத மிகவும் வலியுண்டாம்
குருசேர் வாய்வு வலிதீரும்
கொள்ளுங் கெர்ப்பந் தனையழிக்கும்
வருடி யிடுப்பு கடுத்துளைந்து
மலத்தை மிகவே விறுவிறுத்து
பெருக்கப் பனைக்கும் மாந்தமறில்
பேசுங் கெற்ப வாயுவிதே! 283

வயிறு பொருமி இரத்தம் மாற்றம் பெற்று அடிவயிற்றில் மிகுந்த வலியுண்டாகி வாயுமிகுந்து வலி ஏற்பட்டு கெர்ப்பத்தை அழிக்கும். இடுப்பு கடுத்து உளைந்து மலத்தை அடிக்கடி மிகுத்துப் பெருக்கும், மாந்தத்தை ஏற்படுத்தும் இது கெர்ப்ப வாயுவின் குணங்களாகும்.

## எண்ணெய்

திரிகடு குள்ளி யிந்துப்பு
சேர்ந்திடும் களல்பருப்பு காயம்
வளர்ந்திடு மாமணக் கெண்ணை
அரப்படி யாகக் கூட்டி
விரைந்திடும் மருந்து ஏழும்
விராகன் ரெண்டாகச் சேர்த்தே! 284

திரிகடுகு, உள்ளி, இந்துப்பு, கழற்சிப்பருப்பு, பெருங்காயம், அரப்பொடி இவை வகைக்கு 8 கி. வீதம் எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

சேர்த்திய எண்ணை தன்னைச்
சிறப்புடன் காய்ச்சிக் கொண்டு
போற்றிய பூசை பண்ணி
பொருந்துனாள் கொள்வி ராகில்
மாத்திய ரத்த சூலை
மகிழ்ந்திடும் கெர்ப்ப வாய்வு

போற்றிய ஆமை சூலை
பூண்டதோர் எரிகுன் மந்தான்
தோத்துதான் போகு மென்று
தவமுனிவ ருரைத்த வாரே! 285

மேற்கண்ட பொருட்களை ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சிக்கொண்டு கடவுளைத் தொழுது உட்கொண்டோமானால் இரத்தசூலை, கெர்ப்பவாயு, ஆமசூலை, எரிகுன்மம் இவை நீங்கும் என்பது முனிவர் வாக்கு.

## வாயுவிற்கு மருந்து

கடுக்காய் மஞ்ச ளிந்துப்பு
கடுகோ டுள்ளி வெண்காரம்
அடுத்த வீழி யாமணக்கு
அதுவும்நில வாகை யின்வேரும்
தொடுத்து வேரு பலமாக்கித்
துலங்க யெரித்தா மணக்கெண்ணெயில்
குடுத்தார் கெர்ப்ப வாய்வுவிடும்
கூட்டுங் கள்ளிப் பால்கழஞ்சே! 286

கடுக்காய், மஞ்சள், இந்துப்பு, கடுகு, உள்ளி, வெண்காரம், வீழி, ஆமணக்கு, நிலவாகையின் வேரும் வகைக்கு 35 கி., 5 கி. கள்ளிப்பாலையும் ஆமணக்கெண்ணெயில் சேர்த்தெரித்து உட்கொள்ள கெர்ப்ப வாயு நீங்கும்.

## கெர்ப்ப விப்புருதியின் குணம்

திரண்டு புழுக்க ளுருண்டுவிழும்
திராச் சியு மரித்துவிழும்
வரண்டு உடல்தான் வற்றிவரும்
வடிவுங் குறைக்கும் தாதுக்கும்
திரண்ட தனத்து மடந்தையரே
திராக் கெர்ப்ப விப்புருதி
உருண்ட புழுக்கள் உள்மூலம்
உலையுங் கெர்ப்ப ரோகமிதே! 287

வயிறு திரண்டு, புழுக்கள் உருண்டு விழும். சீழும் உண்டாகும். உடல் வற்றும். வடிவம் குலையும், தாதுவிற்கும் நட்டம் ஏற்படும். புழுக்கள் உள்ளே உண்டாகியிருக்கும் இந்நோய் கெர்ப்ப விப்புருதி என அறியலாம்.

### மருந்து

*ஆவாரை வேப்பஞ் சாறும்*
*ஆவின் நெய் நாளி*
*தேவ தாரத்துடன் மோதகஞ்*
*சீரகங் கடுத்த சீரகமும்*
*மாவளத் துடனிட்டுக் காய்ச்சி*
*மானே பதத்தில் வடித்துக்கொள்ள*
*காவல னாணை கெற்பங்*
*கருவு முண்டா மென்றாரே!* 288

ஆவாரைச்சாறு, வேப்பஞ்சாறு, ஆவின்நெய் இவை முறையே 1.3 லி. தேவதாரம், ஓமம், சீரகம், கருஞ்சீரகம் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து உண்ண கெர்ப்ப விப்புருதி நீங்கி கர்ப்பம் உண்டாகும்.

### கெர்ப்ப சூலையின் குணம்

*சுரமுட னுதிரங் காணில்*
*தோன்றிடுந் திரட்சி யாக*
*உரமிகப் புரண்டு வாய்நீ*
*ருறிநெஞ் செரித்து வாந்தி*
*திரமுட னுதிரஞ் செய்யுஞ்*
*செய்கையை யறிந்து கொண்டு*
*சுரமுறு கெர்ப்ப சூலைக்*
*குணமெனச் சொல்லு வாரே!* 289

சுரம் காணும். மாதவிடாயில் உதிரம் மிகுதியும் போகும். வாயில் அடிக்கடி வாய்நீரூறும். நெஞ்செரித்து வாந்தியை உண்டாக்கும். உதிரப்போக்கு மிகுந்து காணும். இக்குணங்

களைக் கண்டால் அது சுரமுடன் கூடிய கெர்ப்பசூலை என அறிந்து கொள்ளலாம்.

## மருந்து

நல்லெண்ணை கொத்தான் சாறு
நலமுறு கோழி ரத்தம்
பல்லுள்ளி யுடனிந் துப்பு
பலைதிரி கடுகு மோதஞ்
சில்லென கடுகு காயந்
திருகுகள்ளிப் பாலுங் காரங்
கில்லென காய்ச்சிக் கொண்டால்
கெர்ப்பசூ லையும்விட் டோடும்! 290

நல்லெண்ணெய், முடக்கொற்றான்சாறு, கோழி இரத்தம், பூண்டு, இந்துப்பு, திரிபலை, திரிகடுகு, ஓமம், கடுகு, பெருங்காயம், திருகுகள்ளிப்பால் சேர்த்துக் காய்ச்சிக் கொண்டால் கெர்ப்ப சூலை விட்டோடும் என்பர்.

## மலட்டுப் புழுவின் குணம்

தலம்பயி லடிவ யிற்றில்
தாக்கியுள் குத்து மல்லால்
திலம்பயில் மாதம் வந்தால்
தினந்தினம் வகுத்தம் பாரங்
குலம்பயில் பலநி றங்கள்
கொள்கையாய்க் காணு மென்று
நலம்பெற முனிவன் றானும்
நயனமா யருளி னாரே! 291

பெண்களின் அடிவயிற்றில் தாக்கி உள்குத்தாக வலித்து மாதவிடாய் வந்தால் தினம் தினம் துன்பத்தை வலியால் ஏற்படுத்தும். இரத்தப் போக்கு பலநிறங்களில் காணும். இவை மலட்டுப்புழு வயிற்றில் உள்ளதன் அறிகுறி என முனிவர் கூறுவர்.

### சாறு

விடியும் பேதளூ நீயிதான்
வேப்பிலை கொண்டு வந்து
இடித்துடன் பிழிந்து நன்றா
யெட்டுநாளும் குடிப்பா யாகில்
கடிப்புழு கெட்டு மாய்ந்து
கருவுமுண் டாகு மென்று
தடுத்தியி முனிவன் றானும்
தமிழினால் சாற்றி னாரே! 292

விடியற்காலமே வேப்பிலையைக் கொண்டு வந்து சாறு பிழிந்து எட்டுநாள் குடித்தால் மலப்புழு கெட்டு, மாய்ந்து கருவுண்டாகும் என்று முனிவர் அருளினார்.

### கருவினக் காலன் பேயின் குணம்

கருவினக் காலன் பேயின்
காரண முரைக்கக் கேளாய்
அரிவையே மாதர் விடையி
லடுத்தது திண்ண மாகுஞ்
சருவியே கனவு காட்டிச்
சரீரமும் வறண்டு காய்ந்து
இருமலு மயக்கு வாந்தி
இடர்மிகச் செய்யுந் தானே! 293

மாதவிடாயை அடுத்து கருவினக் காலன் பேய் உண்டாகக் காரணமுண்டு. இது மாதவிடாயை அடுத்து ஏற்படும். உடம்பு வறண்டு காய்ந்து, இருமல், மயக்கம், வாந்தி போன்ற துன்பங் களைச் செய்யும்.

### மருந்து

இந்தப்பேய் தனக்கு வேப்பி
னிலைச்சாறு நாலு நாழி
அந்தனீர் தனிற்பியி நாறி
அரைத்துநாற் பலம்பூ னாகம்

வெந்தமாய் நறுநெய் நாழி
விட்டித மாகக் காய்ச்சி
சந்தமாய் வடித்து நக்கத்
தானிந்த நோயும் போமே
எந்திரம் ஒன்று எழுதிக் கட்டவும்! 294

வேப்பிலைச்சாறு சுமார் 5.2 லி. அளவு எடுத்துக் கொண்டு, இச்சாற்றில் பீ நாறியை அரைத்து, 140 கி. பூனாகம், நல்லநெய் 1.3 லி. விட்டு பதமாகக் காய்ச்சி வடிகட்டி உள்ளங்கையிலிட்டு நக்க இந்த நோய் நீங்கும்.

## கீழ்க்கவிசையின் குணம்

கனத்திடுஞ் சாணை போலே
கவிழ்ந்தபடி வயிற்றைப் பற்றிச்
சினத்திடும் பாக்கு மாவி
செருமியே பற்றி நொந்து
அனத்திடும் வறளும் பின்னை
ஆசையும் மோக மற்றால்
வினைசெய் யுங்கீழ்க் கவுசி
விதமெனக் கூற லாமே! 295

வயிறு கனக்கும்; வயிற்றைப் பற்றிக்கொண்டு செருமி, வலியையும், வறட்சியையும் ஏற்படுத்தி, அதிக ஆசையினால் மோகத்தால் கீழ்க்கவிசை ஏற்படும்.

## மேற்கவிசையின் குணம்

கூறுமேற் கவுசி நோய்தான்
குண்டலம் போலே வந்து
மாறிரு புறமும் பற்றி
வலித்திரை தேறி விம்மி
மீறிடு வாதை மெத்த
விகற்பமும் மயக்க முண்டா
யாறிடும் பின்னை வந்து
அமனியா அதுவுந் தானே! 296

மேற்கவிசை நோயானது குண்டலம் போல் தோன்றும். வயிற்றின் இருபுறமும் பற்றி, விம்மி, வாதைசெய்யும். விகற்பத்தையும் மயக்கத்தையும் உண்டாக்கும் என்பர்.

## மருந்து

*வெண்காரமுஞ் சிறுதிப்பிலி மிளகான சுக்கு*
*பண்பாயின நேர்வாளமும் படையுப்புடன் காந்தம்*
*நண்பாயின பெருங்காயமும் நண்ணீர் கழல்பருப்பு*
*தன்பாயின மொன்பானிது சரியாயெடு யிடையே!* 297

வெண்காரம், சிறுதிப்பிலி, மிளகு, சுக்கு, நேர்வாளம், வெடியுப்பு, காந்தம், பெருங்காயம், கழல்பருப்பு இவ்வொன்பதும் சமஎடை எடுத்துக் கொள்க.

*இடையானது சரியாகவே யெடுத்தேயிந்த மருந்தை*
*அடவாகவே யெருக்கப்பளு பன்னீர்தனி லரைத்து*
*தடைதான்ற யெருக்கம்பழுப்பத் தன்னா லதைமூடி*
*புடமானது வேருள்ளிடு பொதிந்தே புடமிடுவாய்!* 298

சமஎடை சரியாகக் கூட்டி இந்த மருந்து பொருட்களைப் பன்னீர்விட்டு அரைத்து எருக்கம் பழுப்பிலைகளால் மூடி கவசம்செய்து புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

*இடுவாய்வளர் சாவல்புடம் இயல்பாகவே சமைந்தால்*
*அடுசெந்தழல் விளவெந்தபின் னமரும்பத மறிந்தே*
*உடுமென நீறும்யெரு யுளவைத்தன் மருந்தை*
*கடுதாக யெடுயரை கலப்பானிற் கடுக்காய் வெந்தநீரால்!* 299

பத்து வறட்டியில் புடம் போட்டு இயல்பான செந்தழல் விட்டு எரித்து அது அமருகின்ற பதமறிந்து நீறெடுத்து அதனைக் கடுக்காய் வெந்த நீரில் அரைத்துக் கொள்ளவும்.

*நீராலரை நன்றாகவே நிகழுண்டை யுந்தேதான்*
*சீராமணக் கெண்ணை யிஞ்சிச் சாற்றால் கொள்ள*

தாராளமாய்க் கழிந்தால்யிருத்த தண்ணீருட னன்னம் பொசி
பேரானது ரோகம் பிணிபிசக்கும் வகைகேளாய்! 300

அரைத்த இம்மருந்ததனைச் சிறுசிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். ஆமணக்கெண்ணெயில் அல்லது இஞ்சிச் சாற்றில் இவ்வுருண்டையை உட்கொள்ளவும். பேதி தாராளமாய்க் கழியுமானால் மோர் சாதம் உண்ணவும்.

கேளாய் குணமே குத்துடன்
கிளறும் வெப்புப் பார்வை
கோளே செய்யுங் கீழ்க்க விசை
கோளே செய்யும் மேற்கவி சையுடன்
நாளே போகுங் குடகரியும்
நழுவண்ட வாயு விதுவுஞ்
சாளே செய்யும் விப்புருதி
தனியா வீக்கங் குலைமுட்டி! 301

இம்மருந்து உடல் குத்து, வெப்பு, கீழ்க்கவிசை, மேற்கவிசை, குடகரி, அண்டவாயு, விப்புருதி, வீக்கம் இவை நீங்கும்.

குலைமுட்டி சூலை குன்மங்
காளுபல பித்தஞ் சோகை
மாலை பாண்டு சலமூட்டு
பெருவயறு சயரோகங் காச
சிலேற்பஞ் சில்லிட்டுக் காடைச்
செவ்வல் சிறுகோழி கவுதாரி வூடுக் குருவி
வெள்ளாடும் புழுசல நாடன்
சுறாவிரால் நத்தை முருங்கை
முள்ளி சுண்டை கறிநன்றே! 302

குலைமுட்டி சூலை, குன்மம், பித்தம், சோகை, பாண்டு, சலமூட்டும், பெருவயிறு, சயரோகம், காசம், சிலேற்பனம், உடல் சில்லிடுதல் இவை நீங்கும். செவ்வல், சிறுகோழி (வெடைகோழி), கவுதாரி, வீட்டுக்குருவி, வெள்ளாடு,

சுறா, விரால், நத்தை, முருங்கை, முள்ளி, சுண்டை ஆகியன இம்மருந்தின் போது உண்ணத் தக்கதாகும்.

### தலைச் சொறி நீராம்பலின் குணம்

*தனிவலி நீரு மாகித்*
*தன்ன தலைசெவி யடைக்கும்*
*முனிவொடு பேசு வார்த்தை*
*மூண்டமைச் சுரமு முண்டாம்*
*மனமிடி மிகவுண் டாகும்*
*மலமது சிறுக வீழ்ந்து*
*சனிவகை யறிந்து பாகுமந்*
*தலைசொறி நீராம்ப லாமே!* 303

தலைவலி நீருமாகி, தலையும் செவியும் அடைத்தல், சுரமுண்டாதல், மனச்சோர்வு மிகவுண்டாகும். மலம் சிறுகச் சிறுக அடிக்கடி கழியும். இவை சன்னி, தலைச்சொறி, நீராம்பல் ஆகியவற்றின் குறிகுணங்களாகும்.

### மருந்து

*சுக்கொன்று மிளகு ரண்டு*
*திப்பிலி மூன்று கடுக்காய் நாலு*
*தாக்குங் கருஞ்சீர கமஞ்சு*
*தான்பொடித்தே வென்னீ ரிலுண்ண*
*தலைச்சொறி நீராம் பல்போம்*
*வைக்கு மெண்ணைக் கிதுதன்னை*
*வகையாய் நெல்லி னீர்கூட்டி*
*தக்கக் காய்ச்சித் தான்முழுகத்*
*தலைச்சொறி நீராம்ப லாமே!* 304

ஒரு சுக்கு, இரண்டு மிளகு, மூன்று திப்பிலி, நான்கு கடுக்காய், கருஞ்சீரகம் ஐந்து இவற்றைப் பொடித்து வெண்ணீரில் உண்ண தலைச்சொறி, நீராம்பல் இவை நீங்கும்.

மேற்பொடியுடன் எண்ணெய் சேர்த்து வகையாய் நெல்லி நீர்கூட்டிக் காய்ச்சித் தலைமுழுக தலைச்சொறி, நீராம்பல் போம்.

## நீராம்பல் குணம்

உடம்புலர்ந் துள்ளிரும லுண்டா
முதரம் வீங்கி னாவறண்டு
தடங்கண் வெளுத்துப் புறங்காலுந்
தடித்து வீங்கித் தாகமுமாய்
அடந்தே மூச்சுத் துடந் தோடும்
அனந்தல் மிகவும் வாடாது
மடந்தாய் சொன்னோம் நீராம்பல்
வருத்துங் குணங்க ளிதுவாமே! 305

உடம்பு உலர்ந்து, உள்ளிருமல் உண்டாகும்; வயிறு வீங்கி, நாவறண்டு, கண்வெளுத்து, புறங்காலும் தடித்து, வீங்கி, தாகமாய் மேல்மூச்சு வாங்கி, தூக்கம் ஏற்பட்டு உண்டாகும் நோய் நீராம்பல் நோயாகும்.

மார்புக்குள் வயிறு தாழ்ந்து
வகைபட விக்கந் தோன்றி
நேரொத்த காயம் வற்றி
நிறமது வெளுத்து நாவும்
நீர்வத்தி தண்ணீர் தேடும்
நினைவுற்றுப் பலதுங் கொட்டும்
வார்கட்டு முலையி னாளே
வகுத்துநீ ராம்பல் தானே! 306

வயிறானது பெருத்து மார்பு வரை முட்டிக்கொள்ளும். வயிறு வீங்கும்; உடம்பு வற்றும். உடல் வெளுத்து நாவுலர்ந்து தண்ணீர் தாகம் ஏற்பட்டு, நினைவையும் மங்கச் செய்யும் குணம் கொண்டது நீராம்பல்.

## பேராம்பல் குணம்

விங்குஞ் சலமும் மிகக்கோக்கும்
மிகுந்தே பொருமும் உடலெங்கும்
வாங்கு முறக்கந் தனைத்தேடு
மறுகித் துயர்மிகுந் தெங்குந்

தூங்குங் கண்ணு மேல்மூச்சுஞ்
சுவையும் பிளியிற் தாகிக்கும்
ஏங்கு மிகவே பேராம
லிதுவே செய்யுங் குணமான்றே! 307

பேராம்பல் கண்டோர்க்குச் சலம் மிகக் கோர்க்கும், பொருமல் ஏற்படும், உடல் இளைக்கும். எப்போதும் தூங்கத் தோன்றும். துயர்மிகும். கண்ணும் தூங்கும், மேல் மூச்சும் வாங்கும்.

## மருந்து

காந்தக் கல்லும் அரைப்பொடியும்
கருதுமோர் பலமாய்க் கொண்டு
தீந்த வெண் கார லிங்கமுடன்
சீனக் காரம் பலமுறைகள்
வேந்தனாம் வெடியுப் பிந்து
வெண்கலங் காயங் கால்கழஞ்சு
ஊந்திடுங் கடுகு மோதம்
முள்ளி யுங்கொடு வேலிகேள்! 308

காந்தக் கல்லும் அரப்பொடியும் முறையே 35 கி. எடுத்துக் கொண்டு, வெண்காரம், லிங்கம், சீனக்காரம், வெடியுப்பு, இந்துப்பு, பெருங்காயம் வகைக்கு 1½ கி., கடுகு, ஓமம், உள்ளி, கொடிவேலி இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

இனமுங்கே ளரிதாரங் கழல்பருப்பு
மஞ்சள் கிளறுநல்ல கிரியரத்தை
வாள்கடுகு ரோணி கெந்தம் சூதம்
வகைக்கு யரைக்கால் பலமாக
வேண்டுமரி கடுக்காய் நீற்றில்
விளங்கவே யரைத்து நன்றாய்
நீள நெல்லிப் பிரமாணங்கொள்
நீராம்பல் பேராம்பல் போமே! 309

அரிதாரம், கழற்சிப்பருப்பு, மஞ்சள், அரத்தை, கடுகு ரோகணி, கெந்தகம், சூதம் வகைக்கு 4½ கி., கடுக்காய் இவற்றை அரைத்து நெல்லிப் பிரமாணங்கொள்ள நீராம்பலும் பேராம்பலும் நீங்கும்.

## உதரத்தோட குணம்

*கருவியு மந்தம் பற்றிக்*
*காயமும் மிகவே வற்றி*
*பெருகிய யுதரந் தானும்*
*பிணங்கியே பொருமி விம்மி*
*மருவிய யுண்டி மாறி*
*மலத்தையும் பறிப்ப தென்னிற்*
*பெருகிய யுதரத் தோஷம்*
*பெருவயி றென்ன லாமே!* 310

வயிற்றில் மந்தம் ஏற்படும். உடல் இளைக்கும். வயிறு பருக்கும். பொருமி, விம்மி, உணவிலும் விருப்பம் கெடும். மலச்சிக்கல் ஏற்படும். இவை பெருவயிறு எனப்படும் உதரத்தோட குணங்களாகும்.

## மருந்து

*பெருங்காயம் வசம்பு கொடுவேலி*
*பின்னைக் கருஞ்சீரக மோதஞ்*
*செருங்கொட்டை கடுக்காய் கழல்பருப்பு*
*சிவதை வெள்ளுள்ளி யிந்துப்பு*
*வருங்காந்தம் வெந்தயம்*
*மஞ்ச ளுடன்நற் சீரகமும்*
*இருபு திரிகடுகு பொடித்துண்ண*
*இல்லை யுதர தோஷமென்னே!* 311

பெருங்காயம், வசம்பு, கொடிவேலி, கருஞ்சீரகம், ஓமம், சேங்கொட்டை, கடுக்காய், கழல்பருப்பு, சிவதை, வெள்ளுள்ளி, இந்துப்பு, காந்தம், வெந்தயம், மஞ்சள், நற்சீரகம், திரிகடுகு இவற்றைப் பொரித்துத் தின்ன வயிற்றுதோஷம் நீங்கும்.

## வெப்பு வீக்கத்துக்கு மருந்து

வெப்பத்தில் வீக்கந் தோன்றில்
விபரமாய் முன்னோர் சொன்ன
வெப்பத்த கோழி முட்டை
யுப்பிலிச் சாற்றில் வெந்து
செறபதி னேழு நாளுந்
தின்பது சொல்லக் கேளு
தப்பிலா தருந்து வீரால்
தகர்ந்திடும் வீக்கந் தானே! 312

வெப்பத்தினால் வீக்கம் தோன்றினால் உப்பிலிச் சாற்றில் கோழிமுட்டையை வேக வைத்து தொடர்ந்து பதினேழு நாட்கள் உண்டுவர வீக்கம் குறையும்.

இந்து கடுக்காய் மிளகுசுக்கு
இதுவுங் கடுகு ரோகணியும்
முந்த நிறையே கழஞ்சுகொண்டு
முதிருங் கிரியா நேர்வாளம்
அந்தப் படியே யிதுகழஞ்சு
அரிய தேசிப் பழச்சாற்றில்
இந்தப் படியே யரைத்துண்டை
இடவே சூரிக் காயளவே! 313

இந்து, கடுக்காய், மிளகு, சுக்கு, கடுகுரோகணி இவை முறையே 5 கி. எடுத்துக்கொண்டு அதே அளவு நேர்வாளம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து உருண்டை செய்து சூரியக்காயளவு வழங்கலாம்.

## மகோதரத்தின் குணம்

அங்கமு மடக்க வீங்கி
யாமெலிந் தாக மாகி
மங்கியே யுதரந் தன்னில்
வாவுஞ் சலமுங் கோர்த்துக்

கங்குசேர் நேர்மா றாக
கடியதோர் வாதை பண்ணும்
மங்குதல் குலவு மாதே
மகோதர மென்ன லாமே! 314

அங்கம் வீங்கிக் காணும். அடிக்கடி தாகம் எடுக்கும். வயிற்றில் வாயு சேர்ந்து சலம் கோர்த்துக் கொள்ளும். கடுமையான துன்பத்தை ஏற்படுத்துமிவை மகோதரத்தின் குணங்களாகும்.

காந்த மரப்பொடி கெந்தஞ் சூதங்
கருஞ்சீரக முடனரி தாரந்துத்தம்
மீய்ந்த துருசு வெண்கார
மிந்துப்புச் சீனக்காரஞ் சவுக்காரங் காயம்
ஆய்ந்த வெந்தயங் கறியுப்பு
அயமோதகம் வெடியுப்பு திரிகடுகு கொடிவேலி
வாய்ந்த திரிபலை சிவதைக்கு பொடித்துத்தின்ன
மகோதரங்கள் திரும் மனிதருக்கே! 315

காந்தம், அரப்பொடி, கெந்தகம், சூதம், கருஞ்சீரகம், அரிதாரம், துத்தம், துருசு, வெண்காரம், இந்துப்பு, சீனக்காரம், சவுக்காரம், பெருங்காயம், வெந்தயம், கறியுப்பு, அயம், ஓமம், வெடியுப்பு, திரிகடுகு, கொடிவேலி, திரிபலை, சிவதை இவற்றைப் பொடித்துத் தின்ன மகோதரங்கள் நீங்கும்.

**சுயமாக்கினி குமாரன்**

நல்லனாவி ஒன்றி ரண்டு
நல்ல சிலை இரதம் நாலும்
சொல்லுங் கெந்தகம் எட்டாகும்
துலங்கு காந்தம் பதினாறு
வெல்லும் அரப்பொடி எண்ணாங்கு
விரைந்தே இஞ்சிச் சாறதனில்
வல்ல பொடியை யரைத்ததனை
வாகாய் வழித்துத் தான்திரட்டே! 316

நன்கு சுத்தம் செய்யப்பட்ட நாவி ஒன்று, மனோசிலை இரண்டு, இரசம் நான்கு, கெந்தகம் எட்டு, காந்தம் பதினாறு அரப்பொடி முப்பத்திரண்டு என்ற அளவில் எடுத்து இஞ்சிச் சாற்றில் அரைத்துக் கொள்ள வேண்டும்.

*திரட்டே யேரண்டத் திலையை*
*திறமாய் மும்மூன் றிலைபொதிந்து*
*முரட்டா னாறு சுத்தியொரு*
*மூலை தனிலே வைத்திருக்க*
*பெறட்டே யல்லத் தியெரியும்*
*பொருத்தா லாறி பென்னெடுத்து*
*மிறட்டே செய்யும் வியாதிகள்நீர்*
*விடவே யோடுங் கண்டீரே!* 317

ஏரண்டத்திலையை மும்மூன்றாய் மேல் மருந்தினுள் பொதித்து முரட்டான நாரினால் சுற்றி ஒரு மூலையில் வைத்துத் தீ யெரிக்கவும். தீயாறியபின் எடுத்து வியாதிக்கேற்ப உண்ணலாம்.

*நாலு சூதஞ் சிலைரண்டு*
*நல்ல கெந்தகம் நாலிரண்டு*
*தாலக் காந்தம் பதினாறு*
*தகறும் லோக மிதிரைட்டி*
*ஏலங் குழலீர் மாமயிலே*
*இயல்பாய் மூன்று நாளரைத்து*
*தாலம் தனிலே வைத்திருக்கத்*
*தணலா யெரியுங் கண்டீரே!* 318

இரசம் நான்கு, மனோசிலை இரண்டு, நல்ல கெந்தகம் எட்டு, காந்தம் பதினாறு, உலோகம் முப்பத்திரண்டு இவ் விகிதப்படி இம்மருந்துகளை எடுத்துக்கொண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து அரைத்துத் தணலிலிட்டு எரித்துக்கொள்ள வேண்டும்.

கண்டிகுன்மஞ் சூலை பெருவயிறு
கதித்த பித்த காமாலை
குண்டல வாய்வு குடல்வாதங்
குடல்கரி யேப்ப மீளையிருமல்
அண்ட வாய்வு யராச்செணிப்பு
யக்கினி மந்தம் மட்டபீலிகையுங்
கண்டு சொன்னோ மிவையெல்லாங்
கருதிச் செய்யும் பெரியோரே! 319

குன்மம், சூலை, பெருவயிறு, பித்த காமாலை, குண்டல வாயு, குடல்வாதம், குடல்கரி வாயு, ஏப்பம், ஈளை, இருமல், அண்டவாயு, அக்கினி மந்தம், பீலிகை இவை நீங்கும்.

## பிரமேக குணம்

மண்டலந் தன்னி லுள்ள
மனிதராண் பெண்ணுள் ளோர்க்கு
கொண்டதோர் பிரமே கந்தான்
கொள்ளுமுன் தேடு நோய்கள்
கண்டிடு முடல்கை கால்கள்
கண்களு மெரித்துக் காந்தி
உண்டநாச் சுவரிக் கூட்டா
துடையையும் நீர்ப்பாயுந் தானே! 320

பிரமேகங் கண்டோர்க்கு அந்நோய் காணுமுன் உடல், கை, கால், கண்கள் இவற்றில் எரிச்சல் ஏற்பட்டு வெப்பம் அதிகமாகி நாகுழறி, நாவில் நீரோடி உடையையும் நனைக்கும்.

கேளாய் போக மனுதினமும்
கீனு மடகிப் பதமதனால்
கோளாய்க் குதறும் பலதோஷம்
கொடிய குருக்கள் பிதாமாதா
வாழால் கன்னிக் காப்பளித்து
வம்புங் கடந்து மாறிருமல்

மாளா மாளும் வியாதியினால்
வலிய சலமு மாய்விடுமே! 321

தினமும் போகம் மேற்கொண்டால் பல தோஷங்கள் ஏற்படும். நோய்கள் ஏற்படும் என்பர்.

மாதருடன் மாமயலில் மாமிகுதி தெண்டியப்பாய்
சேதமுற வருநோய் தேடியே-யாதரவில்
வந்துநொந்து மெள்ள வளரும் பிரமியங்கள்
சிந்தைதனிற் காண்பார் தெளிந்து! 322

மாதர் மீது மோகம் கொண்டு மிகுதியும் போகம் கொண்டால் துன்பம் ஏற்பட்டு பிரமியங்கள் வளரும் வாய்ப்பிருப்பதைச் சொல்கிறது இப்பாடல்

வந்து மிகுந்து வளரும் பிரமியத்தில்
முந்த யிருவாத முளைக்குமே-பிந்த
யுண்டமெனுஞ் சூலை யதுவும் பவுந்திரமு
முண்ட தெனவே யுரை! 323

பிரமிய நோய் தோன்றி அதன்பின் அதனின்று சூலையும், பவுந்திரமும் முளைக்கும் என்பர்.

கோதையார் கலவி போத
கொழுத்தமீ னிறைச்சி போதப்
பாதுவாய் நெய்யும் பாலும்
பாந்துநீ ருண்பீ ராகிற்
சோதபாண் டுருவ மிக்க
சுக்கிலப் பிரமே கந்தான்
நாதினீ ரிழிவு சேர
யுண்டென வரிந்து கொள்ளே! 324

கோதையர் கலவிக்குமுன் கொழுப்பு தரும் இறைச்சி, மீன் வகைகள், நெய், பால், உண்டு பேதம் கொண்டால் பாண்டு, பிரமேகம், நீரிழிவு இவை தோன்றும்.

உட்டிண ரோகத் தாலும்
உறும்பெரு பசியி னாலும்
கட்டவிழ் கோதை மாதர்
கலவிமாட் டாண்மை யாலு
முட்டரும் நாலு மாரும்
மும்மூன்று மூன்றா மென்று
திட்டமாய் வருவ தென்று
திருமுனி யருளிச் செய்தார்! 325

உட்டிண நோய், பசி, அளவிலா பெண்போகம் இவற்றால் மேற்சொன்ன நோய்கள் மூன்றும், ஆறும் அடுக்காய் வரும் என்று அறியவும்.

## வாத, பித்த சிலேற்பனம்

இந்திரிய நீறு போலு
மிலவங்கத்தின் மூக்குப் போலும்
நந்தலை மூளை போலும்
நலியாதே புறப்பட் டாலும்
அந்தலை வாதம் நாலும்
அடுத்திடும் பித்த மாறும்
வந்திடு சிலேற்ப மொன்பான்
வருமென வகுத்த வாறே! 326

இந்திரியம் நீறுபோலவும், இலவங்கத்தின் மூக்கு போலவும், தலை மூளை போலவும் நலியாமல் தோன்றினால், வாதநோய் நான்கு, பித்தநோய் ஆறு, சிலேற்பனம் ஒன்பது இவை வருமென வகுத்துள்ளனர்.

## வாதநோயின் குறிகுணம்

வாதத்தால் வரும்நா லுக்கும்
வருகுண மதனைக் கேளாய்
நீதி யிடுப்புக் கடுப்பென்னும்
நிலையும் நடையு மொன்னாது

போத யசன மேறாது
பிறமே நீரும் விளக்கெரியும்
மாதே பற்றீடங் கோமியமு
மாறிக் காணும் சன்னியரே! 327

வாதத்தால் ஏற்படும் நான்குவகை நோய்கட்கும் உண்டாகும் குணங்கள் பின்வருமாறு. இடுப்பில் கடுப்புண்டாகி நடையில் சிரமத்தை ஏற்படுத்தும். உணவு செல்லாது. நீர் இழியும் போது எரியும், கோமியத்தின் நிறமும் மாறிக்காணும்.

பவத்தா லெடுக்கும் மீவைநான்கும்
பயந்ததும் பாலி ரத்தம்நாறும்
கவக்குக் கவக்கெனப் பின்னெடுக்குங்
கனைக்கு மிருமல் சற்றுவரும்
ரிவக்கோ மூத்திர மிறச்சினீர்
னினம்நீர் பிக்கும் பலகுணமும்
மிவற்குற் பனத்தை யளியாது
யிட்ட மருந்து மோராதே! 328

இந்நான்கு நோய் கொண்டோர்க்கு விந்துவில் இரத்தம் நாறும். வாந்திபண்ணும். இருமல் வரும். மூத்திரம், இறைச்சி நீர், நிணநீர் போன்று காணப்படும். இப்படிப்பட்ட பலகுணங் களைக் கொண்டிருக்கும்.

## பித்தநோயின் குறிகுணம்

பித்தப் பிறமலை உப்ப
பித்தத்தால் வருமா ருக்கும்
பிலத்தானை மதம்போ லுறையுங்
கத்தாளை நாத்தம் நாறுவதுங்
கைகாலெரிவு விந்துபால் நாறுவது
முத்தே நீர்பட்ட விடந்தோறு
முனிந்தே யெரித்தே நாறுவதும்
பத்தி யுடல்போ லழன்றுவரும்
ஆக்கக் கடுத்துக் கழியுமென்னே! 329

பித்த பிரமியமேகம் பித்தமிகுதியால் யாருக்கும் வரும். உடம்பு கற்றாழை நாற்றமடிக்கும். கை கால் எரிச்சல் ஏற்படும். விந்து நீரில் பால்நாற்றம் அடிக்கும். உடல் அழன்றுபோகும். மலம் கடுத்துக் கழியும்.

*நில நிறமஞ் சள்நிறம்*
*நித்தம் புளிய நிறஞ்*
*சால நிறஞ்சாம் பல்நிறஞ்*
*சதிரா யங்க ரைத்தநிறம்*
*கோல நிறமு மிகு மாட்டிறச்சி*
*கொழுநி ணத்தில் பசாதநிறம்*
*மாலனை யகிரி தவளை*
*வடுவொடு பித்த நீரிதுவே!* 330

நீல நிறம், மஞ்சள் நிறம், புளியநிறம், இப்படிப் பல நிறங்களில் பித்தம் கண்டோர்க்கு நீரிறங்கும். அங்கநிறம், கோலநிறம், மாட்டிறைச்சி, கொழுநிணத்தின் நிறம், தவளை நிறங்களில் பித்த நீர் காணப்படும்.

## சிலேற்பன நோயின் குறிகுணம்

*உத்ததோ ரிளநீர் போலு*
*முகந்துயிந் திரியங் காணும்*
*வயத்த பச்சை நிறமுண்டா*
*மன்னு மிவனுங் குகைபோலா*
*மெத்த யிரத்த மாபோலும்*
*மின்னும் பழுப்புப் பூவரிக்கும்*
*மித்த நீர்பால் தயிர்வாச*
*முண்டாமெறும் பியும் வீழுமே!* 331

இந்திரியம் இளநீர் போன்றும் காணப்படும். பச்சை நிறமாயுங் காணும். இவ்விந்து, இரத்தம் போலவும், மா போலவும் காணப்படும். நீர், பால், தயிர் போன்றவற்றின் வாசனைகளைக் கொண்டதாக இருக்கும்.

அடிக்கடி பருகி நீரும்
அதிகா சத்துடன் வழுவழுக்கும்
மிடுக்கி நீரருமை வேர்வை
மெய்யுளை யுள்ள பார்வை
திடுக்கென யிருமல் நேர்ந்தால்
தென்மலை முனிவன் சொன்னார்
அடுக்கமாஞ் சிலேற்ப னத்தின்
னொன்பதின் கூற தாமே! 332

அடிக்கடி நீரைப் பருகச் செய்யும். தாகத்தை ஏற்படுத்தும். விந்துநீர் வழுவழுப்புடன் காணப்படும். நீர்குடித்தல் குறையும். உடம்பு உளைச்சல் ஏற்படும்; பார்வை மங்குதல், திடீர் திடீரென இருமல் உண்டாதல் இவை ஒன்பது வகை சிலேற்பனத்தின் குணங்களாகும்.

## சலப்பிரமேகத்தின் குணம்

மாதம் பலனாள் வருமே மிகச்சடைக்கும்
சேத மிகுதியாய் செய்விக்கும்-வாதம்
வருமே பவுந்திரம் வழாமேக சூலை
தருமேசலப் பிரமேகந் தான்! 333

சலப்பிரமேகம் எனும் நோய் மாதத்தில் பல நாட்கள் வரும் துன்பந்தந்து வாதம், பவுந்திரம், மேகசூலை இவற்றையும் உண்டாக்கும்.

வந்து மிகுந்து வழலும் பிரமியத்தில்
முந்த வரும்வாத முளைக்குமே- பிந்தவே
அண்டமெனுஞ் சூலை யதுவும் பவுந்திரமு
முண்ட தெனவே வுரை! 334

மேலும் பிரமியத்தினால் வாதம் உண்டாகும். சூலையும், பவுந்திரமும் உண்டாகும் என்பர்.

நீரை யொருக்கும் நிறுத்து மடைபடுத்தும்
பாரமிகுத் தோஷத்தைப் பத்திவைக்கும்-சேரவே

*கூடும் புணர்ச்சிமிகக் கூடாது தாது கெட்டு*
*வாடும் பிரமியந்தான் வந்து!* 335

பிரமிய நோய் கண்டோர்க்குச் சிறுநீர் கழித்தல் குறையும், நீர் சுருங்கும், துன்பந்தரும். தோஷங்களை உண்டாக்கும். இந்நோயினர் புணர்ச்சியில் அதிகமாக ஈடுபடக்கூடாது ஈடுபட்டால் தாது கேடடையும்.

*நீருங் கடுத்துச் சலமுடைத்து*
*நின்றே யிளைத்துச் சலம்விழ்ந்து*
*சேரும் யிரத்தந் தன்னுடனே*
*தினவாய் வறளில் வீழ்ந்துநிற்கும்*
*பாருங் காயம் நாளொன்றில்*
*பாழாய் முடங்கி மப்படுத்தும்*
*வாரஞ் சென்றால் மரணந்தான்*
*மயக்கும் சலப்பிர மேகமதே!* 336

நீர் கடுத்துப் போகும். நீர் உடைந்து இளைத்து, இரத்தத் துடன் விழும். உடம்பு மிகவும் நொந்து காணப்படும். ஒருவார காலத்திற்குள் இச் சலப்பிரமேகத்தால் மரணம் உண்டாகும்.

## பிரமேக வகைகளுக்கு நெய்

*சீனக் காரம் பொரிகாரம்*
*திரளிந் துப்பு சவுக்காரம்*
*தானத் தெடுத்துப் பொடியாக்கி*
*தனிநா யுருவி பனங்கதிரும்*
*பானக் கதலித் தண்டுடனே*
*பரிவாய்ச் சுட்டுச் சரிசமனாய்*
*தேனிற் குழைத்துத் தின்பிரால்*
*தெரிக்குங் கலத்துன் மாங்கிஷமே!* 337

சீனக்காரம், பொரிகாரம், இந்துப்பு, சவுக்காரம், இவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து, நாயுருவி, பனங்கதிர், வாழைத் தண்டு இவற்றைச் சுட்டுப் பொடித்து இரண்டையும் சமமாகக் கலந்து தேனில் குழைத்துத் தின்றால் மாங்கிஷம் நீங்கும்.

*பொன்னாங் காணி சீதேவி*
*புதுநில வேம்பு சிறுகீரை*
*மன்னர் புகழ்கீழ்க் காய்நெல்லி*
*வகுத்த தாளி துயிலுடனே*
*முன்னா ரோதும் நெய்தலுடன்*
*முழுநீர்ப் பூலா முசுமுசுக்கை*
*யின்னார் வராகி குளிப்பதுவு*
*மினிய துடனே சித்தமல்லி!* 338

பொன்னாங்காணி, சீதேவி, வேம்பு, சிறுகீரை, கீழ்க்காய் நெல்லி, நாகதாளி, நெய்தல், நீர்ப்பூலா, முசுமுசுக்கை, வராகி, சிற்றாமல்லி இவற்றின் சாறு வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்க.

*பேரா மல்லி நிலக்குமிழ் முல்லை*
*புன்னை நன்னாரி லாமிச்சமுத்தம்*
*மூரி வேலி நரிப்பயிறு பிராமுட்டி*
*தண்ணீர் முட்டான் சாறதுவும்*
*மூரி யாவின் பால்நாழி யிளநீ*
*ரொக்கத் தயிர்தண் ணீர்நாழி*
*எரிய சந்தங் கோட்ட மதிமதுரம்*
*மிலவங்கஞ் சீரகந் தக்கோலம்!* 339

பேராமல்லி, நிலக்குமிழ், முல்லை, புன்னை, நன்னாரி, விலாமிச்சு, முத்தக்காசு, வேலிப் பருத்தி, நரிப்பயிறு, பேராமுட்டி, தண்ணீர் மிட்டான்சாறு, பசும்பால், இளநீர், தயிர்தண்ணீர் இவற்றையும் வகைக்கு 1.3 லி. சேர்த்து எரித்துக் கொள்க. அதில் சந்தனம், கோட்டம், அதிமதுரம், இலவங்கம், சீரகம் தக்கோலம் இவற்றையும் வகைக்கு 10கி. சேர்க்க.

*கோலஞ் சாத்திரவேதி கிளியூறல்*
*கொடிய மாஞ்சில் சதகுப்பை*
*சில மேலங் கச்சோலங்*
*சிறந்த சாதிக்காய் கிராம்பு யிருவேலி*

வால வசுவாசி தன்னுடனே
வகையோ ரொன்று யிருகழஞ்சு
மாலொக்கக் கூட்டி நெய்நாழி
வகையாய்க் குடிக்க நல்லதிதே! 340

சாத்திரவேதி, கிளியூறல், சடா மாஞ்சில், சதகுப்பை, ஏலம், கச்சோலம், சாதிக்காய், கிராம்பு, வெட்டிவேர், வசுவாசி இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துச் சேர்த்து 1.3 லி. நெய் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும்.

## மருந்து

இரதம் ஈயங் சேங்கொட்டை
மிலகுஞ் சங்கு வெண்ணீறும்
புறமே செய்யு மஞ்சளோ
டொக்க வோரொன்றாது யுந்தான்
தரவே நாலு கழஞ்சாக்கிச்
சமனே செய்து பொடிகூட்டி
விரவா யிடவே வேர்ப்புண்ணு
மீளும் வாத பிரமியமே! 341

இரசம், ஈயம், சேங்கொட்டை, சங்கு வெண்ணீறு, மஞ்சள் இவற்றை வகைக்கு 20 கி. எடுத்துப் பொடித்துண்டால் வேர்ப்புண்ணும், வாத பிரமியமும் குணமாகும்.

## குடிநீர்

வெற்பாலை யகிலா வரைச்சந்தம்
வேர்க்கொம்பு முத்தக் காசு
பற்ப டாகம் நிலவேம்பு
பகரும் புடோல்வில்வங் கூட்டி
யுற்பனமுடன் கிசாயம் வெந்து
யுண்டிடில் பிரமே கங்கள்
விற்பன முடனே தீரும்
விஷிதிரி தோஷம் போமே! 342

வெட்பாலை, அகில், அவரை, சந்தனம், சுக்கு, முத்தக்காசு, பற்பாடகம், நிலவேம்பு, புடோல், வில்வம் இவை கூட்டி முறைப்படி குடிநீர் செய்து பருகினால் பிரமேகங்கள், விஷ திரிதோடங்கள் தீரும்.

## எண்ணெய்

*முள்ளிவேர் நாவல் வறட்பூலா*
*முத்தமொடு நன்னாரி முல்லைசீந்தில்*
*தெள்ளிய செந்தாமரை சிற்றாமுட்டி*
*சீதேவி விதிருநல் வாகையுடன்*
*கொள்ளுவது யிருவேலி பொன்னாங்காணி*
*குலாவுமிலா மிச்சமொடு குளரியாம்பல்*
*மெள்ளவே யாவின்பால் விட்டுக்காய்ச்சு*
*மிளவே மூன்றொன்றாய் வெந்த பின்பு!* 343

முள்ளிவேர், நாவல், வறட்பூலா, கோரைக்கிழங்கு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றாமுட்டி, சீதேவி, வாகை, இருவேலி, பொன்னாங்காணி, விலாமிச்சு, குளரி, ஆம்பல் இவற்றைப் பசும்பால் விட்டுக்காய்ச்சி வெந்து மூன்றில் ஒன்றாகச் சுருங்கும் வரை காய்ச்சவும்.

*என்றபினெய் யாகநாழி யிசைய விட்டு*
*இயல்புடைய சீனி முந்திரிகை பெருஞ்சீரகம்*
*குன்றவிடு வெண்கோஷ்ட மேலங் குலாவு*
*கருஞ்சீரகம் நாகப்பூ கச்சோலம் பச்சிலையும்*
*மன்றலமாஞ் சந்தமுடன் கெணிதை வேதி*
*மருவுங் கிளியூறல் வங்கங் கூட்டி*
*நன்றதுசெண் பகமொட்டு மதுரம் நெல்லி*
*நாடலிளத் தோல்பன்ன தாம்பழநிம்மத் தோலும்!* 344

பின்னர் இருபத்து நான்கு நிமிடங்கள் கழித்து சீனி, முந்திரிகை, பெருஞ்சீரகம், வெண்கோட்டம், ஏலம், கருஞ்சீரகம், நாகப்பூ, கச்சோலம், திருநீற்றுப்பச்சிலை, சந்தனம், கிளியூறல்

வங்கம், செண்பக மொட்டு, அதி மதுரம், நெல்லி, எலுமிச்சம் பழத்தோல் இவற்றைப் பொடித்து எண்ணெயில் போடவும்.

*இன்னம் நல்ல சீரகம்*
*இயல்பாய் வெந்தே தான்வடித்து*
*மின்னே யரைமண்டலம் மேவி*
*வினவிக் கொள்ள விதமாகச்*
*சொன்ன படிபிர மேகந்*
*துலைந்தோடு மென்று சொல்லி*
*யன்னிய மிலாதுமுனி யருளினாரே!* 345

நல்ல சீரகத்தையும் உடனிட்டு இயல்பாக வெந்த பின்னர் வடித்து எடுத்து 20 நாட்கள் முறைப்படி உண்டுவர பிரமேக நோய் விட்டுப் போகும் என முனிவர் கூறியுள்ளார்.

## சூரணம்

*விடையங் கல்மத மஞ்சனக்கல்*
*வேர்க்கொம்புடன் முத்தக் காசு*
*அடவாம் வெள்ளி லோத்திரமு*
*மழகு சூத மதிமதுரம்*
*உடனே பொடித்துமுக் கழஞ்சிட்டு*
*உழக்குக் கழுநீ ருடனுண்ணில்*
*திடமா மிரத்த மதிசாரஞ்*
*சேர்ந்த யெலும்பு றுக்கியுமே!* 346

அதிவிடையம், கல்மதம், அஞ்சனக்கல், சுக்கு, முத்தக்காசு, வெள்ளிலோத்திரம், இரசம், அதிமதுரம் இவற்றைப் பொடித்தத் தூளை 15 கி. அளவு எடுத்துக் கொள்ளவும். அதனுடன் 325 மி.லி. அரிசி கழுவிய நீரில் போட்டு உண்டு வந்தால் அதிசாரமும் எலும்புருக்கி நோயும் தீரும் என்க.

## குடிநீர்

*ஆவரை முல்லை மின்னி*
*அகழுடன் சிறுவேர் காந்தம்*

மாவிடங் கொளுந்து அத்தி
வசம்பு பூலாக் கடுக்காய்
நீயவரை சுக்கு காய்ச்சி
நீய்பத்து நாள்கு டித்தால்
பாவிடுந் திரிதோ ஷங்கள்
பறந்திடும் மேகந் தானே! 347

ஆவாரை, முல்லை, மின்னி, சிறுவேர், காந்தம், மாவிடங் கொழுந்து, அத்தி, வசம்பு, பூலா, கடுக்காய், அவரை, சுக்கு இவற்றை நீரிட்டுக் காய்ச்சி குடிநீராகப் பத்து நாட்கள் பருகி வந்தால் திரிதோஷமும் மேகங்களும் தீரும்.

## பத்தியம்

மானார் விழியீர் கறிகேளீர்
மலம்நீர் கழிந்த மானிடர்க்கு
கானில் வாழு முயலுடும்பு
காடை சேவல் கவுதாரி
யூனார் வெள்ளு டும்புக்கண்ட
முள்ளா னாகு மிதுவல்லால்
மீனிற் சுறாவிரா லாமைநத்தை
விதமாங் கிசங்க ளிவையாமே! 348

மலமும் நீரும் முறையாகப் போக்கியவர்கள் காட்டு முயல் மற்றும் உடும்பு, காடை, சேவல், கவுதாரி, ஊணான், வெள்ளுடும்பு, மீன்வகைகளான சுறா, விரால், ஆமை, நத்தை, மாங்கிஷங்கள் இவற்றை உண்ணலாம்.

பூமொய்த் திருக்கும் முருங்கையிலை
பூவும் பிஞ்சும் புடலங்காய்
தியமை யிலாத முசுட்டையிலை
சிறந்த பொன்னாங் காணிவளை
தாமை யிதனைக் கறிகூட்டத்
தப்பா தொழியும் பிரமேகம்
மாமாம் வியாதி யடங்கலுக்கும்
அடுத்த கறிய ளிதுவாமே! 349

பூப்பூத்த முருங்கை மரத்தின் இலை, பூவும், பிஞ்சுமாக உள்ள புடலங்காய், முசுட்டை இலை, பொன்னாங்காணி, இவற்றைக் கறியாக்கி உண்ண பிரமேக நோய்கள் தீரும்.

*கொள்ளுங் காடி குமட்டிக்காய்*
*கோழி பன்றி பூசணிக்காய்*
*முள்ளு பெரிய பாகல்காய்*
*முழுதும் நல்ல சுரைக்காயும்*
*கிள்ளுக் கீரை அரைக்கீரை*
*கிளறுஞ் செம்பு பயிறுடனே*
*எள்ளத் தனைதான் தின்பிராய்*
*எல்லா மருந்து மிழந்திரே!* 350

காடி, கொம்மட்டிக்காய், கோழி, பன்றி, பூசணிக்காய், பெரிய பாகற்காய், சுரைக்காய், கிள்ளுக்கீரை, அரைக்கீரை, செம்புப் பயிறு இவற்றை எள்ளளவு உண்டால் கூட எல்லா மருந்தின் தன்மைகளும் இழந்துவிடும்.

*மாங்கா யிளநீர் வழுதலங்காய்*
*மாப்பண் டங்கள் புளிக்கடுகு*
*தேங்காய் நாரும் பெருங்காயந்*
*திருவுக் கினையாந் திருவுடனே*
*நீங்கா திருந்த மைய்தனங்கள்*
*நேசம் பயிலும் கூடுபானம்*
*வாங்கா திருக்கி லுண்ட*
*மருந்தெல்லாம் பலிக்கும் வாய்மையிதே!* 351

மாங்காய், இளநீர், வழுதலங்காய், மாப்பண்டங்கள், புளிக்கடுகு, தேங்காய் நார், பெருங்காயம் இவற்றோடு சூடான பானங்களையும் தவிர்த்தல் வேண்டும்.

## விஷபாகக் குணம்

*வீங்கும் வற்று மொருபக்கம்*
*மேனி வறண்டு வெம்பிடுங்கண்*

தூங்குந் தலையுங் கனத்திருக்குந்
துயர மிகுத்துத் தாகிக்கும்
வாங்கும் பொசிக்க மாட்டாது
வாய்வு டலில்விஷம் போலாம்
ஏங்கிக் கொல்லும் விஷபாகம்
இதுவே செய்யுங் குணமாமே! 352

ஒரு பக்கம் வீங்கும். ஒருபக்கம் வற்றும். உடல் வறண்டு வெம்பிக் காணும். தூங்கி எழும்போது தலை கனத்திருக்கும்; துயரம் மிகுந்து காணும். உணவு உண்ண ஒட்டாது. வாயு உடலில் விஷம் போல் பரவும். இவை விஷபாகத்தின் குணங்களாகும்.

## மருந்து

கிட்டங் காந்த மிந்துப்பு
கிரியான சீரகந் திரிகடுகு
வட்டக் கையான் சாறுதனில்
வடிவா யரைத்து யுலர்த்தியபின்
திட்ட மாகத் தேனிலுண்ணத்
தீரும் பித்தப் பாண்டுடனே
விட்டுக் கொல்லும் விஷபாகம்
விரைந்தே யோடுங் கண்டீரே! 353

கிட்டம், காந்தம், இந்துப்பு, சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைக் கையாந்தகரைச் சாற்றில் அரைத்துப் பின்னர் உலர்த்தித் தேவையான அளவு தேனில் குழைத்து உண்டால் பித்தபாண்டு, விஷபாகம் தீரும்.

## காசரோகத்தின் குணம்

இருமியே செயலுங் கெட்டு
யிடையிடை சுரமுந் தோன்றி
மருவியே மிடறுங் குன்றி
யற்பமே வாந்தி யாகி
மருவிய யசனந் தானும்
மறுத்துலர்ந் தாளும் வற்றி

*கருவியைக் குறைத்து வாடிக்*
*கசரோக மென்ன லாமே!* 354

இருமல் ஏற்படும், செயலும் கெடும். இடையிடையே சுரமும் தோன்றும், மிடற்றில் அழற்றி ஏற்பட்டு சிறிதளவு வாந்தியும் உண்டாகும். உணவினை ஏற்காது தாளும் வற்றி, உடல் குறையும். இக்குறிணங்களைக் கண்டால் அது காசரோகம் எனப்படும்.

## மசரோகத்தின் குணம்

*மாதர் மயக்கம் குத்திட்டில்*
*வந்தே யிருமல் புலால்நாறும்*
*சேத மிகவே பயித்திமாய்ச்*
*செரியா தெரித்தேப் பம்விடும்*
*வாதை மிகுமே கடிவிஷம்போல்*
*வருத்து மீளை இருமலையும்*
*நீதி பயிலுஞ் சிரத்தில்மிக*
*நின்றே மசக்கிக் கொன்றிடுமே!* 355

பெண்மயக்கம், இருமல், புலால் நாற்றம், பித்தம், உண்ட உணவு செரியாது புளித்தேப்பம் உண்டாதல் விஷக்கடி போல் வலி மிகுதியாதல், ஈளையும் இருமலும் உண்டாகி தலை நோக்காடாதல் போன்றன மசரோகத்தின் குணங்களாகும்.

*இந்தநோய் நின்ற நாளில்*
*யிதுகச ரோக மாகும்*
*முந்தவே வெப்பும் பித்த*
*முடுகிடக் குளிரு மேலு*
*மந்தநோய்க் குணங்கள் கண்டா*
*லயர்ந்திடு மெந்த நாளும்*
*கெந்தொகை யாவின் பாலுங்*
*கீரையும் பருக லாமே!* 356

மசரோகம் நின்ற நாளிலிருந்து இது கசரோகமாக மாறும். வெப்பும் பித்த நோய்களும் உருவாகும். குளிரும், மேலும்

மந்த நோய்க் குணங்கள் கண்டால் அயர்ச்சி ஏற்படும் போதெல்லாம் கீரையும் பசும்பாலும் அருந்தலாம்.

## நெய்

சிறுசுண்டை வேர்பனி ரெண்டுபலஞ்
சேரு நீர்பதி னஞ்சுபடி
மருகநா லொன்றாய்க் காய்ச்சி
மாதளம் பூவு னாகஞ்
செரிசீரகமோர் பலம்நறுநெய்
சேர்பால் மூன்று நாழியதும்
இறுகக் காய்ச்சி வடித்துண்ண
யெழுங்காச ரோகந் தானே! 357

சிறுசுண்டைவேர் 420 கி., 19.5 லி. நீர்விட்டு நான்கி லொன்றாய்ச் சுருங்கக் காய்ச்சி, மாதளம் பூ, சிறு நாகப்பூ, சீரகம் இவை முறையே 35 கி., நல்லநெய் 280 கி., பால் 3.9 லி. இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து உண்டால் காசநோய் நீங்கும்.

## சூரணம்

திரிகடுகு கிராம்பு ரண்டு
சீரகம் நெல்லி முள்ளி
குறிபெறு மதுர மேலங்
குணமுடன் சமனாய்க் கூட்டி
பொறிகுன்றி யிலைத்தூள் பாதி
பொருந்தவே கலந்து கொண்டு
வெறிபடு தேனில் திண்ண
வாருங் காச நோய்சொன்னோம்! 358

சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, இரண்டு வகைச் சீரகம், நெல்லிக்காய், அதிமதுரம், ஏலம் இவற்றைச் சம அளவு எடுத்துக் குன்றிமணி இலைத்தூள் கலந்து தேனில் குழைத்துப் பொடித்து உண்டால் காசநோய் நீங்கும்.

பொக்கணம் பிச்சி மூலம்
போதவே தானி டித்து
தக்கதோ ராவி நெய்யில்
தானது குழைத்த ருந்தில்
துக்கமே யெழும்பி மெய்யிற்
றுயருள்ள ரோக மெல்லாம்
மிக்கையா மசக்குந் தீந்து
மிகுந்தவஞ் சினையும் போமே! 359

பெருமருந்து, பிச்சி மூலத்தை இடித்துப் பசு நெய்யில் கூட்டிக் குழைத்துச் சாப்பிட உடம்பில் ஏற்பட்ட பல நோய்களும் நீங்கிப்போகும்.

## அவிகாசத்தின் குணம்

இருமலு மிளைப்பு முண்டாம்
யிளையு மிருந்து வாங்கும்
மருவியே வயிறு தானும்
மந்தமே பற்றி நிற்கி
லருவழிந் துடம்பு வற்றி
யுறுதியைக் கெடுக்கு மாகில்
அருவையே மயிலே சொன்னேன்
அவிகாச மென்ன லாமே 360

இருமலும் இளைப்பும் உண்டாதல்; ஈளை மிகுந்திருத்தல், வயிறு மந்தப்படுதல், உடம்பு வற்றி உடலுறுதியைக் கெடுக்கும். இவை அவிகாசத்தின் குணங்களாகும்.

## காச சிலேட்டுமத்தின் குணம்

விண்ணைச் சுழலுந் துயர்மிகும்
வெளுத்தே வற்றித் திமிர்ந்தெங்கும்
கண்ணைப் பார்க்கில் மஞ்சனித்துக்
கனத்தே முகமும் பழுப்பேறும்
எண்ணிக் கருமு மொன்றுசெய்யி
லிளைப்பே யிருந்து துயரமுண்டாம்

நண்ணில் பெரிய தாதுகெடும்
நவிலுங் காச ரோகமிதே! 361

வானமே சுற்றுவது போன்று தோன்றும், துயரம் மிகும். உடல் வெளுத்து வற்றி திமிர்ந்திருக்கும். கண் மஞ்சளித்துக் காணும். முகமும் பழுப்பேறும். சிறுசிறு வேலைகள் செய்தால் கூட களைப்பேற்படும்; தாதுகெடும். இவை காச சிலேட்டுமத்தின் குணங்களாகும்.

## மருந்து

கையாந் தகரை பீலியிலை
கடிய நொச்சி யாடாதோடை
செய்ய வழறு மாமணக்குச்
சிறக்கு மிவையி னிலைச்சாறும்
பொய்யா திதுவும் னானாழி
போட கிட்டம் பொடிசெய்து
மய்யாய் நாழிப் புடம்போட்டு
மீளச் சுவற வெயில்வையே! 362

கையாந்தகரை, பீலியிலை, நொச்சி, ஆடாதோடை, ஆமணக்கு இவற்றின் இலைச் சாறு வகைக்கு 5.2 லி. எடுக்கவும். இரும்புக் கிட்டத்தைப் பொடித்துச் சாற்றுடன் சேர்த்து நேக அரைத்து 24 நிமிடம் புடம் போட்டெடுத்து வெய்யிலில் காயவைத்து அளவறிந்து உட்கொள்ளவும்.

## சூரணம்

வைத்தே யெருக்கின் பால்சிரங்கை
மணக்குங் கிராம்பு திரிகடுக்காய்
மெய்த்த நிலவி னுப்புடனே
மேயுங் கருஞ்சீ ரரைப்பொடியும்
நெய்த்த யுள்ளி சாஞ்சாலை
நிறையோ ரொன்று முக்கழஞ்சு
கய்த்த தகரை பிரமியிலை
கசக்கிக் சாற்றா லரைத்துணர்த்தே! 363

எருக்கம்பால் உள்ளங்கையளவு எடுத்து அதனுடன் கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கருஞ்சீரகம், அரப்பொடி, உள்ளி இவை முறையே 15 கி. எடுத்துக் கொள்ளவும். உலர்ந்த தகரை, பிரமியிலை இவற்றைக் கசக்கிய சாற்றால் அரைத்துக் கொள்ளவும்.

*உணர்த்திப் பொடிசெய் யொன்றுபட்டு*
*ஒருநா ளொன்று வெருகடிகொள்*
*பிலத்த பித்த பாண்டுவெனிற்*
*பேணும் நறுநெய் யதிற்கொள்ளு*
*நலக்கும் வெப்புப் பார்வைக்கும்*
*நன்றாய்ப் பெண்ணே சீனிக்கொள்ளும்*
*கலக்குங் காய ரோகமென்னிற்*
*காயாய்ப் பசும்பா லதிற்கொள்ளே!* 364

அரைத்ததை உலர்த்திப் பொடி செய்து ஒன்றாகக் கலந்து மூவிரலளவு நெய்யில் உட்கொள்ள பித்த பாண்டு நோயும் வெப்புப்பார்வை நோயும் நீங்கும். இம்மருந்தை உட்கொண்டால் மருந்துண்டவுடன் சர்க்கரை உட்கொள்ள வேண்டும். கயரோகமென்றால் இம்மருந்தைப் பசும்பாலில் உட்கொள்ளலாம்.

## உளைமாந்தைக் குணம்

*இருமிச் சுரமாய்த் தலைவலியா*
*யிறங்கா தன்னம் விஷம்போல*
*பெருக்கக் குத்தி யுளைந்துவரும்*
*பிதற்றும் பலது வாய்வெறுவி*
*உருகிச் செயலுங் கெட்டுவரும்*
*உறக்க மறவே துயிலாது*
*யொருமைப் படவே கோழைகக்கும்*
*உளைமாந் தைக்குண மிதுவே!* 365

இருமலுடன் சுரம், தலைவலி இவை ஏற்படும். உணவில் விருப்பம் இருக்காது. விஷம்போல் வயிறு குத்தி உளைந்து

வரும். வாய்பிதற்றும் வாய்வெறுவும், உறக்கம் கொள்ளாது, கோழைகக்கும். இது உளைமாந்தைக் குணமாகும்.

நெஞ்சுடன் பருத்துப் பக்கம்
நினவழிந் திருமி நொந்து
பஞ்சுபோற் சுரமுந் தோன்றிப்
பழுத்துள்ளே கோழை கக்கி
அஞ்சவே அய்யம் பித்தம்
அசனமும் ஒருத்து வந்தால்
துஞ்சிடா துண்மை சொன்னேன்
உளைமாந்தை யென்ன லாமே! 366

நெஞ்சு பருத்துக் காணும். நினைவிழக்கும். இருமல் ஏற்படும், சுரம் தோன்றும். சளி முற்றி கோழை தள்ளும், ஐயம். பித்தம் இவையிரண்டும் அதிகமாகி உணவை வெறுக்கும், தூக்கம் பிடிக்காது. இவை உளைமாந்தை நோயின் குணங்களாகும்.

**குடிநீர்**

ஆடா தோடை பிடிநரம்பல்
யடுத்த பலாவின் விதையெட்டுக்
கோடா சுக்கு தேவதாரங்
கொடியாய்ப் படறு முடக்கொத்தான்
வேடார் மஞ்சள் சிறுசுண்டை
வேரும் நிறுத்துக் கழஞ்சாகத்
தேடா துத்தி திருவளத்தி
செல்லு மூன்று பலங்கொள்ளே! 367

நடு நரம்பு நீக்கிய ஆடாதோடை ஒருபிடி, பலாவின் விதை எட்டு, சுக்கு, தேவதாரம், முடக்கொத்தான், மஞ்சள், சிறுசுண்டை இவை முறையே 5 கி. எடுத்துக்கொள்ள வேண்டும். இதனுடன் துத்தியும் வளத்தியும் வகைக்கு 105 கி. சேர்த்துக் கொள்ளலாம்.

தாமரைக் கிழங்கு பலமாகத்
தகுமாங் கோட்டங் கால்பலமும்
வாமாஞ் சீரகம் நாற்கழஞ்சு
மலர்ந்த நெல்பொரி கழஞ்சுரெண்டு
ஈமாந் தண்ணீர் படியெட்டு
யதனி லிடித்திட் டேகாய்ச்சி
ஓமந் திப்பிலி பொடித்துண்ண
யுளைமாந்தை கள்தா னோடிடுமே! 368

தாமரைக் கிழங்கு 35 கி., கோட்டம் 8.5 கி., சீரகம் 20 கி., நெல்பொரி 10 கி. இடித்து 10.4 லி. தண்ணீர் விட்டுக் காய்ச்சி, ஓமம், திப்பிலியைப் பொடித்துக் கூட்டி உண்ண உளைமாந்தை குணமாகும்.

## நெய்

பூவாஞ் சாறு நெய்நாழி
பொன்னரி தார மரைக்கழஞ்சு
மேவிக் காய்ச்சு நன்றாக
ஷிதமாய் வடித்துக் கொண்டுனெய்
யேவார் வீளியா யெட்டு
நாள்தனை யருந்துவி ராகில்
ஓவி வந்த யுளைமாந்தை
ஓடி யொளியுங் கண்டீரே! 369

2.5 கி. பொன்னரிதாரத்தை 1.3 லி. பசு நெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி வடித்துக்கொள்ளவும். இதனைத் தொடர்ந்து எட்டு நாள் அருந்துவோமானால் உளைமாந்தை நோய் நீங்கும்.

## கற்கம்

குன்றி முசுட்டை கொடுவேலி
குறையா திதுவும் பருத்தியிலை
நின்றோர் விலத்தின் குமிள்வேரும்
நீதிப் பயிலும் பீலியிலை

சென்றோர் பிடிகொள் சித்தமல்லி
சேர வரைத்துப் பசுவின்பால்
அன்றே குடிக்கி லுளைமாந்தை
யகலு சயல்புண் ணாறிடுமே! 370

குன்றி, முசுட்டை, கொடுவேலி, பருத்தியிலை, குமிழ்வேர், பீலியிலை இவை வகைக்கு ஒரு கைப்பிடியளவு எடுத்துக் கொள்ளவும். சிற்றாமல்லியும் இதனுடன் சேர்த்து அரைத்துப் பசுவின் பாலில் பருகில் உளைமாந்தை நீங்கும்.

## நெய்

வெந்தயஞ் சீரகஞ் சீனக்காரமதி
விடையங் கொத்தமல்லி கல்நார்
சந்தனந் திரிகடுகு திரிபலையுஞ்
சிவதைசமனாய் கழஞ்சோ ரைங்கழஞ்சு
முந்தவே யாவி நெய்யில்
முயற்சியாய் வெந்து கொள்ள
உந்தியி லிரும லுள்மாந்தையும்
.....ஒடிப் போமே! 371

## நெய்

வெந்தயம், சீரகம், சீனக்காரம், அதிவிடையம், கொத்தமல்லி, கல்நார், சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சிவதை இவற்றைச் சம அளவில் எடுத்துக் கொள்ளவும். இவற்றைப் பசுநெய்யில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். இம் மருந்தை முறைப்படி உண்டுவந்தால் இருமலும் உளைமாந்தையும் நீங்கிப்போகும்.

## எண்ணெய்

நிலக்குமிழ் துடரி பூலா
நிலத்துருகும் நின்பஞ் சம்பு
பலப்பட யஞ்சுங் கொள்ளப்
பலசரக் கதனைக் கேளாய்

நலப்படுங் கோட்ட முள்ளி
நற்கடு தான்றி நெல்லி
குலப்படு மதுரம் பாடல்
கூட்டியே எண்ணை வையே! 372

நிலக்குமிழ், துடரி, பூலா, எலுமிச்சம் பழம், நாவல் இவற்றுடன், கோட்டம், உள்ளி, நற்கடுகு, தான்றி, நெல்லி, சர்க்கரை இவற்றைச் சேர்த்து எண்ணெயிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

## பிட்டு

குறிஞ்சி யிலையைக் குருவைநெல் மாவில்
செறிந்தே களிக எண்ணையுடன் தின்னயறிந்தி
உளைமாந்தை யுள்மூச் சுடம்பிலது நோயுங்
களைதிந்து கண்ணடைக்குங் காண்! 373

குறிஞ்சி இலையைக் குறுவை அரிசிமாவில் பிட்டவித்து எண்ணையுடன் கலந்து உண்டால் உளைமாந்தையும் களைப்பும். தீரும் என்பர்.

வேங்கைமாந்தே தோலுடனே வெங்குறுவை நெல்லை
யாங்கதனைப் புட்டா தாக்கியே-பாங்குடனே
எண்ணைதனிற் சோருந்த எண்ணு முளை மாந்தை
புண்ணதனைச் சீயோடும் போம்! 374

வேங்கை மரத் தோலுடன் வெங்குறுவை அரிசி மாவினைச் சேர்த்துப் பிட்டாக்கி எண்ணெய் சேர்த்துண்ண உளைமாந்தையும் புண்ணில் சீழ் ஓடுதலும் குறையும்.

## கற்கம்

உப்பிலியின் வேரு யுகந்தவிடத் தலையும்
செப்புமொசு மொசுக்கை சேர்முள்ளி- யிப்படியே
கோவின்றும் பாலில் குடிக்க விழுந்தோடும்
தாவு முள்மாந்தை தான்! 375

உப்பிலியின் வேர், விடத்தலை, முசுமுசுக்கை, உள்ளி இவற்றைச் சேர்த்தரைத்துப் பசும்பாலில் பருக உளைமாந்தை நீங்கும்.

### எண்ணெய்

*சித்த ருகந்த சிவவேம்பு*
*திருந்த நிலத்திற் குமிள்வேரும்*
*கொத்தங் கோட்டம் வேம்பாடங்*
*குலவுங் கருஞ்சீ ரதிமதுரம்*
*மெத்த மிளகு திப்பிலியும்*
*வெந்தே யெண்ணை விழுங்கினக்கால்*
*பத்தே எட்டு நாள்தண்ணீர்*
*பறந்தே யோடு முளைமாந்தை!* 376

சிவனார் வேம்பு, நிலக்குமிழ்வேர், கோட்டம், வேம்பாடம், கருஞ்சீரகம், அதிமதுரம், மிளகு, திப்பிலி இவற்றைப் பொடித்து எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி தொடர்ந்து பத்து நாட்கள் சாப்பிட உளைமாந்தை நீங்கும்.

### குவளை விப்புருதியின் குணம்

*விடுப்புடன் முள்ளந் தண்டு*
*யிருபுறம் விலாக்கள் நெஞ்சு*
*நடுக்கிடுங் குளிர்வெ துப்பு*
*நய்யவே கொதித்துக் குத்தும்*
*அடுத்திடுஞ் சோப மாக்கு*
*மயக்கமோ டிருமிச் சியும்*
*குடிக்கொள்ள விருந்த தென்னிற்*
*குவளைவிப் புருதி யாமே!* 377

முள்ளந்தண்டும் விலாக்களின் இருபுறமும் நெஞ்சும் நோகும். நடுக்கல் உண்டாகி, குளிர் வெதுப்பும், உடல் சுரம் கொண்டு கொதிக்கும். குதத்தில் குத்தல் ஏற்படும். சோபை உண்டாகும். மயக்கத்தோடு பொருமல் உண்டாகிடுமானால் அவை குவளை விப்புருதி நோயின் குணங்களாகும்.

இந்தநோய் நின்ற நாளு
மிருவியே சீயு முண்டாய்
வந்துதா னாளும் வற்றி
மடுத்திடு சோப மாக்கு
முந்தவே அய்யம் பித்த
முடுக்கிட குளிர்ச்சி வெப்பு
வந்துமுச் சிளைப்பு ரெத்தம்
வற்றிடில் மரண மாமே! 378

இந்த நோய் கண்ட நாளிலிருந்து இருமலும், சீழும் உண்டாகும். உடல் வற்றும்; சோபையை உண்டாக்கும். ஐயம், பித்தம், குளிர்ச்சி, வெப்பு, மூச்சிரைப்பு, இவை உண்டாகி இரத்த ஓட்டம் சீர்கெட்டு இரத்தம் வற்றுமானால் விரைவில் மரணம் உண்டாகும் என அறியலாம்.

## மருந்து

காரிய மிரத மரிதாரம்
கஞ்சாத் திரிபலை திரிகடுகிந்து
சீரிய வக்கிராக் கொடுவேலி
சேருஞ் சமனஞ் குமரிச்சாற்றரைத்துக்
கூரிய கையாந் தகரையிற்
குணமுட னரைத்து லர்த்தி
கொண்டிடுந் தேனி லேதான்
கோரித்த வியாதி யான
குவளைவிப் புருதி போமே! 379

காரியம், இரசம், அரிதாரம், கஞ்சா, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, அக்கிராகாரம் கொடிவேலி இவற்றைச் சம அளவு எடுத்து, குமரிச்சாற்றால் அரைத்து மீண்டும் கையாந்தகரைச் சாற்றாலும் அரைத்துலர்த்தித் தேனில் உண்ண குவளை விப்புருதி போகும்.

## இரத்த காசத்தின் குணம்

அண்டியே யிருமிக் குத்தும்
அடிக்கடி ரெத்தம் விழும்

மண்டியே வெளுத்துக் காயம்
வளுவளுத் துலத்தும் வாயும்
பண்டியுஞ் சுருங்கும் நாளில்
பதங்கெட வருமே யாகில்
கண்டிடாய் மயிலே ரெத்த
காசமென் றுரைக்க லாமே! 380

இருமலுடன் குத்தல் ஏற்படும். அடிக்கடி இரத்தம் வீழும்; உடம்பு வெளுத்துக் காணும், வாய் உலரும்; வயிறு சுருங்கும் ஆகிய இவ்வகை குணங்கள் கண்டால் அது இரத்தகாசமென்று உரைக்கலாம்.

## மருந்து

கோவையு முசுமு சுக்கை
குன்றியுங் கொடுப்பை நெல்லி
யாவரை கொத்தான் கற்றாழை
யாம்பல்வளை யஞ்சம் பிரமம்
யாவின்பா லிளநீர் நெய்தா
னதுசமன் கோட்டஞ் சந்தம்
பாவித்தே சேர்த்துக் காய்ச்சி
பருக ரெத்த ரோகம் போமே! 381

கோவை, முசுமுசுக்கை, குன்றி, கொடுப்பை, நெல்லி, ஆவாரை, கொத்தான், கற்றாழை, ஆம்பல், தூதுவளை இவற்றுடன் பசும்பால், இளநீர், நெய் இவற்றைச் சமன் சேர்த்து, கோட்டம், சந்தனம் இவற்றை முறைப்படிக் கலந்து காய்ச்சிப் பருக இரத்த காசம் நீங்கும்.

## மந்தார காசத்தின் குணம்

தூயதோர் நாசி தன்னில்
தும்மலு மிகவுண் டாகி
தோயும்நீர் விழுந்து நெஞ்சு
துடித்துளைந் தீளை வாங்கும்

மாயுமந் தார காசத்
தடவிது தானே யென்று
மாயமா முனிவன் சொன்ன
வளமையைக் கண்டு கொள்ளே! 382

நாசியில் தும்மல் மிகுதியும் உண்டாகும். அதனால் நீர் கசிந்து நெஞ்சு துடித்து உளைந்து ஈளை உண்டாகும். மந்தாரகாசம் உண்டானோர்க்கு மேற்படி குறிகுணங்கள் காணப்படும் என்பது முனிவர் வாக்கு.

## எண்ணெய்

சாரணைக் கிழங்கு மற்றஞ்
சதாவேரிக் கிழங்குங் கூட்டி
விருள்ள சீந்தில் விட்டு
விரும்பியே யாடா தோடை
மாறிய பிரமிச் சாறும்
மாதளை வளையே மஞ்சள்
ஆரிய அமுக்கி ராவும்
மதுவது பலமாய்க் கொள்ளே! 383

சாரணைக்கிழங்கு, சதாவேரிக்கிழங்கு, சீந்தில், ஆடாதோடை, பிரமிச்சாறு, மாதுளை, தூதுவளை, மஞ்சள், அமுக்கரா இவை வகைக்கு 35 கி. வீதம் எடுத்துக்கொள்ளவும்.

கொள்ளறு நாழி தண்ணீர்
குமுறவே யொக்க விட்டு
மெள்ளவே காஞ்ச தூறி
வெந்துதா னாழி யானால்
யெள்ளிநல் லெண்ணை தானு
மிருநாழி கூட்டி யொக்கத்
துள்ளியே துலாவிக் காய்ச்சி
சொல்லிய சரக்குக் கூட்டே! 384

7.8 லி. தண்ணீரில் மேற்கண்ட பொருட்களை இட்டுக் காய்ச்சி வெந்தபின் 1.3 லி. ஆகச் சுருங்கியபின் நல்லெண்ணெய் 2.6 லி. சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

சொல்லிய சரக்குச் சுக்கு
திப்பிலி மிளகிந் துப்பு
நல்ல சீரக மோதஞ்சொல்
நற்கட சிங்கி யோடு
வெல்லிடுங் கிராம்பு ஏலம்
வெள்ளுள்ளி கடுகு ரோணி
செல்லமுக் கழஞ்சு கொண்டு
திண்ணமந் தாரகாசமும் போமே! 385

சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, கறிச் சீரகம், ஓமம், கற்கடகசிங்கி, கிராம்பு, ஏலம், பூண்டு, கடுகுரோகணி இவை வகைக்கு 15 கி. எடுத்துப் பொடித்து மேற்படி எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிப் பருக மந்தாரகாசம் நீங்கும்.

### சூரணம்

நெல்லி திப்பிலி நெற்பொரி சர்க்கரை
நல்ல தேனில் நறுநெய்யிற் கொண்டிடில்
யில்லை யில்லை யிளைப்பு மிருமலும்
சொல்ல வேணுமோ சோகையுந் தீருமே! 386

நெல்லி, திப்பிலி, நெற்பொரி, சர்க்கரை இவற்றை இடித்து நல்ல தேன் அல்லது நெய்யில் உட்கொண்டால் இளைப்பு, இருமல், சோகை இவை நீங்கும்.

### பீனசத்தின் குணம்

தலையும் வலித்தே யொருநாசிச்
சளியும் விழுந்து யொடுபட்டு
மலையும் னாளேழ் சென்றால்
வறண்டு யிறுகித் திரண்டுவிழும்
உலையு மிகவே நாற்றமதா
யூடே தண்ணீர் வீழ்ந்திருக்கும்
பிலமுஞ் சென்றே நாசடக்கில்
பீனச மென்பார் பெரியோரே! 387

தலைவலி உண்டாதல், நாசியில் சளி நீராக வழிதல், ஏழுநாட்கள் சென்ற பின் அச்சளியும் கட்டியாகிப் போதல், அச்சளி வழியும்போது நாற்றம் உண்டாதல் ஆகியன பீனசத்தின் குறிகுணங்களாகும்.

## எண்ணெய்

*சீந்தில் வட்டுத் தூதுவளை*
*சிவனார் வேம்பு நிலவேம்பு*
*போந்தே ...ன்னிக் குரும்பனையும்*
*பொன்னாங் காணி நிலக்குமிழ்வேர்*
*தேந்தே தேவி யார்நின்பஞ்*
*சித்த மல்லி பேராமல்லி*
*ஆய்ந்த முத்தக் காசுழக்கு*
*யதின்மேல் பால்விட் டெறுவதே!* 388

சீந்தில், தூதுவளை, சிவனார்வேம்பு, நிலவேம்பு, குரும்பனை, பொன்னாங்காணி, நிலக்குமிழ்வேர், எலுமிச்சம் பழம், சிற்றாமல்லி, பேராமல்லி, கோரைக்கிழங்கு இவை முறையே 325 கி. எடுத்துக்கொள்க. அதனைப் பாலில் ஊறவைத்து வேகவிடவும்.

*ஊறிக் காய்ச்சி யஞ்சிரண்டாய்*
*உறவே வெந்து பிழிந்துவடி*
*ஆறிப் போவ தின்முன்னே*
*யளந்து நெய்யும் நாழியுரி*
*கூறிட் டிடவே நல்லெண்ணை*
*குறையா தளவே யொக்கவிடு*
*வேறிட் டிடித்து வேப்பந்தோல்*
*விளாமச் சாறு யுரிகூட்டே!* 389

ஊறியபின் ஐந்தில் இரண்டாகும் வண்ணம் காய்ச்சிக் கொள்ளவும். வெந்தபின் பிழிந்தெடுத்து வடிகட்டிக்கொண்டு 1.3 லி. நெய்யையும், 650 மி.லி. எண்ணெயையும் கூட்டி, வேப்பந்தோல் இடித்த சாறு 650 மி.லி. இதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

கூட்டீர் மிளகு திப்பிலியுங்
கோட்ட மேல மதிமதுர
மோட்டும் வசம்பு வெள்ளுள்ளி
யுலாவுங் கற்கடகசிங்கி நெல்லி
வாட்ட மில்லா யிருவேலி
மற்ற கிராம்பு வசுவாசி
காட்டிப் பயிலுங் கிளியூறல்
கண்டில் வெண்ணை யதுகொள்ளே! 390

மிளகு, திப்பிலி, கோட்டம், ஏலம், அதிமதுரம், வசம்பு, வெள்ளுள்ளி, கற்கடகசிங்கி, நெல்லி, இருவேலி, கிராம்பு, வசுவாசி, கிளியூறல் பட்டை, கண்டில் வெண்ணெய் இவற்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கொள்ளே கொத்தான் மோதகமுங்
கூறு பச்சிலை கச்சோலம்
நள்ளே கரிய சீரகமும்
சேர்த்து கீர மல்லி
தள்ளா தொக்கூடி லோடு
சடாமஞ் சுடனே ரோகணியும்
உள்ளே கொண்டு வருவிரால்
ஒடிப் போகும் பீனசமே! 391

கொத்தான், மோதகம், திருநீற்றுப்பச்சிலை, கச்சோலம், கருஞ்சீரகம், கீரமல்லி, சடாமாஞ்சில், கடுகுரோகணி இவற்றை முறைப்படி இவ்வெண்ணெயில் சேர்த்துண்ண பீனசம் போகும்.

## திரி

இரதங் கெந்தகஞ் சாதிலிங்கம்
மின்னரி தாரஞ் சங்குமுட்டி
வருகுந் திருக்கம் பாசாணம்
வகையாம் நாருப் பட்டிலிட்டு
சரத மறவே திரியாக்கித்
தருகாநெய் துவைத்துக் கொளுத்தி

விரத முடனே நாசிதனில்
விடப்பி னசங்கள் வேறுமே! 392

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், சங்கமுட்டி, குந்திருக்கம், பாசாணம், அரைத்துத் திரியாக்கி நெய் துவைத்துக் கொளுத்தி நாசியிலூட்ட பீனசங்கள் அடியோடு ஒழியும்.

## மூக்குனீர் பாய்ச்சலிற் குணம்

கண்டமு முகமுந் தாடை
கரகரத் தூர லதேபோல்
துண்டமுந் தினவும் பற்றித்
தும்மியே தண்ணீர் விழ்ந்து
மண்டையுங் கனத்து நொந்து
வாதமும் பகைக்கு மாகில்
முண்டகம் மதிக்கு வாதே
மூக்குனீர் பாச்ச லாமே! 393

கண்டம், முகம், தாடை அழற்சியடையும். தினவெடுக்கும்; தும்மல் உண்டாகும். மூக்கில் நீர் வழியும். தலை கனத்து நோகும். வாதமும் உண்டாகுமானால் அது மூக்குனீர் பாச்சலாகும்.

## நசியம்

சாரணைக் கிழங்கிந் துப்பு
சாதமா மிளகு சீனி
கூரிய நறுநெய் நாழி
யோமு முலைப்பால் விட்டு
விரதாய் நய்யத் தட்டி
விடுமுக்கில் நசிய மாகச்
சீரிய முகத்திற் றோன்ற
தினவுட னடைப்பும் போமே! 394

சாரணைக் கிழங்கு, இந்துப்பு, மிளகு, சீனி இவற்றோடு தேவையான அளவு தாய்ப்பால், நெய், 1.3 லி. சேர்த்தரைத்து மூக்கில் நசியமாக விட தினவும் மூக்கடைப்பும் நீங்கும்.

**குடிநீர்**

சித்தா முட்டி யரைக்கீரை
சீந்தித் தண்டு நிலவேம்பு
முத்த மோடு தூதுவளை
மோதறி யமுக்கி ராவும்
உத்தம தாளிக் கொடியுடனே
ஓரிலைத் தாமரை சமூலம்
பத்தி யுடனே நன்னாரி
பறிந்த பலங்க ளோரொன்றே! 395

சிற்றாமுட்டி, அரைக்கீரை, சீந்தித்தண்டு, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, தூதுவளை, அமுக்கிரா, உத்தமதாளி, ஓரிலைத்தாமரை சமூலம், நன்னாரி இவை முறையே 35கி எடுத்துக்கொள்ளவும்.

பத்து மொன்று ஒரொன்று
பலமா யிடித்துப் பாங்குடனே
உத்த யாறு படித்தண்ணீர்
யூத்தி நாழி யாய்க்காய்ச்சி
ஏற்று நாழி எண்ணெய்
நெய்ப்பால் தன்னை யுடன்கலந்து
சுத்த கோட்ட மதிமதுரம்
துய்ய சீரகம் வங்கமுமே! 396

இவ்வெல்லா சரக்குகளையும் இடித்துப் பொடித்து 7.8 லி. தண்ணீர் விட்டு 1.3 லி. ஆகும்படி வற்றக்காய்ச்சி 1.3 லி. நல்லெண்ணெய், நெய், பால் இவற்றையும் உடன் கலந்து கோட்டம், அதிமதுரம், சீரகம், வங்கம் எடுக்கவும்.

மேவுங் கருஞ்சீரக மிந்து
மிகுத்த வுப்புத் திரிகடுகு

தாவு மருந் தெல்லா மிடித்துத்
தகக்கு மதினோ டொக்க
கோவு பத்திரிக் காய்ச்சியதைக்
குடிக்க மூக்கு நீர்ப்பாய்ச்சல்
மேவும்-பித்த கசரோக
மெல்லாந் தீரும் மெல்லியரே! 397

கருஞ்சீரகம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை எல்லாம் ஒன்றுசேர்த்தரைத்து அதே அளவு பத்திரியும் சேர்த்துக் காய்ச்சிக் குடிநீராக்கிக் குடிக்க மூக்கு நீர்ப்பாய்ச்சல், பித்த காசம் இவை எல்லாம் தீரும்.

## குடிநீர்

நிலப்பனைக் கிழங்கு நல்ல
நீர்வள்ளிக் கிழங்கு தானும்
நலக்கெனும் நெருஞ்சில் நல்ல
நரிண்டை தூவளை முருங்கை
உலக்கநல் முத்தம் வெள்ளரிக்
காயும்நல் சித்த முட்டி
பலக்குமுள் நெல்லிக் கீரை
பாலை புடோல் கரிப்பான்! 398

நிலப்பனைக் கிழங்கு, நீர்வள்ளிக் கிழங்கு, நெருஞ்சில், இண்டை, தூதுவளை, முருங்கை, முத்தக்காசு, வெள்ளரிக்காய், சிற்றாமுட்டி, நெல்லிக்கீரை, பாலை, புடோல், கரிப்பான்.

காட்டு மல்லி பூனைக்காலி
கடிய நொச்சி தன்னுடனே
வாட்ட மாலே யோரொன்று
வகைக்கு நாலு பலமாக
கூட்டு பதக்கு தண்ணீரில்
குலவப் போட்டுத் தியெரித்து
நாட்டும் படியே பதமறிந்து
நாலொன் றாகத் தானாக்கே! 399

காட்டுமல்லி, பூனைக்காலி, நொச்சி இவற்றை வகைக்கு 140 கி. எடுத்துக்கொள்ள வேண்டும். இதனை 10.7 லி. தண்ணீரில் சேர்த்துக் காய்ச்சி நான்கிலொன்றாகச் சுருங்கியபின் பதமறிந்து உட்கொள்ளவும்.

*கருப்பஞ் சார்பால் நாலுபடி*
*கனத்த யிஞ்சி முந்திரிகை*
*பெருகக் கலந்த லாமிச்சம்*
*பின்னை வேலி மிளகுசுக்கு*
*முருத்த முத்தம் நன்னாரி*
*மூத்த வகிலுந் தாரமுடன்*
*மிருத்து மேல மிலவங்கம்*
*மிளைய மதுரங் கோட்டமதே!* 400

கருப்பஞ்சாறு பால் வகைக்கு 5.2 லி., இஞ்சி, முந்திரிகை, விலாமிச்சம், வேலி, மிளகு, சுக்கு, கோரைக்கிழங்கு, நன்னாரி, அகில், அரிதாரம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம்,

*கடக சிங்கி யிந்துப்பு*
*கருஞ்சீரகம் வெந்தய மோதம்*
*திடதிப்பிலி சீரகஞ் சாதிக்காய்*
*சேரு சந்தனங் கிராம்பு*
*வடரும் வாசி தற்கோலம்*
*வளர்நா கப்பூச் சமுத்திராப்பழனுமு*
*முடனே சதகுப்பை திரிபலையும்*
*உகந்த வசம்பு வாலுளுவை!* 401

கற்கடக சிங்கி, இந்துப்பு, கருஞ்சீரகம், வெந்தயம், ஓமம், திப்பிலி, சீரகம், சாதிக்காய், சந்தனம், கிராம்பு, வசுவாசி, தக்கோலம், நாகப்பூ, சமுத்திராப்பழம், சதகுப்பை, திரிபலை, வசம்பு, வாலுளுவை,

*மஞ்ச ளோடு மரமஞ்சள்*
*மஞ்சிட்டி பச்சிலை கச்சோலம்*
*மிஞ்ச வோரோ ரொருகழஞ்சு*
*மிகுந்த பசுப்பால் தனைவிட்டு*

வஞ்சியே யரைத்துக் கலக்கி
வகையாய்க் காய்ச்சி யருந்திவர
துஞ்சவறுங் காமாலை பித்தமா
பாண்டுவும் பொய்த்தா ளாமே! 402

மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி, பச்சிலை, கச்சோலம் இவை முறையே 5கி எடுத்துப் பசும்பால் விட்டு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி பக்குவப்படுத்தி அருந்தினால் காமாலை, பித்தபாண்டு இவை நீங்கும்.

## மண்டை வறட்சிக் குணம்

கண்டந் தன்னில் மேல்மூன்று
கதிக்கும் மண்டை வறட்சிதன்னால்
துண்டம் புருவங் கூடும்னுதல்
சுழியிற் கண்ணிற் குத்துண்டாய்
மண்டுந் துயர்மிக வுண்டாம்
வலைபோற் கண்ணுந் தெரிவரிதாய்
மண்டை முழுதும் பரந்துகுத்தி
வருத்துங் கபால வறட்சியதே! 403

மண்டை வறட்சியினால், நெற்றி, புருவம், மூக்கு, தலைச்சுழி, கண் இவற்றில் குத்துண்டாகும். துயரம் மிக உண்டாகும். மண்டையில் முழுதும் பரவலாகக் குத்தல் ஏற்படும். இக்குறி குணங்கள் மண்டை வறட்சி நோயின் குணங்களாகும்.

## நசியம்

பூவைப் பழமும் பழவரைப்பு
புரியு மிளகோ டிந்துப்பு
யாவத் தடங்கும் புகல்கரப்பா
னதுவோ டொக்கப் பொடிகொண்டு
தாவு முலைப்பா லதிற்கலக்கித்
தருகாதே நாசியி லூற்ற
பாவக் கபால வறட்சியுடன்
பசாசு மகன்று போய்விடுமே! 404

பூவன்பழம், பழவரைப்பு, மிளகு, இந்துப்பு இவற்றைச் சம அளவு எடுத்துத் தாய்ப்பாலில் கலக்கி நாசியிலூற்ற துன்பந்தரும் கபாலவறட்சிநோய் குணமாகும்.

## குடிநீர்

*தான்றிகடு பத்திரி நெல்லி ஆழாக்கு*
*சாரும் வெட்டிவே ரிலாமிச்சம்*
*மூன்றுபல மாய்க்குருந் தொட்டி*
*மூன்றுபடி நீரில்முயங்க காய்ச்சி நாலொன்றாய்*
*ஈண்டுபசு வின்பா லிளநீ ரெண்ணெய்*
*வங்கம் வாலுளுவை கருஞ்சீரகம்*
*தோன்றுந்தா ளிசபத்ரி சாதிக்காய் கிராம்பு*
*துய்யசீனி னாகமும் அக்கிரா தாரமுடன்!* 405

தான்றி, கடுகு, பத்திரி, நெல்லி இவை முறையே 160 கி. எடுத்துக்கொள்க. வெட்டிவேர், விலாமிச்சம், குருந்தொட்டி வகைக்கு 105 கி. எடுத்து 1.3 லி. தண்ணீர் சேர்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். பசும்பால், இளநீர், எண்ணெய், வங்கம், வாலுளுவை, கருஞ்சீரகம், தாளிசபத்திரி, சாதிக்காய், கிராம்பு, சீனி, நாகம், அமுக்கிரா, அரிதாரம் இவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

*அதிமதுர முக்கழஞ்சு மற்றிவையோர் கழஞ்சு*
*யடுத்த கிஷாயந் தனைவிட் டரைத்து*
*கொதியெழும்ப மூன்றுநா ளூறிக் காய்ச்சிக்*
*கோதையே கற்றமுற முல்லைப்பூக் கூட்டி*
*வெதுவேதன் மெழுகுபத மிறக்கிக் கொண்டு*
*வென்னீரிலே முழுக மண்டைச்சூலை தலைவறட்சி வலி*
*பத்தியுடைய கண்ணோய் தன்னுடனே*
*கதிர்வாய்வு தகர்ந்து போமே!* 406

அதிமதுரம் 15 கி. மற்றவை வகைக்கு 5 கி. எடுத்து மேற்படி கஷாயத்தில் அரைத்து, மூன்று நாள் ஊறவிட்டு கொதிவரும் வரை காய்ச்சி முல்லைப்பூவையும், அதனுடன் சேர்த்து மெழுகு

பதமாக இறக்கி, தலைக்குத் தேய்த்து வெந்நீரால் மூழ்க மண்டைச்சூலை, கபாலவறட்சி, கண்ணோய், நேத்திரவாயு இவை நீங்கும்.

### சிரசு குத்துக்கு மருந்து

முட்டையுந் தினையும் நத்தை
முருங்கைப்பூ அவனி கூட்டி
இட்டமாங் கோட்டஞ் சீர
மிலுமிச்சம் பழத்த ரைத்து
சட்டமாய் தலையில் தப்பித்
தயவுட னிடுவி ராகில்
திட்டமாய் சிரசிற் குத்துஞ்
சிதறியே யோடுந் தானே! 407

முட்டை, தினை, நத்தை, முருங்கைப்பூ, அபினி இவற்றைக் கூட்டி, கோட்டம், சீரகம் இவற்றை எலுமிச்சம் பழத்தின் சாற்றில் அரைத்து தலையில் அப்பினால் சிரசுகுத்து சிதறியோடும்.

### மூலவகை ஆறுக்குங் குணம்

முதலா மொன்று வாதமா
முனிந்த யிரண்டு பித்தமாம்
மிதமா மூன்று சிலேட்டுமத்தில்
இதுவு மன்றி நாலாகும்
பதமாம் வாத சிலேட்டுமத்தில்
பண்ணு மஞ்சு ரெத்தத்தில்
பிதமாம் வாயு விரண்டாகும்
பெருத்த மூல மதுவகையே! 408

முதல்மூலம் வாத மூலமாம். அடுத்த இரண்டு பித்த மூலமாம். மீதமுள்ள மூன்று சிலேட்டும மூலங்களாகும். வாத, சிலேட்டும மூலம் நான்காவதாகும். ஐந்தாவது மூலம் இரத்த மூலமாகும். வாயுமூலம் இரண்டாகும். இவ்வகையில் மூலங்கள் ஆறுவகையினதாகும்.

எல்லா வுயிர்க்குந் தானுண்டு
இதுவே தென்னி லார்க்குருவி
வல்ல தண்டி கைசுமக்கும்
மவனமாத் திரமன்றிப் புவிமீதில்
அல்லால் மற்ற வுயிர்க்கெல்லா
மறுவகை மூல மதுவுண்டு
சொல்லவோ மூலம் மூவகையாய்த்
துலங்கக் கேளு சூழ்ந்திருந்தே! 409

மூலம் எல்லாவகை உயிர்கட்கும் உண்டு. மற்ற உயிர்க் கெல்லாம் அறுவகை மூலமும் உண்டாகும். மூலம் மூன்று வகையாக உண்டாகும் என்பர்.

உள்மூல மிரண்டு வகையாகு
முகுந்த பானில் வலப்புறத்தில்
உள்மூலம் பெண்ணாகி.....
லுகந்த யிடத்துப் புறத்தாகும்
உள்மூலத்தில் காயம் நன்றாகில்
மிகவும் நன்று உறுதிகெடும்
உள்மூல மொன்று வாதத்தா
லுகந்த ரண்டு பித்தத்தால்! 410

உள்மூலம் இரண்டு வகைப்படும். ஒன்று உடம்பின் இடப்புறத்திலும் மற்றொன்று வலப்புறத்திலும் தோன்றும். உடம்பு பலமாக இருக்குமானால், இவ்வுறுதியான உடம்பும் கெட்டுவிடும். இம்மூலத்தில் வாதத்தால் ஒன்றும் பித்தத்தால் இரண்டும் ஏற்படும்.

இந்தப் படியே யாறுவகை
இதுவே நாலு வகைபுறத்தில்
இந்தப் படியே காண்பிக்கு
மதுவு மிரண்டு வகையாகு
முந்தப் படியொன்று வாதத்தா
லிரண்டாவது பித்தத்தால்
அந்தப் படியே மூலவகை
யறியுங் குணங்க ளறிவோமே! 411

இந்த ஆறுவகை மூலங்களுள் நான்கு வகை புறத்தில் அந்தப்படியே காண்பிக்கும். அதுவும் பின் இரண்டு வகையாகும். வாதத்தால் ஒன்றும் பித்தத்தால் இரண்டும் ஏற்படும் என மூலத்தின் குணங்களை அறிந்து கொள்ளலாம்.

கண்ணால் தண்ணீர் தானெழுமே
காயங் கடுத்துக் கேடாகும்
நண்ணாய்ச் சத்தி தானெடுக்கும்
நயந்தே காயம் நொந்திருக்கும்
இன்னால் சரீரந் தான்தடவி
யிதுவு மிதமாய்க் கால்கையும்
நண்ணாய் வெதுப்பி யிருப்பிடத்தில்
நாடுஞ் சிரங்காய் வாய்நாறும்! 412

கண்ணில் தானே தண்ணீர் வரும். உடம்பு கடுக்கும், நொந்து வலிக்கும், வாந்தியுண்டாகும். கை கால்கள் வெதும்பிக் காணும். வாய் புண்ணாகி நாற்றம் உண்டாகும்.

சிறுநீ ராறுங் குத்திருமல்
சிறந்த மூச்சு நெருக்கமாம்
உறுமே சிரங்கு குத்திநோ
வுடம்பு சுடுகி லீரத்தம்விழும்
மறுமே முகமு மஞ்சளிறம்
மாகு னேக துச்சமதா
முறுமே யிரத்த யிரத்தமுத
லுற்ற சொரியுந் தான்விழுமே! 413

சிறுநீர் மிகுந்து வரும். குத்திருமல் உண்டாகும். மூச்சு விரைந்து அடிக்கடி உண்டாகும். சிரங்கு வரும். உடம்பு சுடுகில் இரத்தம் விழும், முகம் மஞ்சளிக்கும். இரத்தசொறி உண்டாகும்.

மூக்கும் நோகு மலந்திரிகி
முனிந்த பழம்போல் கறுத்திருக்கும்
மிக்குஞ் சிவந்து விழுந்தொப்புள்
மிகுத்த யிடுப்பு நொந்திருக்கும்

தக்க பசியுண் டாகாது
வயிற்றைச் சுருங்கத் தான்பிடிக்கும்
யொக்கத் திரண்டு யிறுக்கினுமே
யுகந்த மிகுதி நோவாமே! 414

மூக்கு நோகும், மலம் திருகி நன்கு பழுத்த பழம்போல் கறுத்து நிற்கும்; மிகுதியும் சிவந்து விழும், தொப்புள், இடுப்பு இவை நொந்திருக்கும். பசியுண்டாகாது, வயிற்றைச் சுருக்கிப்பிடிக்கும். வயிற்றை இறுக்கிப் பிடித்து மிகுந்த வலியை உண்டாக்கும்.

பித்தத்தி லனலுண் டாகில்
பெருத்த வலமுந் தீகை
யுத்த பழம்போல் தான்விழுமே
யுண்ணும் மலசலங் கன்னித்து
வத்த பசுவின்பால் முலைபோலே
வருமே கண்ணுஞ் சிவரீரு
மெத்த மெத்த வெளுக்கும்வாய்னீரு
மிகுத்துச் செய்யும் பித்தமிதே! 415

பித்தத்தில் அனல் உண்டாகுமானால் மலம் திரிந்து பழுத்துக் கனிந்த பழம் போல் விழும். மலசலம் கனிந்து, பசுவின் பால் முலைபோல் வெளிவரும், கண் சிவக்கும், வாய் நீரூறும். மெத்த இக்குறிகுணங்கள் கண்டால் அது பித்தத்தின் வழி சேர்க்கப்படும்.

## மருந்து

வாத பித்த சிலேட்டுமத்தில்
வருந்துங் குறிகள் மலங்கறுத்துப்
போதச் சிறுநீர் தான்மறுத்துப்
பொருந்தி விழுமே குடலோடே
மாதஞ் சோறு மதுகுத்தல்
மருவு முதரத்தி லுண்டானால்
விதலால் மலஞ்சலஞ் சிவந்திருக்கும்
மெச்ச வாயில் நோவாமே! 416

வாத, பித்த சிலேற்றுமமதில் காணப்படும் குறிகள் பின்வருமாறு. மலங்கறுக்கும், சிறுநீர் மறுத்து மறுத்து விழும். மலம் போகும்போது குடலே விழுந்துவிடுவது போலத் தோன்றும். இம்மூலம் உதரத்தில் உண்டாகியுள்ள போது மலமும் சலமும் சிவந்திருக்கும், வாய்ப்புண் ஏற்பட்டிருக்கும். வலிக்கும்.

*இதுரெண்டு வகையி லொன்றாகும்*
*மெச்ச வாய்க்கு மேலாகும்*
*மதுவாம் வலந்தான் விழும்போது*
*ஆன யிரத்த மலங்கூட்டே*
*பதமாய் ரத்தந் தான் வடியும்*
*பரிந்த குறியு மிதுவென்று*
*இதமாய் முனிவர் தான்சொன்னா*
*ரிரண்டா வதற்கு முரைப்போமே!* 417

மேற்சொன்னது இரண்டு வகையில் ஒன்றாகும். மலம் விழும்போது மலத்தின் கூடவே இரத்தமும் வீழும். மலங்கழிந்த பின்னும் இரத்தம் வடியும். இவ்வகைக் குறிகள் இரண்டு வகை மூலங்கட்கும் பொருந்தும் என முனிவர் உரைத்தனர்.

*எச்ச வாய்க்குள் தாபரிக்கு*
*மிதுக்குரி தான மலமிரச்சல்*
*வச்ச கூட்டில் விழாமல்*
*மகிழ்ந்தே நரம்பு தான்சிறந்து*
*பச்ச மறவே யிரத்தம்விழு*
*மதுவாய் குறிக ளதுவன்றி*
*நிட்சய முனிவன் மானிடர்க்கு*
*நிகழ்த்துங் குறிதா னிதுவாமே!* 418

மலவாயில் அழற்சி ஏற்பட்டு எரிச்சல் உண்டாகும். மலம் விழும்போது இரைச்சலுடன் விழும். மலம் நேர்த்தியாய் விழாமல் நரம்பில் பட்டு ரத்தத்துடன் விழும். இவை இம்மூலத்தின் குணங்களென்று முனிவர் உரைத்தனர்.

வங்கி ஷத்தில் வருகிறது
வகுக்க மூன்று வகையுண்டு
இங்கு வொன்று பருத்திவிரை
யிதமாஞ் சதைபோற் தானிருக்கும்
ஆங்கிலி ரண்டில் மாதளம்பூ
யான மொட்டுப் போலிருக்கும்
இலிங்கு மூன்றா வதட்டைமுக
மிருக்குஞ் சதைநிறம் போலிருக்கும்! 419

மூன்று வகையுண்டு. முதலாவது பருத்தி விதைபோல் சதைப்பற்றோடு காணப்படும். அடுத்தது மாதுளம்பூவின் மொட்டுபோல் காணப்படும். மூன்றாவது அட்டையின் முகம் போன்று சதை காணப்படும்.

காற்றுப் பிறந்தால் வயிற்றினிலே
கதித்த நெருப்பில் வயிறெடுக்கும்
மாற்று மிதுவே தொடர்கொண்டு
வாய்வு மிகுத்துப் பத்தியமும்
தோத்து மிகுந்து குறிபலவுஞ்
சொல்லக் கேளுந் தோன்றாமல்
மாற்றுஞ் சொன்னோ மூலவகை
மாறும் மருந்து பகர்வோமே! 420

வயிற்றினின்றும் காற்று எழும்போது வயிறு நெருப்பைப் போன்று சுடும். வாயு மிகும்; பித்தம் உண்டாகி வேறுபல குறிகுணங்களைக் காட்டும். மூலத்தை மாற்றும் மருந்தை அடுத்து வரும் பாடலில் காண்போம்.

**மருந்து**

மருந்து விராலிவேர்ப் புங்கம்பூ
மான்செந் திருக்கம்பூ குருமஞ்சள்
வருந்த யோரொன்றி விருகழஞ்சி
வைத்துப் பானையிற் கோணிகட்டி
திரும்பக் குளம்பு காச்சிவிட்டு
சேறுங் கோணி மேல்மூடி

மருவிக் காய்ச்சி வாய்திறந்து
மகிழ்ந்தனல் காட்ட மூலம்போம்! 421

விராலிவேர், புங்கம்பூ, செந்திருக்கம்பூ, குருமஞ்சள், இவை வகைக்கு 10 கி. எடுத்துக்கொள்ளவும். இவற்றைப் பானையில் போட்டு மேல்வாயில் கோணிகட்டி அடுப்பேற்றி எரித்துப் பின் வாய் திறந்து அவ்வனலை மலவாயில் காட்ட வேண்டும். இவ்வாறு பலமுறை காட்ட மூலம் குணமாகும்.

## மூலமூளைக்கு மருந்து

வெள்ளைப் பாஷாண மரைபிறகும்
மிகுத்த காந்தந் தானரையாம்
முள்ளே யெருக்கங் கொளுந்தரைத்து
யுரைத்தள வாகக் குகைபிடித்து
யுள்ள துத்தந் துரிசுடனே
யுகந்த யிரண்டுங் கால்கழஞ்சு
கொள்ளு நாலும் பொடிசெய்து
குகையி லிட்டுத் தான்மூடே! 422

'எருக்கம் கொழுந்தை நேக அரைத்துக் குகை பிடிக்கவும். வெள்ளைப் பாஷானம், காந்தம், வகைக்கு 2.5 கி. துத்தம், துரிசு இவை வகைக்கு 1.5 எடுத்துப் பொடி செய்து குகையிலிட்டு குகைமூடவேண்டும்.

சட்டியிலிட்டுத் தான்மூடி
தானே யெரிக்க மேல்சட்டி
கிட்ட நெல்லுக் கருகினால்
யிறக்கி மூளப் பொடிசெய்து
சிட்டா மூலக் கற்கடகந்
தான்சேங் கொட்டைத் தயிலம்விட்டு
வட்டமுடன் சீலையைத் திரித்து
மறுத்துச் சீலை துணிநறுக்கி! 423

மூடிய குகையைச் சட்டி மூடி எரிக்க வேண்டும். மேல் சட்டியின் அருகில் நெல் கருகின வாசனை வந்தால் இறக்கிப்

பொடிசெய்து, கற்கடகப்பொடி, சேங்கொட்டைத் தைலம் இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

*தண்ணீர் தோய்த்துப் பொடிசெய்து*
*தொட்டுத் தடவியப்படி மூன்றுநாள்*
*தண்ணீர் காய முசளமாய்த்*
*தயிருஞ் சோறுமறு நாள்க்கய்ப்*
*புண்ணுந் தானு முளைகரைந்து*
*விழுமதும் ...பின்பு பருத்தியிலை*
*நல்னெற் நல்லெண்ணையற் பொரித்துத்*
*தான்கட்டப் புண்ணா றிடுமே!* 424

சீலையை வட்டமாக நறுக்கித் தண்ணீர் தோய்த்து மேற்சொன்ன மருந்துப்பொடியைத் தொட்டுத் தடவியபடி மூன்றுநாள் மூல முளையில் தண்ணீர் காயும் வரை வைக்க வேண்டும். அம்மூன்று நாளும் தயிரும். சோறும் சாப்பிடவும், மூல முளையானது கரைந்து விழும். அப்போது பருத்தியிலையை நல்லெண்ணெயில் பொரித்துக்கட்ட புண்ணாறி விடும்.

## மூலமுளைக்கு மருந்து

*குக்கில் கெவுரி பாசாணங்*
*கோலச் சுண்ணஞ் சரிகூட்டி*
*யொக்க வரைத்து முலமுளை*
*யுகந்து தடவ விடிவேரு*
*மிக்க பக்கலு மந்திக்கும்*
*மீறு முளையிற் தான்தடவ*
*தக்க முளைதான் கரைந்துவிழுந்*
*தானே பின்செய் மருந்ததுகேள்!* 425

குக்கில், கௌரிபாஷானம், சுண்ணம், இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்ளவும். நேகாக அரைத்து, மூலமுளையில் தடவவும். முளையின் வேரும் முளையும் கரைந்து விழும்.

## மருந்துச்சீலை

*ஆமணக் கெண்ணை சீலையில் தோய்த்து*
*யந்தப் புண்ணின் மேல்போட*
*நாமே பருத்திநால் பால்மரப் பட்டை*
*நயந்த எண்ணெயில் வெந்த பின்பு*
*போமே எண்ணையிலே தடவிப்*
*பொருந்துஞ் சீலை புண்ணிற் போட*
*ஆமே மூல வகையிரண்டு*
*யதுக்குக் கரைத்து விடும்புண்ணே!* 426

மேல்மருந்திற்குப் பின்னர் செய்யவேண்டிய மருந்து இப்பாடலில் விளக்கப்படுகிறது. ஆமணக்கெண்ணெயைத் துணியில் தோய்த்து அந்தப் புண்ணின்மேல் போடவும். தனியே ஆமணக்கெண்ணெயில் பருத்தி, பால்மரப்பட்டை இவற்றை வேகவைத்துக் கொள்ளவும். இது வெந்தபின் சீலையை எண்ணையில் தடவி புண்ணிற்குப் போடவும். இதனால் இரண்டு வகை மூலமும் அகலும்.

*முன்ன முரைத்த மருந்துடனே*
*முசியா யுருவி நாய்வேளை*
*பின்னு முரைத்துக் கூட்டிக்கொள்*
*பெருகு மூலந் தானாடும்*
*வன்னக் குழம்பு யிதுவொன்று*
*வாழு முனிவன் சொற்படிக்கு*
*இன்னில மீதே செய்தாக்கால்*
*ஏகும் பிணிகள் வாராதே!* 427

மேற்கண்ட மருந்துடன் நாயுருவி, நாய்வேளை இவற்றையும் கூட்டிக் குழம்பாக்கிக் கொண்டு அதனையும் பயன்படுத்த மூலப்பிணிகள் நீங்கும்.

## பிட்டு

*திப்பிலி கோதும்பை மாவுடனே*
*சேர யிரண்டும் பொடிசெய்து*

ஒப்பில்லா திருகு கள்ளி
யுகந்த கோதும்பை தான்காத்து
இப்புவி தன்னிற் சட்டியிலே
யிலகுநீர் வண்டு கட்டிச்
செப்பு மாவை மேல்வைத்து
சேரப் புட்டாய்த் தானெய்யே! 428

திப்பிலியை அரைத்துக் கோதுமை மாவுடன் சேர்த்துக் கொள்ளவும். திருகுகள்ளிப்பால் விட்டுப் பிசைந்து கொண்டு, சட்டியில் நீர் விட்டு அடுப்பேற்றி வேடுகட்டி பிட்டவித்துக் கொள்ளவேண்டும்.

அந்தப் புட்டு நல்லெண்ணையி
லான வெல்லந் தான்போட்டு
யிந்தப் படியே யொன்பதுநா
ளிலங்கத் தின்ன யுள்மூலம்
வந்து கூட்டோடே விழுங்காண்
வருந்துங் கிரிகை யினிச் சொல்வோம்
அந்தப் படியே குருமுனிதா
னருளிச் செய்த வாரிதுவே! 429

அப்பிட்டுடன் நல்லெண்ணெயும் வெல்லமும் கலந்து ஒன்பதுநாள் உண்டு வர, உள்மூலம் கூட்டோடே வெளியேறும். இது முனிவர்கள் கூறிய மருந்தாகும்.

## கட்டு

வேப்பம்விரை யெலுமிச்சங் காயளவு
வெள்ளைப் பாசாணங்
கொப்புடன் துரிசு ரண்டு
கொள்முக் கழஞ்சு தான்கூட்டி
அப்பில் முளையில் படவைத்து
அப்படி மூன்று நாள்கட்டே! 430

வேப்பம்விதை, எலுமிச்சங்காயளவு எடுத்துக்கொண்டு அதனுடன் வெள்ளைப் பாசாணம் சிறிது சேர்த்து, துரிசு

10 கி., கொள்ளு 15 கி. சேர்த்தரைத்து மூல முளையில் படும்படி வைத்துக்கட்டி வரவும். இவ்வாறு மூன்று நாள் செய்ய முளை கரைந்து விழும். பிறகு எண்ணெய் தடவ பிரமூலமும் போகும்.

### சூரணம்

*காரெள்ளு சுக்கு கடுகொடு திப்பிலி*
*நேரொக்கவே கூட்டி நித்தமுந் தின்பிராய்*
*ஊரொக்கவே கெடுத்து யுண்பவர் சுற்றம்போலே*
*வேரொக்கவே கெட்டு விடுமூல வியாதியே!* 431

காரெள்ளு, சுக்கு, கடுகு, திப்பிலி இவற்றைச் சமமாக எடுத்துக்கொண்டு பொடித்துத் தினமும் தின்றால் மூலநோய்கள் அனைத்தும் விலகும்.

### பீர்க்கம் பூச்சு

*பேய்ப்பீர்க்கின் விரையின் பருப்பு*
*பெருக அரைப்பண விடைவெதுப்பு*
*கொப்பாம் வேலி பணவிடையும்*
*கொண்ட தேசிப் பழச்சாற்றி*
*லார்ப்பார் வெண்ணை தனிற்சேர்த்து*
*யதனுள் தடவி யிப்படித்தான்*
*கொப்பாய் மூன்று நாள் தடவி*
*கொதித்த வென்னீர் தனிற்குளியே!* 432

பேய்ப்பீர்க்கன் விதைப்பருப்பு 5 கி., கொடுவேலி 5 கி. இரண்டையும் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து வெண்ணெய் சேர்த்து மூலத்தின் முளையில் தடவவும். இவ்வாறு மூன்று நாள் தடவிவரவும். வெந்நீரில் குளிக்கவும். சாமைதவிடு, தினை, வைக்கோல் இவை ஏதேனுமொன்றை எரித்துப் புகை காட்ட நலமாகும்.

**பூச்சு**

*கொடுவேலி யின்வேர்த் தயிலத்தைக்*
*கோலக் குழியில் தான்தடவி*
*அடுமே மூல முளைக்கொக்க*
*யப்படி மூன்று னாளில்விழு*
*முடனே கரைந்து விழ்ந்தபின்பு*
*யுத்தாமணக் கெண்ணையைத் தடவி*
*அடவாய் விழுமே தயிர்வார்த்து*
*யான புண்ணிற் றான்கட்டே!* 433

கொடிவேலி வேர்த்தைலத்தைக் குழிவாயில் தடவி மூலமுளையில் படும்படி மூன்று நாள் பயன்படுத்திவர மூலமுளை கரைந்து விழும். உத்தாமணக்கெண்ணெயைப் புண்ணில் தடவி தயிர் வைத்துக் கட்டவும்.

**அடை**

*திரிகடுகு வெள்ளுள்ளி யிருசீரகந்*
*திருவெளிச்சிப் பிசினிது தவிர*
*குறிய ரைப்பொடி புளியறணை*
*கொண்ட பிரண்டை வேளைவேர்*
*அறிவாங் காட்டுக் கரணைவேர்*
*யான சமனாய்த் தானோடே*
*உறவே புழுங்க லரிசிதனை*
*யுகந்த நல்லெண்ணை தனிலரையே!* 434

திரிகடுகு, வெள்ளுள்ளி, நற்சீரகம், கருஞ்சீரகம், வெளிச்சிப்பிசின், அரப்பொடி, புளியரணை, பிரண்டை, வேளைவேர், காட்டுக்கரணைவேர் இவற்றைச் சம அளவு எடுத்துக்கொண்டு, அதனுடன் புழுங்கலரிசி சேர்த்து நல்லெண்ணெயில் அரைத்தெடுக்கவும்.

*எண்ணெய் தடவி மகிழ்ந்துயடை*
*யிதமாய்ச் சுட்டு நல்லெண்ணெய்*
*நண்ணிற் தேய்த்து எட்டுநாள் தின்ன*
*நாடும் பத்தியம் நாமுரைப்போம்*

எண்ணெய்தனிற் பிரண்டைக் கொழுந்து
இயல்புடன் பொரித்துத் தின்ன
வண்ணநெய்த் தோலிசுரக் குறவையாகும்
மானே கைப்புப் புளிவிட்டே! 435

எண்ணெய் தடவி, மேற்கண்ட கலவையில் அடைசுட்டுக் கொள்ளவும். உண்டபின் எட்டுநாள் பத்தியம் காக்கவும். நல்லெண்ணெயில் பிரண்டைக் கொழுந்தினைப் பொரித்துத் தின்னவும். மூலம் அகலும். நெத்திலி, சுரா, குறவை இவ்வகை மீன்களும் கைப்பும், புளிப்பும் நீக்கவும்.

## மூலத்துக்குத் தேன் குழம்பு

தேனுங் கள்ளிப் பாலுடனே
சிறிய வழுதலைப் பழமு
மானே கறணை மிளகுமஞ்சள்
வருத்தி யோரொன் றிருகளஞ்சு
ஏனே எண்ணை தனிற்கலந்து
யிடவே மூல வகையெல்லாம்
போன விடமே காணாமற்
போகு மெனவே முனிபுகன்றார்! 436

தேன், கள்ளிப்பால், சிறுவழுதலைப்பால், பொடித்த கரணைக்கிழங்கு, மிளகு, மஞ்சள் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துக்கொள்ளவும். அதனை எண்ணெய் தனில் கலந்து மேலிட மூலவகை நோய்கள் நீங்கும்.

## பீர்க்க உருண்டை

பேயின் பீர்க்கங் கூடுதனைப்
பெருகப் பொடித்துப் புளியுப்பு
மாயப் பிசைந்து யுண்டை செய்து
மருவும் பவள வாயிலிட்டு
வெய்ய காத்துத் தட்டாத்
தலத்தில் நீதா னிருந்திடவே
பொய்யே யோடு மூலமுடன்
பொருந்தி யிராமல் செய்திடுமே! 437

பேய்ப்பீர்க்கன் கூட்டைப் பொடித்து புளி, உப்பு சேர்த்துப் பிசைந்து உருண்டை செய்து அளவறிந்து உட்கொண்டால் மூலநோய் நீங்கும்.

## மூலம் ஆறுக்கும் காரம்

*வெண்காரம் பாசணம் அத்துடன்*
*மிகுந்த சந்தனஞ் சுண்ணாம்பு*
*பண்பா யோரொன்றரைப் பணவிடை*
*பலகரை வகையிலி ரண்டிலொன்று*
*நண்பாய்ச் சுட்ட சாம்பல்தனை*
*நாடுங் கழஞ்சு நேராகப்*
*பண்பாய்ச் சுட்டுப் பொடியாக்கி*
*அத்தோடு ஆமணக் கெண்ணை!* 438

வெண்காரம், பாசாணம், சந்தனம், சுண்ணாம்பு இவை வகைக்கு 288 மி.கி., பலகரை 5 கி., சுட்ட எலுமிச்சம்பழச் சாம்பல் 5 கி. இவற்றைச் சேர்த்துப் பொடித்துக் கொள்ளவும்.

*அற்றைக் கற்றை தான்குழைத்து*
*யான விரலிற் தானிட்டுச்*
*சுற்ற தீருமே .....*
*.....ங் கார மெனலாகு*
*மற்றாற் சொன்ன சொற்படிக்கு*
*யருளிச் செய்தார்.....*
*.....*
*பென்று சொன்னார்நல் வல்லோரே!* 439

இம்மருந்துதனை அப்போதைக்கப்போது ஆமணக் கெண்ணையில் குழைத்து விரலிலிட்டு மூலமுளையில் பூச மூலம் குணமாகும் என்பது பெரியோர்கள் சொன்ன அனுபவ முறையாகும்.

## பித்தகிராணியின் குணம்

.....

அடுத்த வெதுப்பு யாகார
மாகா தண்டந் தாகம்
பின்னங்கால் நீரிறங்கும்
அடுக்குங் காலும் மிகவிரைக்குங்
விரை வீங்கு மிதுவன்றி
பெடுக்கும் சோர் விக்கும்
பித்த கிராணிக் குணமிதுமே! 440

உடல் வெதுப்படையும், உணவு செல்லாது, அடிக்கடி நீரிறங்கும். கால்கைகள் விரைத்து வீங்கும். இவை பித்த கிராணியின் குணங்களாகும்.

## குடிநீர்

பேரா முட்டி மரமஞ்சள்
பெருகு ...ராட்டை நெருஞ்சியுடன்
சீரா மணத்தக் காளிநலஞ்
சேர சாரணை மல்லிகையுடனே
யார பூசணித் தண்டுடனே
வெள்ளாட்டு நீரில் கழுதைலத்திச்
சீராய்க் கஷாயந் தனைக்குடிக்கத்
தீரும் பித்தக் கிராணியதே! 441

பேராமுட்டி, மரமஞ்சள், நெருஞ்சி, மணத்தக்காளி, சாரணை, மல்லிகை, பூசணித்தண்டு, வெள்ளாட்டு நீர், கழுதை லத்தி இவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து குடிக்க பித்த கிராணி நீங்கும்.

## சிலேட்டுமக் கிராணிக் குணம்

அய்யுங் கிராணிக் குணங்கேளீர்
அதிக நாற்ற மிகவுண்டாங்
கையுங் காலு மனல்தோன்றுங்
கடிய சுரமு மோடிவரும்

நய்யக் கழியுமேவயிறு
நாவில் நீரும் வத்திவரும்
வெய்ய எரிவு குன்றிவரும்
விக்க லெடுக்கும் மெல்லியரே! 442

சிலேட்டுமக்கிராணியுள்ளோரின் உடலில் நாற்றம் மிக உண்டாகும். கையிலும் காலிலும் அனல் தோன்றும். மிகுந்த சுரம் உண்டாகும். வயிறு கழியும், உமிழ் நீர் வற்றும். எரிவுகுறைந்து, விக்கல் எடுக்கும்.

## குடிநீர்

சுக்கு பேரா முட்டிவேர்
துய்ய பங்கம் பாளையுடன்
மிக்க சிறுகாஞ் சோரியது
மிகவே கூட்டிப் பொடிசெய்து
யொக்க விடையம் நாவல்தோல்
உகந்த வட்டத் திருப்பிமுத்தந்
தக்க சித்தா முட்டியுடன்
தானே காய்ச்சிக் குடித்திடுமே! 443

சுக்கு, பேராமுட்டி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொறி இவற்றைப் பொடிசெய்து, அதிவிடையம், நாவல்தோல், வட்டத்திருப்பி, முத்தகாசு, சிற்றாமுட்டி இவற்றையும் சேர்த்துத் தண்ணீர் விட்டு முறைப்படி குடிநீர் செய்து குடிக்கவும்.

## வாயுக் கிராணிக் குணம்

பொருமி விரையுங் கழிந்திருக்கும்
போதப் பிறந்தா ளதைத்துவரும்
மருவு மசனஞ் செய்யாது
வறண்டு வுடம்பு வற்றிவரும்
பருகுந் தண்ணீர் நாவறளும்
பலகா லனந்தல் கனவுமிகும்
வெகுவும் வாய்வுக் கிராணியென
விதித்துப் பெரியோர் விளம்பினரே! 444

வாயுக்கிராணி, உடையோர்க்கு வயிறு பொருமி கழிந்திருக்கும். உடல் அதைக்கும். உணவு ஏற்காது. உடல் வறண்டு வற்றும், தண்ணீர் தாகமெடுக்கும் நாவறளும், கனவுமிகும். இவை வாயுக் கிராணியின் குணங்களாகும்.

**வாயுக்கிராணிக்குணம்**

*பொருமு மிரையும் நெஞ்செரிக்கும்*
*புளித்தேக் கின்ற பலிமுகமாய்*
*கருகிக் கழிந்து கண்தூங்குங்*
*காந்துந் தொப்புள் தனிலடங்கும்*
*வெருவித்து இரைச்சல் மிகவும்*
*மிகவும் பசிக்குங் கழிந்திருக்கும்*
*ஒருமைப் படவே வரும்பிணிக்கும்*
*யுலத்தும் வாய்வுக் கிராணியதே!* 445

வயிறு பொருமும், இரையும், நெஞ்செரிக்கும், புளித்தேப்பம் வரும். மலம் கருகிக் கழியும், கண்ணில் தூக்கம் காணும். பசியெடுக்கும். இவை வாயுக்கிராணியின் குணங்களாகும்.

**சூரணம்**

*ஓமங் கடுகு திரிபலை*
*யுள்ளி வசம்பு வெந்தயமும்*
*தாமங் கோஷ்டம் சந்தனம்*
*சாற்று மஞ்சள் சதகுப்பை*
*காம ரிரண்டு சீரகமுங்*
*கடிதாய்ப் பொடித்துத் தேனிலுண்ண*
*ஆமாம் வாய்வுக் கிராணிகள்விட்*
*டகன்று போகுங் கண்டீரே!* 446

ஓமம், கடுகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், உள்ளி, வசம்பு, வெந்தயம், கோஷ்டம், சந்தனம், மஞ்சள், சீரகம், சதகுப்பை, நற்சீரகம், கருஞ்சீரகம் இவற்றை நன்கு பொடித்துத் தேனிலுண்டால் வாயுக்கிராணி அகன்று போகும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## பிறமூலக்கிராணிக்குணம்

*கீழ்வயிறு தவிர விரைந்துலைந் திடுப்புக்*
*கடுப்புத் துளைந்து குருதிதான் வீழும்*
*வாளிபெருந் தோளரைக் கீழ்வி கற்பமாய்*
*மூச்சடக்கி மலங்கழிந்து வலியுந் தோன்றும்*
*நாள்வழியே யுடல்வற்றும் வெளிறிவரும்*
*நாவறளும் சோபமிகுந் துயர முண்டாம்*
*கேளிதுவும் பிறமூல மேலுங் கிராணி*
*யென்றுதான் முனியுரைக்கக் கேட்ட தாமே!* 447

கீழ்வயிறு, இரைந்துஉலையும். இடுப்புக்கடுத்து, உளைந்து மலத்துடன் இரத்தம் வீழும். நெஞ்சிலே மூச்சு அடங்கி, மலங்கழிந்து, வலிதோன்றும். உடல் வற்றும். வெளிறி விடும். நாவறளும், சோபம் மிகும்; துயரமுண்டாகும். இவை பிறமூலம் மற்றும் கிராணியின் குணங்களாகும். என்று முனிவர் உரைத்தனர்.

## சூரணம்

*புங்கந் தோலா லின்தோல்*
*புதிய சாரணை கொடுவேலி*
*இங்கச மோதமுடன் சுக்கு*
*யினிய திப்பிலி சாதிக்காய்*
*அங்கவை எல்லாம் பொடிசெய்து*
*சமனாய் சீலையில் வடிகொண்டு*
*ஒங்கு பெருங்காயம் கூட்டி*
*யோரொன்று முக்கழஞ்சு கொள்ளே!* 448

புங்கமரத்தோல், ஆலமரத்தோல், சாரணை, கொடிவேலி, ஓமம், சுக்கு, திப்பிலி, சாதிக்காய் இவற்றைச் சம அளவு எடுத்துப் பொடிசெய்து சீலையில் வடிகட்டி பெருங்காயம் சேர்த்து 15 கி. உட்கொள்ள வேண்டும்.

*கொண்ட வெள்ளாட்டு மோர்*
*குறுணி குறுணி காடியது*

யுண்டே வெள்ளாட்டு நெய்நாழி
யுகந்த மருந்து நெய்நாழி
யொன்றாய்க் கூட்டி மண்கலத்தி
யுகந்த மருந்து நீயறிய
யின்றே நாரத்தம் பழந்தா
னிரண்டே யெட்டொன்றாய்! 449

வெள்ளாட்டுமோர், காடி வகைக்கு 5.2 லி., வெள்ளாட்டு நெய் 1.3 லி., மருந்திற்கு மிகுதியும் பயன்படும் பசுநெய் 1.3 லி. இவற்றை ஒன்றாய்க் கூட்டி மண்கலத்தில் எடுத்துக் கொள்ளவும். நாரத்தம்பழம் இரண்டை எடுத்து வெட்டிக் கொள்க.

எட்டொன்றாய்ப் பிளந்து தொலிபோக்கி
யிதுக்குச் சுக்குப் பொடிபோட்டு
வட்டக் கடுக்காய்த் தூறதுதான்
வளறுங் கனலிற் றியாக்கி
இட்டுக் குழம்பு தானிறக்கி
யியல்சேர் காற்றுப் புகுதாமல்
கட்டுங் கோணி பட்டதினால்
கனத்த வண்டு தான்கட்டே! 450

எட்டொன்றாய் வெட்டிய பழத்தைத் தோல் போக்கி சுக்குப்பொடி தூவி அதனையும் மேற்சொன்ன கலத்தில் போட்டு எரியிடவும். எரிப்பதற்குக் கடுக்காய்த் தூரைப் பயன்படுத்தலாம். குழம்பு பக்குவம் வந்தபின் இறக்கி காற்றுப்புகாமல் வண்டுகட்டி பக்குவப்படுத்திக் கொள்ளவும்.

நெல்லி லெட்டு நாள்புதைத்து
நீபின்சிறு காலையி லெடுத்து
நல்ல கீத்தொன்று விடிவேறு
நாடு முச்சிக் கொரு கடுக்காய்
வல்லக் குழம்பு அந்திக்கு
மகிழ்ந்தே கொள்ள மாறுதல்கேள்
கொள்ளுங் கிராணி குன்மமுதல்
குலையும் ரெத்தக் கிராணியுமே! 451

அப்பானையை நெல்லில் எட்டுநாள் புதைத்து ஒன்பதாம் நாள் அதிகாலையில் எடுத்துக் காலையில் ஒரு கீற்று சாப்பிட்டு மாலையில் குழம்பு கொள்ளவும். இதனால் கிராணி, இரத்தக்கிராணி, குன்மம் போன்ற நோய்கள் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும்.

### உள்மூலக் கிராணிக்குணம்

*வலத்தை யிறுக்கி மந்தித்து*
*வறண்டு மிரத்தம் மலத்தில்விழும்*
*துலத்தி வருவ துண்மையிது*
*யூடே வயிறு வலித்துவரும்*
*தலத்தில் காணா துள்மூலம்*
*தறுகா துளையு மபானத்தில்*
*பெலத்தைக் குறைக்கும் வியாதியெனப்*
*பேசி யிருப்பார் பெரியோரே!* 452

உள்மூலக்கிராணியின் குணங்கள் பின்வருமாறு: மலத்தை இறுக்கும். மந்திக்கும், மலத்தோடு இரத்தம் விழும். மலப் போக்கின்போது இடைஇடையேயும் வயிறு வலிக்கும். அடிவயிறு உளைச்சல் காணும். பலத்தைக் குறைக்கும் நோய் இதுவென்று பெரியோர் சொன்னார்கள்.

### சூரணம்

*திரிபலை கஞ்சா மஞ்சள்*
*திப்பிலி சுக்குக் காயோ*
*டறிகடுக் காய்கி ராம்பு*
*யான சீரகம் நேராக*
*வெறிபடு சமனெள் கூட்டி*
*வெருகடி தேனி லுண்ண*
*நறியுமுள் மூலக் கிராணி*
*நாசமா யேகுந் தானே!* 453

திரிபலை, கஞ்சா, மஞ்சள், திப்பிலி, சுக்கு, கடுக்காய், கிராம்பு, சீரகம், எள் இவற்றைச் சம அளவு எடுத்துப் பொடித்து

மூவிரலளவு எடுத்துத் தேனில் உண்ண உள்மூலக்கிராணி நீங்கும்.

## மூலக்கடுப்பின் குணம்

*வெப்புகள் தங்கித் தங்கி*
*மேலெல்லாம் பறந்து லாவி*
*முப்பத்தி ரெண்டுங் கூடி*
*மூலத்தோ டுலாவிச் சுற்றி*
*அப்பிய பிறமூ லத்தில்*
*அடக்கியே குடலைப் பற்றி*
*புறப்படும் ரெத்தங் கூடி*
*பின்வருங் குணங்கள் கேளே!* 454

வெப்பமெல்லாம் தங்கி உடல்முழுதும் பறந்து உலாவி முப்பத்து இரண்டும் கூடி, மூலத்துடன் சேர்ந்து உலாவி பிறமூலத்தில் அடங்கி குடலைத் தொற்றிக் கொண்டு இரத்தத்தோடு மலம் வெளிவரும். இவை மூலக்கடுப்பின் குணங்களாகும்.

*கீழ்வ யிற்றில் நின்று*
*கிறுகிறென் றிரையும் வாய்வு*
*மீளவுந் திரியே போலும்*
*விதனஞ்செய் துளைந்து சியும்*
*வீழுமே நாள்க டோறு*
*மிரைந்திடு மிடைவி டாமல்*
*நீளமே போகா வண்ணம்*
*நினவுடன் மருந்து செய்யே!* 455

மலமானது கீழ்வயிற்றில் தங்கி கிறுகிறு வென்று இரைச்சல் உண்டாகும். வாயு மீண்டும் உண்டாகும். வயிறு உளைந்து மலத்துடன் சீழ்வெளிப்படும். நாள் முழுமையும் இடைவிடாமல் இரைச்சல் ஏற்படும். இந்நோய்க்கு காலந் தாழ்த்தாமல் மருந்து செய்திடல் வேண்டும்.

## மருந்து

செய்குவா யசம தாகம்நற்
சீரகம் சாதிக்கா யொன்று
நைய்யம்பூத் திலைய தன்னில்
நாலஞ்சு கடுக்காய் சுற்றிக்
கொய்குருத் தோலை தன்னில்
கூட்டியே யரிந்து கட்டிப்
பய்யவே யிதுக்குப் பின்னே
பதஞ்சொல்லக் கேளு மின்னே! 456

அசமதாகம், நற்சீரகம், சாதிக்காய் ஒன்று, நன்றாகப் பூத்த நான்கைந்து கடுக்காய்ப்பூ இவற்றைக் குருத்தோலையில் சுற்றி கட்டிக் கொள்ளவும்.

கட்டியே யுமித்தீ தன்னில்
கடுகவே புதைத்தெ டுத்து
தட்டியே உரலி லிட்டு
தகரவே யிடித்துப் பின்னை
கொட்டியே அம்மி தன்னில்
குழவியா லரைத்துக் கொண்டு
வெட்டென விடியும் போது
வெருகடி மருந்து கொள்ளே! 457

இதனை எரித்தெடுத்த உமித்தீயில் புதைத்து எடுத்துக் கொள்ளவும். ஆறியபின் உரலிலிட்டு நன்றாக இடித்துப் பின்னர் அம்மியில் வைத்து அரைத்தெடுத்துக் கொள்ளவும். விடியற் காலையில் மூவிரலளவு மருந்து உட்கொள்ளவும்.

வெருகடி விடியும் போது
கொண்டபின் வென்னீர் தன்னை
பருகிடும் பத்து நாளும்
பதனமா யிருந்து கொண்டால்
எரிகொண்ட வெப்பி னாலே
யெழுமூலக் கடுப்ப தெல்லாம்

உருகிவிட் டோடு மென்றே
யுகந்தவ ருரைத்த வாறே! 458

அதிகாலையில் மருந்தினை உட்கொண்டவுடன் வென்னீர் குடிக்கவும். இவ்வாறு 10 நாட்கள் சாப்பிடவும். இம் முறையைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் வெப்பினால் ஏற்பட்ட ஏழுமூலத்தின் கடுப்பெல்லாம் நீங்குமென்று உரைத்தனர்.

## எண்ணெய்

அத்தியோ டொதியம் பட்டை
அடுத்த சாரணையின் வேரும்
முத்திய விளாங்காய் போலே
மூன்றையு மரைத்தெ டுத்து
வற்றிய பாகு தன்னில்
வடுவற வெந்த போது
சுற்றிய யெண்ணை தானுஞ்
சுவறவே விட்டுக் காய்ச்சே! 459

அத்திப்பட்டை, ஒதியம்பட்டை, சாரணையின்வேர், இவற்றை அரைத்து விளாங்காய் அளவு எடுத்துப் பாகில் வேக விட்டு எரித்துக் கொள்ளவும். அதனுடன் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

திப்பிலி ஓமந் தானுஞ்
சிறந்ததோர் மிளகு சுக்கு
நற்பத மிந்துப் போடே
நலமுறு கழஞ்சி ரெண்டு
தப்பிலா யவின் கழஞ்சு
சாதிக்காய் பத்திரி கிராம்புகுரோசாணி
செப்பமாய் வறுத்த ரைத்து
சேரவே பதத்தில் வந்தால்! 460

திப்பிலி, ஓமம், சிறந்த மிளகு, சுக்கு, இந்துப்பு இவை வகைக்கு 10 கி. எடுத்து, அபின், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு,

குரோசாணி இவற்றை வகைக்கு வறுத்து அரைத்துப் பதத்தில் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி 5 கி. எடுத்து கொள்ளவும்.

*உண்டிடு மந்தி சந்தி*
*யொருசுண் டைக்கா யளவு*
*கொண்டிடும் பத்து நாளாய்க்*
*குறித்த தோர்புளி தவிர்த்தல்*
*விண்டெழு கிராணி யெல்லாம்*
*வியர்ந்தெழு மென்று சொல்லி*
*அண்டர்கள் வேதஞ் சொன்ன*
*ஆயுர வேதந் தானே!* 461

இம்மருந்தை காலை, மாலை இரு வேளை சுண்டைக் காயளவு பத்து நாட்கள் உட்கொள்ளவும். புளிப்பைத் தவிர்ப்பது நல்லது. இம்மருந்தை முறைப்படி உட்கொண்டால் கிராணி யெல்லாம் நீங்கும்.

## வயிற்றுக்கடுப்பின் குணம்

*இடுப்புக் கடுத்து வயிறுளைந்து*
*யிதமாஞ் சீத மிகக்கழிந்து*
*முடுக்குந் துயர மதிகமுமாம்*
*மூலந் தன்னிற் கழிந்தடங்கும்*
*அடுத்தே யென்னந் தனைத்தேட*
*அறவே யங்க மிகமெலியும்*
*தொடுக்கும் வயிற்றுக் கடுப்பென்று*
*சொன்னார் துயரஞ் செய்யுமென்றே!* 462

இடுப்புக் கடுத்து வயிறுளையும், சீதம்மிகக் கழியும். அதனால் துன்பம் அதிகமுண்டாகும். மூலத்தில் கழிந்து அடங்கும். அதனால் உடம்பு மிகவும் மெலியும். இவை எல்லாம் வயிற்றுக் கடுப்பின் குணங்களாகும்.

## நெய்

*பனிச்சை துத்தி மலதாங்கி*
*பகரும் பூலா முத்தமுடன்*

முனிச்சுக் கொள்ளு மதிவிடையம்
முதிர்ந்த சீர மோதமுடன்
தனித்த கைப்பு கிரியாந்தான்
தானே கழஞ்சு கொண்டுநெய்யில்
நணித்தே வேக வைத்துநக்க
நாடும் வயிற்றுக் கடுப்பறுமே! 463

பனிச்சை எனும் காட்டாத்தி துத்தி, மலைதாங்கி, பூலா, கோரைக்கிழங்கு கொள்ளு, அதிவிடையம், சீரகம், ஓமம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து நெய்யிலிட்டு வேகவைத்து உள்ளங்கையில் ஊற்றி நக்க வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

## சூரணம்

நற்சீரகத்தைப் புத்தோட்டில்
நலங்க த்தான் புடமிட்டு
பிற்சோற் றிடித்துத் தூள்செய்து
பெருகுஞ் சீனி தனைச்சேர்த்து
சிற்றா மணக்கே நறுநெய்யிற்
சிறக்க வருந்தத் தீர்வதுகேள்
பறச்ச வயிற்றுக் கடுப்புளைதும்
பறந்து போகுந் திண்ணமதே! 464

நற்சீரகத்தைப் புதிய ஓட்டில் வறுத்துப் புடமிட்டெடுத்து இடித்துத் தூள்செய்து, சீனி சேர்த்து சிற்றாமணக்கெண்ணெய், நெய் கூட்டி உண்ண வயிற்றுக் கடுப்பு, உளைவு இவை நீங்கும்.

## மாத்திரை

தாளிச பத்திரி மாத்தோ
லத்தித்தோல் முத்தங் கோவை
அரைத்த சாரணை கிழங்கோர்
பலமதா யிடித்தெட் டொன்றாய்
எரித்த நீர்தனை யூத்தி
யிம்ம ருத்தினை யரைத்துக்

குறுத்தமாய்க் குன்றி யிட்டுங்
குளுவையாய்ச் செய்தி டாயே! 465

தாளிசபத்திரி, அத்தித்தோல், கோரைக்கிழங்கு, கோவை, சாரணைக்கிழங்கு இவை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்ளவும். இவற்றை இடித்து நீர்விட்டு எட்டொன்றாய்ச் சுருங்கக் காய்ச்சிய நீரை ஊற்றி இந்த மருந்தினை அரைத்து 130மி.கி அளவுள்ள மாத்திரைகளைச் செய்து கொள்ளவும்.

ஆயதோ ரக்கினி மந்தம்
அலர்வ யிற்றுக் கடுப்பு
நேயமா மிளைப்பு வெப்பு
நீர்சுர மதிசா ரங்கள்
வாயுவோ டிருமல் விக்கல்
வலியஒக் காளஞ் சத்தி
தூயசீ ரகத்தண் ணீரில்
துய்த்திட ஒடுந் தானே! 466

அக்கினிமந்தம், வயிற்றுக்கடுப்பு, இளைப்பு, வெப்பு, அதிசாரங்கள், வாயு, இருமல், விக்கல், வலிய ஒக்காளம், சத்தி எனும் வாந்தி இவற்றிற்கு தண்ணீரில் சீரகத்தை இட்டுக் காய்ச்சி அதில் மேற்சொன்ன மாத்திரையை இழைத்துக் கொடுக்க குணமாகும்.

## அக்கினி மந்தத்தின் குணம்

உண்டியிற் பொரும லாலு
முடன்வளை சீதத் தாலும்
கொண்டுதான் கழிந்து தண்ணீர்
கொதிப்புடன் வெதுப்பி னாலும்
மண்டியே வெளுத்துக் காயம்
மயங்கெட புலர்த்த லாலும்
அண்டர்முன் வேதம் பேசும்
அக்கினி மந்த மாமே! 467

வயிற்றில் உண்டாகும் பொருமல் அதனுடன் தொடர்ந்து உண்டாகும் சீதம், கழிச்சல் தண்ணீராய்ப் போதல், உடம்பு வெளுத்துப்போதல் ஆகியவை அக்கினி மந்தத்தின் குணங் களாகும்.

*மலமுங் கழியுங் கிறுகிறுக்கும்*
*வறண்டால் வயிறு வலித்துளையும்*
*செலமு மிகுந்து கழிந்திறுகுஞ்*
*சிறுக ரெத்தம் மலத்தில்விழும்*
*பிலமுங் குறைந்து நயனமுகம்*
*பேதப் படவே வெளுத்துவரும்*
*மலையுங் குணங்க ளிதுகண்டால்*
*அக்கினி மந்த மெனலாமே!* 468

மலம் அடிக்கடி கழியும், கிறுகிறுக்கும், வறட்சியாகி வயிற்றில் வலி ஏற்படும். சீதம் மலத்தில் மிகுதியும் வெளிப்படும். சிறிதளவு இரத்தமும் கலந்து விழும். உடல்பலம் குறையும், கண் பேதப்பட்டு வெளுத்து விடும். இவ்வகையான குணங்களைக் கண்டால் அதனை அக்கினி மந்தம் எனலாம்.

## குடிநீர்

*சுக்கு டன்முந் திரிகை*
*நிம்பழம் பலமோ ரொன்று*
*வைக்கும்நீர்ப் படிக ளெட்டு*
*வகுப்புட னொன்ற தாக்கி*
*நிக்கு நீர்தனை வார்த்து*
*நித்தமுங் கொள்வி ராகில்*
*அக்கினி மந்தம் போமென்*
*றறிந்தவ ருரைத்த வாரே!* 469

சுக்கு, முந்திரி, எலுமிச்சம்பழம் இவை வகைக்கு 35 கி. எடுத்து அதனுடன் 10.4 லி. தண்ணீர் சேர்த்து அது 1.3 லி. அளவாகச் சுருங்கும்வரைக் காய்ச்சுக. இவ்வாறே தினமும் காய்ச்சி உட்கொள்ள அக்கினி மந்தம் போகும்.

## மருந்து

*திரிபலை மதுரந் தாரந்*
*திரிகடு கேல மோமம்*
*முருகாய்ப் பத்திரி கிராம்பு*
*மமுக்கிரா விடையஞ் சீரம்*
*நரிய தாளிச பத்திரி*
*நாகப்பூக் காயம் பச்சிலை*
*அரியநெய் தேன்கற் கண்டில்*
*அருந்தக்கினி மந்தம் போமே!* 470

திரிபலை, அதிமதுரம், அரிதாரம், திரிகடுகு, ஏலம், ஓமம், பத்திரி, கிராம்பு, அமுக்கிரா, அதிவிடையம், சீரகம், தாளிசபத்திரி, நாகப்பூ, பெருங்காயம், பச்சிலை இவற்றைப் பொடித்து நெய், தேன், கற்கண்டு சேர்த்து உண்ண அக்கினி மந்தம் போகும்.

## வாத கரப்பன் குணம்

*உடம்பெல்லாம் வெதும்பி னொந்து*
*உளைந்துகால் சந்து கட்டி*
*இடங்கொண்டு சுரந்து வீங்கி*
*யிருப்பினு மிதாகை யாலும்*
*முடங்கவே வெடித்துத் தானும்*
*முத்தியே வெடித்துப் புண்ணாய்*
*இடங்கொடாக் கரப்பன் வாத*
*மென்றுதா னியம்ப லாமே!* 471

உடல் வெதும்பி, நொந்து, உளைந்து, கை கால் சந்துகள் வலித்து சுரந்து வீங்கி இருக்கும். வெடித்து முற்றி, புண்ணாகிக் காணும் குணம் வாத கரப்பானுடையது.

*இருந்தெழுந் திரிக்கும் போது*
*மியர்த்துக்கா லுயர்ந்த யர்ந்து*
*வருந்திடத் திமிர்த்து வீங்கி*
*வறண்டிடில் விஷித்துப் புண்ணாய்*

திருந்திய அங்கந் தானுஞ்
செயமறப் பொருமு மாகில்
வருந்துமிக் குணங்கள் கண்டால்
வாதமாங் கரப்ப னாமே! 472

அமர்ந்து எழுந்திருக்கும் போது காலானது உலர்ந்து அயர்ந்து வருந்தி திமிர்த்து வீங்கும். அங்கம் வறண்டு விஷப்புண்போன்று அங்கம் முழுதும் பொருமிக் காணும். இவை வாத கரப்பான் நோயின் குணங்களாகும்.

நொந்துபின் கண்ணில் மிக்க
நோவுடைக் களங்கள் தன்னில்
வந்துவல் லாயு தங்கள்
வடுப்புறத் தைத்த போது
சந்துதான் மொளிபெ ருத்துத்
தசைவுதா னங்க மாகில்
வந்துதான் கெடுக்கும் வாத
கரைப்பனென் றியம்ப லாமே! 473

உடம்பு நொந்து கண்ணில் மிகுந்த வலியுண்டாகி, உடம்பிலே ஆயுதங்களால் தாக்கியது போன்ற வலியைக் கால் கை சந்துகளில் ஏற்படுத்தித் துன்பந்தரும் குணம் வாத கரப்பானுக்கு உண்டு.

விங்குங் குத்து மிகச்செருமி
விடாமல் திமிர்த்து விதனிக்கு
மாங்கதிற் சலம்வி ழுந்தால்
அதுவுஞ் தினவாய்ச் சொறிசெய்யில்
நீங்கிச் செல்லத் தீராது
..... நாள் படவே விஷமிக்குந்
தேங்கப் புதைத்துச் சுட்டுவிடத்
தீரும் வாதக் கரப்பனிதே! 474

வயிறு வீங்கும், குத்தும், மிகச்செருமிக் கொள்ளும், விடாமல் திமிர்த்திருக்கும். சலம் விழுந்தால் அதுவும் தினவாய்ச்

சொறியும். இவை விரைவில் நீங்காத வாத கரப்பானின் குணங்களாகும்.

சந்துகால் மொளிபெ ருத்துத்
தானங்க ளுளைந்து விங்கி
வந்துதான் புண்போல் காயம்
வருந்தியே யிருந்து வாடும்
நொந்துதான் திரும்பொண் ணாது
நோவுடன் வெதுப்புத் தோன்றும்
இந்தநோய் வரிலோர் வாதக்
கரப்பனென் றியம்ப லாமே! 475

சந்து, கால் கைகள், பொருத்துகள், பொருந்துமிடங்கள் இவை உளைந்து வீங்கும். புண்போல் காயங்கள் ஏற்பட்டு மேலும், மேலும் நோவை உண்டாக்கும். வெதும்பும் குணங்கள் கொண்ட இந்நோய் வாத கரப்பான் என அறியலாம்.

## எண்ணெய்

கொன்றைத் தாது நிலவேம்பு
குமிள்வேர் கடுக்காய் நிலவாகை
சென்று வணங்குஞ் சூரியது
சிவனார் வேம்பு சலமிஞ்சி
என்று முத்தத் தாழியுட
னுகந்த நாயு ருவியுடன்
நன்றே கொள்ளுஞ் சூரையுடவேர்
நன்னாரி துடரி கூட்டே! 476

கொன்றைத் தாது, நிலவேம்பு, குமிழ் வேர், கடுக்காய், நிலவாகை, சூரி, சிவனார் வேம்பு, இஞ்சி, கோரைக்கிழங்கு, தாழி, நாயுருவி, சூரை, துடரி, நன்னாரியையும் கூட்டிக் கொள்க.

கூட்டி யுள்ளி மரமஞ்சள்
குலவு மஞ்சள் வேம்பாடல்
நாட்டில் பயிலும் வெண்கோட்டம்
நல்குஞ் சென்ன கரப்பழம்

ஆட்டங் காணுஞ் சாதிக்காய்
யதுகொள் கடுக்காய் தான்றிநெல்லி
கூட்டிச் செய்த வகையிட்டுக்
கொண்டே எண்ணை கொதித்திடுமே! 477

உள்ளி, மரமஞ்சள், மஞ்சள், வேம்பாடல், வெண்கோட்டம், சென்னகரப்பழம், சாதிக்காய், கடுக்காய், தான்றி, நெல்லி இவற்றைச் சேர்த்துத் தேவையான அளவு எண்ணெயிட்டுச் கொதிப்பிக்கவும். ஆறினவுடன் அளவறிந்து உட்கொள்ளவும்.

## சூரணம்

குறிஞ்சா யிலையும் புங்கிலையுங்
கொடிச்செங் களச்சிலை தானா
மறிஞ்சே செய்வார் கடலார்ஞ்சி
யதுவு முள்தேக் கிலைதானும்
பகர்ந்தே வாத வெப்படக்கி
பரிந்தே வேப்பி னிலையாகு
மறிந்தே சொன்னேன் முடக்கொற்றான்
மதினோ டின்ன மருந்தைக்கேள்! 478

குறிஞ்சா இலை, புங்கிலை, கொடிச் செங் கழற்சியிலை, கடலிராஞ்சி, முள்தேக்கிலை, வாத வெப்படக்கி, வேப்பிலை, முடக்கொத்தான் இவற்றை எடுத்துக்கொள்க.

உள்ளி மீளகு சீரகமு
முற்ற கடுக்காய் திப்பிலியுந்
தள்ளுஞ் சுக்கு மோதகமுந்
சயிந்த னுப்புக் கிராம்பினுடன்
கொள்ளுங் கற்கண்டு ரோகணியுங்
கூட்டு தூது கடுகுநாழி
விள்ளுங் கரிய சீரகமும்
விளம்புங் கழஞ்சு மோரொன்று
தெள்ளுஞ் சர்க்கரை யினில்கொள்ளத்
தீரும் வாத கரப்பானே! 479

பூண்டு, மிளகு, சீரகம், கடுக்காய், திப்பிலி, சுக்கு, ஓமம், சயிந்தனுப்பு, கிராம்பு, கற்கண்டு, கடுகுரோகணி, கடுகு, கருஞ்சீரகம் இவை முறையே 5 கி. எடுத்துக்கொள்க. இவற்றைப் பொடித்துச் சர்க்கரை சேர்த்து உட்கொண்டால் வாதகரப்பான் நீங்கும்.

## எண்ணெய்

*எருமைப் பாலோ டரிதாரம்*
*எலியின் மருந்து கொடுவேலி*
*திருத்த மான வெள்ளுள்ளி*
*தெளியும் வசம்பு சென்னகரம்*
*பெருக்க வோரொன் றரைக்கழஞ்சு*
*பேணி யரைக்கி லிடுகள்ளி*
*பருக்க வாட்டி யிலைச்சாற்றால்*
*பதராதே கரைத்துக் கொள்ளுவதே!* 480

எருமைப்பால், அரிதாரம், எலிப்பாடாணம் கொடிவேலி, வெள்ளைப்பூண்டு, வசம்பு, சென்னகரப்பன் இவை வகைக்கு 2.5 கி. எடுத்துக் கொண்டு கள்ளிப்பால் விட்டு அரைத்து, கள்ளி இலைச் சாற்றில் கரைத்துக் கொள்ள வேண்டும்.

*கொள்ளே நறுநெய் நல்லெண்ணெய்*
*கூட்டுஞ் சிற்றா மணக்கெண்ணெய்*
*நள்ளே தீர்க்கும் வேப்பெண்ணெய்*
*நலங்கா வேசோற் றிடுமஞ்சள்*
*துள்ளா தொக்கப் பொடிசெய்து*
*தூவிக் காய்ச்சி எண்ணையுடன்*
*உள்ளே கொள்ள யிடுமேலே*
*யோடிப் போகுங் கரைப்பானே!* 481

நல்லநெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் இவற்றைச் சேர்த்து கறிமஞ்சளைப் பொடி செய்து சேர்த்து, மேற்சொன்ன மருந்துக் கலவையையும் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள வேண்டும். இதை முறைப்படி

உள்ளே அருந்தியும் மேலே பூசியும் வர கரப்பான் நோய் ஓடிப்போகும்.

*எண்ணெய் வெச்செனப் பிடித்தே*
*வீக்கத்தி லிறுக நாளும்*
*வண்ணமாய் ராத்தி ரிக்கும்*
*வகையுட னெருக்கி லையை*
*பன்னிரெண் டிலையை வாட்டி*
*பதத்துடன் கட்டு வீரால்*
*எண்ணிலா வாத கரப்பான்*
*இறங்கிடும் வீக்கந் தானே!* 482

வாத கரப்பான் நோயினால் ஏற்பட்ட வீக்கங்கட்கு மேற்கண்ட எண்ணெயைச் சிறிதளவு சூடுபடுத்தி இரவில் தடவிவிடவும். பின் பன்னிரெண்டு எருக்கிலையை வாட்டி வலி, வீக்கம் உள்ள இடங்களில் பொருத்தமாக வைத்துக்கட்ட வீக்கம் குறைந்து எல்லாவகை வாத கரப்பானும் நீங்கும்.

## திமிர்வாத கரப்பான் குணம்

*தலையுங் கனத்துக் குரல்நெரிந்து*
*தருகா துடம்பு திமிருண்டாம்*
*முலையுங் காலும் விக்கமுமாய்*
*முளையா திருக்கு முயிர்பற்றும்*
*மலையுஞ் சடிது மீளாது*
*வலுவைக் குறைத்து வறண்டுவரும்*
*குலையுஞ் செய்யுங் குணவாத*
*கொடிய கரப்ப னிதுவாமே!* 483

தலைகனத்து, குரல்நெரிந்து, உடம்பிலே திமிருண்டாகி, மார்பும் கால், கைகளும் வீங்கி உடம்பில் வலு குறைந்து, வறண்டு மிக வேதனைசெய்யும் இயல்பு வாத கரப்பானுக்கு உண்டு.

*கண்ணுந் தூங்கி நடுவுந்தி*
*கனக்கச் சுரந்து வெதும்புமுடல்*

நண்ணுந் துடையுங் கண்திமிராய்ச்
சந்தே யிருக்குங் கிறுகிறுக்கும்
மண்ணில் பிறந்தோர் தங்களிடம்
வந்தே வருந்தி மயங்கிடுகில்
எண்ணில் வாத கரப்பானே
யிதுவும் பேச லாமேகாண்! 484

கண்ணில் தூக்க கலக்கமாகவே இருத்தல், நடுவயிறு கனத்துச் சுரத்தல், வெதும்புதல், துடை, கால், கைகளில் திமிருண்டாதல், தலைகிறுகிறுத்தல், மயக்கம் ஏற்படல் ஆகியவை திமிர் வாதகரப்பானின் குணங்களாகும்.

## எண்ணெய்

சாரணை யுத்தம தாளி
தானே சிறுகிளா முடக்கொற்றான்
வாரணி சிறுவழுதலை முருங்கை
வளரு மொக்குப் புங்கம்வேர்
ஏறுங் கொடிக்கள்ளி மிளகுள்ளி
இயன்ற பூதக் கரைப்பானும்
கூறாய் வசம்பு ஆமணக்கு
கொட்டை யெண்ணையி லெரித்துடனே! 485

சாரணை, உத்தமதாளி, சிறுகிளா, முடக்கொத்தான், சிறுவழுதலை, முருங்கைமொக்கு, புங்கம்வேர், கொடிக் கள்ளி, மிளகு, உள்ளி, பூதக்கரப்பான், வசம்பு, ஆமணக்கு இவற்றைப் பொடித்து ஆமணக்கெண்ணெயில் எரித்துடனே உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூசவும்.

## சூரணம்

தூதுவளை யோரிதழ்த் தாமரைவேர்
துய்யநிலி பொருக்குக் கொடுவேலி
மோதமேலங் கருஞ்சீரகஞ் சுக்கு
முந்து கடுக்கா யமுக்கிரா

நீதிபெறச் சமனிடித்துக் கரப்பானுக்கு
கருப்பஞ் சர்க்கரையில் கூட்ட
தாது விளையுங் கரப்பானும்போம்
சறுகா தேபோஞ் சத்தியமே! 486

தூதுவளை, ஓரிதழ்த்தாமரைவேர், நீலி, கொடிவேலி, ஓமம், ஏலம், கருஞ்சீரகம், சுக்கு, கடுக்காய், அமுக்கிரா இவற்றைச் சம அளவு எடுத்து இடித்துச் சீனியில் கலந்து கொடுக்க தாது விருத்தியடையும். கரப்பானும் போகும் என்பது திண்ணம்.

**தைலம்**

முள்ளி சின்ன முன்னைவேர்
முசியாப் பிரண்டை யுடனாக
உள்ளி வேலிப்பருத்தி யழிஞ்சில்வேர்
யுகந்த செப்பு நெருஞ்சில்வேர்
கொள்ளுங் கொழுஞ்சி செங்கத்தாரி
கொல்தலைச் சுருளி குமுளம்வேர்
மெள்ளத் தண்ணீர் மிட்டானும்
வெள்வெங் காயம் வசம்புடனே
அள்ளு மிளகா மணக்கெண்ணை
யதில்வெந்து மேலிற் பூசுவதே! 487

முள்ளி, சின்னி, முன்னைவேர், பிரண்டை, வேலிப் பருத்தி, உள்ளி, அழஞ்சில்வேர், செப்பு நெருஞ்சில்வேர், கொழுஞ்சி, செங்கத்தாரி, தலைச்சுருளி, குமிழம்வேர், தண்ணீர் மீட்டான், வெள்வெங்காயம், வசம்பு, மிளகு இவற்றைப் பொடித்து ஆமணக்கெண்ணெயிலிட்டுக் காய்ச்சி மேலுக்குப் பூசவும்.

**கண்ட கரப்பான் குணம்**

போதச் சிரமே வறண்டுமிகப்
பொருளும் மூர்ச்சை விடுவதெனிற்
சேதப் படுத்தும் பித்தமிகச்
செய்யுங் குணங்க ளிரெட்டும்

காதுங் கழுத்து மிடர்சொறிவாங்
கண்ட கரைப்ப னிதுவென்று
போதஞ் செரிந்த தமிழ்முனிவர்
புவியின் மீது புகன்றாரே! 488

தலை வறண்டு, மூச்சுவிடுவதில் சிரமமேற்பட்டு, தொண்டையைச் சேதப்படுத்துவதும், பித்தத்தை மிகுதிப் படுத்துவதும் போன்ற பதினாறு குணங்களைக் கொண்டது கண்டகரப்பான். இது காது, கழுத்து, மிடறு ஆகிய இடங்களில் உண்டாகும்.

## எண்ணெய்

தூதுவளை யோரிதழ்த் தாமரையுந்
துய்ய முத்தம் நன்னாரி
ஊதுஞ் சாரணை திரிகடுகு
யுகந்த சீரகம் வசம்புள்ளி
காதுங் கையான் தகரையுடன்
கசக்கும் வேப்பந் தோல்தண்ணீர்
போது மெண்ணை தனிற்கூட்டி
பொருந்த யெரித்து நக்குவதே! 489

தூதுவளை, ஓரிதழ்த்தாமரை, முத்தக்காசு, நன்னாரி, சாரணை, திரிகடுகு, சீரகம், வசம்பு, உள்ளி, கையாந்தகரை, வேப்பம்பட்டை இவற்றுடன் எண்ணெய் சேர்த்து எரித்து, உள்ளங்கையிலிட்டு உட்கொள்ள கண்டகரப்பான் குணமாகும்.

## வறட்சிக் கரப்பான் குணம்

வாதஞ் சொறியு மயங்காதே
வறச்சிக் கரப்பான் வகைகேளீர்
ஊதுஞ் சொறியுங் கால்காத்து
வுடலு மிகவே யதைப்புண்டாம்
தீது மருந்து பரந்தேறுந்
திதமாய்ச் சருமாப் பாருக்கெழும்பும்
வோது மொருவர்க் குன்றென்ன
வேசடை யாய்ப்புலால் நாறுமதே! 490

வறட்சிக் கரப்பானில் வாதம் மிகும். உடல் ஊதும்; சொறியும், உடல் அதைக்கும். மிகுந்த அளவில் உடல் பணி செய்தவனின் வியர்வை நாளங்கள் குத்திட்டு நிற்கும். வியர்வை புலால் நாற்றம் வீசும். இவை வறட்சிக் கரப்பானின் குணங்களாகும்.

**தைலம்**

*தண்ணீர் மிட்டான் கிழங்குதனிற்*
*சாரும் நாழி தனைக்கொண்டு*
*வண்ணத் துரிய வரிக்குமரி*
*மடலில் சாறு நாழியது*
*தண்ணக் குரிய தூதுவளை*
*தன்னில் நாலு பலம்வேரும்*
*நண்ணும் படியே சாரித்து*
*நன்றா யூறப் போடுவதே!* 491

தண்ணீர் மீட்டான் கிழங்குச்சாறு 1.3 லி., வரிக் கற்றாழைச்சாறு 1.3 லி. எடுத்து, 140 கி. தூதுவளை வேரை இதில் ஊறவிடவேண்டும்.

*ஊறிப் பிழிந்து வடித்தெடுத்து*
*யோரஞ் சிரண்டாய்க் காய்ந்தநீர்*
*ஆறிப் போகு மதிலெண்ணை*
*அடுக்காய் நாழி உரிவிட்டு*
*கூரிச் சிவந்த கொடுவேலி*
*குலாவுஞ் சீரகம் வெம்பாடல்*
*ஏறக் கூட்ட வேண்டாங்கா*
*ணிடராய்க் கழஞ்சு யிவைகூட்டே!* 492

ஊறியபின் பிழிந்து வடித்தெடுத்துக்கொண்டு, கொதிக்க வைத்து ஐந்தில் இரண்டு பங்காகச் சுருங்கிய நீரில் எண்ணெய் 2.6 லி. சேர்த்து சிவப்புக் கொடிவேலி, சீரகம், வெம்பாடல் இவை வகைக்கு 5 கி. கூட்டிக் காய்ச்சிக் கொள்ளவும்.

கூட்டிக் காய்ச்சி வடித்ததனைக்
குணமாய்க் கொள்ள மேல்பூச
வாட்டஞ் செய்யும் வறட்சியது
வாத கரப்பன் மாறிப்போம்
கோட்டிக் கொள்ளும் வியாதியெல்லாங்
குணமா மென்றார் குருமுனியும்
தேட்ட முடனே யிம்மருந்தைத்
தெளிந்து செய்வீர் செகத்தோரே! 493

இவ்வெண்ணெயை உடம்பில் பூசிக் கொள்ள துன்பந் தரும் வாதகரப்பான், வறட்சிக்கரப்பான் இவைமாறிப் போகும். இவ்வகையில்தோன்றும் நோய்கள் எல்லாம் இம்மருந்தில் குணப்படும்.

## வறட்சிக் கரப்பான் குணம்

கால்தலை யுடம்ப தெங்கும்
கனக்கவே சிறுசி ரங்காய்
சேலது கெட்டு வற்றித்
தினவுடன் சொறியுண் டாகி
சாலவே காது நாசி
மிடறுதான் கரக ரக்கில்
மாலவே மடமாங் கன்றே
வறட்சிசேர் கரப்பா னாமே! 494

கால், தலை, உடம்பு முழுதும் சிறுசிறு சிரங்குகளாய்த் தோன்றி, கண்கெட்டு வற்றி தினவோடு சொறியும் உண்டாகும். காது, நாசி, மிடறு இவை கரகரக்கும். இக்குறிகுணங்கள் கண்டால் இதை வறட்சிக்கரப்பான் என உணரலாம்.

## எண்ணெய்

புங்கங் கொட்டை பசுமஞ்சள்
புதிய வெள்ளைப் பாசாணம்
அங்குஞ் சொன்னோம் வெம்பாடல்
அவுரிச் சாறு நல்லெண்ணெய்

*பங்கப் படாதே சோதியாதே*
*பதத்தில் வடித்து மேல்பூசி*
*தங்கிப் பின்னை வெய்யில்*
*தணீர்தனில் குளிக்கத் தருகாதே!* 495

புங்கங்கொட்டை, மஞ்சள், வெள்ளைப்பாடாணம், வேம்பாடம்பட்டை, அவுரிச்சாறு இவற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்திறக்கி மேல்பூசவும். வெயிலில் வைத்த தண்ணீரில் குளிக்க வறட்சிக் கரப்பான் நீங்கும்.

## கபாலக் கரப்பான் குணம்

*காதுந் தினவாய்க் கண்தினவாய்*
*கண்டந் தினவாங் கரகரத்து*
*ஒதுங் கண்ணீருற் றொழுகி*
*யுண்ணு மூக்கில் நீர்பாயு*
*மேது முழுக்கால் நறவதனால்*
*லேறைக் குறைந்து சீர்வறளில்*
*சேதப் படுத்தும் துட்டதனால்*
*சேருங் கபாலக் கரப்பனிதே!* 496

காதுங் கண்ணும் தினவெடுக்கும். தொண்டை தினவெடுத்து கரகரக்கும். தலையின் நீர் மூக்கின் வழி வெளிபாயும். உடல்நலத்தைக் குறைத்துச் சீர்கெடுக்கும். இவை கபாலக் கரப்பானின் குணங்களாகும்.

## குடிநீர்

*நன்னாரி முத்தந் தூதுவளை*
*நயங்கும் பொன்னார் தேவி*
*சொன்னோ மோரித்த் தாமரையுந்*
*துய்ய சிவனார் நிலவேம்பு*
*வண்ணத் தாவும் பெருங்குரும்பை*
*வட்டச் சாரணை வேருடனே*
*தன்னே யோர்பலங் கொண்டுகந்தே*
*தண்ணீர் கண்டு கிஷாயமிடே!* 497

நன்னாரி, முத்தக்காசு, தூதுவளை, பொன்னாங்காணி, ஓரிதழ்த்தாமரை, சிவனார்வேம்பு, பெருங்குரும்பை, வட்டச் சாரணைவேர் இவற்றை வகைக்கு 35 கி., எடுத்துத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி முறைப்படி உட் கொள்ளவும்.

## தைலம்

*சுக்கு மிளகு திப்பிலியுஞ்*
*சோம னுப்பு கடுக்காயும்*
*தக்க கருஞ்சீரகம் வசம்புள்ளி*
*சரிசென் னகரங் கச்சோலம்*
*மிக்க கடுகு ரோகணியும்*
*வெளுத்த பிசினு மதிமதுரம்*
*யொக்கக் கழஞ்சியிடை காய்ச்சி யெண்ணையிட*
*யோடுங் கபாலக் கரப்பனிதே!* 498

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கடுக்காய், கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, சென்னகரம், கச்சோலம், கடுகுரோகணி, வெளிச்சைப் பிசின், அதிமதுரம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்து நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும். இதை மேலுக்குப் பூச கபாலக் கரப்பான் நோய் நீங்கும்.

## கண்ட மாலையின் குணம்

*தலையுடன் பிடரி கண்டஞ்*
*சன்னையுங் கனத்து நொந்து*
*உலைவுடன் கழுத்திற் சுற்றும்*
*...ண்டது யுடைந்து புண்ணும்*
*மலைவுடன் சுரமும் மாறா*
*யக்குணங் கண்டால் வேறே*
*கலைபெறு முனிவன் சொன்னான்*
*கண்ட மாலையின் குணமிதன்றே!* 499

தலை, கழுத்து, கண்டம் இவை கனத்து நொந்து, உளைச்சலை உண்டாக்கி கழுத்தைச் சுற்றும் குணம் உடையது இக்கண்டமாலை, இதனுடன் சுரமும் சேர்த்து வருமானால் அது கண்டமாலை என்று பழம் சித்தர் கூறுவர்.

## தைலம்

*வெள்ளுள்ளி வசம்பு கோட்டம் கருஞ் சீரகம்*
*வெம்பாடல் மதுரந்தார மஞ்சள் திரிகடுகு சீனவாவும்*
*வெள்ளெருக்கு சேங்கொட்டை கொடுவேலி*
*வேலிப் பருத்தி பொன்துவரை வேர்க்கடுக்காய் ஒரோர்*
*பலமாய்! 500*

வெள்ளுள்ளி, வசம்பு, கோட்டம், கருஞ்சீரகம், வெம்பாடல், அதிமதுரம், அரிதாரம், மஞ்சள், திரிகடுகு, பரங்கிப்பட்டை, வெள்ளெருக்கு, சேங்கொட்டை, கொடிவேலி, வேலிப்பருத்தி, துவரை, வேர்க்கடுக்காய் இவை வகைக்கு 35 கி. எடுத்துக் கொள்ளவும்.

*வெள்ளைப் பிசினுந் துரிசுதுத்தம் லிங்கம் குங்கிலியம்*
*வேப்பம் பிசினும் குக்குளமே யெடுத்த தார*
*மோர்கழஞ்சாய்*
*வெள்ளாட்டுப் பால் லெண்ணை வேளைநீர் நாளி யதில்*
*விதமா யரைத்துக் கரைத்திட்டுக் காய்ச்சி வடித்துக்*
*கொள்ள பூசப் புண்ணில் கள்ளமருந்து கண்டமாலை*
*கபாலநோய் விப்புருதிகரப்பன்வகை*
*காத்துப் போலே போமென்று*
*கருத்தில் முனிவர்க் கருளி னாரே! 501*

வெள்ளைப்பிசின், துரிசு, துத்தம், லிங்கம், குங்கிலியம், வேப்பம்பிசின், குக்குளம், அரிதாரம் இவை முறையே 5 கி. வீதம் எடுத்துக்கொள்க. வெள்ளாட்டுப் பால், வேளைநீர் இவை வகைக்கு 1.3 லி. எடுத்து மேற்கண்ட சரக்குகளை அரைத் தெடுத்துக்கொள்ளவும். இதனுடன் 1.3 லி. நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி பூசிவர புண்கள், கண்டமாலை, கபால நோய், விப்புருதி, கரப்பன் வகைகள் இவை நீங்கும்.

### அரையாப்பு தோன்றக் காரணம்

*சூட்டது நீரி னாலுந்*
*துணுக்கரை சுளுக்கி னாலும்*
*மாடல்செய் புணர்ச்சி யாலும்*
*மரும்பெரும் நடையி னாலும்*
*கேடுள்ள நீரால் நீந்தில்*
*கெனித்திடும் அரையாப் புத்தான்*
*பாடுவன் முனிவன் நானும்*
*பரிவுடன் வளமை யோர்க்கே!* 502

உடலில் ஏற்பட்ட அதி சூட்டினாலும், சுளுக்கேற்படு தலாலும், அடிக்கடி புணர்ச்சியில் ஈடுபடுதலாலும், அதிக தூரம் நடத்தலாலும், கெட்ட நீரில் நீந்துதலாலும், குளித்தலாலும் அரையாப்பு உண்டாகும் என்பர் முனிவர்.

### கட்டு

*வசம்பு வெள்ளுள்ளி யாதண்டம்*
*மருவுந் தும்பை தைவேளை*
*இசங்கு நத்தைச் சூரியிலை*
*யிவையெல்லாஞ் சமனா யரைத்து*
*அசங்க மன்றிச் சிறுவெதுப்பி*
*யான மருந்து மூன்றுநாள்*
*இசங்க மாக அரையாப்பில்*
*நீயே கட்டு நிகழாதே!* 503

வசம்பு, வெள்ளுள்ளி, ஆதண்டை, தும்பை, தைவேளை, இசங்கு, நத்தைச்சூரியிலை இவற்றைச் சமஅளவு எடுத்து அரைத்து அனலைக் குறைவாக வைத்து சிறுகவெதுப்பி, அதனைத் தொடர்ந்து மூன்று நாட்கள் அரையாப்பில் கட்டி வந்தால் அரையாப்பு நீங்கும்.

### பூச்சு

*கோளி முடக்கல் சுண்ணாம்பு*
*குன்றி பனைவட் டாமணக்கு*

மாளி கூட்டிச் சாரித்து
மகிழப் பூசி ரவையன்றி
நீளும் பசுமஞ்சள் வெள்ளுள்ளி
நிகழும் வெந்தயம் பனை வட்டு
ஆளுஞ் சுண்ணாம்பு வருமண்ணு
யதுகோழி முட்டையி லரைத்திடுவீர்! 504

சுண்ணாம்பு, பனைவெல்லம், குன்றி, ஆமணக்கு இவற்றைச் சேர்த்தரைத்து அரையாப்பின் மீது பூசவும், மஞ்சள், வெள்ளைப்பூண்டு, வெந்தயம், பனைவெல்லம், சுண்ணாம்பு, உவர்மண் இவற்றுடன் தேவையான அளவு கோழி முட்டைகளைச் சேர்த்தரைத்து அரையாப்பின் மீது பூசவும்.

நீர்மேல் நெருப்புத் தானரைத்து
நிகழொரு சாமம் மட்டாகப்
பாரு மூன்று நாள்கட்ட
பகர்ந்தோங் கட்டு மருந்தாக
ஊரில் முருங்கை வசம்புள்ளி
யோட்டிக் கூட்டி ருண்மையென
தீரும் வசம்புள்ளி கொடுவேலி
திருந்துமாஞ் சுண்டை மாவிலிங்கை! 505

நீர்மேல்நெருப்பு மூலிகையை அரைத்து ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் அரையாப்பின் மீது வைத்துக்கட்டவும். அவ்வாறே மூன்றுநாள் செய்யவும். முருங்கை, வசம்பு, உள்ளி, கொடிவேலி, சுண்டை, மாவிலிங்கு ஆகியவற்றைத் தேவையான அளவெடுத்து அரைத்து அரையாப்பின் மேல் பூச குணமாகும்.

## அரையாப்பிற்குப் புகை மருந்து

இரதமோர் பணவிடை வெள்ளையரை
யியன்ற கெவுரி தானரையும்
துரிசு யரையுங் காரியந்
துலங்கு முருக முகந்தனிலே

இரசமிட்டுத் தானு ருக்கி
யெல்லாங் கூட்டிப் பொடிசெய்து
பரிசா மொருநா ளீவ்வளாம்
பருகச் சிலையின் புகைகாட்டே! 506

இரசம் 488 மி.கி., வெள்ளைப்பாடாணம் 244 மி.கி., கௌரிப்பாடாணம் 244 மி.கி., துரிசு, காரீயம் வகைக்கு 244 மி.கி., எடுத்துக் கொள்க. அனைத்தையும் கலத்திலிட்டு உருக்கும்போது, இரசத்தை மட்டும் பிரித்துப் பின்னர் சேர்த்துருக்கிப் பொடித்துத் தூய்மையான சீலையில் தடவி புகைத்து அரையாப்பிற்குக் காட்டவும். 260 மி.கி, பொடியை உள்ளுக்கும் சாப்பிடவும். குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும் குணமாகும்.

## கிரந்திப்புண் குணம்

பரிந்துறுங் கிரந்தி னோய்கள்
பறந்திடும் வெப்பி னாலும்
மரும்புனல் தினா காலும்
மடுபுண்க ளடுக்கை யாலுங்
கருங்குழல் மாதர் தோஷங்
கன்றியுண் டாகு மென்று
வருந்திரு முனிவன் சொன்ன
வாகடம் அறிந்து கொள்ளே! 507

வெப்பினால் கிரந்திநோய்கள் மிகுதியும் உண்டாகும். புதிய நீர் பயன்படுத்துவதாலும் புதியபுண்கள் தோற்றத்தாலும், மாதர் தோஷத்தாலும் கிரந்தி உண்டாகுமென்று முனிவர்கள் சொன்னார்கள்.

## மருந்து

கல்நார் கல்மதங் களிப்பாக்குக்
கடிய இரதங் காசுக்கட்டி
நலவாய் துரிசு நன்றாக
நாடுமிவை யெல்லாஞ் சமனாய்

அலவாய் சுத்தி செய்வதும்
அதுசெய் பருத்தி யிலைச்சாற்றில்
நல்வாய் பசுவின் வெண்ணையிலும்
நேக வரைத்துச் சிமிளில் வையே! 508

கல்நார், கல்மதம், களிப்பாக்கு, இரசம், காசுக்கட்டி, துரிசு இவற்றைச் சமஅளவு எடுத்துச் சுத்திசெய்து பருத்தியிலைச் சாற்றிலும் பசுவின் வெண்ணையிலும் நேக அரைத்துச் சிமிளில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒருகையில் தயிர்த்தண் ணீரும்
ஊமத்தை நீரு தானும்
ஒரு துளி விட்டு லாவி
யூண்டுபின் முன்று நாளும்
கருகிடுங் கிரந்தி தானுங்
கனப்புடன் விக்கம் போகும்
கருதுடன் முனிவன் சொன்ன
காரண மறிந்து கொள்ளே! 509

மேற்சொன்ன மருந்தில் தயிர்த்தண்ணீரும், ஊமத்தை நீரும் ஒரு துளி சேர்த்துச் சாப்பிட கிரந்திப்புண்கள் கருகிப் போகும்.

## மருந்துச்சீலை

துருசு சுட்டு நீறாக்கி
தூயா மணக்கு முத்துடனே
பருகி லோட்டில் விரைவறுத்துப்
பருப்பை யெடுத்து துருசுசுட்டால்
மருவ யரைத்துச் சீலையினில்
மருவப் பிரட்டி யிருநேர
மருகும் புண்ணில் தான்போட
யதுக்கு விடுவிர் குளுந்ததண்ணீர்! 510

துருசினைச் சுட்டு நீறாக்கி, ஆமணக்கு முத்துடன் (ஆமணக்கு முத்தை ஓட்டில் வறுத்து, பருப்பை எடுத்துக்கொள்ளவும்)

துருசையும் சேர்த்து அரைத்துச் சீலையில் புரட்டி காலை, மாலை இருவேளையும் புண்ணில் போடவும். அதன்மேல் குளிர்ந்த நீர் விடவும், நாளொன்றுக்கு ஆறு அல்லது ஏழுமுறை குளிர்ந்தநீர் விடவும்.

## மருந்து

*இரத மடறு மஞ்சாடி*
*யியன்ற துரிசு மூன்றாகும்*
*மரிதாங் குன்றி யளவென்ன*
*யான யிரதம் பருத்தியிலை*
*சரிதாய்ச் சாற்றில் முறித்தரைத்துத்*
*தானே நீறு போலாக்கி*
*துரிய துத்தம் பொடியாக்கி*
*துய்ய பசுவின் வெண்கொள்ளே!* 511

இரசம், மஞ்சாடி, துரிசு மூன்றையும் சேர்த்து 130 மி.கி., அளவெடுத்து, பருத்தியிலைச் சாற்றில் அரைத்து நீறுபோலாக்கி துத்தத்தைப் பொடித்து பசு வெண்ணையில் கொள்ளவேண்டும்.

*மருந்து வெண்ணைய தோடே*
*மற்றித் திதுவும் பயிறளவாய்*
*மருந்து போட வெற்றிலையில்*
*மகிழ வாட்டிப் பதறிட்டு*
*மருந்து புருஷக் கிரந்தியின்மேல்*
*மகிழப் போட்டு வொருதரம்*
*மருந்தைக் கழுவி மறுனாளும்*
*மற்ற மிப்படிப் போட்டிடவே!* 512

வெண்ணையுடன், பயிறளவு மருந்தை வாட்டிய வெற்றிலையில் வைத்து கிரந்தியின் மேல் போட்டு ஒருநாள் சென்ற பின் கழுவி எடுத்து மீண்டும் மறுநாளும் இவ்வாறே போடவேண்டும்.

## கிரந்திக்கு வேது, பூச்சு

கடுக்கா யிடித்துத் தூளாக்கி
கன்ற துரிசு யுவர்மண்ணும்
மிடுக்காய்க் காய்ச்சித் தண்ணீரில்
வேது பிடிக்க யாதண்டை
யடுக்கா மணக்கங் கொத்துடனே
மிடுக்கா விங்கு மரமாகி
யான வெண்ணெய் செய்திடவே
மேவுந் திரிபலை தானரைத்து
திடுக்க .....கிரந்திக்குஞ்
சேரும் விக்க மதில்பூசே! 513

கடுக்காயைத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். துரிசு, உவர் மண் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி, காய்ச்சிய அத்தண்ணீரில் வேது பிடிக்கவும். ஆதண்டை, அடுக்காமணக்கு, வெண்ணெய், திரிபலை இவற்றை அரைத்துக் கிரந்தியில் தோன்றும் வீக்கத்தின் மேல் பூசவும்.

## பூச்சு

துத்த மிரதங் குங்கிலியஞ்
சொல்லும் வெங்கலப் பொடியுடனே
வைத்த வங்காளப் பச்சையுடன்
மன்னுங் காளாஞ் சதைகூட்டி
உத்த யாவின் வெண்ணையுடன்
உகந்த தேசிப் பழச்சாறும்
வைத்தே அரைத்துச் செம்புகொண்டு
மகிழ்ந்தே நீயுஞ் சிமிளில்வையே! 514

துத்தம், இரதம், குங்கிலியம், வெங்கலப்பொடி, வங்காளப்பச்சை, காளாஞ்சதை, ஆவின் வெண்ணெய் சேர்த்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துச் செம்புச் சிமிளில் வைக்கவும். கிரந்திப்புண்ணை வெந்நீரினால் கழுவவும். மாதுளையில் அப்பூச்சினைத் தடவி இப்புண்ணின் மீது போடவும்.

## வெள்ளைக் குழம்பு (சீலை)

வெள்ளைக் குழம்பின் வகைகேளாய்
வேறே வெள்ளைக் குங்கிலியம்
துள்ள வரைத்துச் சீலைவடி
சொன்னோம் நல்லெண்ணை தான்விட்டு
மெள்ள யிளக்கிக் கொதிக்கவைத்து
வேண்டும் வேளந் தானுத்த
அள்ளிப் பிசைந்து சீலை தன்னில்
அடவாய்த் தடவிப் புண்ணிலிடே! 515

வெள்ளைக்குங்கிலியத்தை நேகாக அரைத்துச் சீலை வடிகட்டி, நல்லெண்ணெய் விட்டு இளக்கிக் கொதிக்க வைத்து, அதனைச் செம்புச் சிமிளில் அடைத்து வைக்கவும். தேவையானபோது எடுத்துச் சீலையில் தடவி புண்ணிலிடவும்.

## மருந்துச்சீலை

சாதிலிங்க மொருகழஞ்சு
தனியே துத்த மிருகழஞ்சு
சூதி துரிசு ஒருகழஞ்சு
சொல்லா மத்தை யிலைச்சாற்றில்
நேதி யரைத்து வெண்ணைதனில்
நெகிழ வரைத்துக் கலப்புறத்தில்
சீதி யிளைத்துச் செம்புகொண்டு
சிலையி லூட்டிப் புண்ணிலிடே! 516

சாதிலிங்கம் 5 கி., துத்தம் 10 கி., துரிசு 5 கி. இவற்றை ஊமத்தை இலைச்சாற்றில் நேக அரைத்துப் பின்னர் வெண்ணையில் அரைத்துச் செம்புச் சிமிளில் அடைத்து வைக்கவும். அதில் சிறிதளவெடுத்துச் சீலையில் வைத்துப் புண்ணின் மீது இடவும்.

## புற்றின் குணம்

ரத்தம துருண்டு கூடி
யிறங்கிடுந் திரண்டு யானி

*உற்றிடும் பருப்பி ளவை*
*யுயர்ந்திடுத் திரேக மெல்லாம்*
*கற்றிடும்பொதிகை மேவுங்*
*காரண ஞான போத*
*வாம்பெரு முனிவர் சொன்ன*
*வாகட மறிந்து கொள்ளே!* 517

இரத்தம் உருண்டு இறங்கி திரண்டிடும். இதனால் உடம்பெல்லாம் பருப்பிளவை உண்டாகும். அதற்கு முனிவர்கள் சொன்ன மருந்தை நாம் அறியலாம்.

**மருந்து**

*செங்கொடிவேலி புறத்தோல் கழஞ்சி*
*சிறங்கை வெள்ளி லிட்டவிச்சு*
*அங்கதை வாங்கித் தான்தின்று*
*யதுமே லந்த நீர்குடித்து*
*அங்கதில் வொரைத்தெ டுத்து*
*யதுவும் புண்ணில் தானிடவே*
*செங்காத் தோடி பத்தத்தானை*
*தீருங் கிரந்திப் புண்களுமே!* 518

செங்கொடி வேலியின் தோல் 5 கி. எடுத்து சிறிது வெள்ளியில் விட்டு அவித்துக் கொள்ளவும். அதனை எடுத்து உண்டு, பின் அந்த நீரைக் குடித்து, அதனைப் புண்ணின் மீது தடவி வர கிரந்திப்புண்கள் தீரும். 5 நாட்கள் இம்மருந்தினைச் சாப்பிட்டு பத்தியம் இருக்கவும்.

**எண்ணெய், பற்று**

*சித்திரப்பா லாவி கீழாநெல்லி*
*சிறக்க நாழியெண்ணை வெந்துவடி*
*பத்திர மொன்பது நாள்குடிக்கப்*
*பாரும் புத்து யரும்பரைக்*
*காத்திர மாயெண்ணை யுள்குடுத்துக்*
*காக்கைகோலி விரைமுக்கழஞ்சி யிட்டுக் காய்ச்சிப்*

பத்திடப் போகும் முத்திரைப் பத்தியமா
முனிவன் மொழிந்தார் மொழிந்தார் மொழிந்தாரே! 519

கீழாநெல்லி, அம்மான் பச்சரிசி வகைக்கு 1.3 லி., நல்லெண்ணெயில் வேகவிட்டு எடுத்து அவ்வெண்ணெயை ஒன்பது நாட்கள் பருக வேண்டும். அதனுடன் காக்கை கொல்லி விதையை 15 கி. எடுத்துக் காய்ச்சிப் பற்றிடப் புற்றுபோகும்.

## சிலந்திப்புண்ணின் குணம்

உட்டிண மெத்த மீறில்
உறுக்கெடு நீரு மேறில்
கட்டிடும் மலங்கள் தீயில்
கரப்பன்றன் குடிக ளாகும்
திட்டமாய் விஷங்க ளேற்கில்
சிரங்குபுண் சிலந்தி தானு
முட்டறா வருமீ தென்று
மொழிந்தனர் முனிவர் தாமே! 520

உடம்பில் உட்டினம் மிகுதியானாலும், கெட்டநீர் உடம்பில் ஏறினாலும், மலம்தங்கி மலச்சிக்கல் ஏற்படுவ தாலும், கரப்பான் குடிபுக ஏதுவாகும். இதனால் விஷம் பரவி சிரங்கு, புண், சிலந்தி இவை உண்டாகிவிடுமென்று மொழிந்தனர் முனிவர்கள்.

## ஆறாது அழுகின சிலந்திக்கு, ஒட்டிய புண்ணுக்கு மருந்து

கோழியின் முட்டை தன்னில்
குறித்ததோர் கழஞ்சு கெந்தம்
தெளிதாய்ப் பொடித்துக் கூட்டித்
தேங்காய்நெய் யதனில் தான்பொரித்து
வாளிதாய் மூன்று போது
வன்மையாய் நெய்ய தொக்க
சீனிசெய் சிரங்கு சிலந்தி
தீராத புண்ணும் போமே! 521

கோழிமுட்டையில் 5 கி. கெந்தகத்தைப் பொடித்துக் கூட்டிக்கொள்க. அதனைத் தேங்காய் எண்ணெயில் பொரித்து தினம் மூன்றுவேளை உண்ண சிலந்தி, சிரங்கு, தீராதபுண் இவைபோம்.

*ஆறாத யழுகின சிலந்தி*
*..... கடுக்காய் தான்வெதுப்பிக்*
*கூராய்க் கொட்டை தான்போக்கி*
*குணமாய்ப் பொடித்துப் புண்ணிலிட*
*மாறாப் புண்ணு மாறிவிடு*
*மதுவும் நாமுங் கண்டதுவாம்*
*கூறாய் முனிவன் தானுரைத்த*
*குணமாய்ச் செய்யும் பெரியோரே!* 522

நீண்ட நாட்களாக ஆறாத அழுகிப் போன சிலந்திக்கு, கடுக்காயை வெதுப்பி கொட்டை போக்கி சதையைப் பொடித்துப் புண்ணிலிட ஆறாத புண்ணும் ஆறிவிடும் என்பது பெரியோர் உணர்ந்து சொன்னது.

## சிலந்திப்புண்ணுக்கு மருந்து

*முக்கழஞ்சு ரசத் தோடே*
*முசிதோம மனிவ றுத்து*
*மிக்கப் பொடியுடன் கொடுவேலி*
*மிகுந்த புன்னைக் காயளவு*
*ஒக்க வெற்றிலைச் சாறுவிட்டு*
*யிரத முறிச்சு யசமதாகம்*
*துக்கப் பிசறி யுலரவிட்டுத்*
*தானே போடு கொடுவேலி!* 523

15 கி. இரசத்தை வெற்றிலைச் சாறு விட்டு முறித்து அதனுடன் வறுத்த அசமதாகத்தைச் சேர்த்துப் பிசறி, உலர விட்டுப் பொடித்துக் கொள்ளவும். கொடிவேலி வேரினைப் பொடித்துப் புன்னைக்காயளவு எடுக்கவும்.

கொடுவேலி வேரும் பனைவெல்லங்
கொண்டே விரவி யிளகாமல்
அடுக்கா யெடுத்து பதத்தில்வைத்து
யான கொடிக்கழல் மருவாதி
திடமாய்த் தின்ன யெப்புண்ணுந்
திரும் பத்திய முருங்கைக்காய்
விடுமே முருங்கை யிலையாகு
விட்டுக் கைப்புப் புளியைவிடே! 524

தேவையான அளவு பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகாக்கி மேற்சொன்ன பொடிகளையும் சேர்த்து விரவி பதத்திலெடுத்து, கொடிக்கழற்சிக்காயளவு உள்ளுக்குச் சாப்பிட சிலந்திப்புண் வகைகள் தீரும். முருங்கைக்காய், முருங்கையிலையைப் பத்தியமாய்க் கொள்ளவும். கசப்பு, புளிப்புச் சுவைப் பொருட்களை நீக்கவும்.

## சூலைப் புண்ணுக்குப் புகை

இரசமோர் பணவிடை வெள்ளையரை
யியன்ற கெவுரி தானரையும்
துரிசு யரையுங் காரியந்
துலங்க முருகு முகந்தனிலே
இரசம் விட்டுத் தானுருக்கி
யெல்லாங் கூட்டிப் பொடிசெய்து
பரிசா மொருநா ளிவ்வளவாய்ப்
பருகச் சிலைப் புகைகாட்டே! 525

இரசம் 488 மி.கி., வெள்ளைப்பாடாணம் 244 மி.கி., கௌரிபாஷாணம் 244 மி.கி., துரிசு 244 மி.கி., எடுத்துக் கொள்ளவும். காரீயத்தை உருக்க வேண்டும். காரீயம் உருகும் முகத்தில் இரசத்தைவிட்டு உருக்கவேண்டும். மற்றவற்றையும் கூட்டிப் பொடிசெய்து ஒவ்வொரு நாளும் அளவாய்ச் சீலையில் பரப்பி புகைகாட்டவும்.

### புகை

இரத மிரண்டு காரியமூன்று
யிவைதா னுமரச காரியம்
முருகிற முகத்தி லேநான்கு
மதானே ரசம்விட் டெடுத்துக்கொள்
ரசத கெந்தம் பெருங்காய
முண்ணும் வெள்ளைப் பாஷாணம்
சரிசம னோரொன்று கழஞ்சிகொண்டு
தானே பொடிசெய்ய அப்புகைக்கே! 526

இரசம் இரண்டு பங்கு, காரீயம் மூன்று பங்கெடுத்து இரண்டையும் உருக்கவேண்டும். உருகு முகத்தில் இரசம்விட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். இரசகந்தம், பெருங்காயம், வெள்ளைப்பாடாணம், இவற்றை 5 கி. எடுத்து முறையே பொடிசெய்து புகையிட வேண்டும். தயிர் சாதம் சாப்பிடவும்.

### புகை

கெந்தகந் துரிசு கெவுரிவெள்ளை
கிளர்நே ரொன்று அரையாக
வந்த யிரத மோரொன்று
மழிழு மீயம் பணவிடையு
முந்த யிய முருகவிட்டு
முனிந்த யிரதம் விட்டபின்பு
அந்தப் படியே யொன்பதுதான்
ஆகப் புகைக்கும் வகைகேளே! 527

கெந்தகம், துரிசு, கௌரி, வெள்ளைப்பாடாணம், இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொள்ள வேண்டும். இரசம், ஈயம் இவை 488 மி.கி., எடுத்து ஈயத்தை உருகவிட்டு உருகு முகத்தில் இரசம்விட்டு புகைக்கவும். இவ்வாறு ஒன்பதுநாள் செய்யவும்.

## புரை, கழலைக்குக் கட்டு

அரிதாரஞ் சங்கு பொடிசெய்து
.....
வரிதாங் கழலை தான்பூச
வெந்து வெதுப்பி மிகப்பிதுங்கி
ஒருக்கால் புறத்தால் பிதுர்ப்படுமே
யுகந்த கழலை தான்தீர
வருமே யிரத்தக் கட்டியின்மேல்
மகிழு மெருக்கம் பால்பூசே! 528

அரிதாரம், சங்கு, இவற்றைப் பொடிசெய்து, கழலைக்குப் பூச, அது வெதும்பி உடைந்து முளை வெளிவரும். பின்னர், ஈயத் தகட்டின் மேலே எருக்கம்பால் பூசிக், கழலை உடைந்த பின் புண்ணின் மேல் போட்டுக் கட்டவும்.

## பூச்சு வகைகள்

பேயன் வாழைப் பூமடலைப்
பிட்டு யுலத்திச் சாம்பலாய்
மாயக் கூரிய சுண்ணாம்பில்
மருவும் விளக்கெண்ணையில் குழைத்திடவே
வாய மான புரைகழலை
வந்த நாலு மூன்றுநாள்
தியப் பூசி லிக்குளம்பில்
தீர வெடித்துச் சீவிழுமே! 529

பேயன் வாழைப்பூமடலைப் பிட்டு உலர்த்திப் பொடித் தெரித்து அச்சாம்பலைச் சுண்ணாம்பிலும், விளக்கெண்ணெ யிலும் குழைத்து புரை, கழலைக்கு மூன்று அல்லது நான்கு நாள் பூசி வர புரை, கழலை இவை வெடித்துச் சீழ்வெளிவரும்.

கல்லுப்புத் தானொரு சேரை
பசுப்பால் கலந்தே வேகித்து
நல்ல துரிசு பொடிசெய்து
நன்றாய் வெந்த யுப்புடனே

யெல்லா மொக்குந் தேசியென்னும்
பிழிந்த சாற்றில் தானரைத்து
வல்ல காரந் தன்னிலிட
வருந்து மின்னம் வகைகேளாய்! 530

கல்லுப்பு, 280 கி. எடுத்துப் பசும்பால் கலந்து வேகவைத்துக் கொள்ளவும். துரிசைப் பொடித்து மேற்சொன்ன வெந்த கல்லுப்புடன் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துப் பொரிகாரம் சேர்த்துப் புண்ணின் மேலிடலாம்.

கெவுரியைப் பொடித்து நன்றாய்க்
கேளின்ன மாம ணக்குச்
சவியெண்ணை தன்னி லிட்டுத்
தானது குழைத்துக் கொண்டு
குய்ந்திடு மாணி தன்னில்
குணமுடன் போட்ட போது
அவிழ்ந்திடு மாணி தானும்
அலறியே யெழுந்து போமே! 531

கௌரியைப் பொடித்து, ஆமணக்கு எண்ணெயில் விட்டு, குழைத்துக் கொண்டு கழலை மீது போட கழலை குணமாகும்.

கள்ளிவேர்ப் பட்டை னுணாமரத்தின்
கதித்த பட்டை சிறுகிளா
யுள்ள சித்தவரை நன்னாரி
யுகந்த சாரணை புளிநடலை
வெள்ளை வேலங் கொழுந்துடனே
வெற்றிலை கிராம்புச் சாறாகும்
கொள்ளு மதுரம் வெட்பாலை
கோல மிளகு காசுக்கட்டி! 532

கள்ளிவேர்ப்பட்டை, நுணாமரத்தின் பட்டை, சிறுகிளா, சித்தவரை, நன்னாரி, சாரணை புளிநரளை, வெல்வேலங் கொழுந்து, வெற்றிலை, கிராம்பு, அதிமதுரம், வெட்பாலை, மிளகு, காசுக்கட்டி இவற்றை வகைக்குச் சம அளவெடுக்க.

கருங்குங் கிலியம் களிப்பாக்கு
கடுக்காய் கூட்டி நாழியெண்ணை
யொருங்கிலீது மாவா யிடித்து
யுள்ளுங் கழஞ்சி தான்கொடுத்து
இருங்கும்புரை கழலையில் பூச
யிடரி யோடும் புண்களெல்லாம்
மருங்காய்க் குறிதான் வேதமுனி
யருளிச் செய்த படியிதுவே! 533

கருங்குங்கிலியம், களிப்பாக்கு, கடுக்காய் இவற்றைச் சமனெடுத்து 1.3 லி. நல்லெண்ணெய் சேர்த்து இடித்து 5 கி. உண்ணக்கொடுத்து, கழலை, புண்கள் போன்றவற்றிற்கு வெளியிலும் பூச வேண்டும் என்பது வேத முனிவர்கள் அருளிச் சொன்னது.

## சொறிகுட்டத்தின் குணம்

சொறிதக் காய்ந்து மங்கிச்
சுடுநீர்போல் வெதும்பி மெய்யும்
ஆரோக்கப் போலச் சார்த்து
யனலது வெதும்பி யங்கங்
குரோட்டை போல்தொலி கனத்துக்
குருதியுந் தினவாய் முத்தி
துரோட்டைபோல் சொறிந்த ழுக்கும்
சொறிகுட்ட மென்ன லாமே! 534

உடம்பு மிகக் காய்ந்து, மங்கி, சுடுநீர் போல் வெதும்பி, அனலாகி, தோல் கனத்து, குருதி கனத்துத் தினவெடுத்து சொறியச்செய்யும் குணமுடையது சொறி குட்டமாகும்.

## மருந்து

மஞ்சள் கிழங்கு பட்டைதனில்
மருவுஞ் சுண்ணாம்பு தா.ற்கூட்டி
மிஞ்சக் கொடுவேலி சாறுவிட்டு
மேவக் குழைத்துத் தான்வைத்து

மிஞ்சுக் கெச்சன் செங்கல்கொண்டு
மிகவுந் தேய்த்துக் கழுவியபின்
வஞ்சி யாகத் தானோக்கி
வண்மை சொல்வோ மகிழ்ந்துகேள்! 535

மஞ்சள் கிழங்குடன் சுண்ணாம்பு சேர்த்து இஞ்சி, கொடிவேலி இவற்றின் சாறு விட்டு குழைத்து வைத்துக் கொள்க. சொறி குட்டமுள்ள இடத்தை பூவந்திக் கொட்டை, செங்கல் இவற்றின் துணைகொண்டு நன்கு தேய்த்துக் கழுவிய பின் இம்மருந்தைச் சொறி குட்டத்தின் மீது இட குணமாகும்.

### பூச்சு

முந்து மஞ்சள் கிழங்குதான்
முசியக் காயக் கெச்சனமாம்
பிந்தப் பூசி யிலுப்பையுடன்
பெருகும் புண்ணாக்குத் தானரைத்து
அந்தப் பிறகே தான்தேய்த்து
யதுக்கு வென்னீர் தான்விட்டுப்
பிந்தக் குளிக்க தானோடும்
பெருகுஞ் சொறிகுட்டம் பேசியதே! 536

காயவைத்த மஞ்சள் கிழங்குடன், பூவந்திக்கொட்டை, இலுப்பைப் புண்ணாக்கைச் சேர்த்து அரைத்து அதனைக் சொறிகளின் மீது தடவி வெந்நீர்விட்டு குளிக்க சொறிகுட்டம் நீங்கும்.

### எண்ணெய்

கழல்கொடி யிலை மீளகு
கருதுநன் னால்ப லங்கள்
இளகவே யிடித்து ரைத்து
யெண்ணையும் நாழி விட்டு
வளம்பெறக் காய்ச்சிக் கொண்டு
வடித்துக் குடிக்கத் தேய்க்க
குளப்பஞ்செய் சொரியின் குட்டம்
குடிபோகு மென்ன லாமே! 537

கழற்சிக்கொடியிலை, மிளகு இவை 140 கி. எடுத்து இடித்து அரைத்து, நல்லெண்ணெய் 1.3 லி. விட்டுக் காய்ச்சிக் கொண்டு வடித்துக் குடிக்கவும்; சொறிகுட்டத்தின் மேல் பூசவும்.

## பிளவை நிதானம்-குணம்

*ஆயுறு வேத முன்னோ*
*ரடவுடன் பேசி வைத்த*
*நோய்மிகு பிளவை தன்னை*
*நோயதாய்த் தீர்க்க வேண்டி*
*வாய்மையாய் மருந்து காரம்*
*மற்றுள்ள பரிகா ரங்கள்*
*தூய்மையாய்த் தெளியக் கண்டு*
*சுகம்பட மருந்து செய்யே!* 538

ஆயுறுவேதத்தில் தீர்க்க கடினமானது என்று பேசப்பட்ட நோய் பிளவை. அதற்குண்டான மருந்து, காரம், பரிகாரங்கள், இவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

## மருந்து

*பெரிய பிளவை முதுகெலும்பில்*
*பெருக்கப் பனைக்கில் நடுமுதுகில்*
*அருமை யதுவும் மாறாது*
*யடங்க வுழலை யறவெடுக்கும்*
*யரியபொன் னாவரை யல்லி*
*யதுவும் புன்னைக் காயளவும்*
*யரியபழ மோரில் குடிக்கத்*
*தீபன முழலை யோடிப்போம்!* 539

பெரிய பிளவை முதுகெலும்பில் ஏற்பட்டு நடுமுதுகில் இருக்கும் தன்மை கொண்டது. இது அழலையைக் கொடுக்கும். பொன்னாவரை, அல்லி இவற்றை அரைத்து புன்னைக்காயள வெடுத்து பழைய மோரில் பருக பசியையுண்டாக்கும். உழலையைப் போக்கும்.

## பிளவை - குணம்

முதுகிடை யடைத்துத் தானு
முள்ளமுந் தண்டில் பத்தி
யதுவுங் காயம் போலே
பார்பன யவைய முறுங்கண்ணா
யமுதமுறு மருந்து னாலு
மத்துள்ள கருவி னாலும்
விதியது தப்ப மீள
மருந்துகண் டிருந்து செய்வோம்! 540

முதுகினை அடைத்துக் கொண்டு முள்ளத் தண்டில் பற்றிக்கொண்டு காயம்போல் பருத்துக்காணும் இதற்கு மருந்து நான்கு. அதற்காகும் கருவி நான்கு. விதியை மீறி நாம் தப்பி மீள கீழ்ச்சொல்லும் மருந்தைக் காண்போம்.

வெப்புடன் குத்து மூச்சும்
விடாதுள்ளு மியல்போ பங்கம்
தப்பிட நாவ றட்சி
தருகிட ரசத்தின் வாழை
முப்படத் தகனம் போன்றும்
முறமையில் வியாதி தானும்
இப்படிக் குணங்க ளாலு
மிருவகைப் பிளவை யாமே! 541

உடல்வெப்பமடைதல், குத்தல், மூச்சுவிட துள்ளல் ஏற்படல், எனப் பலவகைகளில் இயல்பிற்குப் பங்கம் ஏற்பட்டு நாவறட்சி உண்டாகி, பிளவையானது ரசதாளி வாழைப்பழம்போல் முப்பரிமாணம் உண்டாகி வரும். இவ்வகை வியாதியாம் பிளவை இரண்டு வகையினதாகும்.

பக்கப்பிளவை மார்புதனில் விரல்தனில்
பாருந் தோன்றுங் கோல்போலே
நெக்கட செம்மை யாக
நேர்படும் நெஞ்சு தன்னில்

அக்கருங் குழலி னாலே
கருவியால் கீறிக் காரம்
வெக்கடப் பக்கச் சத்தம்
பிளவையும் விட்டுப் போமே! 542

இதில் பக்கப்பிளவை என்பது ஒருவகை. இது மார்பு, விரல் போன்ற இடங்களில் குச்சிபோன்று நீண்டு தோன்றும். இதனை ஆயுதம் கொண்டு கீறி எடுத்து காரச்சீலை போட, பிளவை விட்டுப்போகும்.

முதுகில் பத்தி யுறைபோலே
முள்ளந் தண்டில் தனைத்தபடி
யிதுவே யருகி லூறு
மில்லை யெங்கில் கண்ணெனப்படும்
ததிலே மேனி குளிராகுந்
தவன முழலை கழிச்சலுடன்
யிதுதான் பக்கப் பிளவையது
யினிதாங் காரங் கிறியதே! 543

பிளவை முதுகில், முள்ளந்தண்டில் ஏற்படுமானால் அதன் பக்கங்களில் எல்லாம் ஊறல் எடுக்கும். பிளவைகள் பளபளவென்றிருக்கும். அதனால் உடலில் குளிர் உண்டாகும். கழிச்சலை உண்டாக்கும். இவ்வகை பக்கப்பிளவையைக் கீறி காரம் சேர்க்கவும்.

## மருந்துச் சீலை

காரந் துரிசு பாசாணங்
கதியா தளவில் குறையாமல்
சேரப் பொடித்து வெண்ணெயுடன்
திரும்ப யரைத்துச் சீலையுடன்
ஆரத் தடவி யிடச்சீலை
யதனைப் புண்ணில் தானிடவே
பாரப் பிளவை பிய்ந்துருகி
பறந்திடு மென்பார் பார்முனியே! 544

பொரிகாரம், துரிசு, பாசாணம், இவற்றைச் சம அளவு எடுத்துப் பொடித்து வெண்ணை சேர்த்து திரும்ப அரைத்துச் சீலையில் நன்கு தடவி, சீலையைப் புண்ணின் மீது போடவும். பிளவை பிளந்து பிய்ந்துவிடும் என அறியலாம்.

### மருந்து

*பந்திடும் புண்ணிற் காரம்*
*பகத்துனி லாமை காரம்*
*பிறந்திடுந் தயிருஞ் சோறும்*
*பிசைந்திவை மூன்று நாளில்*
*அரந்துவய துப்புக் கட்டி*
*யறிவித்து வேகவைத்துப் பின்னை*
*சிறந்திடும் யெண்ணை புண்ணில்*
*தெளியநீர் மருந்து செப்பே!* 545

புண்ணில் காரம் படியும் அளவாகப் போடவேண்டும். தயிரும் சோறும் கூட்டவும். மூன்று நாள் இவ்வாறு அரைத்துக் கட்டி, பின் உப்பை வைத்துக்கட்டி பின்னர் புண்ணிற்கு எண்ணெய் பூசவும்.

### எண்ணெய் (சீலை)

*செப்பமா யெண்ணை வைக்கச்*
*சிறக்கவே யாக நாழி*
*உப்புடன் துடரிப் பூலா*
*ஒன்றொப்பும் பெருஞ்ச ரக்கும்*
*அப்பயிடை யிரண்டி டையா*
*யிருப்ப தாகத் தானெடுத்து*
*தப்பவே பாலுங் கூட்டி*
*சரக்கு மாமணக் கெண்ணைவையே!* 546

1.3 லி. உப்புடன், துடரி, பூலா இவை ஒரு பங்கும் பெருமருந்து இரண்டு பங்கும் எடுத்து நீர்விட்டுக் கொதிக்க வைத்துப் பசும்பால் சேர்த்து, ஆமணக்கெண்ணெய் கூட்டிக் கொள்க.

எண்ணெயுஞ் சீலை தானும்
யிடைவிடாப் பக்கல் தறக்கும்
நண்ணுமா வரையிலை தானும்
நயக்க வேருந் தான்கூட்டிப்
புண்ணின்மேல் வைத்துக் கட்ட
பிளவையு முணர வேண்டும்
உண்மையா யுரைக்க முன்னோர்
உறுதியா யுரைத்தார் தாமே! 547

எண்ணெயில் சீலையை நனைத்து, ஆவரை இலையையும் வேரையும் அரைத்துப் புண்ணின்மேல் வைத்துக் கட்டி சீலையையும் போட வேண்டும்.

## பத்தியக் காய்கறி

கண்டதோர் கறியால் நேய
கருத்தினி லுற்ற தெல்லாம்
கொண்டிடக் குற்ற மாகுங்
கூறினார் முனிவர் முன்னோர்
விண்டிய அவரைக் காயும்
விரும்பிய முருங்கைப் பிஞ்சு
கொண்டிடக் குணங்க ளாகுங்
குணமது கூறி னாரே! 548

கண்ணில்கண்ட பொருட்களை எல்லாம் உண்பது இப்பிளவை கண்டோர்க்கு இயலாது. அவரைக்காய், முருங்கைப் பிஞ்சு, இவற்றை உண்பது சிறந்தது.

## பிளவை - அசாத்தியம்

பிளவையழலை தவளம் பெருதாப
முள்முச் சுரங்கள் களவறட்சி
குளறி வெருவல் குறைக் கண்ணாய்
கொள்ளத் தனந்த லறமிகுத்தல்
அழகு செறியுங் கொடியிடை
யெய்மார் வாதை யதுகண்டால்

*அழவு விதிசேர் வாதை*
*வினையது தான்மீள வறியதே!* 549

உழலை, தாகம், உள்மூச்சு, உடல் வெளுத்தல், உள்மூச்சு, சுரங்கள், வறட்சி, வாய்குழறுதல், வெருவல், கண்குறைபாடுகள் உண்டாதல் ஆகியவை பிளவை கண்டோரிடம் காணும் குணங்களாகும். பிளவை கண்டால் அதனின்றும் மீள்வது அரிது என்பர்.

*மத்திம மலச லங்கள்*
*மற்றுள விழிகள் நாசி*
*உத்தமச் செவிகள் நாக்கு*
*உறுதியிற் பஞ்சிப் பார்க்கில்*
*இத்தனை குணமுங் கெட்டு*
*யிருந்ததே யிருந்து கண்டால்*
*வித்தகர் தன்முன் சென்று*
*மீளுவ தருமை தானே!* 550

மலசலங்கள், விழிகள், நாசி, செவிகள், நாக்கு இவை கெட்டு மாறுபடுமானால் அவற்றினின்றும் மீள்வது அருமை என்பதை இப்பாடல் நமக்கு விளக்குகிறது.

## பூச்சு

*ஆவரை நெல்லி வில்வ*
*மதுவும்நீர்ப் பூலா வேரும்*
*கோவினில் வெண்ணை தன்னில்*
*குழைத்துவிக் கத்திற் பூச*
*ஆவனந் தலபோத வீக்க*
*மதிக்கப்படாது தண்ணல் தணிய*
*தாவிக் குழைத்துப் பார்க்கயிலே*
*தயிருஞ் சோறுங் கூட்டிடுமே!* 551

ஆவரை, நெல்லிமுல்லி, நீர்ப்பூலாவேர், இவற்றை இடித்து பசுவெண்ணெயில் குழைத்து வீக்கத்திற்பூசவும். வீக்கம் குறைந்துகொண்டே வரும். இப்போது தயிர்ச் சோறு சாப்பிடவும்.

### பூச்சு

*வஞ்சிக் கொடியாய் நீகேளாய்*
*மருவு முலைப்பால் தன்னோடே*
*மிஞ்சி வராகிக் கிழங்கென்றும்*
*மிகுந்த யாவின் வெண்ணையுடன்*
*தஞ்சப் படியே யரைத்தொன்றாய்த்*
*தானே புண்ணில் மிகப்போட*
*பஞ்சு போலே வெளுத்தேகிப்*
*பறந்தே யோடும் புண்ணுமதே!* 552

வராகிக்கிழங்குடன் தாய்ப்பாலையும், ஆவின் வெண்ணை யையும் சேர்த்தரைத்துப் புண்ணில் போட புண் ஆறி பஞ்சு போல் வெளுத்துப்போகும்.

### குடிநீர்

*மலைசு மந்த மென்கொடியும்*
*மன்கு ருவைநெல் லரிசி*
*அலர்சி றந்த யாவரையும்*
*ஆனதோர் தாது மன்றித்*
*துலைவிலா நீர்ப்பெ ருத்துத்*
*துவனிலே யெனுமி டக்*
*கலைசி றந்து யிம்மருந்து*
*கருதியுள் கொள்ளும் போமே!* 553

மலைசுமந்த மென்கொடியாகிய மலைதாங்கி, நெல்லரிசி, ஆவரை, இவற்றைச் சேர்த்து நீர்விட்டுக் காய்ச்சி உட்கொள்ள வேண்டும்.

### மருந்து

*ஆவரை யிலைபரித்து*
*யெடுத்து அதை வறுத்து*
*ஆவரை வேருதனைத் தானரைத்து*
*மிகுந்தே சிவக்கப் பொடிசெய்து*

*பாரப் பிளவை சிலைநீர்தான்*
*பரந்து புண்ணில் நெய்பூசி*
*சேரத் தானும் தடவிடும்மே*
*சிவறும் நீர்தான் தீந்திடுமே!* 554

ஆவரை இலை பறித்து அதை வறுத்து, ஆவரை வேரையும் சேர்த்தரைத்து சிவக்கப் பொடிசெய்து, எண்ணெய் சேர்த்துக் குழப்பி புண்ணில் தடவிவிடவேண்டும். இதனால் புண்ணில் உள்ள நீர் வெளியேறும்.

## அனைத்துப்பிளவைக்கும் மருந்து

*ஏல மிலவங்கஞ் செங்கழுநீ*
*ரெண்ணுங் கோட்ட மதிமதுர*
*மேலுங் கிராம்பு சித்தரத்தை*
*மேவுங் கருஞ்சீரகஞ் சுக்குடனே*
*கால மிளகுக் கடுக்காயும்*
*கதித்த தான்றி நெல்லியுடன்*
*சாலச் சுட்டவிரை நாலுடனே*
*தயங்கும் வெருகங் கிழங்காமே!* 555

ஏலம், இலவங்கம், செங்கழுநீர், எனும் கோட்டம், அதிமதுரம், கிராம்பு, சிற்றரத்தை, கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, கடுக்காய், தான்றி, நெல்லி சுட்டவிதை நான்கு, வெருகன் கிழங்கு இவற்றை எடுத்துக்கொள்ளவும்.

*சந்தனந் தேவ தாரமுடன்*
*தானிரு வேலி லாமிச்சம்*
*வந்த முனிவன் சிருமுட்டி*
*வருந்து காஞ்சோரி, வழுதலைவேர்*
*தந்த சிந்தில் தூதுவளை*
*தானே கண்டங்கறி நெருஞ்சில்வேர்*
*வந்த செப்பு நெருஞ்சியுடன்*
*வாழுஞ் செங்கத்தாரி வேராமே!* 556

சந்தனம், தேவதாரம், வெட்டிவேர், விலாமிச்சம், அகத்தி, சிற்றாமுட்டி, காஞ்சொறி, வழுதலைவேர், சீந்தில், தூதுவளை, கண்டங்கத்திரி, நெருஞ்சில்வேர், செப்புநெருஞ்சில், செங்கத்தாரி இவற்றின் வேர்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முடக்கொத்தான் விஷ்ணு கிரந்தியுடன்
முனிந்தசெங் கழுநீர் நெய்ச்சிட்டி
அடுத்த வெத்திலைத் தண்டிளநீ
ரான தொன்று நன்னாரி
தொடுத்த கையான் துளசியுடன்
தோன்றுங் கம்ப மயலாகும்
தடுத்த தையாலம் பட்டை
தானத்தி யித்தி யரசுடனே! 557

முடக்கொத்தான், விஷ்ணுகிரந்தி, செங்கழுநீர், நெய்ச்சிட்டி, வெற்றிலைத் தண்டு, இளநீர், நன்னாரி, கையாந்தகரை, துளசி, ஆலம்பட்டை, அத்தி, இத்தி, அரசு, இவற்றையும் சேர்த்துக்கொள்க.

ஆத்திப் பட்டை தென்னம்வேர்
யான நிம்பப் பட்டையுடன்
மித்தப் புகையிலை நாக்குடனே
மிகுந்த படியு மொன்றாகும்
வாத நல்லெண்ணை ரண்டுபடி
மருவு மாவினெய் யுரியின்
கொத்த பசும்பா லிருபடியுங்
கொண்டே யெடுத்துக் கிசாயமதாய்! 558

ஆத்திப்பட்டை, தென்னைவேர், நிம்பப்பட்டை, புகையிலை நாக்கு, இவற்றை வகைக்கு 1.3 லி., நல்லெண்ணெய் 2.6 லி., பசுநெய் 675 மி.லி., பசும்பால் 2.6. லி. எடுத்துக் கியாழம் காய்ச்சிக் கொள்ளவும்.

குருணிக் கசாயம் தனில் பாலெண்ணை
கொண்டே நெய்யுந் தான்புகட்டி
உருவிலா எண்ணை நாடும்
பதமாய் மகிழ்ந்து வடித்துக்கோ
உறுமே கழஞ்சி யுட்கொள்ள
யுகந்து மேலுந் தான்பூசி
அறுமே சகல வியாதிகளும்
யான பிளவை விப்புருதி! 559

5.2 லி. குடிநீரில் பால், எண்ணெய், நெய் இவற்றைச் சமஅளவு எடுத்துச் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும். 5 கி. அளவு உட்கொண்டு மேலுக்கும் பூச அனைத்துவகையான பிளவை வியாதிகளும் தீரும்.

## பிளவைக்கு எண்ணெய்

வெப்பாலை குமுளம்வேர் வென்னெற்று
மிகுத்த கோடக சாலையுடன்
யொப்பா மஞ்சள் மிளகுடனே
யொக்கச் சமனாய்ப் பொடிசெய்து
தப்பா தொருபடி யெண்ணைதனில்
தானே வெந்து விட்டபின்பு
அப்பா பூச னுடன்கொள்ள
அறுமே பிளவைக ளானதுவே! 560

வெட்பாலை, குமிழம்வேர். கோடக சாலை, மஞ்சள், மிளகு, இவற்றைச் சம அளவு எடுத்துப் பொடிசெய்து நல்லெண்ணெய் தேவையான அளவு சேர்த்துக் காய்ச்சி மேலுக்கும் பூசி உள்ளேயும் உட்கொள்ள பிளவைகள் அனைத்தும் நீங்கும்.

சீனக் காரம்.....
சீரா யரைத்து வெண்ணையினால்
பானப் பிளவையி லிட்டாக்கால்
பழுக்கவ் வேதனை மாறிவிடும்

தான மாக வுடையுமது
சலமும் நீரும் மாறியும்போம்
சீனக் காரம் வெண்ணைபின்னை
தீரும்புண் ணாறுமென்றார் முனியே! 561

சீனக்காரம், .....இவற்றை அரைத்து வெண்ணெய் சேர்த்து பிளவையின் மீது தடவ பிளவை பழுத்துவிடும். மீண்டும் போட வேதனை நீங்கி சீழும், நீரும் மாறிப்போகும். சீனக்காரம் பொடித்து வெண்ணெயில் குழைத்துப்போட அப்பிளவையிலான புண் தீரும்.

## சன்னிக்கான காரணங்கள்

அனுபோக வியாதி யாலும்
அடிவயிற் றடியி னாலும்
நினவறு குடியி னாலும்
நின்றிடுங் குளுமை யாலும்
மனமது மருகை யாலும்
நாசிநீ ரோட்டத் தாலுஞ்
சனிமுத லாக வந்து
சன்னிதான் தோன்றும் வாரே! 562

தீராத வியாதிகள் தொடர்ந்து இருப்பதாலும், அடிவயிற்றில் அடிபட்டதாலும், நினைவு அறுதலாலும், உடற்குளுமை யாலும், மனத்தின் மருட்சியாலும், மூக்கில் தொடர்ந்து நீர் பாய்தலாலும் சன்னி முதலான நோய்கள் வருமென்று அறியலாம்.

## வாதசன்னி வகைகள்

மந்தக முறுஞ் சன்னியும்
மயக்கமுத் தனுகுஞ் சன்னி
சந்தக சீதா சன்னி
தலைபடுஞ் சாப சன்னி
முந்தவே வாதத் தாலே
முடுகிட வந்த தென்க

மந்தமா முனிவன் றானும்
வகுத்துநா லுரைக்க லுற்றான்! 563

மந்தக சன்னி, மயக்க சன்னி, சீதாசன்னி, சாபசன்னி, ஆகிய சன்னிகள் வாதத்தால் ஏற்படும் சன்னிகளாகும்.

## பித்த சன்னி வகைகள்

விரையெலாஞ் சன்னி யோடு
மேவிய தீர்க்க சன்னி
யரையலாம் விலங்கி சன்னி
யமரிலா மகர சன்னி
நிறைகமழ் குழலி னாளே
நிவைநாலு தானுங் கேளாய்
பிறைநுத லணிந்த பேதை
பித்தத்தில் வந்த தாமே! 564

விரையல் சன்னி, தீர்க்க சன்னி, விலங்கி சன்னி, மகர சன்னி ஆகிய இந்நான்கு வகை சன்னிகளும் பித்தத்தால் வரும் சன்னிகளாகும்.

## சிலேட்டும சன்னி வகைகள்

சிறைசன்னியும் சேர்சிறை சன்னியும்
நிறைதா ரணியில் நின்றநிலை சன்னியும்
பறையாத சன்னி பகர்ந்த நிறைசன்னி
நிறைகொளுஞ் சன்னி சிலேற்பனத்தா லிதுவே! 565

சிறை சன்னி, சேர்சிறை சன்னி, நின்றநிலை சன்னி, பறையாத சன்னி, பகர்ந்த நிறை சன்னி, நிறைகொழுஞ்சன்னி போன்ற சன்னிகள் சிலேட்டுமத்தால் தோன்றுவனவாகும்.

இவ்வகை பதிமூன் றுந்தான்
இறங்கியே மூன்றில் நிற்கும்
நவ்வைநல் மொழியி னாளே
நவின்றிடக் கேளாய் மானே

*ஒவ்வாத சாப சன்னி*
*யுயர்பித்த மாகா சன்னி*
*செவ்விலா சிலேற்ப னத்தில்*
*சேர்நிச சன்னி யாமே!* 566

மேற்சொன்னவாறு சன்னிவகை பதிமூன்றும் வாத, பித்த சிலேற்பனத்துள் அடங்கும். அவற்றால் தோன்றும். ஒவ்வாத சாபசன்னி, உயிர்பித்த மாகா சன்னி, இவை சிலேட்டுமத்தில் சேருகின்ற சன்னிகளாகும்.

## மந்த சன்னியின் குணம்

*மந்தமாய் மயங்கிக் கால்கை*
*வருத்தமாய் வராத படி*
*யந்தமாய்த் திரிவு கெட்டால்*
*அகமிகுந் துழைந்து காட்டும்*
*முந்தவே தொந்தங் கூடும்*
*முறைமிகும் நாவும் பற்றும்*
*சந்தவார் குழலி னாளே*
*தானமந்த சன்னி யாமே!* 567

வயிறு மந்தப்பட்டு மயங்கி, கால் கை நொந்து உழைந்து காட்டும், தொந்தம் கூடி நாவும் பற்றுமானால் அது மந்த சன்னியாகும்.

## குடிநீர்

*பற்பாடகம் கடுகுகண்டங் கத்திரிவேர்*
*பரிந்த ரோசினை பேய்ப்புடல்*
*எற்பரிசால் மல்லிகை சுக்கு*
*யிவையோரொன் றிருக ழஞ்சாய்*
*நிற்பாக யிருநாழிநீர் விட்டுழக்காய் கிராம்பு*
*நீதான மேலப் பொடியே*
*அப்பா கொண்டிடுகில் விட்டோடு*
*மந்தகக் கனுவம் வேறே!* 568

பற்பாடகம், கடுகு, கண்டங்கத்திரி வேர், கோரோசினை, பேய்ப்புடல், மல்லிகை, சுக்கு இவை 10 கி. எடுத்து 2.6 லி. தண்ணீர் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சி கிராம்புப் பொடி தூவிப் பருக மந்தசன்னி நீங்கும்.

### மயக்க சன்னியின் குணம்

*எடுத்தெரியுங் கைகால்*
*யிருகண்ணுங் கண்ணீ ரோடி*
*அடுத்திடும் விழியும் நட்டு*
*யவர்பல்லு மிகவே கோர்த்து*
*எடுத்திடுஞ் செவிபு தைத்து*
*யியக்கமுன் றென்னுந் தோணில்*
*மடுத்திடுங் குழலி னாளே*
*மயக்கமாஞ் சன்னி யாமே!* 569

கைகால் வலியெடுக்கும், கண்ணீர் மிகுந்தோடும், விழிகள் நட்டுக்கொள்ளும், பல்சேர்ந்துக் கொள்ளும், செவி அடைக்கும். இவை மயக்க சன்னியின் குணங்களாகும்.

### குடிநீர்

*எந்த லாடாதோடை தூதுவளை*
*இலுப்பைப் பூவழு தலைவேர்*
*முந்தப் பற்படாகஞ் சித்தாமுட்டி*
*முத்தக் காசு நன்னாரிபுடல்*
*கூந்த சுக்கு திப்பிலி சீரகமும்*
*கொத்த மல்லிகை கூவிளமும்*
*சேந்தநீ ரெட்டொன்றாய்க் காய்ச்சிதேன்*
*சேர்த்துக்குடி மயக்கந் தீருமென்றே!* 570

ஆடாதோடை, தூதுவளை, இலுப்பைப்பூ, வழுதலை வேர், பற்படாகம், சிற்றாமுட்டி, முத்தக்காசு, நன்னாரி, புடல், சுக்கு, திப்பிலி, சீரகம், கொத்தமல்லி, கூவிளம், இவற்றைத் தேவையான அளவு நீர்சேர்த்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி கசாயமாக்கிப் பருக மயக்கசன்னி தீரும்.

### சீதாங்கச் சன்னியின் குணம்

குளைந்துளைந் துலைந்து நொந்து
குத்திடுஞ் சீர மெங்கும்
அளர்ந்தளர்ந் தங்க வேர்த்து
யடிமடி நடுவே நொந்து
உணர்ந்துலர்ந் தலர்ந்து நாவு
முற்றநீர் வற்று மாகில்
இளந்திளந் திளக்குஞ் சன்னி
யிதுசீதாங்கச் சன்னி யாமே! 571

உடம்பு உளைந்து, வலித்து குத்தல் எடுக்கும். அழற்சி ஏற்பட்டு உடல் முழுதும் வியர்க்கும். அடிவயிற்றின்கீழ் வலி எடுக்கும். நாவும் உலரும். உமிழ்நீர் வற்றும். இவை சீதாங்கச் சன்னியின் குறிகுணங்களாகும்.

### குடிநீர்

பெருவாகை பாதிரி குமிழம்
பேராமல்லி வில்லசித்த மல்லி
நெருஞ்சில் நன்னாரி கண்டங்கத்திரி
நீர்விட் டெட்டொன் றாய்க்காய்ச்சி
வருந்தே னுமிஞ்சி நீருடனே
வாய்ப்பா யாகக் குடித்திடுகில்
அருண்டே யோடுஞ் சீதாங்கச்சன்னி
யானா ணையுண் மையென்றே! 572

பெருவாகை, பாதிரி, குமிழம், வில்வம், சிற்றாமல்லி, நெருஞ்சில், நன்னாரி, கண்டங்கத்தரி, இவற்றுடன் நீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி, தேனும் இஞ்சிச் சாறும் அளவுடன் சேர்த்துப் பருக சீதாங்கச் சன்னி தீரும்.

### தாப சன்னியின் குணம்

வில்லது போல வளைந்து
மெய்யுமே லெல்லாம் வேர்த்துநொந்து

சொல்லது வயங்கொள் ளாது
துணுக்கென்ன நடுக்க முற்று
நல்லகண் சிமிட்டிக் காட்டி
நடுக்கமுஞ் சுரமுந் தோன்றி
பல்லது கோர்த்து நிற்கும்
பலதாப சன்னி யாமே! 573

உடல் வில்போல் வளையும். வியர்த்து வலித்து சொல்ல முடியாத அளவுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். நடுக்கமுற்று நடுக்கத்தோடு சுரமும் தோன்றி பல்கோர்த்து கண் சிமிட்டி நிற்பது தாபசன்னியின் குணமாகும்.

## குடிநீர்

வெங்கா யுள்ளி ரோகணியும்
வேளை நொச்சி வேராகும்
மங்காச் சுக்கு தேவதாரம்
.....யோரொன் றிருகழஞ்சு
தங்கா னீறு மெட்டொன்றாய்த்
தருகா திருகி நீரெடுத்து
பங்காத் தாப்பல சன்னி
பதறி யோடிப் போய்விடுமே! 574

வெங்காயம், பூண்டு, கடுகுரோகணி, வேளை, நொச்சி வேர், சுக்கு, தேவதாரம், இவைமுறையே 10 கி. எடுத்துக் கொள்ளவும். தேவையான அளவு தண்ணீர்விட்டு எட்டொன் றாய்க் காய்ச்சிப் பருக தாபசன்னி குணமாகும்.

## விரை சன்னியின் குணம்

வீடுயிலும் நடுக்கந் தானும்
மேனியும் வெற்று வெம்பி
அரையிலுங் கோப மாமே
யப்புறம் புறத்தே யோடி
யிரையிறை யெடுக்கொண் ணாது
யெனக்கறு தென்று சொல்லி

*கறையது பேசு மாகில்*
*காதிரைத்திடும் விறைய லாமே!* 575

உடம்பில் நடுக்கம் ஏற்பட்டு, உடல் வெளுத்து, வெம்பி, இடுப்பில் வலி ஏற்படுத்தி உணவு உட்கொள்ள முடியாமல், காதில் இரைச்சலை ஏற்படுத்தும் குணம் விரை சன்னிக்கு உண்டு.

**குடிநீர்**

*வேளை நொச்சி வேருடன் சுக்கு*
*யாள மாக யரைத்துப் பிழிந்தநீர்*
*காள மாகவே காய்ச்சிக் குடித்திடி*
*லேளங் கெட்டது யெவ்விரை சன்னியே!* 576

வேளை, நொச்சிவேர், சுக்கு, இவற்றை நேகவரைத்துப் பிழிந்தெடுத்த நீரைக் காய்ச்சிக் குடித்திட விரைசன்னி குணமாகும்.

**தாக சன்னியின் குணம்**

*குறுகுறுப் போடு கொட்டாவி பின்னையும்*
*மறுமறுப் போடு வாங்திவப் புரத்திலும்*
*முறுமுறுப் போடு ஒக்காளஞ் சாத்திலும்*
*செறு(செறு) திறத்திவை செல்லுந் தீர்க்கமே!* 577

குறுகுறுத்தல், அடிக்கடி கொட்டாவி ஏற்படல், உடம்பின் எல்லாப் புறங்களிலும் வலி உண்டாதல், வாந்தியுண்டாதல், செறு செறுத்தல் ஆகியவை தாகசன்னியின் குணங்களாகும்.

**குடிநீர்**

*சிந்தி புடலி ராமிச்சம்*
*சித்தமல்லி பேர்மல்லி சிறுதேக்கு*
*வாய்ந்த ரோகணி வசம்புதிப்பிலி*
*வாய்த்த யிரெண் டாங்கழஞ்சி*
*நீய்ந்த நீரெட் டொன்றாய்*
*நினவுடனே குடித்தி டுகில்*

*பறந்தோடுந் தாக மேது*
*பயனது அறிந்து சொன்னோம்!* 578

சீந்தில், புடல், வெட்டிவேர், சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுதேக்கு, கடுகுரோகணி, வசம்பு, திப்பிலி, இவை முறையே 10 கி. எடுத்துக்கொண்டு, நீர்விட்டு எட்டில் ஒன்றாய்ச் சுருங்கக் காய்ச்சிக் குடித்திட்டால் தாகசன்னி பறந்தோடும்.

## விலங்கு சன்னியின் குணம்

*நெஞ்சு மெல்ல நெறித்து விலங்கிடும்*
*கஞ்சி சோறுங் கலங்கக் கவிழ்த்திடும்*
*மஞ்சி மேனி மறைத்து நடுங்கிடும்*
*விஞ்சு மேவி விலங்கிடுஞ் சன்னியே!* 579

நெஞ்சு மெல்ல மெல்ல நெரிக்கும். கஞ்சியும் சோறுமாகக் கலங்க வாந்தியெடுக்கும். மேனி குறைந்து நடுக்கமெடுக்கும். இவை விலங்கு சன்னியின் குணங்களாகும்.

## குடிநீர்

*அரத்தை கொத்து மல்லிகைசுக்கு*
*யான தூதுவளை பற்படாக*
*முரைத்தபூசணித் தண்டுதிரா*
*யுடனே முத்தந் தான்கூட்டி*
*விரைத்த நீரெட் டொன்றாய்*
*விரவிக் காய்ச்சிக் குடித்திடுகில்*
*உரத்த விலங்கச் சன்னியது*
*ஒடிப் போகுங் கண்டீரே!* 580

அரத்தை, கொத்துமல்லி, சுக்கு, தூதுவளை, பற்பாடகம், பூசணித்தண்டு, முத்தக்காசு, திராய் இவற்றை நீர்விட்டு காய்ச்சி எட்டிலொன்றாய் சுருக்கிக் குடித்திட்டால் விலங்கு சன்னி குணமாகும்.

## மகா சன்னியின் குணம்

முகங்குறு வேர்வை கொள்ளு
முனிந்திடும் கிடக்குறுதிக் கொண்ணாது
யகங்கண மீகத்தந் தாலும்
யன்னம் வெறுத்துட னுட்கொள்ளும்
பகங்க ளெரிந்திடுங் காலுச்சி
மிகவே பறந்தெரி யாய்நிற்கும்
சிகங்கள் தன்னில் மகாசன்னி
சேர்ந்தால் பிழைப்பதரி தெரிக்குங்காலே! 581

முகத்தில் குறுவேர்வை உண்டாகும். உடம்பின் உறுதி கெடும். கண்கள் சிவந்து காணல்; உணவில் வெறுப்பு உண்டாதல், உடனே உண்ணல், உண்டாலும் உடம்பை எரிக்கும். உச்சியிலும், உள்ளங்காலிலும் எரிச்சல் உண்டாகும். இம்மகாசன்னி உண்டானால் நோய்கண்டவன் மீள்வது அரிதாம்.

## வங்க சூத்திரம்

கேளுனீ சார மொன்று
கெடியுறு கார மொன்று
வாழுனீ மாலின் றேவி
வளம்பெற வொன்று கூட்டி
தோளுநீ யுறுப்பு னிறால்
சுகப்பட அரைத்து மூன்றும்
வேளுயர் தியில் வைத்து
விளங்கிய செயத்தைப் பாரே! 582

சாரம் ஒரு பங்கு, காரம் ஒருபங்கு, அரிதாரம் ஒருபங்கு இவற்றைச் சேர்த்து பாதரசத்தால் அரைத்துக் கொள்ளவும். இவற்றைத் தீயில் வைத்து எரித்துக்கொள்ளவும்.

செயப்படா மின்பு தானும்
சேர்வங்கத் தகட்டின் மேலே
கயப்பட்ட வங்கந் தானும்
கடுகியே னொறுங்கும் பாரு

அயப்பட்ட வங்கந் தன்னை
அரைத்துனீ வெள்ளி மேலே
பயப்பட்டுப் பூசி வாட்டி
பருவமாய்ப் புடத்தில் போடே! 583

வங்கத் தகட்டின் மீது இம்மருந்தைச் சேர்த்து எரித்தால் வங்கத் தகடு நொறுங்கும். பிளவுபட்ட வங்கத்தை அரைத்துப் புடத்தில் போட்டெடுத்துக் கொள்ளவும்.

போட்டிடாய் சிந் தானும்
புகழ்பெற்ற குருவே யாகும்
ஆட்டிய குருவில் ரெட்டி
அப்பனே சூதம் சேரு
நீட்டிமுன் தாள கத்தை
லேபித்துக் கவச மாக்கி
வாட்டிய வாட்ட மணிபோல்
கூடிக் கட்டும் பாரே! 584

புடம் போட்டு எடுத்தபின் இது குருவாகும். இதேபோல் இரண்டு மடங்கு இரசம் சேர்த்து தாளகத்தை அரைத்துக் கவசம் செய்து அனலில் இட்டு வர வங்கம் மணிபோல் கட்டும்.

பாருனீ யிந்தச் சூதம்
பாச்சினார் வங்கத் துள்ளே
ஆறுயர் வெள்ளி யாகும்
அசையாது யியத் துக்கு
தேறுயர் சித்த வித்தை
தேவிக்கு யீசன் சொன்னார்
காறுயர் யியத்தில்
காட்டிட வெள்ளி யாமே! 585

சூதத்தை வங்கத்துள்ளே பாய்ச்சினால் வங்கம் வெள்ளி யாகும். ஈயத்தில் இந்த வாதவேதை நிகழாது. இவ்வித்தை உமாதேவிக்கு ஈசன் சொன்னதாம்.

## நேமவித்தை

ஆமிந்தப் போக்கை விட்டு
அறையுறே னேம வித்தைக்
காமிந்தக் கார மொன்று
கடியதோர் சார மொன்று
வாமிந்தக் கெந்தி யொன்று
வார்த்தரை ப்பு ....ரை
சேமித்தத் தீயில் வைத்து
சியத்தைப்பார் சியத்தைப் பாரே! 586

காரம் ஒருபங்கு, சாரம் ஒருபங்கு, கெந்தி ஒருபங்கு, இவற்றைச் சேர்த்தரைத்துத் தீயில் வைத்து சியத்தைப் பார்க்கவும்.

பாருனீ கெந்தி கட்டில்
பாச்சுபின் கெந்தி யொன்று
தாருனீ யரைத்துப் போட்டு
தான்ரெண்டு மொக்கக் கட்டும்
சேருனீ னாக சூதம்
சேர்த்திதைக் கவசம் கட்டி
ஒறுனீ மணலுக் குள்ளே
யுறுதியாய்ப் புடத்தைப் போடே! 587

இம்மருந்தைக் கெந்தியுடன் செலுத்தி திரும்பவும் அரைத்து இரண்டையும் ஒக்கக்கூட்டி, நாக சூதம் சேர்த்து இதைக் கவசம்கட்டி மணலுக்குள் வைத்துப் புடத்தைப் போடவும்.

போட்டிடில் சூத னாகம்
பொலிவுட னழன்று கட்டும்
ஆட்டிடிற் கட்டு மட்டும்
அப்பனே பூசிப் போடு
கூட்டியே சூத னாகம்
குரியுறச் சேர்த்த பின்பு
மூட்டியே னாலுக் கொன்று
முயற்சியே தங்கம் சேரே! 588

அதனுடன் சூதநாகத்தைச் சேர்த்துப் பார்த்தால் அது சுழன்று கட்டிப்படும். அது நன்றாகக் கட்டுமட்டும் சூதநாகத்தைச் சேர்த்துப் பூசிக் கொள்ளவும். சூதநாகம் குறிப்பிட்ட அளவு சேர்த்தபின்பு, நான்கிலொரு பங்கு தங்கம் சேர்க்கவும்.

சேர்த்திடத் தங்கந் தானும்
சிறந்தனற் களங்கே யாகும்
கோத்திடில் னவலோ கத்தில்
கொடுக்குமுன் னேம மாகும்
ஆத்திட ஈவ தென்னில்
அன்பதுக் கொன்றே யியற்ந்து
பார்த்திட ஈச னெந்தாய்
பராபரைச் சூருக்கு வாரே! 589

சேர்த்த தங்கம் களங்காகும். இதனை நவலோகத்தில் சேர்த்துக் கொடுக்க நேமமாகும். மருந்தாகப் பயன்படுத்தும் போது 50 க்கு ஒன்றாகக் கொடுக்க வேண்டும்.

பாச்சியே கலச மாக்கி
பதையாமல் சில்லுப் போட்டு
ஆச்சிய புடத்தைப் போடில்
அப்பனே தமர்க ளிட்டு
ஒச்சிய தமரின் வாயில்
ஒக்கென்று கலயம் வைத்து
காச்சியாய் மூடி மேலே
கடுகனீ புடத்தைப் போடே! 590

கலசத்தில் இட்டு சில்லு மூடி புடம் போடவும். பின்னர் கலசத்தில் ஓட்டையிட்டு அதன்வாயில் கலயம் வைத்து மூடி சீலைமண் செய்து புடமிடவும்.

போட்டிடத் தயிலம் கீழே
புகள்மேலே சாம்பல் நிற்கும்

ஆட்டிய சாம்ப லொன்றி
லமுரிதான் பார்த்து வாரு
கூட்டியே கரைத்து வைத்து
கொள்கியே மூன்று னாளும்
நீட்டியே தெளிவை வாங்கி
நேர்படக் காய்ச்சி டாயே! 591

தயிலம் கீழே இறங்கி நிற்கும். சாம்பல் மேல் கலயத்தில் நிற்கும். சாம்பலுடன் அமுரிசேர்த்துக் கொள்ளவும். மூன்று நாள் கழித்து தெளிவிறுத்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

காச்சிடு வார்த்து வார்த்த
கடுகிய குழம்பில் வாங்கு
ஆச்சியே யினங்கள் சின
மதினொடு வீரம் பூரம்
வோச்சியே சாரத் தோடு
வுருகியே துருசு சுண்ணம்
தாச்சிய ஆறுங் கேளு
தனியாறு கூறு போடே! 592

மேற்சொன்ன குழம்புடன் சேர்த்து மீண்டும் காய்ச்சிக் கொள்ளவும். சீனக்காரம் வீரம், பூரம், சாரம், துருசு, சுண்ணம், ஆறும் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

போட்டுனி தைலம் வார்த்து
புணர்ச்சியா யரைத்துக் கொண்டு
மூட்டுனி குழம்பி னோடே
மூதண்ட ரவியில் வையே
ஆட்டிய பிங்கான் கிண்ணி
யதுக்குள்ளே யிதனை வைத்து
கோட்டுனி வெயிலில் வைக்க
குழம்பது மூத்தா னாமே! 593

கலசத்தில் இறங்கியிருந்த தைலத்தைச் சேர்த்து நன்றாக அரைத்துக் கொண்டு குழம்போடு சேர்த்துச் சூரிய புடம் போடவும். புடமிடும் போது குழம்பினுள் ஒரு பீங்கான் கிண்ணத்தை வைத்து, அதனுள் இதனை வைத்து வெயிலில் வைக்கவும்.

*ஆமிதை மூத்தா னென்று*
*அரைந்திட்ட னாமங் கேளு*
*தாமித லுண்ட வுப்பு*
*தனிப்புளி ரெண்டுஞ் சென்று*
*காமது னிரி லுப்பாய்*
*கடுமலம் புளியே யாச்சு*
*வேமித்தில் மூலத் தியில்*
*வித்தினால் பிறந்த வாரே.* 594

பின்னர் இதனுடன் சோற்றுப்பும் புளியும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். கடுமலமும் மூலத்தியும் இதனால் நீங்கிப் போகும்.

*பிறந்திடும் மகிமை யாலே*
*பேராச்சு மூத்தா னென்று*
*அரிந்திதை யெடுக்க மாட்டார்*
*அப்பனே னெகிழ்த மென்பார்*
*பரிந்திடும் வாதம் தானும்*
*பார்த்திதை தூசித் தோர்க்கு*
*முறிந்திடு னூல்க ளெல்லாம்*
*முத்தியும் கிடையா தென்னே!* 595

மருந்துவ வல்லோர் காலம் அறியாமல் இதனை எடுக்க மாட்டார். இதனை உட்கொண்டால் வாதநோயும் ஒழிந்து போகும். இதனைத் தூசித்தவர்களுக்கு முக்தி கிட்டாதாம்.

*கிடையாத புளியி லுப்பை*
*கேட்கினும் வல்லோர் சொல்வார்*

அடையாத பணியி னுப்பி
னடைவெல்லாஞ் சொல்லக் கேளு
குடையாத சீன முப்பு
கூட்டிலு மொருகை பாரும்
படையாத துருசு சீனம்
பகரிலு மொருகை யாமே! 596

புளியிலுப்பையின் பண்பை வல்லோர் சொல்வர். முழுமையான சீனமுப்பு, சீனத் துருசு இவற்றை எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

வொன்றான இனங்க ளோடு
வூட்டுநீ புளியு மொன்று
தன்றான னாதம் விந்து
தானதாம் புளியு முப்பு
குன்றான கெந்தி யோடு
கல்லுப்பே புளியு முப்பு
வன்றான றென்னை பெற்ற
மாயிக்கிச் சொன்ன வாறே! 597

மேற்சொன்ன மருந்துகளோடு தேவையான அளவு புளியையும் சேர்த்து கெந்தகம், இரசம், கல்லுப்பு, புளி, உப்பு, இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

ஆமென இன்னம் சொல்லீ
அரையுறே னரிந்த மட்டும்
தாமென அண்டத் துள்ளே
தத்தவெண் காருவே யுப்பு
வாமென மருள மார்க்கம்
வழங்கிய புளியே யாட்டி
ஒமென மேலி னோடு
வுசந்திடும் னாக மாமே! 598

நான் அறிந்த மட்டும் இந்த மருந்தைச் சொல்கிறேன். முட்டை வெண்கரு, உப்பு, புளி இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

*வாறுகே ளுப்பே ஈசன்*
*வழங்கிய புளியே சத்தி*
*கூறுகேள் ரெண்டி னாலும்*
*கொள்கித்து வாத மெல்லா*
*மாறுகேள் சார தாரம்*
*வழங்கிய மார்க்கம் கண்டால்*
*தாறுகே ளாறுந் தாண்டி*
*தனிவெளிப் பறமு மாமே!* 599

உப்பு, புளி சேர்ந்த மருந்துகள் வாதநோய்களை எல்லாம் போக்கும். வாதம் நீங்கி உடல் வளம்பெறும். அதனால் மனமும் தூய்மை பெறும்.

*ஆமிது கூத முப்பு*
*அப்பனே புளியாங் கெந்தி*
*போமிது கிளிஞ்சி யுப்பு*
*புழுக்கையும் புளியு மாகும்*
*தாமிது சங்கே யுப்பு*
*தனிச்சதை புளியு மாகும்*
*வாமிது னத்தை யுப்பு*
*வண்சதைப்புளியுஞ் சொல்லே!* 600

சூதமுப்பிற்கு புளியோட கெந்தியைச் சேர்க்கலாம். கிளிஞ்சிலுப்பு, புழுக்கை, புளி, சங்கு, உப்பு, தனிச்சதைப் புளி, நத்தையுப்பு, சதைப்புளி

*புளிப்பு ரெண்டி னாலே*
*பெறுதத்து வாத மாச்சு*
*புளியுப்பு ரெண்டுங் கண்டோர்*
*பெரியவ நாவார் கண்டாய்*

புளியுப்பு ரெண்டுங் கூடி
பேரண்டச் சுண்ண மாமே! 601

இவற்றில் புளியுப்பு சேர்வதினால் வாதம் நீங்கும். முப்புவில் புளியுப்பைப் பயன்படுத்த அறிந்தோர். மருத்துவத்தில் பெரியவராவார். புளியுப்பு சேர்த்தால் அண்டச் சுண்ணம் எளிதில் கைகூடும்.

சுண்ணத்தின் மார்க்கம் சொல்லத்
துலையாது யென்னால் கேளீர்
சுண்ணத்தை விட்ட துண்டால்
சுக்கார சாரம் சாகா
சுண்ணத்தை யறியா தார்க்குச்
சொல்லில்லை குருவு மில்லை
சுண்ணத்தின் பெருமை சொல்லச்
சுந்திரர் மயங்கி னாரே! 602

மகிமையான சுண்ணத்தைப் பற்றி சொல்லி மாளாது. சுண்ணத்தைச் சேர்த்துக் கொண்டால் காரம், சாரம் தன் தன்மையை இழக்காது. சுண்ணம் பற்றி அறியாதோரை விளக்க சொல்லேதும் இல்லை. முப்புக் குருவுமில்லை. அத்துணை பெருமை வாய்ந்தது சுண்ணமாகும்.

மயக்கமே தித்து ஆத்தாள்
சகையாகக் கேட்கக் கேட்கத்
தயக்கந்தான் கார சாரந்
தனித்திடு மார்க்கங் கேளாய்
தயக்கிடு வுப்பே சாரம்
தயங்கிய புளியே காரம்
பயக்கிய ரெண்டுங் கூடி
பதையாமல் சாகும் பாரே! 603

சுண்ணமுறை தெளிவுபெற கார சாரம் தனித்திடும் மார்க்கம் அறிய வேண்டும். உப்பு சாரமாகும். புளி காரமாகும்.

இரண்டும் சேர்ந்து மருந்துகள் செய்வதால் பலநோய்கள் குணமாகும்.

பாருனீ சாவு தானு
பறுசிக்கில் செத்தும் சாகா
தாருனீ இனத்தைக் கண்டு
சரக்கெல்லாம் தாக்கிக் கொல்லும்
கோருனீ தங்க சூதம்
கூட்டினீ களங்கு செய்ய
வாருனீர் வாய்னீ ரல்லால்
மத்தொன்று வாரா தென்னே! 604

சாகாமல் நீண்டநாள் வாழ்வதற்குச் சரக்குகளைத் தரம் கண்டு இனம் கண்டு பிரித்துணர வேண்டும். வாய்நீர் கூட்டி சூதத்தைக் கொண்டு களங்கு செய்யலாம்.

எண்ணவே கார சார
மீயறு பத்து னாலும்
யெண்ணவே யுபர சங்கள்
இருநூறு கார சாரம்
யெண்ணவே னாதம் வித்தா
லெடுத்தது கார சாரம்
யெண்ணவே போக னாத
யியல்புட னருளு வாரே! 605

போகநாதர் கூறியபடி காரசாரம் 2 × 64 = 128, உபரசங்கள் 200, என அறியப்படுகிறது. கெந்தகம், இரசம் என இவற்றால் அமைந்தது காரசாரம் என்பதைப் போக முனிவர் அருளியுள்ளார்.

## பேதியாக லிங்கக் குளிகை

செய்யவே யின்னமொரு குளிகை கேளு
திறமாகச் சாதிலிங்கம் பலந்தா னொன்று
பொய்யவே வேலிகாரம் பலந்தா னொன்று
புகழ்சித்தி வாளமது பலந்தான் ரெண்டு

நய்யவே குழிக்கல்லில் பழச்சார் விட்டு
நாற்சாமம் அரைத்திட்டு குண்டு போல
எய்யாம லுருட்டியே னிழலு லர்த்தி
யெந்தந்த வியாதிகட்கு யிடுநீ..... ...க்கு! 606

சாதிலிங்கம், வேலிப்பருத்தி, அக்கராகாரம், நேர்வாளம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துக் கல்வத்திலிட்டுப் பழச்சாறு விட்டு பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துச் சிறு உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். நோய்களுக்கேற்ப தக்க அனுபானத்துடன் சேர்த்துண்ண பேதியுண்டாகும்.

எடுத்திடவே யின்னமொரு சேதி கேளு
யியல்பாக மேல்மருந்து நிரையாய் வாங்கி
கொடுத்திடவே குழிக்கல்வி லரைத்துக் கேளு
கொம்புத்தேன் விட்டாட்ட குழம்ப தாகும்
மடுத்திடவே ரண்டுந்தான் வகையாய்த் தானும்
மறக்காம லரைத்துநீ பரணி வைத்து
வெடிப்பில்லா குளுந்தண்ணீர்கலக்கிக் கொள்ளு
மிதமாகக் குழம்புசுண்டைத் காயளவு தானே! 607

மேற்சொன்ன மருந்துகளைச் சமஅளவு எடுத்துக் கொண்டு குழிக்கல்லில் கொம்புத் தேன் விட்டு ஆட்ட குழம்பு போலாகும். இதனை எடுத்துப் பரணில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். தேவைக்கேற்ப குழம்பைக் குளிர்ந்த தண்ணீரில் சுண்டைக்காயளவு உண்ணவும்.

# பின்னிணைப்பு

## பாடல் முதற்குறிப்பு அகர முதலி


எண் - பாடல் எண்

அ

அக்கிரா - 67
அக்கினி - 105
அங்கமு- 314
அங்கை - 21
அசமோ - 122
அடிக்கடி - 332
அடுத்தடுத் - 116
அண்டரா - 266
அண்டியே - 380
அத்தி - 188
அத்திப் - 195
அத்தியோ - 459
அதிமதுர - 406
அந்தப் - 429
அந்தித்த - 28
அய்யமே - 54
அய்யுங் - 442
அரத்தை - 580
அரிதாரஞ் - 528
அருமறை - 19
அற்றைக் - 439
அறியோ - 178
அன்னமே - 20, 185
அனுபோக - 562

ஆ

ஆகாத - 183
ஆடா - 257, 367
ஆத்திப் - 558
ஆமணக் - 250, 426
ஆமிது - 600
ஆமிதை - 594
ஆமிந்தப் - 586
ஆமென - 598
ஆமே - 169, 170, 187, 189
ஆய்ந்ததோர் - 4
ஆயதோ - 466
ஆயுறு - 538
ஆவரை - 347, 551, 554
ஆவாரை - 288
ஆவின் - 151
ஆறாத - 522
ஆன - 241
ஆனதி - 162
ஆனதோ - 44
ஆனதோர் - 23

இ

இஞ்சியைக் - 47
இசைந்திடும் - 58
இடுப்புக் - 462
இடுவாய்வளர் - 299
இடையானது - 298
இதுக்குடன் - 163
இதுரெண்டு - 417
இந்த - 157, 190, 191
இந்த நோய் - 356, 378
இந்தப் - 411
இந்தப் பேய் - 294
இந்திரிய - 326

இந்து - 313
இந்துப் - 239
இப்படி - 160, 260
இப்புரு - 278
இரசமோர் - 525
இரத்தமுங் - 79
இரத - 511, 52ீ
இரதங் - 392
இரதம் - 341
இரதமோர் - 506
இருந்தெழுந் - 472
இருமலு - 146, 360
இருமிச் - 365
இருமியே - 354
இவ்வகை - 159, 566
இவைக - 269
இழுத்திடும் - 68
இன்புறு - 258
இன்னம் - 345
இனமுங்கே - 309
இனிப்புடன் - 42

ஈ

ஈதலா - 158

உ

உட்டிண - 325, 520
உடம்புலர்ந் - 305
உடம்பெல்லாம் - 471
உடலது - 91
உடலிடை - 274
உண்டிடு - 461
உண்டியில் - 5
உண்டியிற் - 467
உண்டியை - 218
உண்ணிடில் - 99
உணர்த்திப் - 364
உத்ததோ - 331
உதரமுஞ் - 76
உந்தியி - 33
உப்பிலியின் - 375
உயர்ந்திடும் - 60
உரத்திடுங் - 236
உரைத்த - 209
உற்றதோர் - 22
உற்றருள் - 259, 264
உள்மூல - 410
உள்ளி - 221, 479
உள்ளிச்சா - 262
உள்ளியும் - 216
உளையு - 77

ஊ

ஊறிக் - 389
ஊறிப் - 492

எ

எச்ச - 418
எட்டொன்றாய்ப் - 450
எடுத்திடவே - 607
எடுத்தெ - 569
எண்ணவே - 605
எண்ணிய - 46, 113
எண்ணெய் - 80, 435, 482
எண்ணெயுஞ் - 547
எண்ணை - 153
எந்த - 570
எருக்கு - 81
எருமைப் - 480
எல்லா - 409
எண்பது - 34, 37
என்றபினெய் - 344

ஏ

ஏல - 555
ஏலமோ - 63

ஒ

ஒத்தவிப் - 263
ஒரு கையில் - 509
ஒரு விடங் - 171
ஒன்று - 173

ஓ

ஓங்கிடும் - 66
ஓங்கிய - 1
ஓடிடும் - 17
ஓடிய - 70
ஓடுந் - 72
ஓமங் - 446
ஓரொன் - 93

க

கஞ்சா - 238
கட்டியே - 457
கடக - 401
கடுக்கா - 513
கடுக்காய் - 286
கடைக்குடல் - 249
கண்டதோர் - 548
கண்டந் - 403
கண்டமு - 393
கண்டிக்கு - 251
கண்டிகுன்மஞ் - 319
கண்ணத்தின் - 602
கண்ணால் - 412
கண்ணித் - 128
கண்ணுந் - 484
கண்ணும் - 110, 204
கய்யாந் - 144
கருங்குங் - 533
கருத்தில்லான் - 9
கருத்துறு - 124
கருப்பஞ் - 400
கருவியு - 310
கருவினக் - 293
கல்நார் - 508
கல்லுப்புத் - 530
கழல் கொடி - 276, 537
கழல் மணி - 270
கற்பூரங் - 87
கற்றாழை - 104, 237
கறியுப்பு - 279
கள்ளிவேர்ப் - 532
கனத்திடுஞ் - 295

கா

காச்சிடு - 592
காட்டு - 222, 230, 399
காட்டுக் - 55
காதுந் - 496
காந்த - 142, 255, 315
காந்தக் - 196, 308
காந்தங் - 106
காய்ச்சியே - 235
காரந் - 544
காரிய - 379
காரெள்ளு - 431
கால்தலை - 132, 494
காலுடன் - 228
காற்றுப் - 420

கி

கிட்டக் - 133

கிட்டங் - 353
கிடையாத - 596

**கீ**

கீழ்வ - 455
கீழ்வயிறு - 447

**கு**

குக்கில் - 425
குணங்குறி - 125
குத்துமே - 117
குருணிக்கசாயம் - 559
குலைமுட்டி - 302
குழியானை - 126
குறிஞ்சா - 478
குறிஞ்சி - 373
குறுகுறுப் - 577
குளைந்துளைந் - 571
குன்றி - 370

**கூ**

கூட்டி - 457, 477
கூட்டிக் - 86, 493
கூட்டீர் - 390
கூறுமேற் - 296

**கெ**

கெந்தகந் - 527
கெவுரியைப் - 531

**கே**

கேளாய் - 301, 321
கேளின்னஞ் - 75
கேளீ - 130
கேளீர் - 148
கேளுனீ - 582

**கை**

கைகால் - 95, 97, 143
கையாந் - 210, 362
கையுங் - 108
கையைக் - 181
கையைநீ - 30
கையொடு - 207

**கொ**

கொடிக்கழல் - 261
கொடுவேலி - 433, 524
கொண்ட - 449
கொண்டிடுங் - 267
கொள்ளறு - 384
கொள்ளுகை - 56
கொள்ளுங் - 115, 350
கொள்ளே - 391, 481
கொன்றைத் - 476

**கோ**

கோட்டம் - 83
கோதையார் - 324
கோலஞ் - 340
கோவையு - 381
கோழி - 242
கோழியின் - 521
கோளி - 504

**ச**

சட்டியி - 423
சடங்க - 174
சதகுப்பை - 82
சந்தங் - 57
சந்தனந் - 556
சந்தனம் - 65
சந்துகா - 229
சந்துகால் - 475
சமுத்திரப் - 127

**சா**

சாதி - 516
சாதிக்காய் - 74
சாரணை - 234, 485
சாரணைக் - 383, 394

**சி**

சித்த - 376
சித்தா - 395
சித்திரப்பா - 519
சிவந்த - 11
சிறுசுண்டை - 357
சிறுநீ - 413
சிறைசன்னியும் - 565

**சீ**

சீதேவி - 140
சீந்தி - 578
சீந்தில் - 388
சீரக - 45
சீனக் - 219, 337, 561
சீனிப் - 272

**சு**

சுக்கு - 112, 114, 443, 469, 498
சுக்குடன் - 43, 59
சுக்கொன்று - 304
சுகமது - 35
சுண்ணத்தின் - 602
சுத்தநேர் - 41
சுரந்தானும் - 3
சுரம்வீழில் - 12
சுரமது - 6
சுரமுட - 289

**சூ**

சூட்டது - 502
சூரிய - 100

**செ**

செங்கொடிவேலி - 518
செப்பமா - 546
செய்குவா - 456
செய்யதோர் - 7
செய்யவே - 606
செயப்படா - 583

**சே**

சேர்த்திடத் - 589
சேர்த்திய - 285

**சொ**

சொல்லிய - 18, 385
சொறிதக் - 534

**சோ**

சோறுஞ் - 208

**ஞா**

ஞாயத் - 282

**த**

தடித்த - 119
தண்ணீர் - 424, 491
தண்டைவேர் - 248
தரித்திடும் - 88
தலம்பயி - 291
தலைகனத் - 48
தலையுங் - 102, 217, 233, 483
தலையுடன் - 499
தலையும் - 139, 387
தனிவலி - 303

**தா**

தாமரைக் - 368
தாளிச - 465
தான்றிகடு - 405

**தி**

திப்பிலி - 428, 460
திரட்டே - 317
திரண்டு - 280, 287
திரிகடுகு - 182, 284, 358, 434
திரிபலை - 49, 69, 202, 252, 453, 470
திரிபுர - 231

**தீ**

தீப்புட - 161

**து**

துத்த - 514
துத்தங் - 198
துய்யு உடல் - 16
துருசு - 510

**தூ**

தூதுவளை - 486, 489
தூயதோர் - 382

**தே**

தேங்காய்ப் - 213
தேனுங் - 436

**தொ**

தொட்டுப் - 131

**தோ**

தோஷமே - 8

**ந**

நடுக்கித் - 166
நத்தச் - 123, 129
நத்தைப் - 96
நல்லனாவி - 316
நல்லெண்ணை - 290
நற்சீ - 464
நன்றதே - 225
நன்னாரி - 103, 201, 497

**நா**

நாக்கு - 84
நாடியிற் - 31
நாபிக் - 243
நாலு - 318
நாவிக் - 240
நாவியை - 247

**நி**

நித்திய - 253
நிம்பழமும் - 101
நிலக்குமிழ் - 372
நிலப்பனைக் - 398

**நீ**

நீர்மேல் - 505
நீராலரை - 300
நீருங் - 336
நீரை - 335
நீல - 330

**நெ**

நெஞ்சு - 212, 579
நெஞ்சுடன் - 366
நெல்லி - 145, 147, 386, 451
நெல்லிக்காய் - 135
நெற்பொரியுஞ் - 53

**நொ**

நொச்சிச் - 51, 92
நொந்துபின் - 473

**ப**

பக்கப்பிளவை - 542
பங்கம் - 193
பண்டு முன் - 214

பத்து - 396
பதத்தில் - 94
பந்திடும் - 545
பரபரத் - 154
பரிந்துறுங் - 507
பவத்தா - 328
பற்பாடகம் - 568
பனிச்சை - 463

பா

பாச்சியே - 590
பாரித்த - 62
பாருனீ - 585, 587, 604
பாலுட - 152
பாவு - 98

பி

பித்த - 14, 175, 176, 177
பித்தஞ் - 136
பித்தத்தி - 415
பித்தப் - 329
பித்தமுஞ் - 194
பித்தமுத - 138
பித்தமும் - 25, 29
பித்தமே - 52, 134
பிரமி - 149
பிறந்திடும் - 595
பிள்ளை - 121
பிளவை - 549

பு

புங்கங் - 495
புங்கந் - 448
புளியுப்பு - 601

பூ

பூமொய்த் - 349
பூலாவேர் - 107
பூவாஞ் - 369
பூவைப் - 404

பெ

பெரிய - 539
பெருகிய - 192
பெருங்காயம் - 246, 311
பெருத்த - 271
பெருவாகை - 572

பே

பேய்க்குமட்டி - 268
பேய்ப்பீர்க்கின் - 432
பேயன் - 529
பேயின் - 437
பேரா - 339, 441

பொ

பொக்கணம் - 359
பொருமி - 283, 444
பொருமித் - 281
பொருமு - 445
பொன்னாங் - 338

போ

போட்டிடத் - 591
போட்டிடாய் - 584
போட்டிடில் - 588
போட்டுனீ - 593
போதச் - 488
போமதே - 226
போமே - 180

ம

மங்கைகேள் - 186
மங்கையை - 90
மஞ்ச - 197, 402

மஞ்சள் - 535
மண்டலந் - 320
மத்திம - 550
மந்தக - 563
மந்தமாய் - 567
மயக்கமே - 603
மயக்கிடும் - 211
மயங்கிடு - 40
மருந்து - 421, 512
மலமுங் - 468
மலைசு - 553
மலையிஞ்சி - 71

மா

மாங்கா - 351
மாட்டோடு - 120
மாதம் - 333
மாதர் - 355
மாதருடன் - 322
மாதறாப் - 64
மார்புக்குள் - 306
மாலையி - 118
மானார் - 348

மி

மிக்க - 137
மிண்டியே - 254

மு

முக்கழஞ் - 523
முகங்குறு - 581
முகமும் - 141
முட்டையுந் - 407
முடக்கொத்தான் - 557
முதலா - 408
முதுகிடை - 540
முதுகில் - 543
முந்து - 536
முப்பட - 156
முருங்கை வேர் - 109
முள்ளி - 487
முள்ளிவேர் - 343
முன்ன - 427

மூ

மூக்குநீர் - 184
மூக்கும் - 414

மெ

மெய்யில் - 172
மெய்யே - 203

மே

மேல்வயிறு - 227
மேவுங் - 397

மோ

மோரெண்ணைக்கு - 199

ர

ரத்தம - 517

வ

வங்கி - 419
வசம்பு - 61, 503
வஞ்சமிகக் - 179
வஞ்சிக் - 552
வந்திடு - 215
வந்து - 265, 323, 334
வந்தே - 223
வயத்தை - 232
வயற்றை - 220
வலத்தை - 256, 452
வற்றிமேல் - 150

வா

வாகிய - 27

வாசமிகு -10
வாத- 13, 73, 164, 165, 167, 277, 416
வாதஞ் - 490
வாதத்தால் - 327
வாதத்தின் - 38
வாதமும் - 24, 26
வாதமே - 36, 50
வாதமோ - 32
வாய்நீர் - 206
வாறுகே - 599
வானீர் - 15

**வி**

விடத்தலை - 89
விடாதே - 168
விடியும் - 292
விடுப்புடன் - 377
விடுயிலும் - 575
விடையங் - 346
விண்ணைச் - 361
விரையெலாஞ் - 564
வில்லது - 573
விழுந்திடும் - 205

**வீ**

வீங்குங் - 474
வீங்குஞ் - 307
வீங்கும் - 352
வீழுமே - 2

**வெ**

வெங்கா - 574
வெண்கா - 78
வெண்காரம் - 438
வெண்காரமுஞ் - 297
வெண்பா - 275
வெந்தயஞ் - 371
வெப்பத்தில் - 312
வெப்பாலை - 560
வெப்புகள் - 454
வெப்புடன் - 541
வெருகங் - 85
வெருகடி - 458
வெருகு - 200
வெற்பாலை - 342
வெற்றிலை - 155
வெள்ளைக் - 515
வெள்ளைப் - 422, 501
வெள்ளுள்ளி - 224, 500

**வே**

வேங்கைமாந்தே - 374
வேப்பங் - 244
வேப்பம் விரை - 430
வேர்த்து - 273
வேலிப் - 111
வேளை - 576
வேளைநீ - 39
வேனுத்தே - 245

**வை**

வைத்தே - 363

**வொ**

வொன்றான - 597

## இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

| தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை | | | |
|---|---|---|---|
| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
| **ஓலைச்சுவடிப் பதிப்புகள்** | | | |
| 1. | கைமுறை வைத்தியம் | ... | ... |
| 2. | அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி | 400 | 80.00 |
| 3. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1 | 500 | 78.25 |
| 4. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 1 | ... | ... |
| 5. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2 | 800 | 250.00 |
| 6. | வர்மத் தொகுப்பு | 700 | 150.00 |
| 7. | பதார்த்த குண சிந்தாமணி | 700 | 200.00 |
| 8. | சரக்கு - சுத்தி செய்முறைகள் | 300 | 60.00 |
| 9. | மருந்து செய்முறைகள் | | 90.00 |
| 10. | புலிப்பாணி வைத்தியம் | 200 | 30.00 |
| 11. | நோயும் மருந்தும் | 250 | 35.00 |
| 12. | சித்த மருத்துவ சிந்தாமணி | | 70.00 |
| 13. | அரிய சித்த மருத்துவ முறைகள் | 300 | 60.00 |
| 14. | மூலிகை விளக்கம் | 300 | 60.00 |
| 15. | அகத்தியர் மருத்துவம் | ... | 75.00 |
| 16. | அகத்தீசர் வைத்திய சிந்தாமணி | ... | 80.00 |
| 17. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 2 | 400 | 65.00 |
| 18. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 3 | 350 | 55.00 |
| 19. | வைத்திய மூலிகை விரிவகராதி | ... | 50.00 |
| 20. | அகத்தியர் இரணநூல் | ... | 20.00 |
| **பாட நூல்களும் பார்வை நூல்களும்** | | | |
| 21. | குணபாடம் - மூலிகை | 800 | 300.00 |
| 22. | குணபாடம் - தாது சீவ வகுப்பு | 800 | 250.00 |
| 23. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 1 | 700 | 200.00 |
| 24. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 2 | 200 | 25.00 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 25. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 1 | 500 | 200.00 |
| 26. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 2 | 800 | 250.00 |
| 27. | சிறப்பு மருத்துவம் | 500 | 220.00 |
| 28. | மகளிர் மருத்துவம் | 450 | 160.00 |
| 29. | நோயில்லா நெறி | 500 | 67.20 |
| 30. | சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும் | 800 | 250.00 |
| 31. | சித்த வைத்தியத் திரட்டு | 500 | 150.00 |
| 32. | சூல் மருத்துவம் | 450 | 150.00 |
| 33. | அறுவை மருத்துவம் | 500 | 150.00 |
| 34. | குழந்தை மருத்துவம் (பால வாகடம்) | 800 | 210.00 |
| 35. | உடற்கூறு | 1000 | 400.00 |
| 36. | நஞ்சு முறிவு நூல் | 300 | 100.00 |
| 37. | உடல் தத்துவம் | 450 | 75.15 |
| 38. | சித்த மருத்துவம் - பொது | 800 | 250.00 |
| 39. | யூகி வைத்திய சிந்தாமணி | 500 | 150.00 |
| 40. | தேரையர் யமக வெண்பா - பாகம் 1 | 300 | 80.00 |
| 41. | கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு | 500 | 29.00 |
| 42. | நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம் | 50 | 3.00 |
| 43. | பிணி உடல் தேர்வக ஆய்வு முறைகள் | 50 | 30.30 |
| 44. | தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் | 500 | 225.00 |
| 45. | சித்த மருத்துவாங்கச் சுருக்கம் | 800 | 300.00 |
| 46. | சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும் | | 25.00 |
| | **SIDDHA MEDICAL BOOKS IN ENGLISH** | | |
| 1. | A Compendium of Siddha Doctrine | 500 | 200.00 |
| 2. | Introduction to Siddha Medicine | 50 | 11.35 |
| 3. | Simple Home Remedies | 50 | 2.70 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 4. | Hospital Siddha Pharmacopoeia in Indian Medicine | 250 | 39.00 |
| 5. | History of Siddha Medicine | 800 | 159.00 |
| 6. | Siddha Science of Longevity and Kalpa Medicine | 250 | 25.00 |
| 7. | Siddha Toxicology | 500 | 44.00 |
| 8. | Siddha Principles of Social & Preventive Medicine | 500 | 66.00 |
| 9. | Siddha Materia Medica (Mineral & Animal Division) | ... | 250.00 |
| 10. | Siddha Medicine - General - Part - I | ... | அச்சில் |
| 11. | Special Medicines in Siddha | ... | 120.00 |
| 12. | Therayar Maha Karisal | | 70.00 |
| 13. | Line of Treatment in Siddha Part - I | | 215.00 |
| 14. | Anuboga Vaidya Navaneetham Part - I | | 70.00 |
| 15. | Anuboga Vaidya Navaneetham Part - II | | 90.00 |
| 16. | Principles of Diagnosis in Siddha Part - I | | 200.00 |
| 17. | Theraiyar's Formulary of Medicated Oils | ... | அச்சில் |
| | **SIDDHA MEDICAL DICTIONARY** | | |
| 18. | T.V. Sambasivam Pillai - Vol. I | 2500 | 623.00 |
| 19. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part I | 500 | 300.00 |
| 20. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part II | 450 | 200.00 |
| 21. | T.V. Sambasivam Pillai - Vol. III | 650 | 81:00 |
| 22. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part I | 800 | 156.00 |
| 23. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part II | 800 | 151.50 |
| 24. | T.V. Sambasivam Pillai - Vol. V | 1200 | 480.00 |
| | **ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)** | | |
| 1. | சரக சம்ஹிதை பாகம் - 1 | ... | அச்சில் |
| 2. | சரக சம்ஹிதை பாகம் - 2 | 1400 | 253.65 |
| 3. | சரக சம்ஹிதை பாகம் - 3 | 1700 | 390.00 |
| 4. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 1 | 1500 | 390.00 |
| 5. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 2 | 1400 | 272.00 |

15% Discount

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ.) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது. தபால் கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

**தபால் கட்டணம்**

முதல் 500 கிராமுக்குள் - ரூ. 36.00

500 கிராமுக்கு மேல் ஒவ்வொரு 50 கிராமுக்கும் - ரூ. 16.00

**பணம் அனுப்ப வேண்டிய முகவரி**

1. இயக்குநர்
   இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
   அரும்பாக்கம், சென்னை - 600 106.
   தொலைபேசி : 044 - 2614 3500 / 2621 6244 / 2628 1563

2. முதல்வர்
   அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி - 627 002.
   தொலைபேசி : 0462 - 2572736 / 2572737 / 2572738

